# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 2024

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் .......... 10**

**தமிழ்நாடு செய்திகள் .......... 23**

தமிழ்நாட்டிற்கே உரிய கல்வட்டங்கள் .......... 23
தமிழ்நாட்டில் சொகுசு கார் பதிவு .......... 24
தமிழ்நாடு பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் 2023-24 .......... 25
தமிழ்நாடு மருத்துவமனைகளில் நிகழும் பிறப்புகள் குறித்த தரவு .......... 25
தமிழ்நாட்டில் புலிகளின் வளங்காப்பு நிலை 2024 .......... 26
காவிரி ஆற்றின் நீரோட்டம் 2024 .......... 27
சிறப்புரிமை மீறல் தொடர்பான வழக்கு .......... 28
சென்னை இரட்டை அடுக்கு வழித்தடம் .......... 28
‘தகைசால் தமிழர்’ விருது .......... 29
காவிரி நதி நீர் ஒதுக்கீடு 2024 .......... 29
தமிழ்நாட்டின் அருந்ததியர் பிரிவினருக்கான இடஒதுக்கீடு .......... 30
உயர் கல்விச் செலவினங்கள் .......... 31
பதிவுச் சட்டத்தின் பிரிவு 77-A .......... 31
உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - சீர் மரபினருக்கான ஒதுக்கீடு .......... 32
இராணிப்பேட்டை நினைவுச்சின்னம் .......... 33
திருப்பூர் கல்வெட்டுகள் .......... 33
தமிழ்நாடு வனத்தில் உள்ள யானைகளின் எண்ணிக்கை 2024 .......... 34
சுடுமண்பாண்டங்களால் ஆன குழாய்கள் – கீழடி .......... 34
திருநெல்வேலி மற்றும் கோவை மாநகராட்சிகளின் புதிய மேயர்கள் .......... 35
ஆளுகையில் புதுமைக்கான மையம் .......... 35
தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் கடன் வழங்கீட்டு திட்டம் – தமிழ்நாடு .......... 36
உத்தபுரம் கோவில் குறித்த தீர்ப்பு .......... 36
தமிழ்ப் புதல்வன் திட்டம் .......... 37
குண்டர் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் .......... 38
பொதுப் பயன்பாட்டு மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள்- 2023 .......... 39
தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி 2024 .......... 40
பள்ளிக் கல்வி உதவி எண் - 14417 .......... 41
தமிழ்நாட்டில் உயர்கல்வியின் நிலை – 9வது NIRF .......... 41
சுதந்திர தின அறிவிப்புகள் 2024 .......... 42
தமிழ்நாட்டில் முதலீட்டு திட்டங்களுக்கான முன்மொழிவுகள் 2024 .......... 43
தமிழக அரசின் விருதுகள் 2024 .......... 44
சென்னை பல்கலைக் கழகத்திற்குத் தன்னாட்சி கல்வி நிறுவன அந்தஸ்து .......... 44
அத்திக்கடவு-அவிநாசி திட்டம் 2024 .......... 45

சிப்காட் குடியிருப்பு வளாக வசதி ....46
தமிழக தலைமைச் செயலாளர் 2024 ....46
பழங்குடியினக் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் மதிப்பீடு ....46
மொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் உற்பத்தித் திறன் - ஜூலை 2024 ....48
தமிழ்நாட்டில் காடுகளின் நிலை 2024 ....49
385வது மதராஸ் தினம் 2024 - ஆகஸ்ட் 22 ....50
நீரிழிவு நோய் பற்றிய பதிவு ....50
தமிழ்நாடு முதலீட்டு மாநாடு 2024 ....51
எரிசக்தித் துறையில் பசுமை நுட்பம் சார் கொள்கைகள் ....52
சந்துரு குழுவின் மையப்படுத்தப்பட்ட சமையலறைக்கான பரிந்துரை ....53
கல்வராயன் மலைகளில் அதிகப்படியான சுரண்டல் நடவடிக்கைகள் ....53
வெம்பக்கோட்டையில் 1,300 கலைப் பொருட்கள் ....55
உலகளாவிய முத்தமிழ் முருகன் மாநாடு 2024 ....55
வங்கிகளால் நிதியளிக்கப்படும் தனியார் துறை திட்டங்கள் ....55
அரிய கிரானைட் சிலை ....56
**தேசியச் செய்திகள் ....57**
புதிய ஆளுநர்கள் நியமனம் 2024 ....57
முதல் கடல் சார் கனிம ஏலம் ....58
வெப்ப அலை - 'அறிவிக்கப்பட்டப் பேரிடர்' ....59
அகரு மரம் - இந்தியாவில் CITES உடன்படிக்கை விதிகள் ....60
ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டம் ....61
பட்டியலிடப் பட்ட சாதியினரின் இட ஒதுக்கீட்டிற்கான உள் வகைப்பாடு ....61
PM-PRANAM 2024 ....62
ஒரு DAE ஒரு சந்தா முன்னெடுப்பு ....63
உலகப் பாரம்பரியத் தளத்திற்கான தற்காலிகப் பட்டியல் ....63
புலிகள் பாதுகாப்பு திட்டம் மற்றும் பழங்குடியினர் இடம்பெயர்வு ....64
பாரதிய வாயுயான் விதேயக் 2024 ....65
அலுமினிய உற்பத்தியில் இரண்டாவது இடம் ....66
இந்தியாவில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை 2023 ....66
CCPWC முன்னெடுப்பு ....67
புதிய தேசிய அதிவேக வழித்தடங்கள் ....68
2024-25 ஆம் நிதியாண்டிற்கான நிதி கோரும் மசோதா ....68
எண்ணெய் மற்றும் எரிவாயுக் கொள்கையின் உறுதித் தன்மைக்கான மசோதா ....69
பேரிடர் மேலாண்மை (திருத்தம்) மசோதா, 2024 ....70
PMSMA திட்ட விரிவாக்கம் ....70
சாங்கியிகி இணைய தளம் ....71
2023 ஆம் ஆண்டில் உறுப்பு தானம் ....72
'இந்தியாவின் ஆற்றல் சேமிப்பு அமைப்புகள்' குறித்த அறிக்கை ....73
நிதி ஆயோக் அமைப்பின் கியர் ஷிஃப்ட் சவால் ....73
SAFAL தேர்வு முறை 2024 ....74

வக்ஃப் வாரிய மசோதா 2024......75
தேசியத் தகவல் தொடர்பு கழகம்......76
ஒளிபரப்பு சேவைகள் மசோதா 2024......76
கொதிகலன்கள் மசோதா 2024......77
மில்லியன் வடிவமைப்பாளர்கள், பில்லியன் கணக்கான கனவுகள்......77
Kavach 4.0......78
இந்தியாவில் காணப்படும் புவிவெப்ப ஆற்றல் வளங்கள் 2024......78
கஸ்தூரி பருத்தி பாரதம் திட்டம்......79
NIPCCD அமைப்பின் நிர்வாகக் குழு......79
புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் 2024......79
9வது NIRF தரவரிசை 2024......80
78வது சுதந்திர தினம்......82
பிரதான் மந்திரி JI-VAN யோஜனா......82
வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா – 2024......83
நந்தினி சஹகர் யோஜனா......84
PMAY-U 2.0......84
பல்வேறு பருவநிலைச் சூழல்களுக்கான நெகிழ் திறன் கொண்ட அதிக மகசூல் தரும் 109 பயிர் வகைகள்......85
QCI சுரஜ்யா அங்கீகாரம் மற்றும் தரவரிசை கட்டமைப்பு......86
தூய்மை/ பசுமை வழி தாவரங்கள் திட்டம் 2024......87
'Bail is the rule, and jail is the exception' கொள்கை......88
பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனாவிற்கான வழிகாட்டுதல்கள்......88
இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2023......89
புதிய பாராளுமன்றக் குழுக்கள் 2024-25......90
BHAVISHYA தளம்......91
கடல்சார் பகுதிகளில் உள்ள கனிமச் சுரங்க அறக்கட்டளை விதிகள் 2024......92
ஜியோ பார்சி திட்ட இணைய தளம்......92
தேசியப் பூச்சிகள் கண்காணிப்பு அமைப்பு......93
முக்கிய மற்றும் உத்தி சார் கனிமங்களின் பட்டியல்......94
கிரிஷி முடிவெடுத்தல் செயல்முறைக்கான ஆதரவு வழங்கீட்டு அமைப்பு......95
பசுமை எரிபொருள் சார் இழுவைப் படகுப் பயன்பாட்டிற்கு மாறுதல் திட்டம்......95
ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் AYUSH......96
INS அரிகாட்......97
மின் துறைக்கான இயங்கலை தளங்கள்......98
ஜன் போஷன் கேந்திரா......99
ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம்......99
போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு பிரதமர் பயணம்......100
BHISHM பெட்டகங்கள்......101
ஜல் ஜீவன் திட்டம் 5 ஆண்டுகள்......102
தீன் தயாள் SPARSH யோஜனா......103
கர்மயோகி திட்டத்தின் கீழ் புதிய இணையதளங்கள்......103

இந்தியா-நேபாளம் இடையிலான மின் வர்த்தகம் ....104
தொடர் உமிழ்வு கண்காணிப்பு ....105
சர்வதேசச் செய்திகள் ....106
ஐக்கியப் பேரரசு - இந்தியா புதிய தொழில்நுட்பப் பாதுகாப்பு முன்னெடுப்பு ....106
IAEA - UNOSSC முன்னெடுப்புகள் ....106
பருவநிலை மாற்றம் தொடர்பான முதல் சட்டம் – தென்னாப்பிரிக்கா ....107
ஜப்பானின் சாடோ தங்கச் சுரங்கம் - யுனெஸ்கோ அந்தஸ்து ....107
டெல் உம் அமரின் மடாலயம் ....108
ஜபிலுகா யுரேனியம் தளம் – ஆஸ்திரேலியா ....108
தென் சீனக் கடலில் இரண்டாவது தாமஸ் ஷோல் ....109
மஞ்சள் கடல் - போஹாய் வளைகுடா ....110
mRNA தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி H5N1 தடுப்பூசிகள் ....110
MERCOSUR அமைப்பில் பொலிவியா ....111
குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ....112
ஒரோபூச்சே காய்ச்சல் காரணமாக பதிவான முதல் மரணம் ....112
G20 நாடுகளின் சர்வதேச வரி சார் கூட்டுறவு ....113
WBG உத்தரவாத தளம் ....113
இரட்டை கோபுர சூரிய சக்தி அனல்மின் நிலையம் - சீனா ....114
ஆப்பிரிக்கா – குரங்குக்காய்ச்சல் பெருந்தொற்று ....114
மாபெரும் நிலநடுக்க முன்னெச்சரிக்கை ....115
துர்கானா ஏரி குறித்த ஆய்வு ....116
ஐக்கிய நாடுகள் சபையின் இணைய வெளிக் குற்றங்கள் தொடர்பான ஒப்பந்தம் ....117
கூகுள் நிறுவனம் மீதான நம்பிக்கையற்ற தன்மை மீதான தீர்ப்பு ....118
ஐக்கிய நாடுகள் படைப்பிரிவில் ஜெர்மனி ....118
குரங்குக் காய்ச்சல் - சுகாதார அவசரநிலை ....119
குரோஷியா - கட்டாய இராணுவச் சேவை ....120
ஜெனீவா உடன்படிக்கையின் 75வது ஆண்டு நிறைவு ....120
11 புதிய அணு உலைகள் – சீனா ....121
குர்ஸ்க் பிராந்தியத்தில் நெருக்கடி ....122
மடெய்ரா காட்டுத்தீ ....123
பாதுகாப்பு உபகரண வழங்கீடுகளின் பாதுகாப்பிற்காக இந்தியா அமெரிக்க ஒப்பந்தம் ....123
உலக மேம்பாட்டு ஒப்பந்தம் 2024 ....124
பொருளாதாரச் செய்திகள் ....124
எண்ணிம வழியிலான பணப் பரிமாற்றங்கள் 2024 ....124
நாணயம் மற்றும் நிதி அறிக்கை 2023/24 – இந்திய ரிசர்வ் வங்கி ....125
LTCG 2024 பணவீக்கத்தினைக் குறைப்பதற்காக அசல் மதிப்பில் ஈடு செய்தல் ....126
இந்திய ரிசர்வ் வங்கியின் 5வது கூட்டு ஒழுங்குமுறைக் கட்டமைப்பு ....127
நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கான PCA கட்டமைப்பு ....127
வரி செலுத்துவதற்கான UPI வரம்பு ....128
கிராமப்புற இளையோர் வேலைவாய்ப்பு அறிக்கை – 2024 ....128

இந்தியாவில் அந்நிய தொகுப்பு முதலீடு 2023-24 ....129
மைக்கேல் தேபப்ரதா பத்ரா குழு ....130
வைர முன்பண உரிமம் ....131
அந்நியச் செலாவணி மேலாண்மை (கடன் சாரா) திருத்த விதிகள், 2024 ....131
கடற்பாசி மதிப்புச் சங்கிலி மேம்பாடு ....132
முதல் காலாண்டில் பதிவான நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை 2025 ....133
UPI சுற்றம் ....133
ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தில் கடன் வசதி ....134
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....135
நிலவில் நீர் வளங்கள் இருப்பதற்கான தடயங்கள் ....135
வியாழன் கோளின் பெருஞ்சிவப்புப் பகுதி ....135
GROWTH-India தொலைநோக்கி ....136
டின்சாபரின் ....136
எலிகளின் மூளையினைக் கட்டுப்படுத்தும் காந்தவியல் ....136
இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மரபணு மாற்ற முறை ....137
சனிக்கோள் மற்றும் வால் நட்சத்திரம் A117uUD ....138
தோரியம் அடிப்படையிலான திரவ உப்பினைக் குளிர்விப்பானாக கொண்ட அணுமின் நிலையம் ....139
கருமையமுகல் நோய் ....140
34 புதிய மாபெரும் காஸ்மிக் ரேடியோ மூலங்கள் ....140
Kindlins – இணைவு புரதங்கள் ....141
MCC0200 வகை பாக்டீரியா ....142
இருண்ட பகுதியில் உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன் ....143
லிவர்மோரியம் ....144
அபோபிஸ் குறுங்கோள் ஆய்வுத் திட்டம் ....144
சிறிய அணு உலைகள் ....145
மாபெரும் அலைகளின் உருவாக்கத்தினைக் கணித்தல் ....146
பைரோகுமுலோனிம்பஸ் மேகம் ....147
கேண்டிடா ஆரிஸ் ....147
மருந்து எதிர்ப்புத் திறன் கொண்ட காசநோய்க்கான புதிய சிகிச்சை 2024 ....148
நியூட்ரான் நட்சத்திரங்கள்/விசித்திரமான செயலிழந்த நட்சத்திரங்கள் ....149
TENG தொழில்நுட்பம் ....150
சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புவியின் டெர்மினேட்டர் எல்லை ....150
JUICE ஆய்வுக் கலம் ....151
நெகிழிகளை உண்ணும் பூஞ்சை ....152
SSLV-D3 - EOS-08 ....152
செவ்வாய்க் கிரகத்தில் நீர்த் தேக்கப் பகுதிகள் ....153
சூரிய சுழற்சியின் நீள்நிலையினைக் கணிப்பதற்கான புதிய முறை ....154
பெர்சீட் விண்கல் பொழிவு ....155
நுண்ணியக் கூட்டு வறள் களி ....156
செயற்கை நுண்ணறிவு அடையாளக் குறியீடு - OpenAI ....156

மீப்பெரு நீல நிலவு 2024......157
அதிக வீரியம் மிக்க மீயுயிரி ......158
ஏரியல் துணைக்கோளில் நிலத்தடிப் பெருங்கடல் ......158
புதிய சயனைடு உணர்வி ......159
எளிய CRISPR முறை ......160
போலரிஸ் டான் ஆய்வுத் திட்டம் ......161
mRNA நுரையீரல் புற்றுநோய் தடுப்பூசி ......161
சுற்றுச்சூழல் செய்திகள்......162
இந்தியாவில் புலிகளின் உயிரிழப்பு 2024......162
உலகின் சதுப்புநிலங்களின் நிலை குறித்த அறிக்கை 2024......163
ஜெர்டனின் கல்குருவியின் வளங்காப்பு அந்தஸ்து ......164
மரங்களின் பரவல் அதிகரிப்பின் தாக்கம் ......164
நான்கு வட்டன் வண்ணத்துப் பூச்சி......165
இந்தியாவில் மீத்தேன் தணிப்பான் ......166
மியோம்போ வனப் பாதுகாப்பு ......167
எதிர்பாராத பனிப்பாறை பின்னடைவு நிகழ்வு......167
புதிய மயில்கள் சரணாலயங்கள் 2024......168
நீலக்குறிஞ்சி – அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்கள் ......169
புதிய இராம்சர் தளங்கள் – இந்தியா ......169
400 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கான வெப்பமான நீர் ......170
மத்திய இந்திய காடுகளில் உள்ள அபாயம் ......171
காஸ்ட்ரோடியா இண்டிகா ......172
சிறு குறிஞ்சான் (குர்மர்) ......172
பூமியின் சுழற்சி இயக்கவியல்......173
அதி இரசாயனத் தன்மை கொண்ட இரசாயனங்களின் தோற்றுரு......173
குதிரைலாட நண்டுகளுக்கு அடையாளமிடல்......174
அண்டார்டிகாவில் காணப்படும் அயல்நாட்டு இனங்கள்......175
அசாமில் மிதுன் ......175
பனிப்பாறை ஏரிகள் பற்றிய ஆய்வு......176
பெரிய தேவாங்கு - அசாம் ......177
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ......177
கல்வியில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம்......177
மாறி வரும் உலகில் இளம் பருவத்தினர் ......178
டைம்ஸ் இதழின் 2024 ஆம் ஆண்டின் உலகின் மிகச்சிறந்த இடங்கள்......179
உலக சுங்க வரி விவரங்கள் 2024 ......179
2023 ஆம் ஆண்டில் உலகளாவிய வேளாண் ஏற்றுமதி ......180
இளம்பெண்கள் குறித்த உலக சுகாதார அமைப்பின் ஆய்வறிக்கை 2024......181
நடுத்தர வருமான நாடு சிக்கல் குறித்த உலக வங்கியின் மதிப்பீடு ......181
WTO அமைப்பின் உலக வர்த்தகப் புள்ளிவிவரங்கள் 2023 ......182
பார்ச்சூன் 2024 - உலகின் 500 முன்னணி நிறுவனங்கள் ......183

உலகின் 10 முன்னணி செல்வ மதிப்பு மிக்க மத்திய வங்கிகள் - 2024 ....184
பல்பரிமாண பாதிப்புக் குறியீடு ....184
இளையோர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் 2024 ....185
ஷாங்காய் ARWU தரவரிசை 2024 ....186
வருமானப் பாதுகாப்பு மற்றும் முன் எச்சரிக்கை ....186
உலகளாவியக் கல்வி கண்காணிப்பு அறிக்கை 2024 ....187
ஹுருன் இந்தியா - மிகவும் மதிப்புமிக்க குடும்ப வணிகங்கள் 2024 ....188
உலகளாவிய சொத்து விலைக் குறியீடு 2024 ....189
மாநிலச் செய்திகள் ....190
அசாமின் மொய்தாம் ....190
லடாக்கில் உள்ள காந்த மேல் பூச்சுகள் கொண்ட பாறை அடுக்குகள் ....190
வயநாடு நிலச்சரிவு ....191
'வெளியுறவு ஒத்துழைப்பு' அதிகாரி ....192
GRIT ஆலோசனை வழங்கீட்டு அமைப்பு ....192
வயநாட்டில் பெய்லி பாலம் ....192
அனைத்து வகைப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை ....193
இரு குழந்தைக் கொள்கை ....194
காற்றாலை ஆற்றல் உற்பத்தி திறன் 2023-24 ....194
மாநிலங்களில் கல்வி உரிமைச் சட்டத்தினை அமல்படுத்துதல் ....194
டெல்லியின் மாநகராட்சிக் கழகத்தின் ஆல்டர்மேன் நியமனம் ....195
வைங்கங்கா-நல்கங்கா நதிநீர் இணைப்புத் திட்டம் ....196
ஜுவாங்கா பழங்குடியினர் - வன உரிமைச் சட்டம் ....197
இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு ....198
இரத்னகிரி - 'பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்' ....199
நீதிபதி ஹேமா குழுவின் அறிக்கை ....199
தங்கர் சமூகத்தினரின் மேய்ச்சல் இடங்களுக்கான கோரிக்கை ....200
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....201
உலகப் பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வு ....201
ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே ....201
உறுப்பு தான விருதுகள் 2023 ....202
ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயண குழுவினர் ....203
யாமினி கிருஷ்ணமூர்த்தி ....204
இராஷ்ட்ரிய இந்தி விக்யான் சம்மேளன் 2024 ....204
AIFF விருதுகள் 2024 ....204
இராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் 2024 ....205
புத்ததேவ் பட்டாச்சார்ஜி ....205
நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் சுங்-டாவ் லீ ....206
ரேகா ஷர்மா - தேசிய மகளிர் ஆணையம் ....206
காந்தியவாதி ஷோபனா ரானடே ....207
T.V. சோமநாதன் ....207

சுதந்திர தின வீர தீர விருதுகள் 2024 ....................207
வீர தீர விருதுகள் 2024 ....................208
முன்னாள் வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் ....................210
70வது தேசிய திரைப்பட விருதுகள் ....................210
அக்னி ஏவுகணைகளின் தந்தை ....................211
உலக விமானச் சேவை விருதுகள் 2024 ....................212
லியோனார்ட் ஹேஃப்லிக் ....................212
24வது கைவினைப் பொருட்களின் ஏற்றுமதி விருதுகள் ....................213
தேசியப் புவி அறிவியல் விருதுகள் – 2023 ....................213
கொள்கை வகுப்பாளர்கள் மன்றத்தின் உச்சி மாநாடு ....................214
விளையாட்டுச் செய்திகள் ....................215
ஒலிம்பிக் போட்டிகள் 2024 : பசுமை நடவடிக்கை சார் விளையாட்டுப் போட்டிகள் ....................215
வினேஷ் போகட் தகுதி நீக்கம் ....................216
நீரஜ் சோப்ரா - ஒலிம்பிக் போட்டிகள் 2024 ....................217
2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்க எண்ணிக்கை ....................217
லோசான் டயமண்ட் லீக் போட்டி ....................218
முக்கிய தினங்கள் ....................219
வையக விரிவு வலை தினம் - ஆகஸ்ட் 01 ....................219
தேசிய மலை ஏறுதல் தினம் - ஆகஸ்ட் 01 ....................219
உலக தாய்ப்பால் வாரம் - ஆகஸ்ட் 01 முதல் 07 வரை ....................220
உலக நுரையீரல் புற்றுநோய் தினம் - ஆகஸ்ட் 01 ....................220
முஸ்லிம் பெண்களின் உரிமை தினம் - ஆகஸ்ட் 01 ....................220
புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் தீரும் நாள் 2024 - ஆகஸ்ட் 01 ....................221
14வது இந்திய உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 03 ....................221
10வது தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்ட் 03 ....................222
தேசிய எலும்பு மற்றும் மூட்டு தினம் - ஆகஸ்ட் 04 ....................222
ஹிரோஷிமா தினம் - ஆகஸ்ட் 06 ....................223
தேசிய ஈட்டி எறிதல் தினம் - ஆகஸ்ட் 07 ....................224
நாகசாகி தினம் - ஆகஸ்ட் 09 ....................224
ஆகஸ்ட் கிராந்தி தினம் - ஆகஸ்ட் 08 ....................225
சர்வதேச உலகளாவியப் பழங்குடியின மக்கள் தினம் - ஆகஸ்ட் 09 ....................226
உலக சிங்க தினம் - ஆகஸ்ட் 10 ....................226
உலக எஃகு பறை தினம் - ஆகஸ்ட் 11 ....................227
ICoAS பணி உருவாக்க தினம் - ஆகஸ்ட் 09 ....................227
உலக உயிரி எரிபொருள் தினம் - ஆகஸ்ட் 10 ....................227
உலக யானைகள் தினம் - ஆகஸ்ட் 12 ....................227
சர்வதேச இளையோர் தினம் - ஆகஸ்ட் 12 ....................228
இந்தியாவில் பிரிவினை சார்ந்த பயங்கரங்கள் நினைவு தினம் - ஆகஸ்ட் 14 ....................228
உலக உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 13 ....................229
உலக மனிதாபிமான தினம் - ஆகஸ்ட் 19 ....................229

உலக சமஸ்கிருத தினம் - ஆகஸ்ட் 19 ....230
நல்லிணக்க தினம் அல்லது சத்பவனா திவாஸ் - ஆகஸ்ட் 20 ....230
உலக கொசு தினம் - ஆகஸ்ட் 20 ....231
உலக முதியோர் தினம் - ஆகஸ்ட் 21 ....232
தேசிய விண்வெளி தினம் - ஆகஸ்ட் 23 ....232
அடிமை வர்த்தகம் மற்றும் அதை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 23 ....233
தேசிய குடற்புழு நீக்க தினம் - ஆகஸ்ட் 23 ....233
தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்ட் 23 ....234
தெலுங்கு மொழி தினம் - ஆகஸ்ட் 29 ....234
சர்வதேச அணுசக்தி சோதனை எதிர்ப்பு தினம் - ஆகஸ்ட் 29 ....235
சர்வதேச திமிங்கலச் சுறா தினம் - ஆகஸ்ட் 30 ....235
வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 30 ....236
உலக நீர் வாரம் - ஆகஸ்ட் 25/29 ....236
இதரச் செய்திகள் ....237
முழுமையான அளவிலான கடைசி பொது மூதாதை இனம் ....237
மிகவும் விரும்பத்தகு நிறுவனம் - காந்தார் ....237
இந்திய வாகை மரம் ....238
இயந்திர கற்றல் கட்டமைப்பு – ‘LEAP’ ....239
செயற்கை இனிப்பூட்டி சுக்ரலோஸ் ....239
ஹோமோ ஃப்ளோரெசியென்சிஸ் ....240
பண்டைய கால சூரிய நாட்காட்டி – துருக்கி ....241
இரயில்வே கட்டமைப்பிற்கான துல்லிய நேர ஒருங்கிணைப்பு அமைப்பு ....241
இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய வைரம் ....242

# TNPSC துளிகள்

- 1934 ஆம் ஆண்டு திறக்கப் பட்டதிலிருந்து மேட்டூர் அணையின் நீர்மட்டம் 71வது முறையாக 100 அடியை எட்டியுள்ளது.
- மெட்டா நிறுவனமானது லாமா 3.1 எனப்படும் அதன் மிகப்பெரிய மற்றும் "சிறந்த இலவச மென்பொருள் மாதிரியினை" வெளியிட்டுள்ளது.
- 1955 ஆம் ஆண்டு பணி நியமனத் தொகுதியினைச் சேர்ந்த மூத்த ஆட்சிப் பணியாளர் P.N. வேதநாராயணன் சமீபத்தில் காலமானார்.
- 2024 ஆம் ஆண்டு பாரீசு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கையினை மனு பாக்கர் துவக்கி வைத்துள்ளார்.
- ஹங்கேரிய கிராண்ட் பிரிக்ஸ் மோட்டார் வாகனப் பந்தயத்தில் இந்தியாவின் குஷ் மைனி தனது முதல் ஃபார்முலா 2 ஸ்பிரிண்ட் (குறுகிய தூரத்திலான சீர்வேக கார் பந்தயம்) பந்தயத்தில் வெற்றிப் பெற்றதன் மூலம் புதிய சாதனையினை எட்டியுள்ளார்.
- இந்திய மசாலாப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் (IISR) ஆனது தோட்டக்கலை அறிவியல் துறையில் அதன் முன்னோடிமிக்கப் பணிக்காக சிறந்தத் தொழில்நுட்ப விருதைப் பெற்றுள்ளது.
- OpenAI நிறுவனமானது, அதன் மிகவும் செலவு குறைந்த மொழி மாதிரியான GPT-4o மினி எனப்படும் சிறிய மொழி மாதிரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- OpenAI நிறுவனமானது அதன் பயனர்களுக்கு "தெளிவான மற்றும் பொருத்தமான ஆதாரங்களுடன் விரைவான மற்றும் சரியான நேரத்தில் பதில்களை" வழங்கச் செய்வதற்காக, SearchGPT எனப்படும் அதன் தேடுபொறியின் ஒரு முன்மாதிரியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இலங்கை அணியானது, இந்திய அணியினை வீழ்த்தி தனது முதல் மகளிர் ஆசியக் கிரிக்கெட் கோப்பையை வென்றுள்ளது.
  - முன்னதாக 2018 ஆம் ஆண்டில் வங்காளதேச அணியானது மூன்று விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியினை வீழ்த்தியது.
- மத்திய அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங்கிற்கு, நீரிழிவு நோயியல், நீரிழிவு நோய் சிகிச்சை மற்றும் நீரிழிவு நோய் குறித்த ஆராய்ச்சியின் முன்னேற்றத்தில் அவரது மகத்தான அர்ப்பணிப்பிற்காக மிக மதிப்புமிக்க "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கப் பட்டுள்ளது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் (IOC) உறுப்பினர் நீதா அம்பானி, ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்காக என்று ஒதுக்கப் பட்டுள்ள முதல் இல்லமான இந்தியா இல்லத்தினை அதிகாரப் பூர்வமாக திறந்து வைத்துள்ளார்.
- நீருக்கடியிலான இந்தியாவின் முதல் அருங்காட்சியகம் ஆனது, டெல்லியில் உள்ள யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமான ஹுமாயூன் கல்லறை வளாகத்தில் திறக்கப் பட்டுள்ளது.

- "உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை 2024" (SOFI 2024) அறிக்கை என்பது உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO), சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியம் (IFAD), UNICEF, உலக உணவுத் திட்ட அமைப்பு (WFP) மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப்பட்டுள்ளது.
- 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக் குழல் துப்பாக்கிச் சுடுதல் (ஏர் பிஸ்டல்) கலப்புப் பிரிவு போட்டியில் இந்தியாவின் மனு பாக்கர் - சரப்ஜோத் சிங் இணை வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர்.
  - இதன் மூலம், சுதந்திரத்திற்குப் பிறகு ஒரே கோடைகால ஒலிம்பிக் போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியத் தடகள வீராங்கனை என்ற ஒரு பெருமையை மனு பெற்றுள்ளார்.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது யார் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்யலாம் என்பதற்கான கட்டுப்பாடுகளை நீக்குவதற்காக வேண்டி 2024 ஆம் ஆண்டு சட்டத்திற்குப் புறம்பான மதமாற்றம் தடை (திருத்தம்) என்ற மசோதாவினை நிறைவேற்றி உள்ளது.
  - தீவிரவாதம் மற்றும் பணமோசடி வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்குப் வழங்கப்படுவது போன்ற கடுமையான பிணை நிபந்தனைகளை முன் மொழியச் செய்வதோடு, சட்டவிரோதமான மதமாற்றத்திற்கான தண்டனையினையும் இது அதிகரிக்கிறது.
- வெனிசுலாவின் நிக்கோலஸ் மதுரோ 51% வாக்குகளுடன் மூன்றாவது முறையாக அதிபராக வெற்றி பெற்றுள்ளார்.
- சிறந்த தமிழ் கல்வெட்டியல் நிபுணரும் வரலாற்றாசிரியருமான V.வேதாச்சலம் அவர்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான V.வெங்கையா கல்வெட்டியல் விருதானது, வழங்கப் பட்டுள்ளது.
- தேக்கடியில் உள்ள பெரியார் புலிகள் சரணாலயத்தில் (PTR) அதன் காடுகளுக்குள் நிகழ்நேர கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் மற்றும் Wi-Fi சேவை இணைப்பிற்கான மின்சார ஆற்றலை உருவாக்குவதற்காக காற்றாலை விசையாழி நிறுவப்பட்டுள்ளது.
- சர்வதேச இயற்பியல் ஒலிம்பியாட் போட்டியில் இந்திய மாணவர்கள் இரண்டு தங்கம் மற்றும் மூன்று வெள்ளிப் பதக்கங்களையும், 2024 ஆம் ஆண்டு சர்வதேச வேதியியல் ஒலிம்பியாட் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெண்கலம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.
- ஆதித்யா பிர்லா குழுமம் ஆனது, இந்திரியா எனப்படும் அதன் அதன் புதிய தயாரிப்பு நிறுவனத்தினை அறிமுகப்படுத்தி இந்திய நகை விற்பனைச் சந்தையில் நுழைந்து உள்ளது.
- ஒன்றியப் பணியாளர் ஆணையத்தின் (UPSC) புதிய தலைவராக முன்னாள் மத்திய சுகாதாரச் செயலாளரும், 1983 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச பணித் தொகுதியினைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியுமான ப்ரீத்தி சுதன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மதியிறுக்க நோயால் பாதிக்கப்பட்ட 16 வயது சிறுமி ஜியா ராய், ஆங்கிலக் கால்வாயை 17 மணி நேரம் 25 நிமிடங்களில் 34 கி.மீ நீந்தி, மிக இளம் வயது மற்றும் அதிவேக மாற்றுத் திறனாளி நீச்சல் வீராங்கனை என்றப் பெருமையினைப் பெற்று உள்ளார்.

- BBVA மற்றும் சர்வதேச நிதியியல் கழகம் ஆகியவை 70 மில்லியன் அமெரிக்க டாலர்களை இலக்காகக் கொண்ட உலகின் முதல் பல்லுயிர்ப் பெருக்கப் பத்திரத்தின் முதல் தவணையாக 15 மில்லியன் அமெரிக்க டாலர் பத்திரங்களை வெளியிட்டுள்ளன.
- பாரீசு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 3 நிலைகளிலான 50 மீட்டர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீரர் ஸ்வப்னில் குசலே வெண்கலப் பதக்கம் வென்று உள்ளார்.
- அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் (AERB) ஆனது, சமீபத்தில் கல்பாக்கத்தில் உள்ள இந்தியாவின் உள்நாட்டுத் தொழில்நுட்பம் சார்ந்த 500 MWe திறன் கொண்ட சோடியம்-குளிர்விக்கப்பட்ட முதலுறு வேக ஈணுலையில் (PFBR) 'அணுசக்தி எரிபொருளினை நிரப்பும் செயல்முறைக்கு' அனுமதி வழங்கியுள்ளது.
- உலக ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை (GEEF) அமைப்பினால் நடத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு உலகளாவிய நீர் சார்ந்த தொழில்நுட்ப உச்சி மாநாட்டில், மத்திய நீர் ஆணையத்திற்கு (CWC) 'ஆண்டின் சிறந்த நீர்வளத் துறைக்கான' GEEF உலக நீர் சார் தொழில்நுட்ப விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்திய நாடானது, சுமார் 30 நாடுகளின் பங்கேற்புடன் 'தரங் சக்தி 2024' எனப்படும் தனது முதல் பன்னாட்டு விமானப் பயிற்சியினை தமிழ்நாட்டில் உள்ள சூலூர் என்னும் இடத்தில் நடத்த உள்ளது.
- லெப்டினன்ட் ஜெனரல் சாதனா சக்சேனா நாயர், மருத்துவப் பணி தலைமை இயக்குநர் (இராணுவ) பதவியை ஏற்றதையடுத்து, இந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் கீழ் விநியோக சங்கிலிச் சபையின் துணைத் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினர் பரிமல் நத்வானி எழுதிய கிர் மற்றும் ஆசிய சிங்கங்கள் பற்றிய "Call of the Gir" எனப்படும் விளக்கப் படப் புத்தகத்தினைப் பிரதமர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.
- காஷ்மீர் நகரம் ஆனது, உலக கைவினைப் பொருட்கள் நகரம் என்ற சான்றிதழை உலக கைவினைப் பொருட்கள் சபை என்ற அமைப்பிடம் இருந்து பெற்றுள்ளது.
- குஜராத்தின் ஜாம்நகரில் உள்ள உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையத்தின் (GTMC) செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கான நிதி விதிமுறைகளைக் குறிப்பிட்டுக் காட்டும் நன்கொடையாளர் ஒப்பந்தத்தில் ஆயுஷ் அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு கையெழுத்திட்டுள்ளன.
- KIIT (ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா தொழிற்சாலை தொழில்நுட்பக் கல்லூரி) நிகர்நிலைப் பல்கலைக் கழகத்திற்கு, ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகச் சபையானது (UN ECOSOC) மதிப்பு மிக்க சிறப்பு ஆலோசக நிறுவனம் என்ற அந்தஸ்தினை வழங்கியுள்ளது.
- உலகப் பொருளாதாரங்களில் நிதியியல் தொழில்நுட்பத்தின் மிகவும் மாறுதல் மிக்க தாக்கத்தினை அங்கீகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று உலக நிதி சார் தொழில்நுட்பத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- உச்ச நீதிமன்றம் ஆனது தனது 75வது ஆண்டு நிறைவு விழாவின் ஒரு பகுதியாக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளை சுமுகமாக தீர்த்து வைப்பதற்காக ஒரு வார கால சிறப்பு லோக் அதாலத் இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது.

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகமானது, சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான வாழ்க்கை முறைகள் தொடர்பான நடத்தை மாற்றங்களைத் தூண்டும் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான கருத்தாக்கங்களைக் கோருவதற்காக Ideas4LiFE என்ற எனப்படும் முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகப் பொருளாதார மன்றத்தினால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டு பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டு அறிக்கையின்படி, 119 நாடுகளில் இந்தியா 39வது இடத்தில் உள்ளது.
- முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும் பயிற்சியாளருமான அன்ஷுமன் கெய்க்வாட் சமீபத்தில் காலமானார்.
- தென்னிந்தியாவின் முதல் இரட்டை அடுக்கு மேம்பாலம் ஆனது பெங்களூரு நகரில் திறக்கப்பட்டது.
- ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று (ஆகஸ்ட் 04), உலகம் முழுவதும் உள்ள மக்களை அவர்களது நண்பர்களுடன் இணைக்க ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவில் தேசிய நட்பு தினம் கொண்டாடப் படுகிறது.
- இந்தியாவும் சீனாவும், இந்திய-சீன எல்லை விவகாரங்களுக்கான (WMCC) ஆலோசனை வழங்கீட்டு மற்றும் ஒருங்கிணைப்பிற்கான செயல்பாட்டு நெறிமுறை குறித்த 30வது கூட்டத்தினைப் புது டெல்லியில் நடத்தியது.
- இரு சக்கர வாடகை வாகனச் சேவை சார்ந்தப் புத்தொழில் நிறுவனமான ரேபிடோ, சமீபத்தில் யூனிகார்ன் நிறுவனமாக மாறிய, அதாவது மதிப்பீட்டில் 1 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டிய இந்திய புத்தொழில் நிறுவனம் ஆகும்.
- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) ஆனது, மகளிர் தொழில் முனைவோர் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது முக்கியமான திறன்கள், அறிவு மற்றும் திறன் சார் வலையமைப்பு வாய்ப்புகளை வழங்கச் செய்வதன் மூலம் தொழில்முனைவில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய கல்வித் துறை அமைச்சகம் ஆனது, தேசியத் தொழிற்பயிற்சிப் வழங்கீட்டுத் திட்டம் (NATS) 2.0 என்ற இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
  - இது தொழிற்பயிற்சிகளை மேற்கொள்ள முனையும் நபர்களை பதிவு செய்து, அதற்கான வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க வழி வகுப்பத்தோடு, தொழில் துறைகள் ஆனது வேலை வாய்ப்புகள் மற்றும் வேலைகளுக்கான ஒப்பந்தங்களை மிகவும் திறம்பட நிர்வகிக்க உதவுகிறது.
- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஆனது, 2024 ஆம் ஆண்டு தேசிய அளவில் குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு சரக்குப் பொருட்கள் கையாளப் படுகிறது என்பது குறித்தச் செயல்திறன் மதிப்பீட்டு ஆய்வு (NTRS) அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
  - மொத்தமுள்ள 15 துறைமுகங்களில், 9 துறைமுகங்களில் சரக்குகள் வெளியேற எடுத்துக் கொள்ளும் காலம் முந்தைய ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் குறைவாக பதிவாகியுள்ளது.
- தென்னாப்பிரிக்காவில் உள்ள "மனித உரிமைகள், விடுதலை மற்றும் நல்லிணக்கம்: நெல்சன் மண்டேலா அவர்களின் மரபை வெளிப்படுத்தும் தளங்கள்" ஆனது யுனெஸ்கோ அமைப்பினால் உலக பாரம்பரியச் சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

  - நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை மற்றும் தென்னாப்பிரிக்காவின் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய 14 இடங்களை இது உள்ளடக்கியது.

- டெல்லியில் நடைபெற்ற வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32வது சர்வதேச மாநாட்டினை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- 7வது இந்திய சர்வதேச விருந்தோம்பல் சார் கண்காட்சியானது (IHE 2024) கிரேட்டர் நொய்டா நகரில் நடைபெற்றது.
- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் மனு பாக்கர் இந்தியத் தேசியக் கொடியினை ஏந்தி அணியினை வழி நடத்திச் செல்வதற்கான ஒரு வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா, மிக மோசமான அமைதியின்மை சூழலையடுத்து சமீபத்தில் ராஜினாமா செய்தார்.
- குராசோ தீவு நாட்டை கரீபியன் சமூக (CARICOM) அமைப்பானது, அந்தப் பிராந்திய அமைப்பின் ஆறாவது இணை உறுப்பினராக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- மத்திய அரசானது, புதிய மின்னணு மனித வள மேலாண்மை அமைப்பை (e-HRMS) அறிமுகப் படுத்தியுள்ளது.
  - இந்த அமைப்பு ஆனது, எண்ணிம வழிமுறைகள் மூலம் அரசு ஊழியர்களின் பணி விவகாரங்களின் மேலாண்மையினை சீரமைத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு ஃபிஜியின் அதியுயர் கௌரவ விருதான 'Companion of the Order of Fiji' விருது வழங்கப்பட்டுள்ளது.
- குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள் தலைமையிலான முதலாவது ஆளுநர்கள் மாநாடு ஆனது டெல்லியில் இராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது.
- லெப்டினன்ட் கர்னல் கபிலன் சாய் அசோக், பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் குத்துச் சண்டைப் போட்டியில் நடுவராகப் பணியாற்றிய இந்தியாவின் இளம் நபர் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- சமீபத்தில், ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சி (MPX) நடத்தப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு பாரீசு ஒலிம்பிக் போட்டிகளில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் தனது முதல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான 100 மூத்த தமிழறிஞர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான ஆணைகளைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.
  - தமிழக அறிஞர்கள் மாதம் 3,500 ரூபாய் உதவித் தொகையும், மருத்துவ உதவித் தொகையாக 500 ரூபாயும் பெறுவார்கள்.
- இந்திய நாட்டு அரசானது முதன்முறையாக யுனெஸ்கோவின் மிக மதிப்புமிக்க உலகப் பாரம்பரியக் குழுக் கூட்டத்தினைப் புது டெல்லியில் நடத்தியது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் தேதிக்கு முன் வாங்கிய அசையாச் சொத்துகளுக்கு அசல் மதிப்பில் ஈடு செய்தல் பலன் மீண்டும் வழங்கப்படும் என்று மத்திய அரசு முன் மொழிந்துள்ளது.
- மத்திய வெளிவிவகாரங்கள் அமைச்சர் புது டெல்லியில் 2வது BIMSTEC நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

- இந்திய மல்யுத்த வீரர் வினேஷ் போகட் பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் இறுதிப் போட்டியில் 50 கிலோ எடைப் பிரிவு மல்யுத்தப் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப் பட்ட மறுநாள் மல்யுத்தப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்தார்.
- ஜப்பானிய அறிவியலாளர்கள் உயிருள்ள தோல் திசுக்களை ரோபோ (எந்திர மனித) முகங்களுடன் பொருத்தி அவற்றை "புன்னகைக்கச் செய்யும்" ஒரு வழியை உருவாக்கி உள்ளனர்.
- பசுமை சார் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் உறுப்பினர் நாடுகள் ஆனது 1.5 டிகிரி செல்சியஸ் என்ற இலக்கை அடைய உதவுவதற்கும் 29வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP29) பருவநிலை நிதி வழங்கீட்டு நடவடிக்கை நிதியை அஜர்பைஜான் அறிவித்து உள்ளது.
- ஷேக் ஹசீனா ராஜினாமா செய்ததையடுத்து, வங்காளதேசத்தில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக் கால அரசாங்கம் நிறுவப்பட உள்ளது.
- திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் வேந்தரான உயிரி வேதியியலாளர் கோவிந்தராஜன் பத்மநாபன், நாட்டின் முதன்மையான அறிவியல் விருதான முதலாவது 'விஞ்ஞான ரத்னா' விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பொருளாதார மாற்றம், நிதி உள்ளடக்கம் மற்றும் பெரு மேம்பாட்டிற்கான எண்ணிமப் பொது உள்கட்டமைப்பிற்கான இந்தியாவின் G20 பணிக் குழுவானது, 'எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு குறித்த இந்தியாவின் G20 பணிக் குழுவின் இறுதி அறிக்கை' ஒன்றினை வெளியிட்டுள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கியின் பொதுக் காப்பீட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, பேரிடர் மேலாண்மை காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கிய இந்தியாவின் முதல் மாநிலமாக நாகாலாந்து மாறியுள்ளது.
- ஜிம்பாப்வே 1992 ஆம் ஆண்டு எல்லைப் பகுதிகளில் அமைந்த நீரோட்டப் பாதைகள் மற்றும் சர்வதேச ஏரிகளின் வளங்காப்பு மற்றும் அதன் பெரும் பயன்பாடு பற்றிய உடன்படிக்கையினை (UN Water Convention) ஏற்ற 54வது நாடாகவும், 11வது ஆப்பிரிக்க நாடாகவும், மாறியுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று தேசியப் புத்தகப் பிரியர்கள் தினம் கொண்டாட ப்படுகிறது.
- 'பர்வத் பிரஹார்' இராணுவப் பயிற்சியானது, லடாக்கின் உயர் மட்டப் பகுதிகளில் இந்திய இராணுவத்தினால் நடத்தப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த உத்திசார் பயிற்சியாகும்.
- புராந்தர் ஹைலேண்ட்ஸ் ஃபார்மர்ஸ் ப்ரொட்யூசர் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனமானது, இந்தியாவில் முதல் முறையாக புவிசார் குறியீடு பெற்ற அத்திப் பழச் சாற்றை போலந்துக்கு ஏற்றுமதி செய்து குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- பாரத ஸ்டேட் வங்கியானது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டியை அதன் தலைவராக நியமித்து உள்ளது.
- பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் நோவா லைல்ஸ் என்பவர் ஜமைக்காவின் கிஷான் தாம்சனை வெறும் 0.005 வினாடிகள் என்ற வித்தியாசத்தில் வீழ்த்தி பூமியின் அதிவேக ஓட்டப் பந்தய வீரர் (மனிதர்) என்ற பட்டத்தினைக் கைப்பற்றியுள்ளார்.

- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய ஆடவர் ஹாக்கி அணியானது ஸ்பெயின் அணியினை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தினை வென்று உள்ளது.
- இந்திய மல்யுத்த வீரர் அமன் செஹ்ராவத் பாரீசு ஒலிம்பிக் போட்டியின் ஆடவருக்கான 57 கிலோ எடைப்பிரிவிற்கான ஃப்ரீஸ்டைல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் இந்தியக் குழுவின் கொடி ஏந்துபவர்களாக பி.ஆர்.ஸ்ரீஜேஷ் மற்றும் மனு பாக்கர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டு இருந்தனர்.
- மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சகமானது, மூன்றாவது "ஹர் கர் திரங்கா" (HGT) பிரச்சாரம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரையில் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.
- முதலாவது BIMSTEC அமைப்பின் (பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு) வணிக உச்சி மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது, மொத்தம் 24,657 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான எட்டு இரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மூன்று கடலடிப் புவியியல் கட்டமைப்புகளுக்கு இந்தியாவினால் முன்மொழியப்பட்ட பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.
    - அந்தப் பெயர்களாவன: அசோகா கடல்குன்று, சந்திரகுப்தா மலைமுகடு மற்றும் கல்பதரு மலைமுகடு.
- பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் பலவேறு இணைய வெளிக் குற்றங்களுக்கு தீர்வு காண்பதற்காக என்று தேசிய மகளிர் ஆணையம் (NCW) ஆனது புது டெல்லியில் எண்ணிம சக்தி மையத்தினை (Digital Shakti Center) தொடங்கியுள்ளது.
- பாரத் மிகு மின் நிறுவனம் (BHEL) ஆனது கேரளாவில் உள்ள 350 மெகாவாட் திறன் கொண்ட காயம்குளம் ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தில் (CCPP) எரிவாயு விசையாழியில் மெத்தனால் எரிபொருளைப் பயன்படுத்துவதற்கான முதல் ஆணையைப் பெற்றுள்ளது.
- மேற்கு வங்காள மாநில அரசு மற்றும் UNICEF ஆகியவை இணைந்து புதிதாக குழந்தைப் பெற்றெடுத்த தாய்மார்கள் மத்தியில் தாய்ப்பால் ஊட்டுவதை வெகுவாக ஊக்குவிப்பதில் தந்தைகளையும் பங்கு வகிக்க ஊக்குவிப்பதற்கான ஒரு பெரும் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளன.
- ஒடிசா மாநில அரசாங்கம் ஆனது, குடும்ப அட்டைதாரர்களுக்கான பொது விநியோகத் திட்டத்தில் (PDS) புரட்சியை ஏற்படுத்துவதற்காக இந்தியாவில் முதல் முறையாக 'அரிசி ATM' என்றும் அழைக்கப்படுகின்ற முழு நேரத் தானிய வழங்கீட்டு இயந்திரத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (டிஎன்பிஎஸ்சி) தலைவராக மூத்த ஐஏஎஸ் அதிகாரி எஸ்.கே பிரபாகரை தமிழக அரசு நியமித்துள்ளது.
- இந்திய வாகன உற்பத்தி நிறுவனங்களின் சங்கம் (SIAM) ஆனது உலக உயிரி எரிபொருள் தினத்தன்று (ஆகஸ்டு 10) தனது 3வது சர்வதேச மாநாட்டினை புது டெல்லி நகரில் நடத்தியது.
- மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் ஆனது, ஒரு சில தொழில் துறைப் பங்குதாரர்களிடையே தனிப்பட்ட முறையில் வெளியிட்ட 2024 ஆம் ஆண்டு ஒளிபரப்பு மசோதாவின் புதிய வரைவை திரும்பப் பெற்றது.

- ஐக்கிய உலக மல்யுத்த அமைப்பு (UWW) மற்றும் சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC) ஆகியவற்றிற்கு எதிராக வினேஷ் போகட் முன் வைத்த மேல்முறையீட்டை விளையாட்டுத் துறைக்கான நடுவண் நீதிமன்றத்தின் (CAS) அவசரப் பிரிவானது நிராகரித்துள்ளது.
- இந்தியா-இலங்கை இடையிலான 10வது கூட்டு இராணுவப் பயிற்சியான 'மித்ர சக்தி' இலங்கையில் நடைபெற்று வருகிறது.
- நடிகரும் அரசியல்வாதியுமான குஷ்பு சுந்தர் தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளார்.
  - அவர் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இப்பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.
- இந்திய அரசு மற்றும் உலக வங்கி இணைந்து 781 கிலோ மீட்டர் நீளமுள்ள பசுமை தேசிய நெடுஞ்சாலை வழித்தடத்தினை (GNHCP) கட்டமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தியாவின் தங்கத் தொழில் துறையானது உலக தங்க சபையின் ஆதரவுடன் புதிய சுய ஒழுங்குமுறை அமைப்பாக சிறந்த தங்கம் மீதான இந்தியத் தரம் மற்றும் தர நிலைகள் கூட்டமைப்பினை (IAGES) தொடங்கியுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினர் பீம் சிங் 75 Great Revolutionaries of India என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- 90 மெகாவாட் ஆற்றல் உற்பத்தி திறன் கொண்ட மத்திய மற்றும் வட இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்னாற்றல் உற்பத்தி நிலையமானது மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஓம்காரேஷ்வர் எனுமிடத்தில் தொடங்கப்பட்டது.
- சுவிட்சர்லாந்தின் 77வது லோகார்னோ திரைப்பட விழாவில் பர்டோ அல்லா கேரியரா/ Career Leopard என்றும் அழைக்கப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை ஷாருக்கான் பெற்றுள்ளார்.
- சத்தீஸ்கர் மாநில அரசானது, அந்த மாநிலத்தில் புதிய புலிகள் வளங்காப்பகத்தினை நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளதையடுத்து, காடுகள் நிறைந்துள்ள அம்மாநிலத்தின் நான்காவது புலிகள் வளங்காப்பகமாக இது அமைய உள்ளது.
  - தற்போது சத்தீஸ்கரில் மூன்று புலிகள் வளங்காப்பகங்கள், பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள இந்திராவதி, கரியாபந்தில் உள்ள உடந்தி-சிதாநதி மற்றும் முங்கேலியில் உள்ள அச்சனக்மர் வளங்காப்பகம் ஆகிய உள்ளன.
- தமிழக அரசானது கர்ப்பிணி பெண்களைக் கண்காணிப்பதற்காக புதிதாக 102 எனும் புதிய உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஹரியானாவில் முதன்முறையாக உலகளாவிய பிரவாசி மகளிர் கபடி லீக் போட்டி நடைபெற உள்ளது.
- இந்திய விமானப்படை மற்றும் மலேசிய அரசின் விமானப்படை ஆகிய இரண்டும் மலேசியாவில் நடைபெற்ற 'உதார சக்தி 2024' எனப்படும் பயிற்சியில் பங்கேற்றன.
- உச்ச நீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக, 'லப்பட்டா லேடீஸ்' எனப்படும் பாலினச் சமத்துவ அடிப்படையிலான இந்தி மொழித் திரைப்படமானது, அனைத்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் பதிவுத்துறை உறுப்பினர்களுக்காக சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தில் திரையிடப்பட்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் புதிய நீர் சார் தொழில் நுட்ப மையத்தினை நிறுவுவதற்கு இந்தியா மற்றும் இஸ்ரேல் அரசுகள் கைகோர்த்து உள்ளன.

- மகாபலிபுரம் திருவிடந்தை கடற்கரையில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40 பேர் உள்ளிட்ட பட்டம் விடும் வீரர்களின் பங்கேற்புடன் 3வது தமிழ்நாடு சர்வதேசப் பட்டம் விடும் திருவிழா நடைபெற்றது.
- சர்வதேச இடது கை பழக்கம் உள்ளவர்கள் தினம் ஆனது இடது கை பழக்கம் உள்ளவர்களின் தனித்துவம் மற்றும் வேறுபாடுகளைக் கொண்டாடுவதற்காக என்று ஆண்டுதோறும் ஆகஸ்ட் 13 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் சர்வதேச தினமாகும்.
- கொச்சியில் வசித்த கடைசி வெளிநாட்டு யூதப் பெண்ணான குயின்னி ஹலேகுவா சமீபத்தில் காலமானார்.
- நதிகளில் ஏற்படும் வெள்ள அபாயம் குறித்து பொது மக்களுக்கு உரிய நேரத்தில் எச்சரிக்கை வழங்குவதற்காக மத்திய நீர் வள ஆணையம் ஆனது 'FloodWatch India-2.0' செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய நெய்வேலி லிக்னைட் கழக லிமிடெட் நிறுவனமானது, அதன் பெருநிறுவனத் திட்டம் 2030 மற்றும் தொலைநோக்குக் கொள்கை 2047 ஆகியவற்றை மறுபரிசீலனை செய்து 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் மொத்த மின் உற்பத்தித் திறனை மூன்று மடங்கு அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது.
  - தற்போது 1.43 ஜிகா வாட்டாக உள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனை 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 10.11 ஜிகா வாட்டாக உயர்த்துவதன் மூலம் மொத்த திட்டமிடப் பட்ட திறனில் சுமார் 50% ஆற்றலைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த உற்பத்தி மூலம் அடைய முனைகிறது.
- இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் (IRCTC) மற்றும் தேசியத் தலைநகர மண்டலப் போக்குவரத்துக் கழகம் (NCRTC) ஆகியவை இணைந்து இந்திய இரயில்வே மற்றும் நமோ பாரத் இரயில்களில் பயணிகளின் பெரும் பயண அனுபவத்தை மேம்படுத்துவதற்காக 'ஒர் இந்தியா-ஒரே பயணச்சீட்டு' திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
  - இது ரத்து செய்தல் மற்றும் பணம் செலுத்துதலுக்கான ஒரு இசைவு மிக்க செயல் முறைகளுடன் இரண்டு தளங்களிலும் நமோ பாரத் பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்ய பயணிகளுக்கு வழி வகுக்கும்.
- மூத்த இந்திய வருவாய்ப் பணி அதிகாரி ராகுல் நவின் அமலாக்க இயக்குனரகத்தின் (ED) இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றிற்கான சட்டசபை தேர்தல் செப்டம்பர் 18 முதல் அக்டோபர் 01 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- இந்தூரில் அமைந்துள்ள விங்ஸ் EV நிறுவனமானது, "ராபின்" எனப்படும் சிறிய வகை மின்சார மகிழுந்தினை 2025 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்த உள்ளது.
- ப்ராப்ஷேர் எனப்படும் பகுதியளவு வீட்டு மனை விற்பனைகள் சார்ந்த இணைய தளம், சமீபத்தில் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் சிறிய மற்றும் நடுத்தர வீட்டு மனை விற்பனை முதலீட்டு நிறுவனம் என்ற உரிமத்தைப் பெற்ற முதல் இணைய தளமாகும்.
- சமீபத்தில் 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்கு வெண்கலப் பதக்கம் வென்று தந்த P.R. ஸ்ரீஜேஷ், இந்திய இளையோர் ஆடவர் ஹாக்கி அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பேடோங்டர்ன் ஷினவத்ரா தனது 37 வயதில் தாய்லாந்தின் மிக இள வயதுப் பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- தமிழக அரசானது தற்போதைய தலைமைச் செயலாளர் ஷிவ்தாஸ் மீனாவை தமிழ்நாடு வீட்டு மனை விற்பனை தொழில்துறை ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNRERA) தலைவராக நியமித்தது.
- மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்கள் மறைந்த தி.மு.க. கட்சித் தலைவர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் 100 ரூபாய் நாணயத்தினை வெளியிட்டுள்ளார்.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் சென்னையில் அமைக்கப்பட்டுள்ள கடலோரக் காவல்படையின் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தினை (MRCC) திறந்து வைத்தார்.
- ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா அடுத்த மாதம் தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.
- இந்திய நாடானது, 'An Empowered Global South for a Sustainable Future' என்ற கருத்துருவுடன் 3வது Voice of Global South Summit என்ற மாநாட்டினை நடத்த உள்ளது.
- திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலைய லிமிடெட் (TIAL) நிறுவனத்திற்கு கிரீன்டெக் அறக்கட்டளையின் மதிப்புமிக்க மாசுக் கட்டுப்பாட்டு கழிவு மறுசுழற்சியில் சிறந்து விளங்குவதற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.
  - TIAL நிறுவனத்தின் முயற்சியான 'கழிவுகளைக் குப்பைக் கிடங்கில் கொட்டாமல் முழுவதும் அகற்றிய' என்ற நடவடிக்கைக்காக இந்த விருது வழங்கப் படுகிறது.
- பாரத் பெட்ரோலியம் கழக லிமிடெட் (BPCL) நிறுவனமானது இந்தியாவின் முதல் உயிரி எரிபொருள் கலவையான அதிக தீப்பற்றுதல் திறன் மற்றும் அதிவேக திறன் கொண்ட டீசல் (HFHSD) சேமிப்பகத்தினை மும்பை துறைமுகத்தில் அமைத்துள்ளது.
- புதிதாக கையொப்பமிட்ட ஐக்கியப் பேரரசு-இந்தியத் தொழில்நுட்பப் பாதுகாப்பு முன்னெடுப்பின் (TSI) கீழ் முக்கிய கனிம ஆய்விற்கான கூட்டுறவினை விரிவுபடுத்தச் செய்வதற்காக ஐக்கியப் பேரரசுடன் (UK) பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது உணவுப் பொருட்களில் நுண் நெகிழிகள் மாசுபாட்டை மதிப்பிடுவதற்கும் அதைக் கண்டறியச் செய்வதற்கான பல்வேறு வழிமுறைகளை உருவாக்குவதற்கும் என்று ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- காசா பகுதியில் முதல் முறையாக போலியோ நோய்ப் பாதிப்பு பதிவாகியுள்ளது.
- காலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சூடான் நாட்டில் குறைந்தது 22 பேர் உயிரி இழந்துள்ள நிலையில் மேலும் குறைந்தது 354 பாதிப்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
- உலகப் புகைப்படத் தினமானது ஆண்டுதோறும் ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
  - 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "An Entire Day" என்பதாகும்.
- முன்னாள் இராணுவ தலைமை தளபதி (COAS) S.பத்மநாபன் சமீபத்தில் சென்னையில் காலமானார்.
- சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்ற 17வது சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியாட் போட்டியின் மூன்று போட்டி பிரிவுகளில் 4 மாணவர்கள் கொண்ட இந்திய குழுவினர் தலா மூன்று தங்கப் பதக்கங்களையும் மூன்று வெண்கலப் பதக்கங்களையும் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

- வடகிழக்கு கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி மேம்பாட்டுக் கழகம் ஆனது, அதன் எரி என்ற பட்டு வகைக்காக வேண்டி (உலகின் ஒரேயொரு சைவ வகை பட்டு) ஜெர்மனியிடமிருந்து OEKO-TEX சான்றிதழைச் சமீபத்தில் பெற்றது.
  - இந்த சான்றிதழானது ஜவுளிகள் தீங்கு விளைவிக்கும் பொருட்களைக் கொண்டு உள்ளனவா என்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சூழ்நிலையில் உற்பத்தி செய்யப் படுவதையும் உறுதி செய்வதற்கான ஒரு கடுமையான தரநிலை சோதனையாகும்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்ததொரு விமானத் தொழில்நுட்ப நிறுவனமான ஸ்பேஸ் சோன் இந்தியா, மீண்டும் பயன்படுத்தக் கூடிய ருமி 1 எனப்படும் கலப்பு நுட்பம் சார்ந்த ஏவு கலத்தினைப் பயன்படுத்திப் பல வளிமண்டலச் சூழ்நிலைகளைக் கண்காணிக்கவும், பல்வேறு தரவுகளைச் சேகரிக்கவும் வடிவமைக்கப்பட்ட மூன்று பெட்டக வடிவ (சிறிய) செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவியுள்ளது.
- நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்திய அரசின் அடுத்தத் தூதராக / நிரந்தரப் பிரதிநிதியாக பர்வதனேனி ஹரிஷ் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி காந்த தாஸ் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலக நிதியியல் சார் மத்திய வங்கிகளின் தரநிலை மதிப்பீடுகளில் “A+” மதிப்பீட்டைப் பெற்றுள்ளார்.
- இந்திய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளின் குழுவானது, அடுத்து வரவிருக்கும் 2024 ஆம் ஆண்டு பாரீஸ் பாராலிம்பிக் விளையாட்டு போட்டிகளுக்கான இந்தியக் குழுவின் அணிப் பொறுப்பாளராக சத்ய பிரகாஷ் சங்வானை நியமித்து உள்ளது.
- இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் வெளி விவகார அமைச்சர் ஆகியோர் அவர்களின் ஜப்பானிய நாட்டு இணை சகாக்களுடன் இணைந்து புது டெல்லியில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு '2+2" பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.
- 2024 ஆம் ஆண்டு மகளிர் T20 கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியானது பாதுகாப்பு காரணங்களுக்காக வங்க தேசத்திற்குப் பதிலாக ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப் பட உள்ளது.
- தமிழக அரசானது, புயல்களைக் கண்காணிப்பதற்காக ஏற்காடு மற்றும் இராமநாத புரத்தில் தலா இரண்டு டாப்ளர் வானிலை ரேடார் அமைப்புகளை நிறுவ உள்ளது.
  - தற்போது ஏற்கனவே சென்னையில் இரண்டு ரேடார்களும், காரைக்கால் மற்றும் ஸ்ரீஹரிகோட்டாவில் தலா ஒரு ரேடாரும் உள்ளன.

டாபர் இந்தியா நிறுவனம் ஆனது, தமிழ்நாட்டில் திண்டிவனத்தில் உள்ள SIPCOT உணவுப் பூங்காவில் தென்னிந்தியாவின் தனது முதலாவது உற்பத்திப் பிரிவினை அமைப்பதற்கு 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- சென்னை சேப்பாக்கத்தில் பல்வேறு ஆபத்துகளுக்கான முன் எச்சரிக்கை மையமாக மேம்பட்டுத்தப்பட்ட மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையத்தினை (SEOC) தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- மறைந்த திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான மு. கருணாநிதி அவர்களின் அனைத்து இலக்கியப் படைப்புகளையும் எழுத்துரிமைத் தொகை எதுவுமின்றி நாட்டு உடைமையாக்க தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
  - அவரது இலக்கியப் படைப்புகளில் 15 புதினங்கள், 20 நாடகங்கள், 15 சிறுகதைகள், 200க்கும் மேற்பட்ட கவிதைகள் போன்றவை அடங்கும்.

- வேலூரின் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை இணைந்து கை அசைவு சிகிச்சைக்கான ஒரு புதுமையான, எளிதில் சுமந்து செல்லக் கூடிய மற்றும் மலிவு விலையிலான எந்திர இயக்கத் தீர்வினை உருவாக்கியுள்ளன என்ற நிலையில் இது பக்கவாதத்திலிருந்து மீளச் செய்வதற்கான உடல் மற்றும் தொழில்சார் சிகிச்சையைச் சரியான நேரத்தில் பெறக் கூடியதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு நாளைக்கு 2.07 மில்லியன் பீப்பாய்கள் என்ற வீதத்துடன், சீனாவை விஞ்சி உலகிலேயே அதிகளவில் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- கர்நாடகா, இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான (5,765) பொதுப் பயன்பாட்டு மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களைக் கொண்டுள்ளது என்ற நிலைமையில் இதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம் மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் இடம் பெற்று உள்ளன.
- தீவிரவாதத்தினால் மிகவும் பாதிக்கப் பட்டவர்களுக்கான நினைவு கூறல் மற்றும் கௌரவிப்பதற்கான சர்வதேச தினம் ஆனது ஆண்டுதோறும் ஆகஸ்ட் 21 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது.
- மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான பல்வேறு வன்முறைச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களை நன்கு நினைவு கூரும் சர்வதேச தினம் ஆனது ஆண்டுதோறும் ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- திவ்யாங் கலைஞர்களுக்கான 17வது திவ்ய கலா மேளாவை சத்தீஸ்கர் மாநிலத்தின் தலைநகரான ராய்ப்பூர் நடத்தியது.
- 'கானு' (பசுமை காடு என்று பொருள்) எனும் தென்னிந்தியாவின் முதல் ஆதிவாசி நூலகமானது கர்நாடகாவின் சாம்ராஜநகர் மாவட்டத்தில் உள்ள பிலிகிரிரங்கன் மலையில் திறக்கப்பட்டுள்ளது.
- உலகின் மிக வயதான மனிதரான (117 வயது 168 நாட்கள்) மரியா பிரான்யாஸ் ஸ்பெயினில் காலமானார்.
- 2 முதல் 3 ஆண்டுகளுக்குள் வருணா நதியினை புத்துயிர் பெறச் செய்யும் நோக்கத்தில், 'தூய்மையான நதிகள் குறித்த திறன் மிகு ஆய்வகத்தினை' வாரணாசியில் உருவாக்குவதற்காக இந்தியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் கை கோர்த்துள்ளன.
- அமுல் நிறுவனம் ஆனது, பிராண்ட் பினான்ஸ் நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு உணவு மற்றும் பானங்கள் குறித்த அறிக்கையினால் AAA+ மதிப்பீட்டுடன் உலகின் வலிமையான உணவுத் தயாரிப்பு நிறுவனமாக சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
- எலான் மஸ்க் நிறுவனத்தின் X செயற்கை நுண்ணறிவு ஊடகம் ஆனது அதன் சமீபத்தியப் பெரிய மொழி மாதிரிகளான Grok-2 மற்றும் Grok-2 மினி ஆகிய உரையாடு மென்பொருள்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தென் கொரியா மற்றும் அமெரிக்கா இணைந்து உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்ட் பயிற்சிகள் என்ற பெயரிலான வருடாந்திர கோடைக்கால இராணுவப் பயிற்சிகளைத் தொடங்கி உள்ளன.
- நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் மாத காலக் கட்டத்தில் நிகர அந்நிய நேரடி முதலீடு (FDI) ஆனது 6.9 பில்லியன் டாலராக இருந்ததோடு இது முந்தைய ஆண்டில் 4.7 பில்லியன் டாலராக இருந்தது.

  - சுமார் 75 சதவீத முதலீடுகளுடன், சிங்கப்பூர், மொரீஷியஸ், நெதர்லாந்து, அமெரிக்கா மற்றும் பெல்ஜியம் ஆகியவை முக்கிய முதலீட்டு மூல நாடுகளாக உள்ளது.

❖ இந்திய-அமெரிக்க வர்த்தக சபையின் (IACC) இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களுக்கான முதல் சிறப்பு மையம் அகமதாபாத்தில் திறக்கப் பட்டது.

  - இது ஏற்றுமதிச் சந்தைகளுக்குச் சிறப்பான முறையில் சேவை வழங்குவதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களை (MSMEs) மேம்படுத்தி ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ தருண் சுக் எழுதிய "Modi's Governance Triumph: Reshaping India's Path to Prosperity" என்ற தலைப்பிலான புத்தகம் ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

❖ கோவாவில் நடைபெறும் இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவுடன் சேர்த்து நவம்பர் மாதத்தில் முதலாவது உலக ஒலி கட்புல மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாட்டினை இந்தியா நடத்தவுள்ளது.

❖ இந்தியா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் நான்கு ஒப்பந்தங்களில் கையெழுத்து போட்டுள்ளதன் மூலம் பாதுகாப்பு, வர்த்தகம், மருந்துகள், பசுமை ஆற்றல் மற்றும் கல்வி உள்ளிட்ட முக்கியத் துறைகளில் தங்கள் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு முடிவு செய்துள்ளன.

❖ ஐதராபாத்தில் உள்ள இராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம் (RGIA) ஆனது, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியா பயண விருதுகளில் சிறந்த விமான நிலையமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

❖ 2024 ஆம் ஆண்டிற்கான ஃபோர்ப்ஸ் நிறுவனம் ஆனது, 100 முன்னணி மேகக் கணிம நிறுவனங்களின் பட்டியலில் இடம்பெற்ற ஒரே இந்திய நிறுவனமாக Razorpay ஆனது.

  - இந்த நிறுவனம் ஆனது தொடர்ந்து மூன்றாவது முறையாக இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, Su-30 MK-I விமானத்தில் இருந்து ஏவக்கூடிய GAURAV எனப்படும் தொலை தூர வரம்புடைய தட்டையான பாதையில் காற்றை கிழித்துச் செல்லக்கூடிய குண்டு (LRGB) மீதான முதல் ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

❖ குஜராத்தில் உள்ள காக்ராபார் அணுமின் நிலையத்தில் அமைந்துள்ள இந்தியாவின் இரண்டாவது உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட 700 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் உலை அதன் முழு செயல் திறனில் இயங்கத் தொடங்கியுள்ளது.

❖ அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பானது, கடுமையான ஒவ்வாமை சார்ந்த எதிர்விளைவுகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக நெஃபி எனப்படும் நாசி வழி தெளிப்பு மருந்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது என்ற நிலையில் இது எபிபென் போன்ற ஊசி வழி மருந்துகளுக்கு மாற்றாக அறிமுகப்படுத்தப்பட்ட முதல் ஊசி வழி சாராத மருந்தாகும்.

❖ சென்னை புழல் ஏரியில் அமைக்கப்பட உள்ள சர்வதேச தரத்திலான அழகுமீன் வளர்ப்பு வளாகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்குத் தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

❖ சதாரா மாவட்டத்தின் படன் தாலுக்காவில் உள்ள மன்யாச்சிவாடி என்ற கிராமம் மகாராஷ்டிராவின் முதல் 'சூரிய சக்தி கிராமம்' ஆக மாறியுள்ளது.

- இந்தியாவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 4.5 தலைமுறை நுட்பம் சார்ந்த மற்றும் LCA மார்க் 2 ரக போர் விமானங்கள் ஆனது 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் விமானங்களைப் படையில் இணைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளன என்ற நிலையில் 2029 ஆம் ஆண்டிற்குள் இவற்றின் பெரிய அளவிலான உற்பத்தித் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் ஆனது, சர்வதேச விமான நிலைய சபையின் அங்கீகாரத் திட்டத்தின் கீழ் நிகர சுழிய அளவிலான கார்பன் உமிழ்வு நிலையைப் பெற்ற நாட்டின் முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.
- O.P. ஜிண்டால் உலகப் பல்கலைக்கழகம் (JGU) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்தியாவின் முதல் அரசியலமைப்பு அருங்காட்சியகத்தைத் தொடங்க உள்ளது.
  - இந்த அருங்காட்சியகத்திற்கு, "அரசியலமைப்பு அகாடமி மற்றும் உரிமைகள் மற்றும் சுதந்திர அருங்காட்சியகம்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பில் சிறிய அளவிலான தொழில்கள் வகிக்கும் முக்கியப் பங்கை அங்கீகரிக்க இந்தியா ஆண்டுதோறும் ஆகஸ்ட் 30 அன்று தேசிய சிறு தொழில்கள் தினமாக அனுசரிக்கிறது.


# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டிற்கே உரிய கல்வட்டங்கள்

- சிவகங்கையின் எலந்தங்கரையில் உள்ள மாநிலத்தின் முதல் வானியல் சார்-தொல்லியல் தளத்தில் ஒரு பழங்கால ஆய்வுக் கூடம் கண்டறியப்பட்டுள்ளது.
- இது பெருங்கற்காலத்தினைச் சேர்ந்த மிகப்பெரிய புதைவிடமாகும்.
- இது ஓர் ஆய்வகப் பரப்பு என்பது தெளிவாக புலப்படுவதால், தமிழ்நாட்டின் முதல் வானியல் சார் தொல்லியல் தளம் இதுவே ஆகும்.
- இது பின்னர் இப்பகுதியில் வசித்த தமிழ் அறிவர்கள் என்ற அதிகம் கற்றறிந்த குழு குறித்தச் சான்றினை வழங்குகிறது.
- இவர்களைப் பற்றிய ஆரம்பக் குறிப்பு தொல்காப்பியத்தில் உள்ளது.
- இவர்கள் வானவியலில் சிறந்து விளங்கினர்.
- அவர்கள் தாங்கள் கற்றதை மற்றவர்களுக்குக் கற்பித்தனர் என்பதோடு ஐந்திரம் என்று அழைக்கப்பட்ட இந்தக் கற்றல் முறையானது தொல்காப்பியத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளது.



## தமிழ்நாட்டில் சொகுசு கார் பதிவு



Top of the line choice

Registration of motor cars for which the sale value is over ₹30 lakh grew 46.2%, from 5,797 cars in 2022-23 to 8,475 cars in 2023-24. Luxury brands saw a 19.3% jump in registration in 2023-24. Here are the top five zones for registration of luxury cars in Tamil Nadu

**2023-24**

| Zone | Aston Martin | Audi | Lamborghini | Bentley | BMW | Ferrari | Jaguar Land Rover | Maserati | Mercedes - Benz | Porsche | Rolls - Royce | Grand Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Chennai | 1 | 34 | 5 | 7 | 715 | 1 | 144 | 3 | 706 | 48 | 4 | 1,668 |
| Coimbatore | | 21 | 1 | | 228 | | 37 | | 203 | 20 | | 510 |
| Madurai | | 2 | | | 61 | | 9 | | 35 | 3 | | 110 |
| Tirunelveli | | 6 | | | 34 | | 6 | | 45 | 4 | | 95 |
| Tiruchi | | 3 | | | 33 | | 3 | | 27 | 1 | | 67 |

**2022-23**

| Zone | Aston Martin | Audi | Lamborghini | Bentley | BMW | Jaguar Land Rover | Maserati | Mercedes - Benz | Porsche | Rolls - Royce | Grand Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Chennai | | 33 | 7 | 3 | 547 | 73 | 1 | 726 | 52 | 2 | 1,444 |
| Coimbatore | 1 | 21 | | | 191 | 24 | | 164 | 23 | | 424 |
| Madurai | | 4 | | | 40 | 5 | | 26 | 1 | | 76 |
| Tirunelveli | | 3 | | | 29 | 1 | | 26 | 4 | | 63 |
| Erode | | 2 | | | 27 | 2 | | 24 | 3 | | 58 |


Source: Commissionerate of Transport and Safety, Tamil Nadu

Note: A zone comprises the main city and its surrounding districts. For instance, Chennai zone includes 24 Regional Transport and Unit offices covering Chennai, Tiruvallur, Kancheepuram and Chengalpattu districts. | COMPILED BY N. SAI CHARAN

- தமிழ்நாடு மாநிலத்தில், எண்ணிக்கையில் அதிகரித்து வரும் செல்வ வளம் நிறைந்த மக்கள் மத்தியில் சொகுசு கார்களின் பதிவு உயர்ந்து வருகிறது.
- 2023-24 ஆம் ஆண்டில், 30 லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள 8,475 கார்கள் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற நிலையில் இது 2022-23 ஆம் ஆண்டில் இருந்த 5,797 கார்கள் என்ற எண்ணிக்கையினை விட சுமார் 46.2% அதிகமாகும்.
- 2020-21 ஆம் ஆண்டில் 2,816 கார்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில், 2021-22 ஆம் ஆண்டில் 3,954 கார்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- 2019-2020 ஆம் ஆண்டில் 4,187 கார்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- சென்னை மண்டலத்தில் மட்டும் 2023-24 ஆம் ஆண்டில் 1,668 சொகுசு ரக கார்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

- அதைத் தொடர்ந்து கோவை மண்டலத்தில் 510 கார்கள், மதுரை மண்டலத்தில் 110; திருநெல்வேலி மண்டலத்தில், 95; மற்றும் திருச்சி மண்டலத்தில், 65 கார்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

## தமிழ்நாடு பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் 2023-24




- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு (MMR) விகிதத்தில் குறிப்பிடத் தக்க வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
- MMR ஆறு புள்ளிகளுக்கு மேல் குறைந்து ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 45.5 ஆக உள்ளது.
- விருதுநகர் சுகாதாரப் பிரிவு மாவட்டத்தில் (HUD), இந்தக் காலக் கட்டத்தில் எந்தவொரு பேறு காலத் தாய்மார்கள் உயிரிழப்பும் பதிவாகவில்லை.
- 2022-2023 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 52.2 ஆக இருந்த MMR ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 45.5 ஆகக் குறைந்துள்ளது.
- முன்னதாக, MMR ஆனது ஒவ்வோர் ஆண்டும் இரண்டு முதல் மூன்று புள்ளிகள் வரை குறைந்தது.
- இருப்பினும், 2023-24 ஆம் ஆண்டில், MMR 6.7 புள்ளிகள் குறைந்துள்ளது.
- நார்வேயில் ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 1.8 என்ற வீதத்தில் மிகக் குறைந்த MMR விகிதம் பதிவாகியுள்ளது.
- சுவீடன் மற்றும் பின்லாந்து போன்ற பிற ஐரோப்பிய நாடுகளும் ஒற்றை இலக்க MMR வீதங்களுடன் உயர் மதிப்பு (தங்கம்) தர நிலையினை அடைந்துள்ளன.


## தமிழ்நாடு மருத்துவமனைகளில் நிகழும் பிறப்புகள் குறித்த தரவு

- தமிழ்நாடு சுகாதார அமைச்சகம் ஆனது, தமிழகத்தில் பேறு கால உயிரிழப்புகளைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காக, 'Connecting the Missing Dots' என்ற தலைப்பிலான ஒரு பயிலரங்கத்தினை சென்னையில் நடத்தியது.
- தமிழ்நாட்டில் 99.9% பிரசவங்கள் மருத்துவ சுகாதார மையங்களில் நடைபெறுகின்றன என்பதோடு இதில் 59% ஆனது அரசு சுகாதார மையங்களில் நடைபெறுகின்றன.

- இதில் 80% பிரசவங்கள் விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைப் பராமரிப்பு மையங்களில் நிகழ்ந்துள்ளன.




## தமிழ்நாட்டில் புலிகளின் வளங்காப்பு நிலை 2024




- நீலகிரி வன நிலப்பரப்பில் உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான புலிகள் உள்ளன.
- கேரளா மற்றும் தமிழ்நாட்டிற்கு இடையே பெரியாறு - மேகமலை பகுதி மற்றும் ஆனைமலை - பரம்பிக்குளம் பகுதியில் தொடர்ச்சியாகக் காடுகள் பரவிக் காணப் படுகின்றன.
- 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் (NTCA) நாடு தழுவிய புலிகள் கணக்கெடுப்பில் தமிழ்நாட்டில் 306 புலிகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.
- இந்த எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட 264 பெரும்பூனை இனங்களை விட அதிகமாகும்.

- கடந்த இருபது ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்து உள்ளது.
- இந்தியாவில் மேற்கொள்ளப்படும் புலிகள் வளங்காப்புத் திட்டத்தினை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம்.
- முதல் கட்டம் ஆனது 1970 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டது.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை நிறுவுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இரண்டாம் கட்டம் ஆனது 2005-2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த காலக் கட்டத்தில், அரசாங்கமானது ஒரு நிலப்பரப்பு சார்ந்த அணுகுமுறையைப் பின்பற்றியதோடு, புலிகளின் வளங்காப்பிற்காக ஒரு கடுமையான கண்காணிப்பைச் செயல்படுத்தியது.
- 2018 ஆம் ஆண்டில் புலிகளின் எண்ணிக்கை 981 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 824 இந்தப் பகுதியிலேயே வசிக்கும் புலிகள் இருப்பதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

## காவிரி ஆற்றின் நீரோட்டம் 2024




- காவிரியில் 1.5 லட்சம் கன அடி நீர் திறக்கப் படுவதால், அதன் அளவு இரண்டு லட்சம் கன அடியாக உயர வாய்ப்புள்ளது.
- மேட்டூர் அணை திட்டத்தில் முதலில் 2.5 லட்சம் கனஅடி நீர் வழங்கப்பட்டு வந்தது என்ற நிலையில் இதற்கு முன்னதாக 1896 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 2.07 லட்சம் கனஅடி நீர் வழங்கப்பட்டது.
- 1924 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் தேதியன்று, ஆற்றில் வினாடிக்கு 4.56 லட்சம் கன அடி (கனஅடி) நீர் வரத்து இருந்தது.
- 1924 ஆம் ஆண்டு ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 02 ஆம் தேதி வரையிலான கால கட்டத்தில், காவிரிப் படுகையில் அதிக எண்ணிக்கையிலான பகுதிகள் வெள்ளத்தால் பெரிதும் சேதமடைந்தன.

## சிறப்புரிமை மீறல் தொடர்பான வழக்கு


Madras HC Revives Breach of Privilege Notice Against CM Stalin, DMK MLAs for 2017 'Gutkha Protest'

The breach of privilege proceedings were initiated against Stalin and his party MLAs after they carried displayed packets of gutkha in the assembly as part of a protest about open availability of gutkha in the market back in 2017.

- சென்னை உயர் நீதிமன்றம் ஆனது, தமிழக முதல்வர் மற்றும் 17 பேர் மீதான 2017 ஆம் ஆண்டு சிறப்புரிமை மீறல் வழக்கைத் தற்போதையச் சட்டசபைக்குப் பரிந்துரைத்து உள்ளது.
- மேலும், சம்பந்தப் பட்ட சட்டமன்ற அவை கலைக்கப்பட்ட பின்னரும் சிறப்புரிமை மீறல் நடவடிக்கைகள் தொடரலாம் என்றும் நீதிமன்றம் கூறுகிறது.
- ஆனால், முந்தைய சட்ட சபையினால் தொடங்கப்பட்ட வழக்குகளைத் தற்போது தொடர முடியாது என்று வாதித் தரப்பு வாதிட்டது.

## சென்னை இரட்டை அடுக்கு வழித்தடம்



- சென்னையில் 4வது இரட்டை அடுக்கு மெட்ரோ இரயில் வழித்தடத்தின் கட்டுமானப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.
- இது ஒரே தூணில் நிலை தாங்கப்பட்ட இந்தியாவின் முதல் இரட்டை அடுக்கு மெட்ரோ இரயில் இரட்டை வழித் தடத்தினைக் கொண்டுள்ளது.
- இந்த 5 கி.மீ தூர வழித்தடத்தில் ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம், காரம்பாக்கம் மற்றும் ஆலப்பாக்கம் ஆகிய நான்கு மெட்ரோ இரயில் நிலையங்கள் அமைய உள்ளன.

## 'தகைசால் தமிழர்' விருது

- மூத்த காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தனுக்குத் தமிழக அரசு 'தகைசால் தமிழர்' (புகழ்பெற்ற தமிழர்) விருதை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- நான்காவது ஆண்டாக இவ்விருது வழங்கப்படுகிறது.
- N.சங்கரய்யா, R.நல்லகண்ணு மற்றும் K.வீரமணி ஆகியோர் இதற்கு முன்னதாக இந்த விருதினைப் பெற்றவர்கள் ஆவர்.
- இவர் 1980, 1984, 1989 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- மேலும் இவர் 1977 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- 2008 ஆம் ஆண்டில் இவர் பனை மர வளர்ப்பு ஊக்குவிப்பு வாரியத்தின் தலைவராக நியமிக்கப் பட்டார்.




## காவிரி நதி நீர் ஒதுக்கீடு 2024

- தமிழகம் மாநிலத்தில் ஜூலை மாதத்தின் போது காவிரி நதியில் அதிக அளவு நீர் வரத்து பதிவானது என்பதோடு, அந்த மாதம் மற்றும் ஆகஸ்ட் மாதத்திற்கான நதி நீர் ஒதுக்கீடு மட்டுமின்றி மேலும் அதிகமான நீர் வரத்தும் பதிவானது.
- ஜூலை 01 முதல் 31 ஆம் தேதி வரையில், இந்த மாநிலத்திற்கு 96.5 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) நீர் வரத்து என்பது பதிவானது.
- ஜூன் மாதத்தில், நிர்ணயிக்கப்பட்ட 9.19 TMC நீருக்குப் பதிலாக 2.25 TMC நீர் வரத்தினை மட்டுமே தமிழ்நாடு பெற்றது.
- மொத்தமாக, கடந்த இரண்டு மாதங்களில், தமிழகம் 40.43 TMC என்ற வழக்கமான நதி நீர் ஒதுக்கீட்டிற்குப் பதிலாக சுமார் 98.8 TMC நீர் வரத்தினைப் பெற்றுள்ளது.
- ஜூலை மாதத்தில் தமிழகத்திற்கு 31.24 TMC நீரும், ஆகஸ்ட் மாதம் 45.95 TMC நீரும் வழங்கப் பட வேண்டும்.
- காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பின்படி, 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் உச்சநீதிமன்றம் மாற்றியமைத்தபடி, ஜூன் மாதம் முதல் ஒரு நீர் வழங்கீட்டு ஆண்டில் தமிழகத்திற்கு 177.25 TMC நீர் கிடைக்க வேண்டும்.




## தமிழ்நாட்டின் அருந்ததியர் பிரிவினருக்கான இடஒதுக்கீடு




- சமூக ரீதியில் மற்றும் கல்வியில் பின்தங்கிய அருந்ததியர் பிரிவினருக்கு பட்டியலிடப் பட்டச் சாதியினர் (SC) பிரிவில் முன்னுரிமை அளிக்கும் தமிழ்நாடு மாநிலச் சட்டத்தின் அரசியலமைப்பு சார் செல்லுபடித்தன்மைக்கு உச்சநீதிமன்றம் ஆதரவளித்துள்ளது.
- ஒரு வகுப்பினுள் துணை வகைப்பாடு உருவாக்கச் செய்வது என்பது ஒரு நிலையான சமத்துவத்தினைப் பாதுகாப்பதற்கான அரசியலமைப்புத் தேவை என்று நீதிமன்றம் கூறியது.
- தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் ஆனது 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு அருந்ததியர் இடஒதுக்கீடு சட்டத்தினை இயற்றியது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் பிரிவில் மாநில அரசுப் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளில் ஒரு முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அரசியலமைப்பின் 341வது சட்டப் பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் அவர்களால் அறிவிக்கப் பட்ட 76 பட்டியலிடப்பட்ட சாதியினர் பிரிவினர் பட்டியலில் அருந்ததியர் எனும் குழுவில் அருந்ததியர், சக்கிலியர், மதரி, மதிகா, பகாடி, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரர் ஆகிய சாதிப் பிரிவுகளை சேர்க்கும் வகையிலான வரையறையினை இந்த சட்டம் வகுத்துள்ளது.

## உயர் கல்விச் செலவினங்கள்

- நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்க்கப் பட்டுள்ள மாநில அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் உயர்கல்விக்கானச் செலவினை தமிழக அரசே ஏற்க உள்ளது.
- வெளிநாட்டில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேரும் மாநில அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பயணச் செலவினையும் அரசே ஏற்க உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 75 மாணவர்களாக இருந்த, உயர் கல்வி நிறுவனங்களில் உயர் கல்விக்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையானது 2023 ஆம் ஆண்டில் 274 ஆக அதிகரித்துள்ளது.
- இந்த ஆண்டு இதுவரை இந்த எண்ணிக்கை 447 (இந்தியாவில் உள்ள நிறுவனங்கள்) ஆக உள்ளது.

## பதிவுச் சட்டத்தின் பிரிவு 77-A

- சென்னை உயர்நீதிமன்றம் ஆனது 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் 77-A பிரிவானது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான பிரிவாக அறிவித்துள்ளது.
- இந்த மாநிலத்தில் ஏதேனும் அசையாச் சொத்துக்கள் மோசடி மூலமாகவோ அல்லது போலியான வருவாய்ப் பதிவேடுகளை சமர்ப்பித்ததன் மூலமாகவோ பதிவு செய்யப் பட்டதாகக் கண்டறியப்பட்டால், அது தொடர்பான ஆவணங்களை ரத்து செய்ய மாவட்டப் பதிவாளர்களுக்கு மிக அதிகப்படியான நீதித்துறை சார் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.
- பிரிவு 77-A ஆனது, 2022 ஆம் ஆண்டு மாநிலச் சட்டத் திருத்தத்தின் மூலம் மத்திய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சட்டத்தின் 22-A மற்றும் 22-B பிரிவுகள் ஆனது சில ஆவணங்களைப் பதிவு செய்ய மறுக்கும் அதிகாரத்தினைப் பதிவுத் துறை அதிகாரிகளுக்கு அளிக்கிறது.
- பிரிவு 77-A ஆனது, அந்த இரண்டு விதிகளுக்கு முரணாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

This section 77A reads as follows:

"77-A. Cancellation of registered documents in certain cases.—(1) The Registrar, either suo motu or on a complaint received from any person, is of the opinion that the registration of a document is made in contravention of section 22-A or section 22-B, shall issue a notice to the executant and all the parties to the document and parties to subsequent documents, if any, and all other persons who, in the opinion of the Registrar, may be affected by the cancellation of the document, to show cause as to why the registration of the document shall not be cancelled. On consideration of reply, if any received therefor, the Registrar may cancel the registration of the document and cause to enter such cancellation in the relevant books and indexes.

(2) The power under sub-section (1) may also be exercised by the Inspector General of Registration."

## உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - சீர் மரபினருக்கான ஒதுக்கீடு

# Ahead of others

A look at various posts secured by MBCs, and DNCs in the State

| Period and post | Vanniyars | | | DNC | | | Other MBCs | | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Quota Seats | OC seats | Total | Quota Seats | OC seats | Total | Quota seats | OC seats | Total | No | Share (in %) |
| 2013-2022 TNUSRB Sub-inspectors (total no of selected candidates: 1,919) | NA | NA | 327 (17%) | NA | NA | 152 (7.9%) | NA | NA | 126 (6.6%) | 605 | 31.50% |
| 2013-2023 MRB Assistant Surgeons/ Assistant Medical Officers (total no of selected candidates:8,375) | 1,185 | 248 | 1,433 (17.1%) | 292 | 73 | 365 (4.4%) | 714 | 128 | 842 (10%) | 2,640 | 31.50% |
| 2021 TRB PG Assistants (total no of selected candidates: 3,044) | 383 | 150 | 533 (17.5%) | 79 | 51 | 130 (4.3%) | 173 | 59 | 232 (7.6%) | 895 | 29.40% |
| 2021 TNFUSRC forest officials (total no of selected candidates:1,520) | 192 | 116 | 308 (20.2%) | 92 | 13 | 105 (6.9%) | 41 | 27 | 68 (4.5%) | 481 | 31.63% |
| 2013 & 2018 TNPSC Group II (total no of selected candidates: 2,682) | 270 | 96 | 366 (13.6%) | 90 | 39 | 129 (4.8%) | 121 | 56 | 177 (6.6%) | 672 | 25.05% |
| 2013-23 TNPSC Group IV (total no of selected candidates: 26,784) | N.A | NA | 5,215 (19.5%) | NA | NA | 1,565 (5.8%) | NA | NA | 2,882 (10.8%) | 9,662 | 36.07% |
| 2013-22 Combined Engineering Services (total no of selected candidates: 1,789) | 182 | 76 | 258 (14.4%) | 73 (4%) | 25 | 98 (5.5%) | 100 (5.6%) | 26 | 126 (7%) | 482 | 26.94% |
| 2013-22 civil judges' examinations (total no of selected candidates: NA | 39 (9.9%) | 18 | 57 | 15 (4%) | 9 | 25 | 24 (6.1% | 13 | 37 | 119 | NA |
| Deputy Collectors (as on Sept 1, 2013) (Total in service: 542) | 63 (11.6%) | NA* | NA* | NA* | NA* | NA* | NA* | NA* | NA* | NA* | NA* |

*TNUSRB: Tamil Nadu Uniformed Services Recruitment Board | MRB: Medical Services Recruitment Board | TRB: Teachers Recruitment Board*
*TNFUSRC: Tamil Nadu Forest Uniformed Services Recruitment Committee | NA: - Not available | NA*: Not applicable*

- வன்னியர்கள் உயர்கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பில் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) - சீர் மரபினர் சமூகங்களுக்கான (DNC) சலுகைகளை அதிக அளவில் பெறுகின்றனர்.
- MBBS படிப்பில், 2018-2022 ஆம் ஆண்டில் MBC-DNC சமூகங்களைச் சேர்ந்த 5,938 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- அவர்களில், 3,354 பேர் அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட MBC-DNC மாணவர்களில் சுமார் 56% பேர் வன்னியர்கள் ஆவர்.
- 2013-22 ஆம் ஆண்டில் காவல் துறை துணை ஆய்வாளர்களுக்கான தேர்வில் தகுதி பெற்ற மாணவர்களில், MBC-DNC சமூகத்தினர் எண்ணிக்கை 605 ஆக இருந்தது, அதில் 307 பேர் வன்னியர்கள் ஆவர்.
- அரசு சட்டக் கல்லூரிகளின் (2018-22) சேர்க்கையில் மொத்தம் 4,962 MBC-DNC தேர்வர்களில் வன்னியர்களைச் சேர்ந்த 2,096 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.
- MBC-DNC சமூகங்களின் 20% ஒதுக்கீடு ஆனது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் (முஸ்லிம்கள்), MBC-DNC மற்றும் பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SCs)/பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (STs) ஆகியோருக்கான 69% ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகும்.
- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் 41 சமூகங்களும், சீர் மரபினர் பட்டியலில் 68 சமூகங்களும் உள்ளன.

## இராணிப்பேட்டை நினைவுச்சின்னம்

- இராணிப்பேட்டைக்கு அந்தப் பெயர் சூட்டப்படக் காரணமாக இருந்த நினைவுச் சின்னமானது தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையினால் நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட உள்ளது.
- 18 ஆம் நூற்றாண்டின் செஞ்சியின் இராஜபுத்திர ஆட்சியாளரின் இளம் மனைவியின் பெயரால் இந்த நகரத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- தற்போது, மாநிலத் தொல்லியல் துறை 108 நினைவுச் சின்னங்களைக் கொண்டுள்ளது.
- மதுரை அதிக எண்ணிக்கையிலான நினைவுச் சின்னங்களை (18) கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து விழுப்புரம் (10) மற்றும் காஞ்சிபுரம் (8) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- அரக்கோணத்தில் உள்ள வாலீஸ்வரர் கோயில், சோளிங்கரில் உள்ள சப்த கன்னியர்களின் சிற்பங்கள் மற்றும் கஞ்சா சாஹிப் கல்லறை ஆகியவை இராணிப் பேட்டை மாவட்டத்தில் உள்ள மூன்று நினைவுச் சின்னங்கள் ஆகும்.

## திருப்பூர் கல்வெட்டுகள்



- திருப்பூரின் கொடுவாய் அருகே உள்ள கோவில்பாளையத்தில் உள்ள தாளீகீஸ்வரர் கோயிலின் சுவர்களில் 'வட்டெழுத்து' பதித்த ஒரு கல்வெட்டு மற்றும் தமிழ் எழுத்து பதித்த எட்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இது 1,100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 'வட்டெழுத்து' பதிக்கப்பட்ட கல்வெட்டு ஆனது, கி.பி. (CE) 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையில் நடைமுறையில் இருந்த தமிழ் மொழியினை எழுதச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவமாகும்.
- எட்டு தமிழ் கல்வெட்டுகளில் ஒன்று கொங்கு சோழ மன்னன் வீர இராஜேந்திரன் (1207-1256) அவர்கள் எழுதியது.
- மீதமுள்ளவை அவரது பேரன் விக்ரம சோழன் அவர்களால் (1273-1305 CE) எழுத்தப் பட்டது.
- இக்கிராமம் ஆனது தொன்மை வாய்ந்த கொங்குநாடு பகுதியின் 'பொங்கலூர்காநாடு' என்ற பகுதியில் உள்ளதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## தமிழ்நாடு வனத்தில் உள்ள யானைகளின் எண்ணிக்கை 2024

- இந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த யானைகள் எண்ணிக்கை மதிப்பீட்டின்படி, தமிழகத்தில் சுமார் 3,063 யானைகள் உள்ளன.
- இது 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முந்தையக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப் பட்ட 2,961 யானைகள் என்ற எண்ணிக்கையின் விட அதிகமாகும்.
- யானைகளின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையானது சத்தியமங்கலம் புலிகள் வளங் காப்பகம் (STR)-சத்தியமங்கலம் வனப் பிரிவில் (372) அதிகமாக பதிவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து கோயம்புத்தூர் (336), STR-ஹாசனூர் (279), MTR-உதகை (271), MTR-மசினகுடி (263), ஒசூர் (240) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஐந்து யானைகள் வளங்காப்பகங்களில், நீலகிரி கிழக்குத் தொடர்ச்சி மலைகள் காப்பகத்தில் யானைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.
- அதைத் தொடர்ந்து நிலம்பூர்-அமைதிப் பள்ளத்தாக்கு-கோவை, அகத்தியர்மலை, ஆனைமலை-பரம்பிக்குளம் மற்றும் பெரியார் ஆகிய பகுதிகளில் அதிக எண்ணிக்கை அளவில் யானைகள் உள்ளன.
- நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் யானைகள் வளங்காப்பகங்கள் இரண்டிலும் ஒருசேர மாநிலத்தின் மொத்த யானைகளின் எண்ணிக்கையில் 70% முதல் 80% வரையிலான யானைகள் உள்ளன.
- இந்த வளங்காப்பகங்கள் ஆனது, கேரளாவில் உள்ள வயநாடு மற்றும் நிலம்பூர் காப்பகங்களுடனும், கர்நாடகாவில் உள்ள மைசூர் காப்புக் காடுகளுடனும் சேர்ந்து நீலகிரி-கிழக்குத் தொடர்ச்சி மலையின் நிலப்பரப்புகளாக உள்ளன.
- 3,200 யானைகள் என்ற எண்ணிக்கையில் தமிழ்நாட்டின் நிலப்பரப்பு அதிகபட்ச தாங்கு திறனை எட்டுவதால் அதற்கு மேல் வசிக்க இயலாது.

**Keeping track:** Chief Minister M.K. Stalin releasing the Synchronised Elephant Population Estimation Tamil Nadu 2024 report on Saturday. Ministers M. Mathiventhan and Ma. Subramanian are seen. B. VELANKANNI RAJ




## சுடுமண்பாண்டங்களால் ஆன குழாய்கள் – கீழடி

- கீழடியில், வடிகால் கட்டமைப்பினை ஒத்த உள்ளீடற்ற சுடு மண்பாண்டங்களால் ஆன குழாய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- அகழ்வாராய்ச்சியில் எடுக்கப்பட்ட பொருட்கள் ஆனது அந்த காலக்கட்டத்தினைச் சேர்ந்த மக்கள் நீர் மேலாண்மை கட்டமைப்பில் தேர்ந்திருந்ததாக குறிப்பிடுகின்றன.

- இந்தக் கட்டமைப்பானது அடுத்தடுத்த பகுதிகளில் உள்ள குழாய்களுடன் இணைக்கப் பட்ட தொடரமைப்பில் இருப்பது போல் தென்படுகிறது.



## திருநெல்வேலி மற்றும் கோவை மாநகராட்சிகளின் புதிய மேயர்கள்

- இந்த மாநகராட்சிகளின் மேயர்களான P.M.சரவணன் மற்றும் கல்பனா ஆனந்தகுமார் ஆகியோர் ஜூலை 03 ஆம் தேதி ராஜினாமா செய்தனர்.
- திருநெல்வேலி மற்றும் கோவை மாவட்ட ஆட்சியர்களுக்கு, மேயர்களுக்கான தேர்தலை நடத்துமாறு மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார்.
- பொதுவாக தமிழகத்தில் மேயர்கள் மறைமுக தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படுவர்.
- மறைமுகத் தேர்தல்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் வாக்களித்து மேயர் பதவிக்கான வெற்றி வேட்பாளரை தேர்ந்தெடுப்பர்.
- இரண்டாவது முறையாக கவுன்சிலர் பதவி வகிக்கும் திரு இராமகிருஷ்ணன் என்பவர் திருநெல்வேலி மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- கோவை மாநகராட்சி மேயராக கவுன்சிலர் R. ரங்கநாயகி தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

## ஆளுகையில் புதுமைக்கான மையம்

- தமிழ்நாடு மாநில திட்டக் குழுவில் ஆளுகையில் புதுமைக்கான மையம் அமைக்கப் பட்டுள்ளது.
- மாநில திட்டக்குழுவின் கீழ் தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்ட இந்த மையமானது நாட்டிலேயே முதன்முறையான இவ்வகையிலான மையமாகும்.
- இது மாநிலத்தில் ஆளுகையில் ஒரு புதுமையான சூழல் அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதுமையான திட்டங்களை உருவாக்குவதற்கும், இந்த மாநிலத்தில் மிகவும் திறன் மிகு நிர்வாகத்தை மேம்படுத்தும் பல்வேறு தொழில்நுட்பங்களில் திறனை மேம்படுத்தச் செய்வதற்கும் அரசுத் துறைகள் மற்றும் மாவட்ட நிர்வாகங்களுக்கு இந்த மையம் உதவி வழங்கும்.

## தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் கடன் வழங்கீட்டு திட்டம் – தமிழ்நாடு

**A rundown on lending**

Loans disbursed by the National Cooperative Development Corporation since 2019-20

(₹ in crore)

| Year | Andhra Pradesh | Karnataka | Kerala | Tamil Nadu | Telangana | Sub-total for southern States | Grand total (all-India) |
|---|---|---|---|---|---|---|---|
| 2019-20 | 400.31 | 149.03 | 359.88 | 18.23 | 3,553.70 | 4,481.15 | 27,569.16 |
| 2020-21 | 575.05 | 170.11 | 295.53 | 16.77 | 685.11 | 1,742.57 | 24,421.57 |
| 2021-22 | 2,828.57 | 163.57 | 362.45 | 46.56 | 990.66 | 4,391.81 | 33,939.08 |
| 2022-23 | 9,686.20 | 111.48 | 677.05 | 24.59 | 9,091.26 | 19,590.58 | 40,513.29 |
| 2023-24 | 13,269.90 | 259.96 | 272.33 | - | 11,931 | 25,733.19 | 60,218.53 |
| 2024-25* | 500 | 225.22 | 120.29 | - | 12,001.06 | 12,846.57 | 19,256.53 |

*As on June 30, 2024. Note: The Union Territory of Puducherry did not draw any loan in all these years. Since 2023-24, Tamil Nadu, too, did not take any loan from the Corporation

- தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC) கடன் வழங்கீட்டுத் திட்டத்தில் தமிழக அரசானது வெளிப்படையான ஆர்வமின்மையை வெளிப்படுத்தியுள்ளது.
- இது நலிவுற்றப் பிரிவினருக்கான உதவித் திட்டங்கள் மற்றும் பிற நோக்கங்களுக்கான திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது.
- 2019-20 ஆம் ஆண்டு முதல், மாநில அரசானது 106.15 கோடி ரூபாய் மதிப்பு வரையில் கடன் பெற்றுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டு முதல், கடந்த இரண்டு ஆண்டுகளில் 5.78 கோடி ரூபாய் நிதி உதவியினைப் பெற்றாலும், NCDC கழகத்திடமிருந்து எந்தக் கடனையும் பெறுவதை இந்த மாநில அரசு நிறுத்தியது.
- ஆந்திரப் பிரதேச மாநிலமானது 27,260.03 கோடி ரூபாயும், தெலுங்கானா அரசு 38,252.79 கோடி ரூபாயும் கடன் பெற்றுள்ளன.
- நலிவுற்றப் பிரிவினருக்கான திட்டங்களுக்காக வேண்டி மாநில அரசுகள் மூலம் விண்ணப்பித்தால் அதற்கான கடனுக்கான வட்டி விகிதம் 11.5% ஆக இருக்கும்.
- நேரடி நிதியுதவிச் சூழலில், வட்டி விகிதங்கள் 11.8% (1 கோடி ரூபாய் வரையிலான செலவினம் கொண்ட திட்டங்கள்) மற்றும் 11.92% (1 கோடி ரூபாய்க்கு மேலான செலவினம் கொண்ட திட்டங்கள்) ஆகும்.
- NCDC கழகத்தின் வட்டி விகிதங்கள் "பல நிபந்தனைகளுடன்" கூடியதாக உள்ளதோடு, "மிக அதிகமாகவும்" உள்ளன.

## உத்தபுரம் கோவில் குறித்த தீர்ப்பு

- மதுரை மாவட்டம் பேரையூர் தாலுக்காவின் உத்தபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்தாளம்மன், ஸ்ரீ மாரியம்மன் கோவிலைத் திறக்க என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- சமூக (சாதி சார்ந்த) மோதலால் 10 ஆண்டுகளாக அக்கோவில் மூடப்பட்டிருந்தது.


- கோவிலில் வைக்கப்பட்டுள்ள சிலையை உயிருள்ள ஒன்றாகக் கருதப்பட வேண்டும் என்றும், வழக்கப்படி பூஜைகள் செய்யாமல் கோயிலை மூடுவது அதற்கு வழங்கப் படும் சிறைத் தண்டனைக்குச் சமம் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.
- சட்டத்தின்படி ஒரு சிலை என்பது நீதித் துறையின் கீழ் ஒரு தனிநபராக கருதப் படுகிறது.
- இது அந்தச் சிலையானது சொத்துக்களைக் கொண்டிருக்கவும் அதன் பெயரில் வழக்கு தொடுக்கவும் அந்தச் சிலையே வழக்கு தொடரவும் உதவும் என்று நம்பப்படுகிறது.
- சட்டம் ஒழுங்கு என்ற காரணங்களுக்காக எந்த கோவிலையும் பூட்டி விடவோ அல்லது அதன் செயல்பாட்டைத் தடை செய்யவோ முடியாது.
- எந்த ஒரு கோவிலும் ஒரு தெய்வத்தின் வீடாகும்.
- இங்கே என்ன கேள்வி என்றால் பொது ஒழுங்கைக் காரணம் காட்டி ஒரு கோவிலை மூட வைக்க முடியுமா என்பது தான்.
- தீண்டாமை என்ற பிரச்சினை எதுவும் இல்லாத போதோ இல்லை மற்றவர்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற விஷயம் எதுவும் இல்லாத வகையிலோ ஒரு கோவிலை கால நிர்ணயம் எதுவும் இன்றி மூடி வைக்கவோ அல்லது பூட்டி வைக்கவோ கூடாது.
- ஒரு பக்தன் தன்னுடைய வழிபாட்டினை மேற்கொள்ளும் உரிமை என்ற வகையிலும் மரபார்ந்தச் சடங்குகளை அனுசரிப்பது ஒரு தெய்வத்தின் உரிமை என்ற வகையிலும் இது முக்கியமானதாகும்.
- எப்பொழுது 18 வயதுக்கு உட்பட்டவர்களின் நலன், மனநலம் சரியில்லாதவர்கள் மற்றும் தெய்வச் சிலைகள் ஆகியோரது உரிமைகள் பாதிப்பிற்குள்ளாகிறதோ நீதிமன்றம் அப்போது தாய் நாட்டின் அதிகார வரம்பு மீதான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.
- அரசியலமைப்பின் கீழ் உறுதியளிக்கப் பட்ட வகையில் ஒரு மனுதாரரின் அடிப்படை உரிமையான ஒரு கோவிலுக்குச் செல்வது என்பதையோ அல்லது தெய்வத்திற்கான வழிபாட்டின் நடைமுறையில் பங்கெடுப்பதையோ எக்காரணத்தைக் கொண்டும் பறித்து விடக் கூடாது.

## தமிழ்ப் புதல்வன் திட்டம்



- தமிழக முதல்வர் அவர்கள் ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று கோவையில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத்திட்டத்தின் கீழ், மாநில அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் சேரும் மாணாக்கர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்பட உள்ளது.
- இது மாணவிகளுக்கான புதுமைப் பெண் திட்டத்தினை ஒத்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டத்தின் மூலம் மொத்தம் மூன்று லட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
- தமிழகத்தில் மொத்தம் 7,72,000 மாணாக்கர்கள் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பள்ளிக் கல்வியை முடித்துள்ளனர்.
- 2022-23 ஆம் ஆண்டில் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மொத்தம் 2,09,365 பெண்கள் பயனடைந்துள்ளனர் என்ற நிலையில் மேலும் 2023-24 ஆம் ஆண்டில் அவர்களின் எண்ணிக்கை 2,73,596 ஆக அதிகரித்துள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் இந்த திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயிலும் மாணவிகளுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- மாநிலத்தின் உயர் கல்வியில் பயிலும் ஒட்டு மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதம் நாட்டின் தேசியச் சராசரியினை விட அதிகமாக உள்ளது

## குண்டர் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல்



- யூட்யூப் ஊடகப் பிரபலமான சங்கர், குண்டர் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டதை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- இது 19(1)(a)வது சரத்தினை குறிப்பிட்டு, "ஒரு நலமான ஜனநாயகத்தின் ஆன்மாவானது பேச்சுச் சுதந்திரத்தில் தான் உள்ளது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அவர் மீது 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களுக்கு துன்பம் விளைவித்தல் தடைச் சட்டத்தின் 4வது பிரிவு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 67வது பிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து இந்தியத் தண்டனைச் சட்டம் (IPC) 509வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.


## பொதுப் பயன்பாட்டு மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள்- 2023




- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் தமிழ்நாட்டில் உள்ள பொது மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள் 1.727 மில்லியன் அலகு (MU) மின்சாரத்தைப் பயன்படுத்தியுள்ளன.
- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் இந்தியா முழுவதும் உள்ள பொது மின்னேற்ற நிலையங்களின் ஒட்டுமொத்த மின் நுகர்வு 113.58 MU ஆக இருந்தது.
- தமிழ்நாட்டில் 163 பொது மின்னேற்ற நிலையங்கள் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 1.032 MU மின்சாரத்தைப் பயன்படுத்தியுள்ள அதே நேரத்தில் 154 பொது மின்னேற்ற நிலையங்கள் 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் 0.695 MU மின்சாரத்தைப் பயன்படுத்தி உள்ளன.
- கோயம்புத்தூர், விழுப்புரம், திருநெல்வேலி, சென்னை வடக்கு மற்றும் வேலூர் ஆகியவை பொது மின்னேற்ற நிலையங்களை கொண்ட தமிழ்நாட்டின் சில முக்கியப் பகுதிகளாகும்.
- 2023-24 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் உள்ள பொது மின்னேற்ற நிலையங்கள் 13.383 MU மின்சாரத்தைப் பயன்படுத்தியுள்ளன.

- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், பதிவான மின்சார நுகர்வு முறையே 1.438 MU மற்றும் 1.422 MU ஆக இருந்தது.
- நாட்டில் விற்கப்படும் நான்கு சக்கர மின்சார வாகனங்களில் சுமார் 40% மற்றும் இரு சக்கர மின்சார வாகனங்களில் 70% ஆனது தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப் படுகின்றன.
- டெல்லி (54.43 MU), மகாராஷ்டிரா (28.64 MU), குஜராத் (8.78MU) ஆகியவை பொது மின்னேற்ற நிலையங்களின் மின்சார நுகர்வு அடிப்படையில் முதலிடத்தில் உள்ளன.

## தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி 2024




- நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தென் மாநிலங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- தமிழக மாநிலம் ஆனது 8,379.19 மில்லியன் அலகு (MUs) புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்துள்ளது.
- இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 8,400.15 மில்லியன் அலகுகளை விட சற்று குறைவாகும்.
- கர்நாடகா மாநிலமானது, கடந்த ஆண்டு பதிவான 10,001.55 மில்லியன் அலகு உற்பத்தியில் இருந்து சற்று குறைவுடன் இந்த ஆண்டு 9,171.16 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்து முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- 4,114.02 மில்லியன் அலகு உற்பத்தியுடன் காற்றாலை ஆற்றல் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ள அதே நேரத்தில் கர்நாடகா 3,095.93 மில்லியன் அலகு காற்றாலை ஆற்றலை உற்பத்தி செய்துள்ளது.

## பள்ளிக் கல்வி உதவி எண் - 14417




- தமிழக அரசானது, 14417 என்ற பள்ளிக் கல்வி உதவி எண்ணின் சேவைகளை மிகவும் விரிவுபடுத்த அறிவுறுத்தியுள்ளது.
- கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 1,000 ரூபாய் வழங்கும் திட்டத்தைப் பற்றிய அதிக எண்ணிக்கையிலான தொலைபேசி அழைப்புகளை நன்கு கையாளுவதற்காக இந்த 24x7 சேவை வழங்கும் உதவி எண் சேவையானது செயல்படத் தொடங்கியுள்ளது.
- பள்ளிக் கல்வித் துறையின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதி முதல் 14417 உதவி எண் சேவையானது 24X7 நேரச் சேவையாக மாற்றப்பட்டது.

## தமிழ்நாட்டில் உயர்கல்வியின் நிலை – 9வது NIRF

- 9வது தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசை கட்டமைப்பு அறிக்கையின் முடிவுகளின் படி, உயர்கல்வி பயில்வதற்கான மிகவும் விரும்பத்தகு இடமாக தமிழகம் தொடர்ந்து திகழ்கிறது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது ஒட்டு மொத்தத் தர வரிசை மற்றும் பொறியியல் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இது ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் பிரிவில் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது.
- நாட்டிலுள்ள 100 முன்னணி நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் தமிழக மாநிலத்தில் அமைந்துள்ளன.
- அவற்றுள் ஆறு மாநில பல்கலைக்கழகங்கள், 10 தனியார் நிறுவனங்கள் மற்றும் இரண்டு மத்தியக் கல்வி நிறுவனங்கள் அடங்கும்.
- அண்ணா பல்கலைக்கழகம் (தரவரிசை 20); பாரதியார் பல்கலைக்கழகம் (44); பாரதிதாசன் பல்கலைக்கழகம் (55); சென்னைப் பல்கலைக்கழகம் (64); அழகப்பா பல்கலைக் கழகம் (76) மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் (100) ஆகியவை அரசின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் ஆகும்.
- அண்ணா பல்கலைக்கழகம் ஆனது நாட்டிலுள்ள அரசின் நிதியுதவி பெறும் மாநிலப் பல்கலைக்கழகங்களில் முதலிடம் வகிக்கிறது மற்றும் பல்கலைக்கழகங்களுள் 13வது இடத்தைப் பிடித்துள்ளது.

- வேளாண் பிரிவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆனது 6வது இடத்திலும், தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் ஆனது 17வது இடத்திலும் உள்ளன.
- ஊட்டியில் உள்ள JSS மருந்தியல் கல்லூரி ஆனது 6வது இடத்தையும், சென்னை மருத்துவக் கல்லூரியின் மருந்தியல் கல்லூரி 78வது இடத்தையும் பெற்றுள்ளது.
- ஆறு கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரிகளில் நான்கு சென்னையில் உள்ளன.
- மருத்துவக் கல்லூரிகளில், சென்னை மருத்துவக் கல்லூரி 10வது இடத்தையும், கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி 3வது இடத்தையும் பெற்றுள்ளது.
- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், கடந்த ஆண்டு 3வது இடத்தில் இருந்த சென்னை மாநிலக் கல்லூரி 13வது இடத்தையும், லயோலா 8வது இடத்தையும் பெற்று உள்ளது.



NIRF RANKINGS 2024

Top educational institutions in each category from Tamil Nadu

TOP FIVE COLLEGES | NIRF 2024 RANKING (Within bracket previous year's ranking)

| | |
|---|---|
| PSGR Krishnammal College for Women, Coimbatore | 7 (4) |
| Loyola College, Chennai | 8 (7) |
| PSG College of Arts and Science, Coimbatore | 11 (20) |
| Presidency College, Chennai | 13 (3) |
| Madras Christian College | 14 (16) |

UNIVERSITIES

| | |
|---|---|
| Amrita Vishwa Vidyapeetham | 7 (7) |
| Vellore Institute of Technology | 10 (8) |
| Saveetha Institute of Medical and Technical Sciences | 11 (13) |
| SRM Institute of Science and Technology | 12 (18) |
| Anna University | 13 (14) |

STATE PUBLIC UNIVERSITY (New category)

| | |
|---|---|
| Anna University | 1 |
| Bharathiar University | 8 |
| University of Madras | 12 |
| Bharathidasan University | 16 |
| Alagappa University | 17 |

ENGINEERING

| | |
|---|---|
| IIT Madras | 1 (1) |
| NIT Trichy | 9 (9) |
| Vellore Institute of Technology | 11 (11) |
| SRM Institute of Science and Technology | 13 (28) |
| Anna University | 14 (13) |

MEDICAL

| | |
|---|---|
| Christian Medical College | 3 (3) |
| Amrita Vishwa Vidyapeetham | 8 (8) |
| Madras Medical College | 10 (11) |
| Saveetha Institute of Medical and Technical Sciences | 12 (18) |
| SRM Institute of Science and Technology | 18 (20) |

DENTAL

| | |
|---|---|
| Saveetha Institute of Medical and Technical Sciences | 1 (1) |
| SRM Dental College | 7 (6) |
| Sri Ramachandra Institute of Higher Education and Research | 10 (7) |
| Meenakshi Academy of Higher Education and Research | 13 (14) |
| Amrita Vishwa Vidyapeetham | 14 (12) |

MANAGEMENT

| | |
|---|---|
| IIT Madras | 16 (15) |
| IIM Trichy | 27 (23) |
| Amrita Vishwa Vidyapeetham | 28 (36) |
| Great Lakes Institute of Management | 34 (31) |
| NIT Trichy | 51 (39) |

LAW

| | |
|---|---|
| Saveetha Institute of Medical and Technical Sciences | 13 (13) |
| Sastra | 14 (15) |

## சுதந்திர தின அறிவிப்புகள் 2024

- தமிழக முதல்வர் 'முதல்வர் மருந்தகம்' (முதலமைச்சரின் மருந்தகம்) திட்டத்தினை அறிவித்தார்.
- இது இந்த மாநிலத்தில் மானிய விலையில் பொதுப் பெயர் கொண்ட மருந்துகளை குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- 2025 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் இருந்து தமிழகத்தில் இது போன்று மொத்தம் 1,000 மருந்தகங்கள் இயக்கப்படும்.
- 'முதல்வரின் காக்கும் கரங்கள்' திட்டத்தினையும் அவர் அறிவித்தார்.
- இத்திட்டம் ஆனது இராணுவ வீரர்களுக்கு தொழில்களைத் தொடங்குவதற்கு 1 கோடி ரூபாய் வரை கடன் வழங்குகிறது.
- இந்தக் கடன் உதவியில் 30 சதவீத மூலதன மானியமும் 30 சதவீத வட்டி மானியமும் வழங்கப் படும்.
- மூத்த காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தனுக்கு 'தகைசால் தமிழர்' விருதினையும் முதல்வர் வழங்கினார்.
- டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதானது இஸ்ரோ அமைப்பின் அறிவியலாளர் P. வீரமுத்து வேலுக்கு வழங்கப்பட்டது.

- ❖ வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றிய செவிலியர் A. சபீனாவுக்கு தைரியம் மற்றும் துணிச்சலான நடவடிக்கைக்கான கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டது.
- ❖ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ஆனது 20,000 ரூபாயிலிருந்து 21,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ தியாகிகளின் குடும்ப ஓய்வூதியமும் 11,000 ரூபாயிலிருந்து 11,500 ரூபாயாக உயர்த்தப் படும்.
- ❖ கட்டபொம்மன், வ.உ.சி மற்றும் மருது சகோதரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ஆனது 10,500 ஆக உயர்த்தப்படும்.

## தமிழ்நாட்டில் முதலீட்டு திட்டங்களுக்கான முன்மொழிவுகள் 2024




- ❖ 44,125 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டுத் திட்டங்களுக்குத் தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இதில் 15 நிறுவனங்களின் முதலீட்டு முன்மொழிவுகள் ஆனது, 24,000 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ செம்கார்ப் நிறுவனம் ஆனது தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 21,340 கோடி ரூபாய் முதலீட்டினை செய்து 1,100 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்க உள்ளது.

- மதர்சன் நிறுவனமானது காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுமார் 2,600 கோடி ரூபாய் முதலீடு செய்து 2,500 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்க உள்ளது.
- மில்கி மிஸ்ட் நிறுவனம் ஆனது ஈரோடு மாவட்டத்தில் 1,777 கோடி ரூபாயும், லோஹும் டெக் நிறுவனமானது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் லித்தியம் மின்கல மறு சுழற்சி முறைக்காக 1,597 கோடி ரூபாயும் முதலீடு செய்ய உள்ளது.

## தமிழக அரசின் விருதுகள் 2024


- 2024 ஆம் ஆண்டிற்கான நல்லாட்சி விருதுகள், புலனாய்வுத் துறையில் சிறந்து விளங்குவோருக்கான முதலமைச்சரின் காவல்துறை பதக்கம் மற்றும் பொதுச் சேவையில் சிறந்து விளங்குவோருக்கான முதல்வரின் காவல்துறை பதக்கம் ஆகிய விருதுகளை வென்றவர்களின் பட்டியலினைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- அரசு ஒரு புதுமையான முன்னெடுப்புகளுக்கான சான்றிதழ்களைப் பெறுபவர்களின் பட்டியலினையும் அறிவித்தது.
- பின்வரும் ஆறு அதிகாரிகள் நல்லாட்சி விருதுகளைப் பெற்றுள்ளனர்.
    - J.இன்னசென்ட் திவ்யா, S.திவ்யதர்ஷினி, V.P.ஜெயசீலன், K.இளம்பஹவத், N.கோபால கிருஷ்ணன் மற்றும் D.வனிதா ஆகியோர் ஆவர்.
- புலனாய்வுத் துறையில் சிறப்பான பங்கினை ஆற்றியதற்காக வேண்டி 10 காவல் துறை அதிகாரிகள் முதலமைச்சரின் காவல் துறைப் பதக்கத்தைப் பெற உள்ளனர்.
    - காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் N.சுரேஷ், S.சௌமியா மற்றும் S.புகழேந்தி கணேஷ்; காவல் துறை ஆய்வாளர்கள் K.புனிதா, D.வினோத்குமார், I.சொர்ணவள்ளி, N.பார்வதி, P.ராதா, R.தெய்வராணி, A.அன்பரசி ஆகியோர் ஆவர்.
- தலைமைக் காவல் ஆய்வாளர் T.S. அன்பு, காவல் துறை கண்காணிப்பாளர் E.கார்த்திக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் C.R. பூபதிராஜன், காவல் துறை ஆய்வாளர் K.சீனிவாசன், P.V. முபைதுல்லா பொதுச் சேவையில் சிறந்து விளங்கியதற்காக முதல் அமைச்சரின் காவல் துறைப் பதக்கத்தைப் பெற உள்ளார்.
- மூன்று அதிகாரிகள் – இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் D.ஜகந்நாதன் மற்றும் P.மதுசூதன் மற்றும் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி R.சுதன் ரெட்டி ஆகியோர் இந்த ஆண்டிற்கான புதுமையான முயற்சிகளுக்கான சான்றிதழ்களைப் பெற உள்ளனர்.

## சென்னை பல்கலைக் கழகத்திற்குத் தன்னாட்சி கல்வி நிறுவன அந்தஸ்து

- சென்னை பல்கலைக்கழகம் தற்போது முதல் வகை கல்வி நிறுவனமாக அந்தஸ்து பெறுவதாக பல்கலைக்கழக மானியக் குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- கடந்த ஆண்டு இந்தப் பல்கலைக்கழகம் ஆனது தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார வழங்கீட்டுச் சபையிடமிருந்து A++ தர நிலையினைப் பெற்றது.
- ஜூலை 24 ஆம் தேதியன்று பல்கலைக்கழக மானியக் குழுவானது அதன் 582வது கூட்டத்தில் சென்னை பல்கலைக்கழகத்தினை முதல் வகை பல்கலைக்கழகமாக தர நிலைப்படுத்த முடிவு செய்தது.

- அதாவது இந்த பல்கலைக்கழகம் ஆனது முழுமையான தன்னாட்சியினைக் கொண்டு உள்ளது என்பதோடு விதிமுறைகளின்படி முதல் வகை பல்கலைக்கழகங்களுக்கான தன்னாட்சியின் 4வது பரிமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பலன்களையும் பெற தகுதியுடையது.

## அத்திக்கடவு-அவிநாசி திட்டம் 2024




- தமிழகத்தில் 67 ஆண்டுகளுக்கு முன்பு கருத்துருவாக்கப்பட்ட அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தின் பணிகளானது இறுதியாக சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- ஈரோடு மாவட்டம் காலிங்கராயன்பாளையத்தில் உள்ள பவானி ஆற்றின் காலிங்கராயன் அணைக்கட்டின் கீழ் மட்ட நீரோட்டத்தில் இருந்து 1.5 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) உபரி நீரை திருப்பி விட இத்திட்டம் முனைகிறது.
- ஈரோடு, திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் 1,045 நீர்நிலைகளை நிரப்பவும், 24,468 ஏக்கர் வேளாண் நிலங்கள் பாசனம் பெறுவதற்காகவும் என்று இந்த நதிநீர் திசை திருப்பப் பட்டது.
- 1957 ஆம் ஆண்டில் அப்போதைய முமாநில தல்வர் K.காமராஜ் அவர்கள், முந்தைய கோயம்புத்தூர் மாவட்டத்தில் திறந்தவெளி கால்வாய்கள் மூலம் தண்ணீரைத் திசை திருப்பி, வறண்ட நீர் நிலைகளை நிரப்பும் திட்டத்தினை அறிவித்தார்.
- இந்தத் திட்டத்திற்கு முதலில் பவானி நதியின் மேல் மட்ட நீரோட்டத் திட்டம் என்று பெயரிடப்பட்டது.
- 2009 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதற்காக A. மோகனகிருஷ்ணன் என்பவர் தலைமையில் ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழுவானது அமைக்கப் பட்டது.
- 1972 ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் ஆனது அத்திக்கடவு-அவிநாசி நிலத்தடி நீரேற்றல் மற்றும் குடிநீர் வழங்கீட்டுத் திட்டம் என மறுபெயரிடப்பட்டது.
- 1,652 கோடி ரூபாய் மாதிப்பிலான திட்டத்திற்கான அடிக்கல் ஆனது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதியன்று நாட்டப்பட்டு, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்டது.

## சிப்காட் குடியிருப்பு வளாக வசதி

- ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் பெண் ஊழியர்களுக்காக 706 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழில்துறைக் குடியிருப்பு வளாகத்தைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்தக் குடியிருப்பு வளாகம் இந்தியாவில் பணியாளர்களுக்கான இந்த மாதிரியான வகையில் தற்போது மிகவும் பெரியதாகும்.
- இந்த மாநிலத்தில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 41000 நபர்களைப் பணியில் அமர்த்தி உள்ள நிலையில் அதில் 35000 நபர்கள் பெண் பணியாளர்கள் ஆவர்.
- தற்போது சீனாவிற்கு வெளியே அதிகமான பணியாளர்களை ஃபாக்ஸ்கான் நிறுவனம் இந்தியாவில் கொண்டுள்ள நிலையில் அதில் அதிகமான அளவில் பணியாளர்களைத் தமிழ்நாட்டில் கொண்டுள்ளது.
- சிப்காட்- SIPCOT (தமிழ்நாடு மாநிலத் தொழில் துறை மேம்பாட்டுக் கழகம்) விரைவில் அதன் தொழிற்பேட்டைகளில் குழந்தைகள் காப்பகங்களை அமைக்க உள்ளது.
- இந்தியாவிலேயே 42 சதவிகிதம் என்ற அளவில் மிக அதிகமாக பெண் தொழிற்சாலைப் பணியாளர்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும்.


## தமிழக தலைமைச் செயலாளர் 2024

- தமிழக அரசானது, ஷிவ்தாஸ் மீனா அவர்களுக்கு அடுத்தபடியாக, மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான N.முருகானந்தம் அவர்களை தலைமைச் செயலாளராக நியமித்துள்ளது.
- அவர் தமிழகத்தின் 50வது தலைமைச் செயலாளராகப் பதவியேற்றுள்ளார்.
- மேலும், A. பத்மநாபன் (1985) மற்றும் A.P. முத்துசாமி (1999) ஆகியோருக்குப் பிறகு தலித் சமூகத்தினைச் சேர்ந்த மூன்றாவது தமிழக தலைமைச் செயலாளர் இவரே ஆவார்.
- அக்டோபர் மாதம் ஓய்வு பெற உள்ள திரு. மீனா, தமிழ்நாடு வீட்டு மனை விற்பனை ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNRERA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.


## பழங்குடியினக் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் மதிப்பீடு

- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழக மாநிலத்தில் 36 பழங்குடியின உட்பிரிவுகள் உள்ளனர்.
- அந்தப் பிரிவுகளில் முக்கியப் பழங்குடியின சமூகத்தினர் மலையாளி, தோடர்கள், குரும்பர்கள், பனியர்கள், இருளர்கள், காட்டுநாயக்கர்கள், கணிக்கர்கள், பள்ளியர்கள் மற்றும் காடர் ஆகியப் பிரிவுகள் ஆகும்.
- இவற்றுள் தோடர்கள், கோத்தர், குரும்பர்கள், கட்டுநாயக்கர்கள், பனியர்கள், இருளர்கள் ஆகியோர் 'ஆதிகாலப் பழங்குடியினர்' என்று குறிப்பிடப் பட்டுள்ளனர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்த மாநிலத்தின் ஒருங்கிணைந்தப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்களின் மக்கள் தொகை ஆனது 7.94 லட்சமாக உள்ள நிலையில் இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.10 சதவிகிதம் (இது 721 லட்சம்) ஆகும்.

- 7.94 லட்சம் பழங்குடியின மக்களில் 50.5 சதவீதம் பேர் ஆண்கள், 49.5 சதவீதம் பேர் பெண்கள் ஆவர்.
- கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பழங்குடியினர் அதிகம் வசிக்கும் சேலம், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து மாநிலத் திட்டக்குழு (SPC) விரிவான மதிப்பீட்டை மேற்கொண்டது.
- அடிப்படை உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் கல்வி ஆகியவற்றில் பெரும் சவால்கள் நீடித்து காணப் படுவதனை இது கண்டறிந்தது.
- அரசுப் பேருந்து சேவைகளின் நிகழ் நிலை மற்றும் எண்ணிக்கை ஆகிய இரண்டையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
- இந்த மலைப் பகுதிகளில் மாநில அரசின் பெண்களுக்கான இலவசப் பேருந்துப் பயணச் சேவைத் திட்டமானது கிடைக்கப் பெறுவதில்லை என்பதும் கண்டறியப் பட்டது.
- கல்வியில் இடைநிற்றல் விகிதங்களைக் குறைக்கவும், மாணவர் சேர்க்கையை வெகுவாக அதிகரிக்கவும் அதிகப் பள்ளிகளை நிறுவி, தற்போதுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த வேண்டிய ஒரு அவசியமும் உள்ளது.
- பழங்குடியினர் பகுதியில், அரசு தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் தவிர, அரசு அல்லது தனியார் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகள் எதுவும் இல்லை.
- பருவகாலம் காரணமாக ஒட்டு மொத்தக் குடும்பங்களும் வேலைவாய்ப்பிற்காக வேறு மாநிலங்களுக்கு இடம் பெயர்வது அவர்கள் கல்வியை இடைநிறுத்துவதற்கு வழி வகுத்துள்ளது.
- 97 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகிய இரண்டையும் வைத்திருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.
- தோராயமாக 10 சதவீத குடும்பங்கள் தபால் அலுவலகத்தில் சேமிப்புக் கணக்கு வைத்துள்ளனர்.
- 85 சதவீதத்திற்கும் அதிகமானோர் வங்கியில் கணக்கு வைத்துள்ளனர்.
- 60 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் சாதிச் சான்றிதழ்களை வைத்து இருக்கின்றனர், அதே சமயம் சுமார் 15 சதவீதத்தினரிடம் மட்டுமே பழங்குடியினர் அடையாள அட்டைகள் உள்ளன.
- பழைய மற்றும் பிரபலமான அரசு நலத் திட்டங்களைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தனர் ஆனால் புதிய திட்டங்களைப் பற்றிய பெரும் ஒரு விழிப்புணர்வு அவர்களிடம் குறைவாகவே இருந்தது.





## மொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் உற்பத்தித் திறன் - ஜூலை 2024




- மத்திய மின்சார ஆணையத்தின் (CEA) தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதியன்று தமிழ்நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தி திறன் 40,527.24 மெகாவாட் ஆகும்.
- நிலக்கரி மின் உற்பத்தி திறன் ஆனது 12,771.99 மெகாவாட்டாக இருந்தது.
- இதில், 4,320 மெகாவாட் திறன் ஆனது அரசுத் துறையிடமிருந்தும் 5,426.67 மெகாவாட், திறன் தனியார் துறையிடமிருந்தும் சுமார் 3,025.32 மெகா வாட் திறன் மத்தியத் துறையிடமிருந்தும் பெறப்படுகிறது.

- தமிழகத்தின் லிக்னைட் அடிப்படையிலான அனல் மின் உற்பத்தி திறன் 1,959.16 மெகா வாட்டாக இருந்த நிலையில் மத்திய நிறுவன சார் உற்பத்தித் திறன் 1,709.16 மெகாவாட் மற்றும் தனியார் துறை உற்பத்தித் திறன் 250 மெகாவாட் ஆக இருந்தது.
- எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களின் திறன் 1,027.18 மெகாவாட் ஆகும் என்ற நிலையில் இதில் 524.08 மெகாவாட் மாநிலத் துறையிலிருந்தும், 503.10 மெகா வாட் தனியார் துறையிலிருந்தும் பெறப்படுகிறது.
- தனியார் துறையானது டீசல் அடிப்படையிலான மின்னாற்றல் உற்பத்தித் திறன் 211.70 மெகாவாட்டாக உள்ள நிலையில் இதில் 1,448 மெகாவாட் அணுசக்தி திறன் மத்தியத் துறையிலிருந்து பெறப்படுகிறது.
- மாநிலத்தில் உள்ள ஒட்டு மொத்த மரபு சார்ந்த மூலங்கள் சார்ந்த மின் நிறுவல் திறன் 17,418.03 மெகாவாட் ஆகும்.
- மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களின் நிறுவப்பட்ட திறன் 23,109.21 மெகா வாட்டாக இருந்தது.
- இதில், 2,178.20 மெகாவாட் நீர் மின்னாற்றல்; 10,881.34 மெகாவாட் காற்று; மற்றும் 8,831.86 மெகாவாட் சூரிய சக்தி ஆற்றலாகும்.
- மீதமுள்ள புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் திறன்கள் ஆனது உயிரி எரிபொருள் மற்றும் இணை தயாரிப்பு கரும்புச் சக்கை சார்ந்த மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் பெறப் படுகின்றன.

## தமிழ்நாட்டில் காடுகளின் நிலை 2024




- 20 ஆண்டு காலத் தரவுகளை ஆய்வு செய்து, தமிழகத்தில் வனப் பரப்பினை அதிகரிப்பதற்கான கொள்கை சார் முக்கியத்துவம் வழங்க வேண்டியப் பகுதிகளை மாநில திட்டக்குழு கண்டறிந்துள்ளது.
- இந்த அறிக்கை அந்த ஆணையத்தின் தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

- நீலகிரி தற்போது 2003 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 226 சதுர கிலோ மீட்டர் அளவிலான அடர்ந்த காடுகள், 2011-2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 348 சதுர கிலோ மீட்டர் மிதமான அடர்ந்த காடுகளின் இழப்புடன் இப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.
- நம் மாநிலத்தின் வனப் பரப்பில் சென்னை, திருவாரூர், கரூர், நாகப்பட்டினம் மற்றும் பெரம்பலூர் ஆகிய ஐந்து மாவட்டங்கள் 1.89% பங்கினை மட்டுமே கொண்டுள்ளன.
- சிவகங்கை மாவட்டத்தின் வனப்பரப்பு கடந்த இருபது ஆண்டுகளில் 20.47% குறைந்து உள்ளது, அதைத் தொடர்ந்து விழுப்புரம் (13.85%), காஞ்சிபுரம் (13.03%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தருமபுரி ஆனது 409 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் திறந்தவெளி காடுகளை இழந்து உள்ளது.
- 2001 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் மாநிலத்தில் 1,630 சதுர கி.மீ பரப்பளவில் மரங்களின் பரவல் பதிவாகியுள்ளது.
- தேசிய சதுப்புநிலங்களின் பரப்பில் தமிழகத்தில் உள்ள சதுப்பு நிலங்களின் பங்கு 0.9% மட்டுமேயாகும்.
- தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டில் 23 சதுர கிலோ மீட்டராக இருந்த சதுப்பு நிலப் பரப்பு ஆனது 2017 ஆம் ஆண்டில் 49 சதுர கிலோ மீட்டராக அதிகரித்துள்ளதாகப் பதிவாகி உள்ளது.
- ஆனால் தமிழகம் 2017 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 4 சதுர கிலோ மீட்டர் அளவிலான சதுப்பு நிலங்களை இழந்துள்ளது.


## 385வது மதராஸ் தினம் 2024 - ஆகஸ்ட் 22

- மதராஸ் தினம் என்பது தமிழ்நாட்டில் மதராஸ் நகரம் (தற்போது சென்னை) நிறுவப்பட்டதை நினைவு கூருவதற்காக வேண்டி ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் ஒரு கொண்டாட்டமாகும்.
- 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதியானது, கிழக்கிந்திய நிறுவனம் ஆனது மதராஸ் பட்டினம் அல்லது சென்னப் பட்டினம் கிராமத்தினை தாமர்லா வெங்கடாத்ரி நாயக்கரிடம் இருந்து வாங்குவதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஒரு தேதி ஆகும்.
- மதராஸ் நிறுவப் பட்டதற்கான முதல் கொண்டாட்டமானது 1939 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.
- சென்னை பாரம்பரியம் சார் அறக்கட்டளையினால் 2004 ஆம் ஆண்டு மதராஸ் தினக் கொண்டாட்டங்களைக் குறிக்கும் சமீபத்திய கருத்தாக்கம் ஆனது தொடங்கப்பட்டது.

## நீரிழிவு நோய் பற்றிய பதிவு

- தமிழ்நாடு மாநிலமானது முதல் வகை நீரிழிவு நோய் பாதிப்பின் பதிவேட்டை உருவாக்கியுள்ளது.
- இந்தப் பதிவேட்டில் உள்ள நோயாளிகள், இன்சுலின் சிகிச்சை உட்பட இலவசச் சிகிச்சையினைப் பெறுவார்கள்.

- முதல் வகை நீரிழிவு நோய் என்பது ஒரு தன்னுடல் தாக்க நோயாகும் என்ற நிலையில் இதில் உடலின் நோயெதிர்ப்பு அமைப்பு ஆனது கணையத்தில் உள்ள இன்சுலின் உற்பத்தி செய்யும் செல்களைத் தாக்கி அழிக்கிறது.
- இது உடலில் சர்க்கரை அளவு அதிகரிக்க வழி வகுக்கிறது.
- இந்தியாவில் 8.60 லட்சம் பேர் முதல் வகை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்ற நிலையில் இது உலகிலேயே மிக அதிக அளவாகும்.




## தமிழ்நாடு முதலீட்டு மாநாடு 2024

- முதல்வர் அவர்கள் 51,157 கோடி ரூபாய் தொகுப்பு முதலீட்டில் 28 தொழில்துறைத் திட்டங்களுக்கான அடிக்கல்லினை நாட்டினார்.
- 17,616 கோடி ரூபாய் முதலீட்டில் 19 கூடுதல் திட்டங்களுடன் மொத்தம் 47 திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார்.
- இந்த முன்னெடுப்புகள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட செம்கார்ப் நிறுவனமானது, தூத்துக்குடி மாவட்டத்தில் பசுமை ஹைட்ரஜன் / பசுமை அம்மோனியா உற்பத்தி அலகுகளை நிறுவுவதற்கு 36,238 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- புதுப்பிக்கத் தக்க எரிசக்தி நிறுவனமான கிரீன்கோ குழுமமானது 20,114 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழகம் முழுவதும் பல்வேறு நீரேற்ற நீர்த்தேக்க ஆற்றல் சேமிப்புத் திட்டங்களையும் அமைக்க உள்ளது.
- மாநில அரசானது TIDCO மற்றும் TATA Technologies ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து சுமார் 400 கோடி ரூபாய் முதலீட்டில் கோயம்புத்தூரில் தமிழ்நாடு பொறியியல் மற்றும் புத்தாக்க மையத்தை (TN ENGINE) நிறுவ உள்ளது.

**தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு**

**முதலமைச்சர் தொடங்கி வைத்த 19 புதிய திட்டங்கள்**

| நிறுவனம் | முதலீடு (கோடிகளில்) | வேலைவாய்ப்பு | மாவட்டம் |
|---|---|---|---|
| Omron Healthcare | 128 | 88 | திருவள்ளூர் |
| Hi-P | 312 | 700 | காஞ்சிபுரம் |
| Motherson Electronic | 2,600 | 2,800 | காஞ்சிபுரம் |
| L&T Inovation | 3,500 | 40,000 | சென்னை |
| TVS Indeon | 2,850 | 800 | திருவள்ளூர் |
| Jurojin Developers | 2,000 | 1,500 | [illegible] |
| Renault Nisson Tech | | 2,000 | செங்கல்பட்டு |
| Sundram Fasteners | 1,411 | 1,577 | [illegible] |
| ESJAY Pharma | 1,000 | 1,500 | [illegible] |
| ENES Textile Mills | 1,000 | 7,000 | ஈரோடு, திருப்பூர் |
| Caplin Point | 700 | 1,500 | திருவள்ளூர் |
| WEG Industries | 650 | 650 | கிருஷ்ணகிரி |
| Milky Mist | 500 | 3,400 | ஈரோடு |
| Gurit Wind | 300 | 300 | காஞ்சிபுரம் |
| Hibrow Healthcare | 200 | 300 | காஞ்சிபுரம் |
| Royal Enfield | 200 | 200 | [illegible] |
| Grupo Cosmos | 100 | 300 | காஞ்சிபுரம் |
| GP Sulphonates | 100 | 150 | திருவள்ளூர் |
| Motherson Health | 65 | 203 | காஞ்சிபுரம் |

திட்டங்கள் - 19 | முதலீடுகள் ₹17,616 கோடி | [illegible] 64,968

## எரிசக்தித் துறையில் பசுமை நுட்பம் சார் கொள்கைகள்




- நீரேற்று புனல் மின்னாற்றல் சேமிப்புத் திட்டங்கள், சிறு நீர்த்தேக்கத் திட்டங்கள், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் புதுப்பித்த மற்றும் ஆயுள் நீட்டிப்புக் கொள்கை ஆகிய மூன்று முக்கிய மின் கொள்கைகளுக்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- மாநிலத்தின் எரிசக்தித் துறையில் இது போன்றக் கொள்கைகள் அறிமுகப் படுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 20,000 மெகாவாட் அளவிலான ஒருங்கிணைந்த திறன் கொண்ட புதுப்பிக்கத் தக்க ஆற்றல் சார்ந்தப் பல மின் நிலையங்களை அமைக்கும் நோக்குடன் பசுமை எரிசக்தித் துறையை மேம்படுத்துவதை மாநில அரசு இலக்காகக் கொண்டு உள்ளது.


## சந்துரு குழுவின் மையப்படுத்தப்பட்ட சமையலறைக்கான பரிந்துரை

- நீதிபதி K. சந்துரு குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவைப் பள்ளி வளாகத்திலேயே சமைப்பதற்குப் பதிலாக மையப்படுத்தப் பட்ட சமையலறைகளில் சமைக்க வேண்டும் என்ற பரிந்துரை குறித்து நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
- பள்ளிகளில் மாணவர்கள் தங்கள் சாதியைக் குறிக்கும் வகையில் வண்ண மணிக் கட்டுக் கயிறுகள், மோதிரம் அல்லது நெற்றித் திலகக் குறிகளை அணிவதைத் தடை செய்யுமாறும் பள்ளிகளின் பெயர்களில் உள்ள சாதி முன்னொட்டுகளை நீக்குமாறும் தமிழக அரசிற்கு இக்குழுவின் அறிக்கையானது பரிந்துரைத்தது.
- ஒவ்வொரு பள்ளியிலும் சமையலறைகளை நிறுவாமல், அதன் செயல்பாட்டிற்குத் தேவையான போதுமான பணியாளர்களுடன் கூடிய தொகுதி அளவில் மையப் படுத்தப் பட்டச் சமையலறைகளை நிறுவுதல் மற்றும் பள்ளிகளின் மதிய உணவு மையங்களுடன் இணைக்கப்பட்ட உணவு விநியோக வலையமைப்புகளை நிறுவல் ஆகியவை இந்த அறிக்கையின் பரிந்துரையில் அடங்கும்.
- சில பகுதிகளில், மையப்படுத்தப் பட்ட சமையலறைகளின் செயல்பாடு, குறிப்பாக கிராமப் புறங்களில் அதன் செயல்பாடு முறையாக இல்லை.
- பள்ளி வளாகத்திற்குள் அமைந்துள்ள மதிய உணவு மையங்களில் உணவு சமைக்கப் படும் போது, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் சமையல் நடவடிக்கைகளைக் கண்காணிக்க முடியும் என்பதோடு அந்தச் செயல்முறையானது உத்திரவாதம் மிக்கதாக இருக்கும்.
- ஆனால் மையப்படுத்தப்பட்டச் சமையலறைகளில், பொதுப் பொறுப்புக் கூறலுக்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.
- பள்ளிகளில் மதிய உணவு மையங்களில் உணவு சமைப்பது குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.
- மதிய உணவுச் சமையல் பணியாளர்களில் சுமார் 27% பேர் பட்டியலிடப்பட்டச் சாதி அல்லது பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

## கல்வராயன் மலைகளில் அதிகப்படியான சுரண்டல் நடவடிக்கைகள்

- 1976 ஆம் ஆண்டில் மாநில அரசினால் கையகப் படுத்துவதற்கு முன்னதாக கல்வராயன் மலைகள் அதன் மூன்று ஜாகிர்தார்களால் (குறு ஆட்சியாளர்கள்) அதிகமாகச் சுரண்டலுக்குள்ளாக்கப் பட்டன.
- இது கிழக்குத் தொடர்ச்சி மலையில் 78,000 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ளது.

- கல்வராயன் மலைகள் கள்ளக் குறிச்சி, சேலம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 600 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியிருந்தன.
- அவை 600 முதல் 900 மீட்டர் வரையிலான உயரத்தினைக் கொண்டுள்ளன.
- இந்த மலைப் பகுதிகள் ஆனது ஜடாயக் கவுண்டன், ஆரியக் கவுண்டன் மற்றும் குரும்ப கவுண்டன் ஆகிய ஜாகிர்தாரர்களால் நீண்ட காலமாக ஆட்சி செய்யப் பட்டன.
- ஆனால் 1963 ஆம் ஆண்டின் இனாம் நிலச் சட்டங்கள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் ஆனது ஜாகிர்தாரர் முறைகளை ஒழிப்பதற்காக கொண்டு வரப் பட்டது.
- 1963 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் கல்வராயன் மலைகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக மாநில அரசானது 1965 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று ஆணை பிறப்பித்தது.
- அவ்வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு, இறுதியாக 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று நிலங்களை அரசு மீண்டும் கையகப்படுத்திய போது தான் அதன் சட்டப் போராட்டம் முடிவுக்கு வந்தது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்த மலைப் பகுதிகளில் சுமார் 20,000 மக்கள் வாழ்ந்தனர்.



## வெம்பக்கோட்டையில் 1,300 கலைப் பொருட்கள்

- ❖ விருதுநகர் மாவட்டத்தின் வெம்பக் கோட்டையில் மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சியில் 1,300க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டு உள்ளன.
- ❖ இத்தளத்தில் ஒரு திமில் கொண்ட காளை பொறிக்கப்பட்ட சூது பவள மணிகளில் மேற் கொள்ளப் பட்ட உருசெதுக்கல் முத்திரையும் இங்கு கண்டறியப்பட்டது.
- ❖ தமிழ்நாட்டில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட இரண்டாவது சூது பவள மணிகளால் ஆன உருசெதுக்கல் முத்திரை இதுவாகும்.
- ❖ மதுரைக்கு அருகிலுள்ள கீழடியில் காட்டுப்பன்றி பொறிக்கப்பட்ட இது போன்ற மற்றொரு பொருள் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டுபிடிக்கப் பட்டது.
- ❖ சூது பவள மணிகள் பொதுவாக மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் மட்டுமே காணப் படுகிறது என்ற நிலையில் உருசெதுக்கல் நுட்பம் ஆனது ரோம் நகரில் தோன்றியது.
- ❖ கீழடி மற்றும் முசிறியில் கண்டறியப்பட்ட சூது பவள மணிகளில் மேற்கொள்ளப்பட்ட உருசெதுக்கல் நுட்பம் சங்க காலத்தினைச் சேர்ந்தது.





## உலகளாவிய முத்தமிழ் முருகன் மாநாடு 2024

- ❖ இரண்டு நாட்கள் அளவிலான உலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆனது பழனியில் நடைபெற்றது.
- ❖ இந்த மாநாடு ஆனது பக்தர்களை ஒன்றிணைத்து முருகப் பெருமானின் தத்துவத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஜப்பானில் இருந்து 50க்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- ❖ அமெரிக்கா, கனடா, ஐக்கியப் பேரரசு, ஆஸ்திரேலியா, இலங்கை, சிங்கப்பூர், மொரீஷியஸ் உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள தமிழ் அறிஞர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 1,300 ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் இடம் பெற்றுள்ளன.

## வங்கிகளால் நிதியளிக்கப்படும் தனியார் துறை திட்டங்கள்

- ❖ தமிழகத்தில் 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 44 ஆக இருந்த வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட தனியார் துறை திட்டங்களின் எண்ணிக்கை என்பது 2023-24 ஆம் ஆண்டில் 83 ஆக அதிகரித்துள்ளது.

- 2023-24 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த திட்ட மதிப்பான 3,90,978 கோடி ரூபாயில் மாநில அரசு நிதியின் பங்கு 3% ஆகக் குறைந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் மொத்தத் திட்டச் செலவினமான 2,66,546 கோடி ரூபாயில் மாநில அரசின் பங்கு 4.8% ஆக இருந்தது.
- தமிழகத்தில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப்படும் தனியார் துறை திட்டங்களின் எண்ணிக்கை 2021-22 ஆம் ஆண்டில் 40 ஆக இருந்தது.
- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப்படும் திட்டங்களின் மாநில வாரியான பரவலானது ஐந்து முன்னணி மாநிலங்களான குஜராத் (14.7%), மகாராஷ்டிரா (11.7%), கர்நாடகா (11.1%), ஆந்திரப் பிரதேசம் (10.1%) மற்றும் உத்தரப் பிரதேசம் (7.6%) என தெரிய வந்துள்ளது.
- இவை ஒட்டு மொத்தமாக 2023-24 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் மொத்தச் செலவில் 55 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.
- 2018-19 ஆம் ஆண்டை ஒப்பிடும் போது, மொத்தத் திட்ட மதிப்பீட்டில் அரசின் பங்கின் அடிப்படையில் 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 12வது இடத்தில் உள்ளது.




## அரிய கிரானைட் சிலை

- திருவண்ணாமலையில் செய்யாறு அருகே உள்ள மாத்தூர் கிராமத்தில் சுமார் 300 ஆண்டுகள் பழமையான கிரானைட் அம்மன் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இதனுடன் சேர்த்து கைப்பிடியுடன் கூடிய ஒரு சிறிய வெண்கல வாளும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சிலையானது பிற்கால விஜயநகர காலத்தினைச் சேர்ந்தது.
- ஏனெனில் அந்தக் காலக் கட்டத்தில் தான் இந்தப் பகுதியில் கோவில் தொடர்பான கட்டுமானப் பணிகள் அதிகம் மேற்கொள்ளப்பட்டன.
- 1878 ஆம் ஆண்டு இந்தியப் புதையல் சட்டத்தின் கீழ், மண்ணில் ஓர் அடிக்குக் கீழே காணப்படும் எந்தப் பொருளும் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகும்.




# தேசியச் செய்திகள்

## புதிய ஆளுநர்கள் நியமனம் 2024

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் ஒன்பது மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்.
- ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக சந்தோஷ் கங்வார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- சத்தீஸ்கர் மாநில ஆளுநராக அசாம் மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் மக்களவை உறுப்பினரான இராமன் டேகா நியமிக்கப்பட்டுள்ளார்.
- மகாராஷ்டிர மாநில முன்னாள் சட்டமன்ற சபாநாயகர் ஹரிபாவ் கிசன்ராவ் பாக்டே ராஜஸ்தானின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- திரிபுரா மாநிலத்தின் முன்னாள் துணை முதல்வர் ஜிஷ்ணு தேவ் வர்மா தெலுங்கானா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரான O.P.மாத்தூர் சிக்கிம் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கர்நாடகா மாநிலத்தினைச் சேர்ந்த முன்னாள் மக்களவை உறுப்பினர் C.H.விஜய் சங்கர் மேகாலயா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி K.கைலாசநாதன் புதுச்சேரியின் துணை நிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தெலுங்கானா மாநிலத்தின் கூடுதல் பொறுப்புடன் சேர்த்து ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக உள்ள C.P.இராதாகிருஷ்ணன் இனி மகாராஷ்டிரா மாநில ஆளுநராக பணி ஆற்றுவார்.
- அசாம் மாநில ஆளுநரான குலாப் சந்த் கட்டாரியா, பஞ்சாப் மாநில ஆளுநராகவும், சண்டிகர் ஒன்றியப் பிரதேசத்தின் நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.





## முதல் கடல் சார் கனிம ஏலம்

- இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் (EEZ) அமைந்துள்ள 10 கனிமத் தொகுதிகள் ஆனது கூட்டு உரிமம் பெறுவதற்கான ஏலத்தில் கிடைக்கப் பெற உள்ளன.
- இவற்றில் பல் உலோக நிறைவு பகுதிகள் மற்றும் கண்ட மேலோட்டின் 7 தொகுதிகள் ஆனது அந்தமான் கடலிலும், 3 சுண்ணாம்பு கனிமத் தொகுதிகள் குஜராத் மாநிலக் கடற்கரையிலும் அமைந்துள்ளன.
- 2002 ஆம் ஆண்டு கடல் சார் பகுதிகள் கனிம (மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (OAMDR) கீழ் இந்த ஏலம் ஆனது நடத்தப்படும்.




## வெப்ப அலை - 'அறிவிக்கப்பட்டப் பேரிடர்'



- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது, வெப்ப அலையினை ஒரு அறிவிக்கப்பட்டப் பேரிடராக வகைப்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை என்று அறிவித்துள்ளது.
- அறிவிக்கப்பட்டப் பேரிடராக அது அறிவிக்கப்பட்டால், 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் நிதி உதவி பெறத் தகுதியுடையதாக மாறும்.
- தற்போது தேசியப் பேரிடர் நிவாரண நிதி/மாநிலப் பேரிடர் நிவாரண நிதி (SDRF) உதவிக்கு தகுதியான பேரிடர்களின் அறிவிக்கப்பட்ட பட்டியலில் 12 பேரிடர்கள் உள்ளன.
- அவை புயல், வறட்சி, நிலநடுக்கம், தீ விபத்து, வெள்ளம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பனிச்சரிவு, மேக வெடிப்பு, பூச்சிகளின் தாக்குதல் மற்றும் உறைபனி மற்றும் குளிர் அலை ஆகியவையாகும்.
- இந்தியாவில் இந்த ஆண்டின் கோடை காலத்தில் 536 வெப்ப அலை நிகழ்வுகள் நிகழ்ந்த நிலையில் இது 14 ஆண்டுகளில் மிக அதிக எண்ணிக்கையாகும்.

## அகரு மரம் - இந்தியாவில் CITES உடன்படிக்கை விதிகள்


- இந்திய அரசானது, அருகி வரும் உயிரினங்கள் மற்றும் வனவிலங்குகளின் (CITES) வர்த்தகம் தொடர்பான ஒரு சர்வதேச உடன்படிக்கையின் மூலம் சமீபத்தில் ஏற்றுமதி மேற்கொள்வதற்கான ஒதுக்கீட்டினை அதிகரித்துள்ளது.
- அகரு மரம் ஆனது, அதன் நறுமண மற்றும் மருத்துவம் சார் மதிப்புக்காக என்று அதிக மதிப்பிடப் படுகிறது.
- இது ஊதுபத்திகள், நறுமண எண்ணெய்கள் மற்றும் வாசனை திரவியங்கள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படுகிறது.



- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் கீழ் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்த மரம் ஆனது, 1995 ஆம் ஆண்டு முதல் CITES உடன்படிக்கையின் IIவது பட்டியலில் வைக்கப் பட்டுள்ளது.

- இந்தியாவிலிருந்து இந்த மரத்தினை ஏற்றுமதி செய்வது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை தடை செய்யப்பட்டது, ஆனால் அதன் மறு ஏற்றுமதி அனுமதிக்கப்பட்டது.
- குறைந்தபட்சம் 139.89 மில்லியன் (13.989 கோடி) அகரு மரச் செடிகள் வனம் அல்லாத பகுதிகளில் சாகுபடி/தோட்டத்தில் உள்ளன.
- CITES ஆவணத்தின்படி, இந்திய நாடானது 2023 ஆம் ஆண்டில் அகரு மரம் உற்பத்தி செய்யும் மற்ற நான்கு நாடுகளுடன் சேர்த்து முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகத்தின் (RST) மதிப்பாய்வின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில் RST மதிப்பாய்வில் இருந்து இந்தியா நீக்கப்படுவதால், அகரு மரம் தொழிலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள மக்கள் பயன் அடைவார்கள்.

## ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டம்





- கடந்த ஆண்டு ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்தில் மொத்தம் 1,862 நோய்த் தாக்குதல்கள் பதிவாகியுள்ளன.
- கேரளாவில் அதிக எண்ணிக்கையிலான நோய்த் தொற்றுகள் பதிவாகியுள்ளன.
- கேரளாவில் 253 பெருந்தொற்றுகள் பதிவாகியுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து கர்நாடகாவில் 223, மகாராஷ்டிராவில் 208 மற்றும் மத்தியப் பிரதேசத்தில் 140 என்ற அளவில் தொற்றுகள் பதிவாகியுள்ளன.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஆனது, 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் தேதியன்று ஒருங்கிணைந்த சுகாதாரத் தகவல் தளத்தின் இணைய தளத்தினை அறிமுகப் படுத்தியது.

## பட்டியலிடப் பட்ட சாதியினரின் இட ஒதுக்கீட்டிற்கான உள் வகைப்பாடு

- இடஒதுக்கீடு வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டச் சாதியினரின் உள் வகைப்பாடினை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப் படும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- இந்த தீர்ப்பு ஆனது 2004 ஆம் ஆண்டு E.V.சின்னையா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநில அரசிற்கு இடையிலான வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்தது.
- பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான 15% இடஒதுக்கீட்டிற்குள், பிற்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் சாதியினருக்கு மற்றவர்களை விட அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதை இத்தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது.
- பஞ்சாப் அரசானது 2006 ஆம் ஆண்டில் அரசு வேலை வாய்ப்புகளில் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான ஒதுக்கீட்டிற்குள் வால்மீகி மற்றும் மசாபி சீக்கியர்களுக்கு 50% இட ஒதுக்கீடு மற்றும் முதல் முன்னுரிமை வழங்கியது.




## PM-PRANAM 2024

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (CCEA), உயிர் உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பூமியை நன்கு மீட்டெடுத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட PM-PRANAM திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- PM-PRANAM என்பது பிரதம மந்திரியின் புவி மறுசீரமைப்பு, விழிப்புணர்வு உருவாக்கம், ஊட்டமளிப்பு மற்றும் மேம்படுத்துவதற்கான திட்டம் என்பதைக் குறிக்கிறது.
- உரங்களை நிலையான மற்றும் சீரான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், மாற்று உரங்களை ஏற்றுக் கொள்வது, கரிம வகை மற்றும் இயற்கை முறையில் வேளாண்மையினை ஊக்குவித்தல் போன்றவற்றின் மூலம் புவியின் ஆரோக்கியத்தை காக்க மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களால் தொடங்கப் பட்ட பல முயற்சிகளை நிறைவு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அனைத்து மாநிலங்களும் / ஒன்றியப் பிரதேசங்களும் PM - PRANAM திட்டத்தின் கீழ் அடங்கும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், முந்தைய 3 ஆண்டுகளின் சராசரி நுகர்வுடன் ஒப்பிடும்போது, இரசாயன உரங்களின் நுகர்வு ஆனது (யூரியா, DAP, NPK, MOP) குறைக்கப் படுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் ஒரு மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்தினால் சேமிக்கப்படும் உர மானியத்தில் சுமார் 50 சதவீமானது மானியமாக அந்த மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்திற்கு அனுப்பப்படும்.
- மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் இந்த மானியத்தை அங்குள்ள விவசாயிகள் உட்பட மாநிலத்தில் உள்ள மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தலாம்.




## ஒரு DAE ஒரு சந்தா முன்னெடுப்பு

- அணுசக்தித் துறை (DAE), மும்பையில் உள்ள டாடா நினைவு மருத்துவமனையில் "ஒரு DAE ஒரு சந்தா" (ODOS) முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, DAE துறை ஊழியர்களுக்கு அறிவியல் மற்றும் கல்வி வளங்களுக்கான விரிவான அணுகலை வழங்குகிறது.
- DAE உறுப்பினர்கள் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பத்திரிகைகளை இயங்கலையில் அணுகுவதை எளிதாக்க ODOS உருவாக்கப் பட்டு உள்ளது.

## உலகப் பாரம்பரியத் தளத்திற்கான தற்காலிகப் பட்டியல்

- யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான தற்காலிகப் பட்டியலில் இந்தியாவினைச் சேர்ந்த சுமார் 60 தளங்கள் இடம் பெற்று உள்ளன.

- ஒரு தற்காலிகப் பட்டியல் என்பது, யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக பரிந்துரைக்கப் படுவதற்கு பரிசீலிக்க ஒவ்வோர் அரசினால் கோரப்படும் தளங்களின் பட்டியல் ஆகும்.
- சமீபத்தில் அசாமில் உள்ள 'மொய்தாம்ஸ்' எனப்படும் அஹோம் வம்சத்தின் மண்மேடு வடிவிலான புதைவிடத் தளமானது யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- இந்த தளம் ஆனது, 2014 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய தளங்களுக்கான தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- தற்போதைய நிலவரப்படி, 42 இந்தியத் தளங்கள் ஆனது உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.



## புலிகள் பாதுகாப்பு திட்டம் மற்றும் பழங்குடியினர் இடம்பெயர்வு

- உரிமைகள் மற்றும் இடர் பகுப்பாய்வுக் குழு (RRAG) ஆனது, பழங்குடியினர் மற்றும் காடுகளில் வாழும் சமூகங்கள் மீது புலிகளின் வளங்காப்புத் திட்டத்தினால் ஏற்படும் தாக்கத்தினை வெளிக் கொணரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- "India's Tiger Reserves: Tribals Get Out, Tourists Welcome" என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- புலிகளின் வளங்காப்பு திட்டங்களால் 5.5 லட்சம் பேர் இடம் பெயர்த்தப் படுவதற்காக அடையாளம் காணப் பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- மத்திய அரசின் கூற்றுப்படி 92,605 பேரை உள்ளடக்கிய சுமார் 20,857 குடும்பங்கள், 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் இடம் பெயர்த்தப் பட்டனர்.
- எனவே, சுமார் 457,394 நபர்கள் அல்லது 1,03,016 குடும்பங்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது.
- செலவினத்தின் அடிப்படையில், அவர்களின் மறுகுடியேற்றத்திற்கான மாபெரும் நிலத்தின் தேவைக்கு வேண்டி கூடுதலாக 15,2766 மில்லியன் அல்லது 1,853 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவாகும்.

- 50 புலிகள் வளங்காப்பகங்களில் இருந்து 1973 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் 2,54,794 பேர் இடம் பெயர்த்தப் படுவதற்காக அடையாளம் காணப் பட்டுள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கப்படும் ஆறு புலிகள் வளங்காப்பகங்களில் இருந்து சுமார் 290,000 பேர் இடம் பெயர்த்தப் பட்டுள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலக் கட்டத்தில் ஒரு புலிகள் வளங்காப்பகத்திற்கு 967% என்ற வீதத்தில் இடம் பெயர்வு அதிகரித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலக்கட்டத்தில் தமிழ்நாடு ஸ்ரீவில்லிபுத்தூர்-மேக மலை புலிகள் வளங்காப்பகத்திலிருந்து 4,000 பேர், ராஜஸ்தானின் ராம்கர் விஷ்தாரி புலிகள் வளங்காப்பகத்திலிருந்து சுமார் 4,400 பேர் என மொத்தம் 2.9 லட்சம் பேர் இடம் பெயர்வார்கள் என எதிர்பார்க்கப் படுவதாக அறிக்கை கூறுகிறது.




## பாரதிய வாயுயான் விதேயக் 2024

- மத்திய பொது விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம், பாரதிய வாயுயான் விதேயக், 2024 மசோதாவினை (விமானப் போக்குவரத்து மசோதா) பாராளுமன்றத்தில் முன் வைத்துள்ளது.
- இந்தப் புதியச் சட்டம் ஆனது, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்த காலாவதியான 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்திற்கு மாற்றாக, இந்தியாவின் விமானப் போக்குவரத்து விதிமுறைகளை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1934 ஆம் ஆண்டு முதல் இச்சட்டத்தில் 21 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- எந்தவொரு விமானம் அல்லது விமான ரகத்தின் வடிவமைப்பு, உற்பத்தி, பராமரிப்பு, உடைமை, பயன்பாடு, செயல்பாடு, விற்பனை, ஏற்றுமதி அல்லது இறக்குமதி ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான விதிகளை இந்த மசோதா கொண்டு உள்ளது.
- இந்த மசோதாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சில குறிப்பிடத்தக்க மாற்றங்களில் ஒன்று "விமானம்" என்ற சொல்லின் புதுப்பிக்கப்பட்ட வரையறை ஆகும்.




## அலுமினிய உற்பத்தியில் இரண்டாவது இடம்


- இந்திய நாடானது அலுமினிய உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், சுண்ணாம்புக் கல் உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும் மற்றும் இரும்புத் தாது உற்பத்தியில் 4வது இடத்திலும் உள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில் பிரதான அலுமினிய உற்பத்தி 41.6 லட்சம் டன்கள் என்ற சாதனை அளவை எட்டியது.
- 2023-24 ஆம் நிதியாண்டில், இரும்புத் தாது உற்பத்தி 275 மில்லியன் மெட்ரிக் டன்களை (MMT) எட்டியது, அதே நேரத்தில் சுண்ணாம்புக் கல் உற்பத்தி 450 மில்லியன் மெட்ரிக் டன்களை எட்டியது.




## இந்தியாவில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை 2023

- 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் 18,378 உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் பதிவு செய்யப் பட்டு, அதில் 42 பெறுநர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புகளைப் பெற்ற நிலையில் இதன் விளைவாக மொத்தம் 18,336 பெறுநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- உறுப்பு தானம் பெற்றவர்களில் 30% பெண்கள் ஆவர்.
- 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளில் சுமார் 10% ஆனது வெளிநாட்டினருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையாகும்.
- உறுப்பு தானம் பெற்ற 18,336 நபர்களில் 1,851 பேர் வெளிநாட்டினர் ஆவர்.
- அதிக எண்ணிக்கையிலான இந்த உறுப்பு மாற்றுச் சிகிச்சை நடைமுறைகள் டெல்லி, ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளத்தில் மேற்கொள்ளப்பட்டன.
- NOTTO தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட 1,851 வெளிநாட்டு மாற்று அறுவை சிகிச்சை வழக்குகளில், ஒன்பது அறுவை சிகிச்சையில் மட்டுமே உயிரிழந்தவரிடமிருந்து உறுப்புகள் பெறப்பட்டன.
- டெல்லியில் அதிகபட்சமாக 1,445 அறுவை சிகிச்சைகளும், ராஜஸ்தானில் 116 அறுவை சிகிச்சைகளும், மேற்கு வங்காளத்தில் 88 அறுவை சிகிச்சைகளும் மேற் கொள்ளப் பட்டுள்ளன.




## CCPWC முன்னெடுப்பு

- CCPWC என்பது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான இணைய வெளி சார் குற்றங்கள் தடுப்பு என்பதனைக் குறிக்கிறது.
- நிர்பயா நிதியத்தின் கீழ் தொடங்கப்பட்ட CCPWC முன்னெடுப்பு ஆனது, இணைய வெளி சார் குற்றங்களைக் கையாள்வதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த முன்னெடுப்பின் முக்கியப் பகுதியானது, தேசிய இணைய வெளி சார்ந்தக் குற்றங்களின் அறிக்கையிடல் தளம் (NCRP) ஆகும்.
- இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:
    - இயங்கலையில் மேற்கொள்ளப்படும் இணைய வெளி சார் குற்றங்கள் குறித்த அறிக்கையிடல் தளம்
    - தேசிய அளவிலான இணைய வெளி சார் குற்றங்கள் குறித்த தடயவியல் ஆய்வகம்

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

- காவல்துறை அதிகாரிகள், நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்களுக்கானப் பயிற்சி
- இணைய வெளி சார் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

## புதிய தேசிய அதிவேக வழித்தடங்கள்




- மொத்தம் 50,655 கோடி ரூபாய் மூலதனச் செலவிலான 936 கி.மீ நீளமுள்ள சுமார் 8 முக்கியமான தேசிய அதிவேக சாலை வழித்தடத் திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது..
- இது தளவாடப் போக்குவரத்து திறனை மேம்படுத்துதல், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் மற்றும் நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2024-25 ஆம் நிதியாண்டிற்கான நிதி கோரும் மசோதா



- மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் செலவினக் கோரல்களில் சுமார் 140 லட்சம் கோடி ரூபாய்க்கு மக்களவை ஒப்புதல் அளித்தது.
- இதன் மூலம் 2024-25 ஆம் ஆண்டிற்கான முழு நிதிநிலை அறிக்கைக்குத் தேவையான பாராளுமன்ற ஒப்புதல்களில் மூன்றில் இரண்டு பங்கு நிறைவு ஆகியுள்ளது.
- இரயில்வே நிர்வாகம், கல்வி, சுகாதாரம் மற்றும் மீன்வளம் ஆகிய நான்கு முக்கிய அமைச்சகங்களுக்கான மானியங்கள் மீதான விவாதத்திற்குப் பிறகு கட்டாயமான நாடாளுமன்ற நடவடிக்கை நிறைவு (கில்லட்டின்) தீர்மானம் பயன்படுத்தப் பட்டது.
- வேளாண்மை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஒத்துழைப்பு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை ஆகிய அந்த நான்கு அமைச்சகங்களுக்கான மானியங்களுக்கான கோரிக்கைகளும் மாநிலங்களவையில் ஒரே நேரத்தில் விவாதிக்கப் பட்டது.
- இந்த அவையானது அந்த நிதி மசோதா மீதான விவாதங்களையும் மேற்கொண்டது ஆனாலும் அரசியலமைப்பின் படி, அத்தகைய மசோதாக்களை கீழவைக்கு அதனால் திருப்பி அனுப்ப மட்டுமே முடியும்.

## எண்ணெய் மற்றும் எரிவாயுக் கொள்கையின் உறுதித் தன்மைக்கான மசோதா

- 2024 ஆம் ஆண்டு எண்ணெய் வயல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதாவானது மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது பல நீண்டகால பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் முதலீட்டாளர்களின் முதலீட்டு நோக்கினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "சுரங்க குத்தகைக்கு" என்ற வார்த்தைக்குப் பதிலாக "பெட்ரோலியக் குத்தகை" என்று மாற்றுவதற்கு இந்த மசோதாவில் முன்மொழியப் பட்டுள்ளது.
- இந்தியாவிற்குள் அல்லது வெளிநாட்டில் உள்ள ஓர் இடத்தில் "பிரச்சினை தீர்க்கும் நெறிமுறையை" இந்த மசோதா முன் வைக்கிறது.
- இந்த மசோதாவானது, பெட்ரோலியச் சட்டத்தை மீறுவதைக் குற்றமற்றதாக்க முயலச் செய்வதோடு, அதற்குப் பதிலாக நிதி அபராதங்களை விதிப்பதற்கான பல்வேறு விதி முறைகளை அறிமுகப்படுத்த உள்ளது.

**CHANGES IN THE OFFING**

- Oilfields (Regulation and Development) Amendment Bill, 2024, bats for new 'petroleum leases' to be granted on stable terms
- Reporting of carbon emissions, facilitation of solar, wind projects at oilfields
- Expands ambit of law to wider range of mineral oils, such as shale oil, gas hydrates
- Introduces alternative dispute resolution methods

## பேரிடர் மேலாண்மை (திருத்தம்) மசோதா, 2024

- 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டம் ஆனது பேரிடர்களைத் திறம்பட மேலாண்மை செய்வதற்காக இயற்றப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை (திருத்தம்) மசோதாவானது மக்களவையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இந்த மசோதாவானது "தேசிய மற்றும் மாநில அளவிலான பேரிடர் தரவுத் தளத்தினை" உருவாக்க முயல்கிறது.
- டெல்லி மற்றும் சண்டிகர் ஒன்றியப் பிரதேசங்களைத் தவிர, மாநிலத் தலைநகரங்கள் மற்றும் பெரிய நகரங்களைக் கொண்ட மாநகராட்சிக் கழகங்களுக்கு "நகர்ப்புறப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தினை" அமைப்பதற்கும் இது வழிவகை செய்கிறது.
- அதிகரித்து வரும் பேரிடர் அபாயங்கள் உட்பட, நாட்டில் ஏற்படும் அனைத்து வகையான பேரழிவு அபாயங்களை அவ்வப்போது கணக்கெடுப்பதற்கு பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது.
- இது "நடந்திருக்காத ஆனால் தீவிரப் பருவநிலை நிகழ்வுகள் மற்றும் பல்வேறு பிற காரணிகளால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடியப் பேரழிவுகளின் அபாயங்கள்" போன்ற சிலவற்றை உள்ளடக்கியது.




## PMSMA திட்ட விரிவாக்கம்

- PMSMA மூலம் பாதுகாப்பான தாய்மையை உறுதி செய்வதற்கான முன்னெடுப்புகள் மற்றும் முன்னேற்றத்திற்கான நோக்குடன் ஒரு விரிவாக்கப்பட்ட PMSMA உத்தியானது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- பிரதான் மந்திரி சுரக்சித் மாத்ரித்வா அபியான் (PMSMA) திட்டம் ஆனது 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டது.
- ஒவ்வொரு மாதமும் 9 ஆம் தேதியன்று அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் உறுதியான, விரிவான மற்றும் தரமான பேறு காலத்திற்கு முந்தைய சிகிச்சையை இலவசமாக வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- PMSMA திட்டம் ஆனது, கர்ப்பத்தின் 2வது / 3வது மூன்று மாதங்களில் பெண்களுக்கு, நியமிக்கப் பட்ட அரசு சுகாதார மையங்களில் குறைந்தபட்ச செலவிலான பேறு காலத்திற்கு முந்தைய மருத்துவச் சேவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது.





## சாங்கியிகி இணைய தளம்

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது e-Sankhyiki இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- எளிமையான அணுகல் மற்றும் பகுப்பாய்வினை மேம்படுத்துவதற்காக வேண்டி வடிவமைக்கப் பட்ட மிக ஒரு விரிவான அமைப்பின் மூலம் அதிகாரப்பூர்வப் புள்ளி விவரங்களின் பகிர்வை நெறிப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தரவுகளுக்கான நிகழ்நேர அணுகலை வழங்கி, சிறப்பானத் திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல் செயல்முறையில் உதவுகிறது.




## 2023 ஆம் ஆண்டில் உறுப்பு தானம்

- கடந்த ஆண்டு 5,651 ஆண்களுடன் ஒப்பிடுகையில் உயிரோடு இருக்கும்போதே உறுப்பு தானம் செய்த பெண்களின் எண்ணிக்கை 9,784 ஆக இருந்தது.
- மேலும் ஒரேயொரு திருநரும் மற்றொரு மனிதனின் உயிரைக் காப்பாற்ற உறுப்பு தானம் செய்தார்.
- 2023 ஆம் ஆண்டில் உயிரோடு இருக்கும் போதே உறுப்பு தானம் செய்த நபர்களின் மொத்த எண்ணிக்கை 15,436 ஆகும்.
- உயிரோடு இருக்கும்போதே உறுப்பு தானம் செய்த மற்றும் இறந்த பின்பு உறுப்பு தானம் செய்த நபர்கள் ஆகிய இருவரையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், மொத்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 18,378 ஆகும் என்ற நிலையில் இது இதுவரை இல்லாத ஒரு அதிகபட்ச எண்ணிக்கையாகும்.
- 844 ஆண்கள் தங்கள் உறுப்புகளை தானம் செய்துள்ளதையடுத்து, இறந்த பின்பு உறுப்பு தானம் செய்த நபர்களின் எண்ணிக்கை ஆண்கள் மத்தியில் மிக அதிகமாக இருந்த அதே நேரத்தில் பெண்கள் மத்தியில் இந்த எண்ணிக்கை 255 ஆக பதிவாகி உள்ளது.
- ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளின் (உயிரோடு இருக்கும் போதே உறுப்பு தானம் செய்தவர்கள் மற்றும் இறந்த பின்பு தானம் செய்தவர்கள்) எண்ணிக்கை 13,426 ஆகும்.
- அதைத் தொடர்ந்து கல்லீரல் மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை ஆகியவை முறையே 4,491 மற்றும் 221 ஆக பதிவாகியுள்ளது.
- உடல் உறுப்பு தானத்தில் 252 பேர் சடல உறுப்பு தானம் செய்ததுடன் தெலுங்கானா முதலிடத்தில் உள்ள நிலையில் அதனை தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் தலா 178 பேர் சடல உறுப்பு தானம் செய்துள்ளனர்.
- சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின் எண்ணிக்கையில், டெல்லி 2,576 பதிவுகளுடன் முன்னிலையில் உள்ளது என்பதோடு தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை முறையே 1,633 மற்றும் 1,305 பதிவுகளுடன் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- கடந்த ஆண்டு 70 இதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.



## 'இந்தியாவின் ஆற்றல் சேமிப்பு அமைப்புகள்' குறித்த அறிக்கை

- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி இந்தியாவில் மொத்தம் 219.1 மெகாவாட் திறன் கொண்ட ஒட்டு மொத்த நிறுவப்பட்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு (BESS) திறன்கள் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிறுவப்பட்ட ஆற்றல் சேமிப்பு அமைப்புகளின் திறன் மொத்தம் 120 MWh (40 MW) ஆகும்.
- சூரிய ஒளி மின்னழுத்த (PV) அமைப்புகள் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் ஆகிய இரண்டின் பங்கு (PV + BESS) மொத்த நிறுவப்பட்ட திறனில் 90.6% ஆகும்.
- அதிக BESS திறன் ஆனது சத்தீஸ்கரில் நிறுவப்பட்டது என்பதோடு இது ஒட்டு மொத்த நிறுவப்பட்ட திறனில் 54.8% ஆகும்.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி நாட்டின் செயல்பாட்டில் உள்ள மோட்டார் விசை இயக்கி மூலம் இயங்கும் நீர் மின்னாற்றல் சேமிப்புத் திறன் மொத்தம் 3.3 ஜிகா வாட் ஆகும்.
- நாட்டின் செயல்பாட்டில் உள்ள திறனில் கிட்டத்தட்ட 76% ஆனது தெலுங்கானா மற்றும் மேற்கு வங்காளத்தில் நிறுவப்பட்டுள்ளது.





## நிதி ஆயோக் அமைப்பின் கியர் ஷிஃப்ட் சவால்

- e-FAST India முன்னெடுப்பின் ஒரு பகுதியாக NITI GearShift சவாலை தொடங்குவதாக நிதி ஆயோக் அமைப்பு அறிவித்துள்ளது.
- இந்த ஹேக்கத்தான் இந்தியாவில் வெறும் சுழிய அளவிலான உமிழ்வினைக் கொண்ட சரக்குந்துகளின் (ZETs) பயன்பாட்டினை ஏற்றுக் கொள்வதற்கான புதுமையான வணிக மாதிரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நாட்டில் நிலவும் மிக அதிகபட்ச பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை நிவர்த்தி செய்கிறது.
- சாலை சார்ந்த சரக்குப் போக்குவரத்தானது இந்தியாவின் வருடாந்திர டீசல் நுகர்வில் 55 சதவீதமும், சாலைப் போக்குவரத்திலிருந்து வெளியாகும் $CO_2$ வெளியேற்றத்தில் சுமார் 40% பங்கினையும் கொண்டுள்ளது.




## SAFAL தேர்வு முறை 2024




- CBSE வாரியம் ஆனது தேர்வினால் ஏற்படும் மன அழுத்தத்தை அகற்றும் நோக்கில் ஒரு புதிய தேர்வு கால சுழற்சியைத் தொடங்கியுள்ளது.
- இது 5 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களை மனப்பாடம் செய்தலுக்குப் பதிலாக "முக்கிய கருத்தாக்கங்களைப்" புரிந்து கொள்ளும் திறனை நன்கு மதிப்பீடு செய்யும்.
- இது பிரத்யேகமாக "தேர்விற்கு தயாராக அவசியமில்லாத" தேர்வு முறை மூலமாகவும் மேற்கொள்ளப்படும்.

- கற்றலைப் பகுப்பாய்வு செய்வதற்காக என்று கட்டமைக்கப்பட்ட மதிப்பீடு - SAFAL என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு ஒரு சோதனை செயலாக்கத்திற்குப் பிறகு, ஜூலை-ஆகஸ்ட் மாத காலக் கட்டத்தில் இணையும் 11,000க்கும் மேற்பட்டப் பள்ளிகள் மற்றும் 10 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கு இம்முறை பயன்படுத்தப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில் அனைத்து 29,000 CBSE பள்ளிகளுக்கும் SAFAL தேர்வு முறையினை மேற்கொள்ள உள்ளன.

## வக்ஃப் வாரிய மசோதா 2024

- மத்திய அரசானது, வக்ஃப் (திருத்த) மசோதாவினை மக்களவையில் தாக்கல் செய்து உள்ளது.
- இந்தச் சட்டம் ஆனது, ஒரு பொது தளத்தின் மூலம் வக்ஃப் சொத்துக்களுக்கான பதிவு செயல்முறையை சீர்திருத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தற்போது நடைமுறையில் உள்ள 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்தை மிக நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட வக்ஃப் மேலாண்மை, அதிகாரமளித்தல், செயல்திறன் மற்றும் மேம்பாட்டுச் சட்டம் என மறுபெயரிட முயல்கிறது.
- வக்ஃப் என்பது இஸ்லாமியச் சட்டத்தின்படி மத அல்லது தொண்டு நோக்கங்களுக்காக பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட சொத்துக்களுடன் தொடர்புடையதாகும்.
- ஒரு சொத்து வக்ஃப் ஆக நியமிக்கப்பட்டால், அதனை ரத்து செய்ய முடியாது.
- 1.2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 9 லட்சம் ஏக்கர் நிலத்தை நிர்வகிக்கும் சுமார் 30 வக்ஃப் வாரியங்கள் உள்ளன.
- வக்ஃப் வாரியங்கள் இரயில்வே துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆகியவற்றைத் தொடர்ந்து இந்தியாவின் மூன்றாவது பெரிய நில உரிமை கொண்ட அமைப்பாக உள்ளன.
- மாநில வக்ஃப் வாரியங்களுடன் சேர்த்து மத்திய வக்ஃப் சபையினை அமைக்க இந்த மசோதா முன்மொழிகிறது.
- குறிப்பிடத்தக்க வகையில், இந்த அமைப்புகளில் முஸ்லீம் பெண்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களும் பிரதிநிதித்துவம் பெறுவர்.
- இதில் அனைத்து மாநில வாரியங்கள் மற்றும் மத்திய சபையில் இரண்டு பெண்களை நியமிப்பதற்கான விதிமுறையும் இடம் பெற உள்ளது.
- இது ஒரு சொத்து வக்ஃப் அல்லது அரசு நிலம் என வகைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்கும் முதன்மை அதிகாரியாக மாவட்ட ஆட்சியரை நியமிக்கிறது.
- இது வக்ஃப் தீர்ப்பாயத்திடம் உள்ள அந்த பொறுப்பை வேறொரு அமைப்பிற்கு கை மாற்றுகிறது.
- வக்ஃப் வாரியங்களுக்குள் ஷியாக்கள், சன்னிகள், போஹ்ராக்கள் மற்றும் அககானிகளுக்கு பிரதிநிதித்துவத்தை நன்கு உறுதி செய்யும் வகையில், குறிப்பாக போஹாராக்கள் மற்றும் அககானிகளுக்காக என்று ஒரு தனி அவுகாஃப் வாரியத்தை உருவாக்குவதை அந்தச் சட்டம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

**BILL SEEKS TO VERIFY PROPERTY CLAIMS**

- The Wakf Act, passed in 1954 and replaced with a new version in 1995, is **meant to regulate 'auqaf'** (assets donated and notified as waqf) by a wakif, the person who dedicates a property for any purpose recognised by Muslim law as religious or charitable
- Govt proposes to amend Act, make verification mandatory for claims on properties by waqf boards
- This will also apply to properties on which **claims and counter-claims have been made** by waqf boards and individual owners
- Currently, waqf boards enjoy powers to tag any property as waqf asset. Around **8.7 lakh properties spanning 9.4 lakh acres** are under jurisdiction of waqf boards in the country
- Bill also proposes changes in **composition of waqf boards, it is learnt**

## தேசியத் தகவல் தொடர்பு கழகம்


- தகவல் தொடர்புத் துறையின் பின்வரும் மூன்று பயிற்சி நிறுவனங்கள் 'தேசிய தகவல் தொடர்பு கழகம்' (NCA) என்ற ஒரே நிர்வாக நிறுவனமாக உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இணைக்கப்பட்டுள்ளன.
- அவையாவன:
    - கொள்கை ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் பயிற்சிக்கான தேசிய தொலைத் தொடர்பு கல்வி நிறுவனம் (NTIPRIT),
    - தேசிய தகவல் தொடர்பு நிதி நிறுவனம் (NICF) மற்றும்
    - கம்பிவட இணைப்பு சாரா கண்காணிப்புப் பயிற்சி மற்றும் மேம்பாட்டு மையம் (WMTDC).

## ஒளிபரப்பு சேவைகள் மசோதா 2024

- 30 ஆண்டுகள் பழமையான 1995 ஆம் ஆண்டு கம்பி வடம் சார்ந்த தொலைக்காட்சி சேவை வலையமைப்புகள் சட்டத்தினை 2024 ஆம் ஆண்டு ஒளிபரப்புச் சேவைகள் (ஒழுங்குமுறை) மசோதா கொண்டு மாற்றியமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
- இச்சட்டமானது யூடியூப், இன்ஸ்டாகிராம் மற்றும் X போன்ற தளங்களில் செய்தி நிகழ்வுகளை சுயமாக உருவாக்கி வெளியீடுபவர்கள் மீது பல்வேறு கடுமையான விதிமுறைகளை அறிமுகப்படுத்த முன்மொழிந்துள்ளது.
- இந்தப் புதிய சட்டமானது, "எண்ணிம வழியிலான செய்தி ஒளிபரப்பாளர்" என்பதனை சிறந்த முறையில் வரையறுக்கிறது என்பதோடு மேலும் நிகழ்ச்சி மதிப்பீட்டிற்கான தரநிலைகளைப் பரிந்துரைப்பதற்காக அரசாங்கத்திடம் முன் பதிவு செய்ய வேண்டும் என்ற விதிமுறையினை முன்மொழிந்துள்ளது.

## கொதிகலன்கள் மசோதா 2024

- இது 1923 ஆம் ஆண்டு கொதிகலன்கள் சட்டத்தினை (1923 ஆம் ஆண்டின் 5வது சட்டம்) ரத்து செய்கிறது.
- இது 2007 ஆம் ஆண்டில் இந்தியக் கொதிகலன்கள் (திருத்தம்) சட்டம், 2007 மூலம் முழுமையாக திருத்தியமைக்கப்பட்டது.
- ஏழு குற்றங்களில், கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களைக் கையாளும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வேண்டி, உயிர் மற்றும் உடைமை இழப்புகளை ஏற்படுத்தக்கூடிய நான்கு பெரிய குற்றங்களுக்கு விதிக்கப் படும் குற்றவியல் தண்டனைகளைத் தக்க வைத்துள்ளது.
- மற்ற குற்றங்களுக்கு, நிதி அபராதத்திற்கான விதிமுறை வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், அனைத்துக் குற்றவியல் குற்றங்களுக்கும் விதிக்கப்படும் 'அபராதம்' ஆனது முன்பு இருந்தபடி நீதிமன்றங்களால் விதிக்கப்படுவதற்குப் பதிலாக ஒரு நிர்வாக நெறி முறையின் மூலம் விதிக்கப்படும் 'தண்டத் தொகையாக - அபராதம்' ஆக மாற்றப் பட்டுள்ளது.





## மில்லியன் வடிவமைப்பாளர்கள், பில்லியன் கணக்கான கனவுகள்


- தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா–தேசியக் கிராமப்புற வாழ்வாதாரத் திட்ட அமைப்பானது (DAY-NRLM), "மில்லியன் வடிவமைப்பாளர்கள், பில்லியன் கணக்கான கனவுகள்" என்ற முன்னெடுப்பினை அறிவித்துள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள தனிநபர்களுக்கு, சிக்கலான சமூகச் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான விரிவான திட்ட உருவாக்க தகவலைப் பெறுவதற்கான அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது விரிவான திட்ட உருவாக்கத் தகவலின் மூலம் தனிநபர்களின் திறனை நன்கு மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு தனித்துவமான முன்னெடுப்பு ஆகும்.
- இது கிராமப்புறத் தலைவர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் கிராம தொழில் முனைவோர் ஆகியோரை இலக்காகக் கொண்டு, நலன் மிகு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பல்வகைத் தீர்வுகளை உருவாக்கும் திறன்களை அவர்களுக்கு வழங்குகிறது.

## Kavach 4.0

- 10,000 இரயில் என்ஜின்களில் "Kavach-4.0" என்ற மோதல் தடுப்புச் சாதனத்தினை நிறுவ இரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தப் புதிய அமைப்பு ஆனது, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் நம்பகத் தன்மையில், முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்ட கவாச்-3.2 மாதிரியின் அம்சங்களை விஞ்சுகிறது.
- தற்போதுள்ள கவாச்-3.2 அமைப்பானது 1,465 வழித்தடங்களில் பயனுள்ள வகையிலும், 144 என்ஜின்களிலும் இயக்கப்படுகிறது.




## இந்தியாவில் காணப்படும் புவிவெப்ப ஆற்றல் வளங்கள் 2024




- இந்தியா தோராயமாக சுமார் 10,600 மெகாவாட் திறன் கொண்ட புவிவெப்ப ஆற்றல் வளங்களைக் கண்டறிந்துள்ளது.
- இந்தியப் புவியியல் ஆய்வகமானது (GSI), 'இந்தியாவின் புவிவெப்ப ஆற்றல் வளம் குறித்த வரைபடம், 2022' என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- தெலுங்கானாவின் சிங்கரேணி காலியரீஸ் கம்பெனி லிமிடெட் (SCCL) நிறுவனத்தினால் 20 கிலோவாட் திறன் கொண்ட புவிவெப்ப மின்னாற்றல் உற்பத்தி நிலையம் ஆனது சோதனை முறையில் தொடங்கப்பட்டது.
- புவிவெப்ப ஆற்றல் என்பது புவியினுள் உருவாக்கப்பட்டு சேமிக்கப்படும் புதுப்பிக்கத் தக்க வெப்ப ஆற்றலாகும்.
- பொதுவாக புவி வெப்பத் தொழில்நுட்பம் ஆனது இந்த ஆற்றல் அல்லது வெப்பத்தினை வெப்பம் ஆக்குவதற்கும் குளிரூட்டுவதற்கும் பயன்படுத்துவதற்காக என்று அதனை நேரடியாக பிரித்தெடுக்கிறது அல்லது அதனை மின்சாரமாக மாற்றுகிறது.

## கஸ்தூரி பருத்தி பாரதம் திட்டம்

- ஜவுளி அமைச்சகத்தின் இந்தத் திட்டமானது இந்தியப் பருத்தி வகையின் கண்டறிதல், சான்றளிப்பு மற்றும் வர்த்தக முத்திரையிடல் போன்றவற்றில் ஒரு முன்னோடிமிக்க முன்னெடுப்பாகும்.
- தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் இது தேசிய மற்றும் சர்வதேச தளங்களில் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.
- உலகப் பருத்தி உற்பத்தியில் இந்தியா 25% பங்களிக்கிறது.

## NIPCCD அமைப்பின் நிர்வாகக் குழு

- மத்திய அரசானது, சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு தேசியப் பொது கூட்டுறவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுப் கல்வி நிறுவனத்தின் (NIPCCD) நிர்வாகக் குழு மற்றும் பொதுக் குழுவை மறுசீரமைத்துள்ளது.
- NIPCCD ஆனது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பு ஆகும்.
- இது ஆரம்பத்தில் 1966 ஆம் ஆண்டில் 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் XXI என்பதின் கீழ் நிறுவப்பட்டது.
- இந்த மறுசீரமைப்பு என்பது 94 என்ற அளவாக இருந்த பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையினை 22 ஆகவும், 21 ஆக இருந்த நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையினை 13 ஆகவும் குறைத்துள்ளது.
- பொதுக்குழுவானது ஒட்டு மொத்தக் கொள்கைகளை உருவாக்குவதற்கும், நிர்வாகக் குழு நிறுவனத்தின் நிர்வாக விவகாரங்களை நிர்வகிக்கின்றப் பொறுப்பினையும் வகிக்க உள்ளன.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் 2024

- இந்தியாவின் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் ஆனது கடந்த பத்தாண்டுகளில் 165 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 76.38 ஜிகாவாட் (GW) ஆக இருந்த இதன் அளவானது 2024 ஆம் ஆண்டில் 203.1 GW ஆக உயர்ந்துள்ளது.

- நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் இந்தியா உலகளவில் 4வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியா காற்றாலை ஆற்றல் உற்பத்தித் திறனில் 4வது இடத்திலும், சூரிய சக்தி ஒளி மின்னழுத்த உற்பத்தி திறனில் 5வது இடத்திலும் உள்ளது.
- முதன்முறையாக, புதைபடிவமற்ற எரிபொருள் மூலங்களிலிருந்துப் பெறப்படும் இந்தியாவின் ஆற்றல் உற்பத்தியானது 200 GW திறனைத் தாண்டியுள்ளது.
- இதில் 85.47 ஜிகாவாட் சூரிய சக்தி மற்றும் 46.93 ஜிகாவாட் மாபெரும் நீர் மின் நிலையங்கள், 46.66 ஜிகாவாட் காற்றாலை, 10.95 ஜிகாவாட் உயிரி சார் ஆற்றல் மற்றும் 5.00 ஜிகாவாட் சிறிய நீர்மின் நிலையங்கள் ஆகியவை அடங்கும்.




## 9வது NIRF தரவரிசை 2024

| India Rankings 2024: Top 100 in Overall | | | |
|---|---|---|---|
| Name | City | State | Rank |
| Indian Institute of Technology Madras | Chennai | Tamil Nadu | 1 |
| Indian Institute of Science, Bengaluru | Bengaluru | Karnataka | 2 |
| Indian Institute of Technology Bombay | Mumbai | Maharashtra | 3 |
| Indian Institute of Technology Delhi | New Delhi | Delhi | 4 |
| Indian Institute of Technology Kanpur | Kanpur | Uttar Pradesh | 5 |
| Indian Institute of Technology Kharagpur | Kharagpur | West Bengal | 6 |
| All India Institute of Medical Sciences Delhi | New Delhi | Delhi | 7 |
| Indian Institute of Technology Roorkee | Roorkee | Uttarakhand | 8 |
| Indian Institute of Technology Guwahati | Guwahati | Assam | 9 |
| Jawaharlal Nehru University | New Delhi | Delhi | 10 |


- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, 2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆறாவது முறையாக நாட்டின் சிறந்த கல்வி நிறுவனமாக விளங்கி வருகிறது.

- ❖ பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் ஆனது, பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழும் 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே முதல் இரு இடங்களையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- ❖ கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலாக மூன்று பிரிவுகளோடுச் சேர்த்து 16 பிரிவுகளில் தரவரிசைகள் வழங்கப்பட்டன.
- ❖ திறந்த நிலைப் பல்கலைக்கழகங்கள், திறன் சார் பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள் ஆகியவை இந்த மூன்று புதிய வகைகளாகும்.
- ❖ அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆனது 2020 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக சிறந்த மேலாண்மை கல்வி நிறுவனமாக திகழ்கிறது.
- ❖ தொடர்ந்து ஏழாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ள புது டெல்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (AIIMS) ஆனது மருத்துவ அறிவியல் படிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கல்வி நிறுவனமாகும்.
- ❖ புது டெல்லியில் உள்ள ஜாமியா ஹம்தார்ட், மருந்தியல் கல்விக்கான சிறந்த கல்லூரி ஆகும்.
- ❖ சென்னையின் சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் கல்வி நிறுவனம் ஆனது பல் மருத்துவப் படிப்பிற்கான சிறந்த கல்லூரியாகும்.
- ❖ மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, சிறந்த 'புத்தாக்கம் மிக்க கல்வி நிறுவனம்' ஆகவும், அதைத் தொடர்ந்து சென்னையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகமும், டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமும் இடம் பெற்றுள்ளன.
- ❖ பொறியியலில் சென்னை IIT நிறுவனத்தினைத் தொடர்ந்து டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ❖ நிர்வாகக் கல்வியில் அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தினை அடுத்து பெங்களூருவின் அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் கோழிக்கோட்டில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ❖ ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது தொடர்ந்து நான்காவது ஆண்டாக கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் பிரிவில் தனது முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- ❖ பெங்களூருவில் உள்ள இந்தியா பல்கலைக்கழகத்தின் தேசிய சட்டக் கல்லூரியானது தொடர்ந்து ஏழாவது ஆண்டாக சிறந்த சட்டக் கல்லூரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ புது டெல்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனமானது வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறை படிப்புகளைக் கற்க சிறந்த நிறுவனமாக விளங்குகிறது.
- ❖ புது டெல்லியின் இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம் (IGNOU) ஆனது சிறந்த திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆக விளங்குகிறது.
- ❖ புனே நகரில் உள்ள சிம்பயோசிஸ் திறன் சார் மற்றும் தொழில் முறைக் கல்விப் பல்கலைக் கழகமானது, திறன் சார் பல்கலைக்கழகங்கள் பிரிவில் சிறந்த நிறுவனம் ஆக உருவெடுத்துள்ளது.

## 78வது சுதந்திர தினம்

- இந்த ஆண்டு, இந்தியா தனது 78வது சுதந்திர தினம் அல்லது சுதந்திரத் திவாஸ் தினத்தினைக் கொண்டாடியது.
- இந்திய அரசாங்கம் ஆனது இந்த ஆண்டிற்கான கருத்துருவாக விக்சித் பாரத்@2047 அல்லது 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி பெற்ற இந்தியா என்று அறிவித்தது.
- பிரதமர் அவர்கள் தொடர்ந்து 11வது முறையாக செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.
- ஜவஹர்லால் நேரு மற்றும் இந்திரா காந்தி ஆகியோருக்குப் பிறகு அவ்வாறு தொடர்ந்து உரையாற்றிய மூன்றாவது பிரதமர் என்ற பெருமையினை இவர் பெற்று உள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு பிரதமரின் 98 நிமிட சுதந்திர தின உரை அவரது நீண்ட நேர சுதந்திர தின உரையாகும்.
- இவருக்கு முன்னதாக, 1947 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேரு அவர்களும், 1997 ஆம் ஆண்டில் I.K.குஜ்ரால் அவர்களும் முறையே 72 மற்றும் 71 நிமிடங்களிலான நீண்ட நேர உரைகளை நிகழ்த்தியுள்ளனர்.
- நேரு மற்றும் இந்திரா ஆகியோர் முறையே 1954 மற்றும் 1966 ஆம் ஆண்டுகளில் 14 நிமிடக் கணக்கில் மிகக் குறுகிய நேர உரைகளையும் நிகழ்த்தியுள்ளனர்.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 400 பெண் பிரதிநிதிகள் டெல்லி செங்கோட்டையில் சுதந்திர தின சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர்.

## பிரதான் மந்திரி JI-VAN யோஜனா




- பிரதான் மந்திரி JI- VAN யோஜனா திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, திட்டத்தின் செயலாக்க காலக்கெடுவை ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பதன் மூலம், உயிரி சார் பொருளை எத்தனாலாக மாற்றுவதில் பெரும் கவனம் செலுத்துகிறது.
- மாற்றி அமைக்கப்பட்ட திட்டமானது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலக்கெடுவினை ஐந்து ஆண்டு வரை அதாவது 2028-29 ஆம் ஆண்டு வரை நீட்டித்து உள்ளது.

- இது லிக்னோசெல்லுலோசிக் தீவனங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மேம்பட்ட உயிரி எரிபொருட்களை உள்ளடக்கியது.

## வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா – 2024




- அரசாங்கம் ஆனது 2024 ஆம் ஆண்டு வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) மசோதாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு வங்கிக் கணக்கிற்கு வாரிசுதாரர்களாக நியமிப்பதற்கான விருப்பத் தேர்வு எண்ணிக்கையினை ஒன்றிலிருந்து நான்கு என்ற அளவாக அதிகரிக்க இந்த மசோதா முயல்கிறது.
- உரிமை கோரப்படாத முதலீட்டாளர்கள் பங்குத் தொகைகள், பங்குகள், வட்டி அல்லது பத்திரங்களை மீட்டெடுப்பது ஆகியவற்றின் ஒதுக்கீடுகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியம் (IEPF) மேற்கொள்ள இந்த மசோதா பரிந்துரைக்கிறது.
- இது இயக்குநர் பதவிகளுக்கான 'கணிசமான வட்டி' அளவினை மறுவரையறை செய்கிறது என்பதோடு இது சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட 5 லட்சம் ரூபாய்க்குப் பதிலாக 2 கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும்.
- ஒழுங்குமுறை இணக்கத்திற்கான வங்கிகளின் அறிக்கையிடல் தேதிகளை இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளுக்குப் பதிலாக ஒவ்வொரு மாதமும் 15 மற்றும் கடைசி நாளன்று நிர்ணயிப்பதற்கும் இந்த மசோதா முயல்கிறது.
- இந்த மசோதா பின்வருவனவற்றில் திருத்தம் மேற்கொள்ள முன்மொழிகிறது;
  - இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934,
  - வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949,
  - பாரத ஸ்டேட் வங்கி சட்டம், 1955,
  - வங்கி நிறுவனங்கள் (பங்கீடுகளைக் கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றுதல்) சட்டம், 1970 மற்றும்
  - வங்கி நிறுவனங்கள் (பங்கீடுகளைக் கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றுதல்) சட்டம், 1980.

## நந்தினி சஹகர் யோஜனா


- தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC) கீழ் வணிக மாதிரி அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மகளிர் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பெண்களை மையமாகக் கொண்ட நிதி உதவி, திட்ட உருவாக்கம், ஆதரவு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் கட்டமைப்பாகும்.
- மகளிர் கூட்டுறவு அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவிகளுக்கு குறைந்தபட்ச அல்லது அதிகபட்ச தொகை வரம்புகள் என்று எதுவும் இல்லை.
- NCDC ஆனது புதிய மற்றும் புதுமையான நடவடிக்கைகளுக்கு தவணைக் கடன் பகுதியின் மீதான வட்டி விகிதம் மீது 2% வட்டி மானியத்தை வழங்குகிறது.
- மற்ற அனைத்து நடவடிக்கைகளுக்குமான தவணைக் கடன் பகுதியின் மீதான வட்டி விகிதத்தில் 1% வட்டி மானியம் வழங்கப் படுவது மூலம் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் பெறும் செலவினங்கள் குறைகிறது.





## PMAY-U 2.0

- 1 கோடி வீடுகளைக் கட்டமைக்கும் நோக்கில் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புற (PMAY-U) 2.0 திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு நியாயமான விலையில் நகர்ப்புற வீடுகளைக் கட்டுவதற்கு, வாங்குவதற்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கு நிதி உதவி வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்குத் தகுதியான வருமான அளவுருக்கள் பின்வருமாறு:

- 3 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானம் உள்ள பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்கள்.
- 3 முதல் 6 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானம் உள்ள குறைவான வருமானம் கொண்ட குடும்பங்கள்.
- 6 முதல் 9 லட்சம் ரூபாய்க்கு இடைப்பட்ட ஆண்டு வருமானம் கொண்ட நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்கள்.




**பல்வேறு பருவநிலைச் சூழல்களுக்கான நெகிழ் திறன் கொண்ட அதிக மகசூல் தரும் 109 பயிர் வகைகள்**



- புது டெல்லியில் அதிக மகசூல் தரும், பல்வேறு பருவநிலைச் சூழல்களுக்கான நெகிழ் திறன் கொண்ட மற்றும் உயிரி செறிவூட்டப்பட்ட 109 வகை பயிர்களைப் பிரதமர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.
- பிரதமரால் அறிமுகப்படுத்தப்பட்ட 61 பயிர்களின் 109 வகைகளுள் 34 வகைகள் ஆனது வயல் பயிர்கள் மற்றும் 27 வகைகள் ஆனது தோட்டக்கலை பயிர்கள் ஆகும்.
- வயல் பயிர்களில், சிறு தானியங்கள், தீவனப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி, இழைப் பயிர்கள் மற்றும் பிற உற்பத்தி திறன் மிக்க பயிர்கள் உள்ளிட்ட பல்வேறு தானியங்களின் விதைகள் அறிமுகப்படுத்தப் பட்டன.

## QCI சுரஜ்யா அங்கீகாரம் மற்றும் தரவரிசை கட்டமைப்பு

- இந்தியத் தர சபையானது (QCI) QCI சுரஜ்யா அங்கீகாரம் மற்றும் தரவரிசை என்ற கட்டமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது சிக்சா (கல்வி), ஸ்வஸ்த்யா (உடல்நலம்), சம்ரித்தி (வளம்), மற்றும் சுஷாசன் (ஆளுகை) ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டு உள்ளது.
- இந்த முக்கியமான பகுதிகளில் மாநிலங்கள் மற்றும் நிறுவனங்களின் சிறந்த செயல் திறன் மற்றும் தரத்திற்கான உறுதிப்பாடு ஆகியவற்றை சுரஜ்யா அங்கீகாரம் நன்கு அங்கீகரிக்கிறது.
- சிக்சா தரவரிசையில், உத்தரப் பிரதேச மாநிலம் ஆனது அதிக எண்ணிக்கையிலான அங்கீகாரங்கள், மதிப்பீடுகள் மற்றும் தர வரிசையுடன் முன்னணியில் உள்ளது.
- ஒன்றியப் பிரதேச அளவில் டெல்லி பிரதான இடத்தினைப் பிடித்துள்ளது.
- ஸ்வஸ்த்யா பிரிவில், சத்தீஸ்கர், கர்நாடகா, கேரளா, இராஜஸ்தான், மிசோரம் மற்றும் மணிப்பூர் ஆகியவை ஆயுஷ்மான் ஆரோக்கிய யோஜனாவில் (NABH) முழுமையான அங்கீகாரத்துடன் தனித்து நிற்கின்றன.
- மருத்துவ முதன்மை நிலைச் சோதனை ஆய்வகங்கள் (MELT) தரவரிசையில் (NABL) தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா முன்னணியில் உள்ளன.




## தூய்மை/ பசுமை வழி தாவரங்கள் திட்டம் 2024





- ❖ மத்திய அமைச்சரவையானது பசுமை வழி தாவரங்கள் (Clean Plant) திட்டத்திற்கு (CPP) ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இது இந்தியாவில் தோட்டக்கலைப் பயிர்களின் விளைச்சல் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ நாடு முழுவதும் உள்ள பழப் பயிர்களின் தரத்தை உயர்த்துவதையும் CPP இலக்காகக் கொண்டுள்ளது.
- ❖ பயிர் விளைச்சலை அதிகரிக்கவும், வருமான வாய்ப்புகளை மேம்படுத்தவும் வைரஸ் தொற்று இல்லாத, உயர்தர நடவுப் பொருட்களைப் பெற விவசாயிகளுக்கு உதவும் வகையில் இத்திட்டம் மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது.
- ❖ பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ 2013-14 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை 24 மில்லியன் ஹெக்டேராக இருந்த தோட்டக் கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பானது 28.63 மில்லியன் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.
- ❖ 277.4 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி என்பது தற்போது 352 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.
- ❖ இந்தியா புதிய (செயல்முறைக்கு உட்படுத்தாத) பழங்களை அதிகளவில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடாகவும் உள்ளது.
- ❖ 2023-24 ஆம் நிதியாண்டில், இந்தியா சுமார் 1.15 பில்லியன் டாலர் மதிப்புள்ள புதிய பழங்களை ஏற்றுமதி செய்தது அதே நேரத்தில் சுமார் 2.73 பில்லியன் டாலர் மதிப்புள்ள பழங்களை இறக்குமதி செய்தது.

## 'Bail is the rule, and jail is the exception' கொள்கை




- ❖ டெல்லியின் முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவுக்கு பிணை ஆணை வழங்கும் போது, 'jail and not bail is the exception' என்ற கொள்கையை உச்ச நீதிமன்றம் புதுப்பித்துள்ளது.
- ❖ 1977 ஆம் ஆண்டில் நீதிபதி கிருஷ்ண ஐயர் என்பவரால் bail is the rule, jail is an exception' என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.
- ❖ முதன்முதலில் 'இராஜஸ்தான் மற்றும் பால்சந்த் எனப்படும் பாலியா' ஆகியோருக்கு இடையிலான வழக்கின் தீர்ப்பில் இது பயன்படுத்தப்பட்டது.
- ❖ குற்றம் சாட்டப்பட்டவர் நீதி செயல்முறையிலிருந்து தப்பியோடுதல், நீதிக்கு இடையூறு விளைவித்தல், சில குற்றங்களைத் திரும்பத் திரும்பச் செய்தல் அல்லது சாட்சிகளை அச்சுறுத்துதல் போன்ற அபாயங்கள் உள்ள சூழ்நிலைகளில் மட்டுமே பிணை ஆணை மறுக்கப்பட வேண்டும் என்று இந்தத் தீர்ப்பு குறிப்பிட்டுக் காட்டுகிறது.


## பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனாவிற்கான வழிகாட்டுதல்கள்




- ❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது பிரதான் மந்திரி-சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனா திட்டத்தின் கீழ் மாதிரி சூரிய சக்தி உற்பத்தி கிராமம் என்ற திட்டத்தினை செயல்படுத்துவதற்காக வேண்டி பல்வேறு செயல்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

- ‘மாதிரி சூரிய சக்தி உற்பத்தி கிராமம்’ என்ற திட்டத்தின் கீழ், இந்தியா முழுவதும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதிரி சூரிய சக்தி உற்பத்திக் கிராமத்தினை உருவாக்க இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திற்கு மொத்தமாக 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி சூரிய சக்தி உற்பத்தி கிராமத்திற்கு 1 கோடி ரூபாய் வழங்கப் படுகிறது.
- போட்டி முறையின் கீழ் ஒரு கிராமமாக கருதப்படுவதற்கு, ஒரு கிராமம் ஆனது 5,000 (அல்லது சிறப்பு அந்தஸ்து பெற்ற மாநிலங்களுக்கு 2,000) என்ற அளவில் மக்கள் தொகை எண்ணிக்கையினைக் கொண்ட வருவாய் கிராமமாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனுடன் வெற்றி பெறும் கிராமம், 1 கோடி ரூபாய் மத்திய நிதி உதவி மானியத்தினைப் பெறும்.
- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் தேதியன்று பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனா திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- இது மேற்கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி கலங்களின் உற்பத்தி திறனின் பங்கை அதிகரிக்கச் செய்வதையும், குடியிருப்புக்களை சொந்தமாக மின்சாரம் உற்பத்தி செய்ய அதிகாரமளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 75,021 கோடி ரூபாய் செலவில் 2027 ஆம் நிதியாண்டு வரை செயல் படுத்தப் பட உள்ளது.

## இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2023




- புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத் துறை அமைச்சகம் (MoSPI) ஆனது, ‘இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2023’ என்ற தலைப்பிலான அதன் 25வது அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- 2036 ஆம் ஆண்டில், 2011 ஆம் ஆண்டில் இருந்த 48.5 சதவீதத்துடன் ஒப்பிடும் போது பெண்களின் எண்ணிக்கை 48.8% ஆக சற்று மேம்பட்டுள்ளதுடன் இந்தியாவின் மக்கள் தொகை 152.2 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 15 வயதிற்குட்பட்ட நபர்களின் விகிதம் ஆனது 2011 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 2036 ஆம் ஆண்டில் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் 943 ஆக இருந்த பாலின விகிதம் ஆனது 2036 ஆம் ஆண்டிற்குள் 952 ஆக அதிகரிக்கும் என்று கணிக்கப் பட்டுள்ள நிலையில் இது பாலினச் சமத்துவத்தில் நேர்மறையானப் போக்கை எடுத்துக் காட்டுகிறது.
- 20 முதல் 24 வயது வரையில் மற்றும் 25 முதல் 29 வரையிலான வயதிற்குட்பட்டவர்களில் முறையே 135.4 மற்றும் 166.0 ஆக இருந்த வயது சார் கருவுறுதல் விகிதம் (ASFR) ஆனது 113.6 மற்றும் 139.6 ஆகக் குறைந்துள்ளது.
- மேற்கண்ட காலக் கட்டத்திற்கு 35 முதல் 39 வயதினரில் 32.7 ஆக இருந்த ASFR விகிதம் ஆனது 35.6 ஆக அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் கல்வியறிவு இல்லாதவர்கள் மத்தியில் 11.0 ஆக இருந்த இளம்பருவ கருவுறுதல் விகிதம் ஆனது கல்வியறிவு உள்ளவர்கள் மத்தியில் 33.9 ஆக இருந்தது.
- 2015 ஆம் ஆண்டில் 43 ஆக இருந்த உயிரிழப்பு விகிதம் ஆனது 2020 ஆம் ஆண்டில் 32 ஆகக் குறைந்துள்ளது என்று 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் காட்டுகிறது.
- பெண் குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் ஆனது எப்போதும் ஆண் குழந்தைகளின் உயிரிழப்பு விகிதத்தினை விட அதிகமாக இருந்தது, ஆனால் 2020 ஆம் ஆண்டில், 1000 பிறப்புகளுக்கு சுமார் 28 குழந்தைகள் என்ற அளவில் இந்த உயிரிழப்பு விகிதம் இரு பிரிவுகளிலும் சமமாக இருந்தது.


## புதிய பாராளுமன்றக் குழுக்கள் 2024-25

- மக்களவை சபாநாயகர் பொதுக் கணக்குக் குழு (PAC) உட்பட ஆறு புதிய பாராளுமன்றக் குழுக்களை அமைத்துள்ளார்.
- பாராளுமன்றக் குழுக்கள் அரசியலமைப்பின் 105 மற்றும் 118 ஆகிய சரத்துகளில் இருந்து அதற்கான அதிகாரத்தைப் பெறுகின்றன.
- PAC தலைவராக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் K.C. வேணுகோபால் நியமிக்கப் பட்டுள்ளார்.
- பொதுக் கணக்குக் குழு 1921 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது ஒரு நிர்வாக அமைப்பு அல்ல எனவே இது ஆலோசனை வழங்கீடு சார்ந்த முடிவுகளை மட்டுமே எடுக்க முடியும்.
- இது தற்போது மக்களவை சபாநாயகரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 உறுப்பினர்கள் மற்றும் மாநிலங்களவை தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 உறுப்பினர்கள் என மொத்தம் 22 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- மதிப்பீட்டுக் குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான குழு போன்ற மற்ற இரண்டு நிதிக் குழுக்கள் ஆளும் கட்சித் தலைவர்களால் தலைமை தாங்கப்படும்.
- மக்களவை சபாநாயகர் இதர பிற்படுத்தப்பட்டோர் சமூக நலக் குழுவின் தலைவராக கணேஷ் சிங்கினை நியமித்துள்ளார்.

- ❖ பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் நலன் தொடர்பான குழுவின் தலைவராக ஃபக்கன் சிங் குலாஸ்தே நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ மேற்குறிப்பிட்ட அனைத்துக் குழுக்களின் பதவிக்காலம் ஓராண்டு ஆகும் என்பதோடு அவை மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரண்டு அவைகளில் இருந்தும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- ❖ மக்களவை சபாநாயகர் இன்னும் 24 துறை சார்ந்த நிலைக் குழுக்களை அமைக்க வில்லை.





## BHAVISHYA தளம்




- ❖ ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலத் துறை (DOPPW) ஆனது மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள்/துறைகளுக்காக 'BHAVISHYA' என்ற மிகவும் தனித்துவமான மற்றும் புதுமையான மையப் படுத்தப்பட்ட ஒரு ஓய்வூதியச் செயலாக்க மென்பொருளை அறிமுகப் படுத்தி யுள்ளது.

- ஓய்வூதியம் சார்ந்த வழக்குகளை கையாள்வதில் தாமதம் மற்றும் எழுத்துப் பிழைகள், அத்துடன் நிதி இழப்பு மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு விளைவிக்கப்படும் பல்வேறு துன்புறுத்தல்கள் போன்ற பிரச்சனைகளை சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பவிஷ்யா 2021 ஆம் ஆண்டு NeSDA (தேசிய மின்-ஆளுகை சேவை வழங்கல் மதிப்பீடு) மதிப்பீட்டில் 3வது சிறந்த மென்பொருள் என்ற மதிப்பினைப் பெற்றுள்ளது.

## கடல்சார் பகுதிகளில் உள்ள கனிமச் சுரங்க அறக்கட்டளை விதிகள் 2024





- இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் உள்ள கனிம ஆய்வு மற்றும் உற்பத்தியை மேற்பார்வையிடுவதற்கான முதல் கட்டமைப்பை இது நிறுவுகிறது.
- இந்தப் புதிய விதிகளின்படி, கடலோரச் சுரங்கங்களின் உற்பத்தி மீதான குத்தகையை வைத்திருக்கும் நிறுவனங்கள் தங்கள் உரிமக் கட்டணத்தில் சுமார் 10 சதவீதத்தினை அரசாங்கத்திற்குச் செலுத்துவதன் மூலம் அந்த அறக்கட்டளைக்கு அவை பங்களிக்க வேண்டும்.
- இந்தத் தொகையானது இந்தியப் பொதுக் கணக்கில் வைப்பு வைக்கப்பட்டு அது அந்த அறக்கட்டளையின் முன்னெடுப்புகளுக்கான நிதி ஆதாரமாக விளங்கும்.
- சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் சமூக நலனை உறுதி செய்வதோடு, நிலையான சுரங்க வேலைப்பாடுகளை மேற்கொள்வதை ஊக்குவிப்பதே அறக்கட்டளையின் ஒரு முதன்மை நோக்கமாகும்.


## ஜியோ பார்சி திட்ட இணைய தளம்

- இந்தியாவில் பார்சி சமூகத்தின் மக்கள்தொகை குறைவதைத் தடுப்பதற்காக மத்திய அரசானது ஜியோ பார்சி திட்டத்தின் இணைய தளம் என்ற மத்திய அரசின் துறை சார் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது ஒரு அறிவியல் சார் நெறிமுறை மற்றும் கட்டமைக்கப்பட்ட திட்டங்களை ஏற்பதன் மூலம் பார்சி இன மக்கள்தொகை குறைந்து வரும் போக்கை மாற்றியமைப்பது மற்றும் அவர்களின் மக்கள்தொகையை உறுதிப்படுத்துவது போன்றவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பார்சியினத் தம்பதிகளுக்கு தரமான மருத்துவ நெறிமுறையின் கீழ் மருத்துவச் சிகிச்சை பெறவும், குழந்தை நலப் பராமரிப்பிற்காகவும், ஒருவரை சார்ந்து வாழும் முதியவர்களுக்கு உதவுவதற்காகவும் நிதி உதவி வழங்குகிறது.




## தேசியப் பூச்சிகள் கண்காணிப்பு அமைப்பு




- மத்திய அரசானது செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தேசியப் பூச்சிகள் கண்காணிப்பு அமைப்பை (NPSS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- விவசாயிகள் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பல்வேறு தகவல்களை அறிய தங்கள் தொலைபேசியைப் பயன்படுத்தி வேளாண் அறிவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுடன் தொடர்பு கொள்ள இது உதவும்.
- விவசாயிகளுக்கும் மற்றும் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் பூச்சி மேலாண்மையில் உள்ள நிபுணர்களுக்கும் உதவுவதற்காக செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்தி பூச்சிகள் பற்றிய சமீபத்தியத் தரவினை NPSS பகுப்பாய்வு செய்யும்.
- NPSS தளத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் பதிவு செய்யும் பாதிக்கப்பட்டப் பயிர்கள் அல்லது பூச்சிகளின் பல புகைப்படங்கள் அறிவியலாளர்களையும் நிபுணர்களையும் சென்றடையும்.

## முக்கிய மற்றும் உத்தி சார் கனிமங்களின் பட்டியல்




- 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் (MMDR) முதல் அட்டவணையின் பகுதி Dயில் உள்ள டான்டலம் உள்ளிட்ட 24 கனிமங்களின் பட்டியலை முக்கிய மற்றும் உத்தி சார் கனிமங்கள் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- டான்டலம் என்பது Ta குறியீடு மற்றும் அணு எண் 73 கொண்ட அரிய உலோகம் ஆகும்.
- இந்தியாவின் புவியியல் ஆய்வு மையம் ஆனது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் டான்டலம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு கனிமங்களை ஆராய்வதில் 6 திட்டங்களை மேற்கொண்டுள்ளது.
- டான்டலம் தாது இயற்கையில் அரிதாகவே கிடைக்கிறது.
- இது பொதுவாக கொலம்பைட்-டான்டலைட் (பொதுவாக கோல்டன் என குறிப்பிடப் படுகிறது) தாதுவில் காணப்படுகிறது.
- இது டங்ஸ்டன் மற்றும் ரீனியம் ஆகிய கனிமங்களின் விட மட்டுமே அதிகமான உருகு நிலையைக் கொண்டுள்ளது.
- காங்கோ ஜனநாயகக் குடியரசு, ருவாண்டா, பிரேசில் மற்றும் நைஜீரியா ஆகியவை டான்டலம் உற்பத்தி செய்யும் முக்கிய உற்பத்தியாளர்கள் ஆகும்.

## கிரிஷி முடிவெடுத்தல் செயல்முறைக்கான ஆதரவு வழங்கீட்டு அமைப்பு




- ❖ மத்திய அரசானது கிரிஷி முடிவெடுத்தல் செயல்முறைக்கான ஆதரவு வழங்கீட்டு அமைப்பினை (krishi-DSS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது இந்திய வேளாண்மைக்கான தனித்துவமான புவிசார் தளமாகும்.
- ❖ இது வயல்கள், மண், வானிலை, நீர் நிலைகள் மற்றும் பயிர் நிலைமைகள் பற்றிய எந்த நேரத்திலும் எப்போதும் அணுகக் கூடிய வகையிலான விரிவான தரவை வழங்குகிறது.
- ❖ krishi-DSS மண்ணின் ஈரப்பதம், பயிர் நிலைமைகள் மற்றும் வறட்சிக் கண்காணிப்பு பற்றிய நிகழ்நேரத் தகவல்களை வழங்குகிறது.
- ❖ இது மண் வளம் பற்றிய விரிவான தரவுகளுடன் கூடிய "ஒரு நாடு-ஒரு மண் தகவல் அமைப்பு" என்பதினைக் கொண்டுள்ளது.
- ❖ இந்தத் தளம் ஆனது பயிர்ச் சாகுபடி முறைகளை ஆய்வு செய்யவும், இலக்கு சார்ந்தத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு உதவுகிறது.

## பசுமை எரிபொருள் சார் இழுவைப் படகுப் பயன்பாட்டிற்கு மாறுதல் திட்டம்

- ❖ மத்தியத் துறைமுகக் கப்பல் மற்றும் நீர்வழித் துறை அமைச்சகம் ஆனது, பசுமை நுட்பம் சார் இழுவைப் படகுப் பயன்பாட்டிற்கு மாறுதல் திட்டத்திற்கான (GTTP) சீர் தர இயக்கச் செயல்முறையினை (SOP) அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ 'பஞ்ச் கர்ம சங்கல்ப்' திட்டத்தின் கீழ் ஒரு முக்கிய முயற்சியாக பசுமை நுட்பம் சார் இழுவைப் படகு பயன்பாட்டிற்கு மாறுதல் திட்டம் (GTTP) தொடங்கப்பட்டது.
- ❖ GTTP ஆனது இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் இயங்கும் வழக்கமான எரி பொருள் அடிப்படையிலான துறைமுக இழுவைப் படகுகளை அகற்றி, தூய்மையான மற்றும் நிலையான மாற்று எரிபொருளால் இயக்கப்படும் பசுமை எரிபொருள் சார் இழுவைப் படகுகளை மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ GTTP திட்டத்தின் முதல் கட்டம் ஆனது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டு 2027 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை மேற்கொள்ளப்படும்.

- இந்தக் கட்டத்தில் ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம், தீன்தயாள் துறைமுக ஆணையம், பாரதீப் துறைமுக ஆணையம் மற்றும் V.O. சிதம்பரனார் துறைமுக ஆணையம் ஆகிய நான்கு முக்கியத் துறைமுகங்கள் ஆனது தலா இரண்டு பசுமை எரிபொருள் சார் இழுவைப் படகுகளையாவது கொள்முதல் செய்யும் அல்லது அதன் உரிமத்தினைப் பெறும்.





## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் AYUSH

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB PM-JAY) திட்டத்தின் கீழ் AYUSH திட்டப் பலன்களையும் சேர்க்கும் பணியில் மத்திய அரசாந்து செயல்பட்டு வருகிறது.
- AYUSH என்பது ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி என்பதனைக் குறிக்கிறது.
- AB PM-JAY ஆனது, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சைக்காக மருத்து வமனையில் அனுமதிக்கப் படுபவர்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் என்ற வீதத்தில் சுகாதார காப்பீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொது சுகாதாரம் என்பது ஒரு மாநிலப் பட்டியலில் உள்ள பிரிவு, எனவே AYUSH சிகிச்சை கிடைக்கப் பெறுவதனை உறுதி செய்யும் முதன்மைப் பொறுப்பு மாநில / ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களிடமே உள்ளது.


AYUSHMAN BHARAT
PRADHAN MANTRI JAN AROGYA YOJANA
PM-JAY
Informing the beneficiary
Family Letter
Identified families
Common Service Centre
30,000
14555
Call Centre
Hospitals
More than 10,000
Website and App
Panchayat

## INS அரிகாட்


India to get new missile-armed submarine
Nuclear-capable submarine-launched missiles
K-4 (in development)
Range: 3,500km
K-15 Sagarika
Range: 750km
INDIA
ARIHANT-CLASS SPECIFICATIONS
Length 110 metres
Displacement 6,000 tonnes
Crew 95
Surface speed 15 knots (28km/h)
Submerged speed 24 knots (44km/h)
INS ARIGHAT: Indian Navy's second indigenously-designed and built Arihant-class submarine
Six 533mm torpedo tubes
Propulsion
80MW nuclear pressurised water reactor drives steam turbine
Vertical launch tubes
Can carry 12 K-15 (three per tube) or four K-4 missiles
INDIA'S SUBMARINE FLEET
Nuclear-powered ballistic missile submarines (SSBN): 2
INS Arihant
INS Arighat
Nuclear attack submarine (SSN): 1
INS Chakra
Diesel-electric submarines (SSK): 14
Kalvari-class (2)
Shishumar-class (4)
Sindhughosh-class (8)


- இந்திய அரசானது உத்திசார் எதிர்ப்பிற்காக, அணு ஆயுத ஏவுகணைகளுடன் கூடிய அணுசக்தியில் இயங்கும் தனது இரண்டாவது நீர்மூழ்கிக் கப்பலைக் கடற்படையில் இணைக்க உள்ளது.
- 6,000 டன் எடை கொண்ட INS அரிகாட் கப்பலானது, விசாகப் பட்டினத்தில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் (SBC) கட்டமைக்கப் பட்டது.
- SSBN (அணு ஆயுதம் கொண்ட உந்துவிசை ஏவுகணைகளைக் கொண்ட அணுசக்தியால் இயக்கப்படும் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கான கடற்படை சொற்கூறு) மிகவும் விரைவில் இயக்கப் படும்.
- அந்தக் கப்பல் ஆனது 2018 ஆம் ஆண்டில் முழுமையாக செயல்பட தொடங்கிய அதன் இணைக் கப்பலான INS அரிஹந்துடன் இணைந்து செயல்பட உள்ளது.
- அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக டீசல் எரிபொருளில் இயங்கும் 18 மின்சார நீர்மூழ்கிக் கப்பல்கள், நான்கு SSBN மற்றும் ஆறு SSN ஆகியவற்றை இந்தப் படையில் இணைப்பதை இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.

## மின் துறைக்கான இயங்கலை தளங்கள்

- மத்திய மின்துறை அமைச்சகம் ஆனது மின் துறையின் செயல்திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் பயன்திறனை மேம்படுத்துவதற்காக மூன்று இயங்கலை தளங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தளங்கள் திட்டங்களின் இயங்கலை சார்ந்தக் கண்காணிப்பிற்காக அந்தந்தத் திட்டங்களின் பெயர்களை கொண்டே அவை பெயரிடப் பட்டுள்ளன -
    - திட்டங்களின் இயங்கலை கண்காணிப்பிற்கான இணைய தளம் - அனல் மின் ஆற்றல்
    - மின் துறைக்கான பேரிடர் நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்பு (DRIPS) மற்றும்
    - ஜல் வித்யுத் DPR.



## ஜன் போஷன் கேந்திரா





- மத்திய அரசானது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 60 நியாய விலைக் கடைகளை 'ஜன் போஷன் கேந்திரா' என மறுபெயரிடுவதற்கான சோதனை முறைத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளதால், ரேஷன் கடைகளுக்கு விரைவில் புதிய பெயர் சூட்டப்படும்.
- குஜராத், ராஜஸ்தான், தெலுங்கானா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைகளானது ரேஷன் வியாபாரிகளின் வருமான அளவை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைக்குத் தீர்வை வழங்கும்.
- இந்தக் கடைகள் ஆனது, நுகர்வோருக்கு பல்வேறு வகையான ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களை வழங்குவதோடு, நியாய விலைக் கடை வியாபாரிகளுக்கு கூடுதல் வருமான மூலத்தினையும் வழங்கும்.
- அவை 50% பொருட்களை ஊட்டச்சத்து மிக்க பொருட்கள் சேமித்து வைப்பதற்கும், மீதமுள்ளவற்றை மற்ற வீட்டுப் பொருட்கள் பிரிவின் கீழ் சேமித்து வைப்பதற்கும் விதிமுறைகள் உள்ளன.
- மத்திய அரசானது நியாய விலைக் கடைகள் சஹாய் செயலி, மேரா ரேஷன் செயலி 2.0, தர மேலாண்மை அமைப்பு, தர வழிக்காட்டுதல்களுக்கான கையேடு ஆகிய கருவிகள் சிலவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா முழுவதும் சுமார் 5.38 லட்சம் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன.

## ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம்

- அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு (UPS) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இத்திட்டத்திற்குத் தகுதி பெற, அரசுப் பணியாளர்கள் குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் பணி புரிந்திருக்க வேண்டும்.
- இத்திட்டத்தின் மூலம் 23 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள் பயனடைவார்கள்.

- ஒய்வூதியம் பெறுவோர், 25 ஆண்டுகளுக்கான குறைந்தபட்ச தகுதிச் சேவைக்காக, கடந்த 12 மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதத்தினை தங்கள் ஓய்வூதியமாகப் பெறுவார்கள்.
- அரசு தனது பங்களிப்பினை 14 சதவீதத்தில் இருந்து 18.5 சதவீதமாக உயர்த்தி உள்ளது.
- இந்தத் திட்டத்திற்கான பணியாளர்களின் பங்களிப்பு ஆனது அதிகரிக்காது.
- ஒய்வூதியம் பெறுபவர் துரதிர்ஷ்டவசமாக மரணித்தால், அந்த ஊழியர் தாம் பெற்ற ஓய்வூதியத்தில் 60 சதவீதத்தினை அவரது குடும்பம் பெறும்.
- வயது முதிர்வு ஓய்விற்குப் பிறகு குறைந்தபட்சமாக 10 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு ஓய்வூதியமாக மாதம் 10,000 ரூபாய் வழங்கப்படும்.
- பணிக்கொடையோடு கூடுதலாக ஓய்வூதியத்தில் மொத்த தொகையும் வழங்கப்படும்.
- தற்போதுள்ள NPS/VRS உடன் தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) மற்றும் எதிர்கால ஊழியர்களுக்கு ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் (UPS) சேர விருப்பத் தெரிவு வழங்கப் படும்.




## போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு பிரதமர் பயணம்

- இந்தியப் பிரதமர் அவர்கள், போலந்து நாட்டிற்கு விஜயம் செய்தார் என்ற நிலையில் கடந்த 45 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் அவர்கள் ஒருவர் அந்த நாட்டிற்கு மேற் கொண்ட முதல் பயணம் ஆகும்.
- மொரார்ஜி தேசாய் அவர்கள், 1979 ஆம் ஆண்டில் போலந்து நாட்டிற்குப் பயணம் மேற் கொண்ட கடைசி பிரதமர் ஆவார்.
- 2024 ஆம் ஆண்டு ஆனது, இந்தியா - போலந்து அரசு முறை உறவுகளின் 70 ஆண்டு நிறைவுகளைக் குறிக்கிறது.
- மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிராந்தியத்தில் போலந்து நாடானது இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரராக உள்ளது.

- போலந்து நாட்டில் இந்திய நிறுவனங்களின் முதலீடுகள் ஆனது, சுமார் 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் போலந்து நாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் ஆனது சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.
- பிரதமர் அவர்கள் போலந்து நாட்டில் இருந்து உக்ரைனுக்கு "Rail Force One" இரயிலில் 10 மணி நேர பயணத்தினை மேற்கொண்டார்.
- 1991 ஆம் ஆண்டில் உக்ரைன் சுதந்திரம் பெற்ற பிறகு அந்நாட்டிற்குப் பயணம் மேற் கொண்ட முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த இரயிலில், இதற்கு முன்னதாக 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் போலந்தில் இருந்து கீவ் வரை பயணித்தார்.





## BHISHM பெட்டகங்கள்

- இந்தியப் பிரதமர் அவர்கள் உக்ரைன் அரசாங்கத்திற்கு நான்கு BHISHM (சஹ்யோக் ஹிதா & மைத்ரி ஆகியவற்றிற்கான பாரத் சுகாதார முன்னெடுப்பு) பெட்டகங்களை வழங்கினார்.
- BHISHM பெட்டகங்கள் என்பது அவசரகால சூழ்நிலைகளில் முதல் நிலை மருத்துவ சேவையினை வழங்குவதற்காக என்று வடிவமைக்கப்பட்ட குறைந்த இடமே தேவைப் படுகின்ற, சிறிய மருத்துவ அலகுகளாகும்.
- ஒவ்வொரு BHISHM பெட்டகங்களுக்குள்ளும் அனைத்து மருத்துவ உபகரண வசதிகளும் அடங்கும்.
- இந்தப் பெட்டகங்கள் உடனடி மருத்துவ சேவைகளுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களைக் கொண்டுள்ளன.
- காயங்கள், இரத்தப் போக்கு, தீக்காயங்கள் மற்றும் எலும்பு முறிவுகள் போன்ற காயங்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான பொருட்கள் இதில் அடங்கும்.
- இந்தப் பெட்டகங்கள் ஓர் அடிப்படை அறுவை சிகிச்சை அறைக்கு (OR) தேவையான அறுவை சிகிச்சை கருவிகளையும் கொண்டுள்ளது.

- இது ஒரு நாளைக்கு சுமார் 10 முதல் 15 அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது.
- ஒரு பெட்டகத்தில் பல்வேறு மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதோடு இதில் சுமார் 200 பேருக்கு சிகிச்சையளிக்கவும் முடியும்.




## ஜல் ஜீவன் திட்டம் 5 ஆண்டுகள்




- ஜல் ஜீவன் திட்டம் (JJM) ஆனது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.

- இது 2024 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பங்களுக்கும் குழாய் நீர் சேவையினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இது தொடங்கப்பட்ட நேரத்தில், சுமார் 3.23 கோடி (17%) கிராமப்புறக் குடும்பங்களுக்கு மட்டுமே குழாய் நீர் இணைப்புகள் இருந்தன.
- 2024 ஆம் ஆண்டிற்குள் மேலும் 16 கோடி குடும்பங்களுக்குக் குழாய் நீர் வசதியினை வழங்குவதன் மூலம் இந்த இடைவெளியைக் குறைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதி வரையில், கூடுதலாக 11.85 கோடி கிராமப்புறக் குடும்பங்களுக்கு வெற்றிகரமாக குழாய் நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த கிராமப்புறக் குடும்பங்களில் 78.11% அதாவது 15.07 கோடிக்கும் அதிகமான குடும்பங்களுக்கு இது குடிநீர் இணைப்பினைக் கொண்டு வருகிறது.
- 100 சதவிகித குழாய் வழி நீர் இணைப்பினைக் கொண்டுள்ள மாநிலங்கள் – கோவா, தெலங்கானா மற்றும் அரியானா
- 100 சதவிகித குழாய் வழி நீர் இணைப்பினைக் கொண்டுள்ள ஒன்றியப் பிரதேசங்கள் – புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டையூ & டாமன்.

## தீன் தயாள் SPARSH யோஜனா

- தபால் துறையானது தீன் தயாள் ஸ்பர்ஷ் யோஜனா என்ற தபால்தலைச் சேகரிப்பு உதவித் தொகை திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மாணவர்களிடையே தபால்தலை சேகரிப்பு தொடர்பான ஆர்வத்தினை உருவாக்குவதற்காக அஞ்சல் தலைகள் குறித்த திறனறிதல் மற்றும் ஆராய்ச்சியை ஒரு பொழுதுபோக்காக மேற்கொள்வதற்கு ஊக்குவிக்க உதவும்.
- இது கல்வி சார்ந்தப் பதிவுகள் சிறந்து விளங்கும் மற்றும் தபால்தலை சேகரிப்பை ஒரு பொழுதுபோக்காகவும் கொண்டுள்ள 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகையை வழங்குகிறது.
- இதில் மாதாந்திர உதவித் தொகையானது 500 ரூபாய் வீதம் ஆண்டிற்கு 6000 ரூபாயாக வழங்கப் படும் என்பதோடு இது காலாண்டு அடிப்படையில் செலுத்தப்படும்.

## கர்மயோகி திட்டத்தின் கீழ் புதிய இணையதளங்கள்

- கர்மயோகி திட்டத்தின் கீழ் அம்ரித் கியான் கோஷ் மற்றும் ஊழியர் மேம்பாட்டு இணைய தளங்கள் ஆகியவை சமீபத்தில் தொடங்கப்பட்டன.
- அம்ரித் கியான் கோஷ் இணைய தளமானது, இந்தியாவை மையமாகக் கொண்ட நிகழாய்வுகளுடன் கூடிய பகிரப்பட்ட தகவல் வங்கியை கொண்டுள்ளது.
- ஊழியர் மேம்பாட்டு இணைய தளமானது, அரசு ஊழியர்களுக்கான தகவல் வழங்கலை மேம்படுத்துவதற்காக பயிற்சியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.





## இந்தியா-நேபாளம் இடையிலான மின் வர்த்தகம்

- நேபாளத்திற்கு கூடுதலாக 251 மெகாவாட் மின்சாரத்தினை ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா அனுமதித்துள்ளது.
- நேபாளத்தில் உள்ள 12 நீர்மின் நிலையங்களில் இருந்து கூடுதலாக 251 மெகாவாட் மின்சாரம் ஏற்றுமதி செய்வதற்கு, எல்லை கடந்த வர்த்தகத்திற்காக நியமிக்கப்பட்ட இந்திய ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம், நேபாளம் 28 நீர்மின் நிலையங்களில் இருந்து 941 மெகாவாட் நீர் மின் ஆற்றலை ஏற்றுமதி செய்யும்.
- முன்னதாக, நேபாளம் 16 நீர்மின் நிலையங்களில் இருந்து 690 மெகாவாட் மின் ஆற்றலை ஏற்றுமதி செய்து வந்தது.
- நேபாள நாட்டு அரசானது ஏற்கனவே கடந்த நிதியாண்டில் நிகர மின்சார ஏற்றுமதி செய்யும் நாடாகவும், நிகர வருவாய் ஈட்டும் நாடாகவும் மாறியுள்ளது.
- இந்தியாவும் நேபாளமும் அடுத்த 10 ஆண்டுகளில் நேபாளத்தில் இருந்து இந்தியாவிற்கு 10,000 மெகாவாட் வரை மின்சாரம் விற்பனை செய்வதற்காகத் திட்டமிடப்பட்ட நீண்ட கால மின் வர்த்தகத்திற்கான ஒப்பந்தத்தை எட்டியுள்ளன.
- நேபாள நாடானது சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரக்காண்ட் ஆகிய ஐந்து இந்திய மாநிலங்களுடன் 1,850 கிலோ மீட்டருக்கும் மேலான எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.




## தொடர் உமிழ்வு கண்காணிப்பு

- ❖ தொடர் உமிழ்வு கண்காணிப்பு அமைப்பு (CEMS) என்பது இந்தியா முழுவதும் உள்ள தொழில்துறைகளுக்கு அவசியமான, மிகவும் துல்லியமான மாசு கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான ஒரு முக்கியமான கருவியாகும்.
- ❖ 2014 ஆம் ஆண்டில், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் மிகவும் பொதுவான மாசுக் கட்டுப்பாட்டு மையங்களின் 17 பிரிவுகளில் CEMS நிறுவப் படுவதைக் கட்டாயமாக்கியுள்ளது.
- ❖ சமீபத்தில் CSIR-NPLஆனது, NPLI CS (தேசிய இயற்பியல் ஆய்வகம்) மற்றும் CEMS அமைப்பிற்கான சோதனை வசதிகளுடன் தொடர்புடைய ஒரு சான்றிதழ் அளிப்பு திட்டத்தினை உருவாக்கியுள்ளது.
- ❖ CEMS ஆனது TUV/MECERT மற்றும் அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமையினால் சான்றளிக்கப்பட்டுள்ளது.
- ❖ CSIR-NPL சான்றிதழ் செயல்முறையானது EN-15267 என்ற ஐரோப்பியத் தரநிலைகளை (பிரிவு 1, 2 மற்றும் 3) ஒன்றியுள்ளது.



# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கியப் பேரரசு - இந்தியா புதிய தொழில்நுட்பப் பாதுகாப்பு முன்னெடுப்பு

- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் இணைந்து தொலைத்தொடர்பு பாதுகாப்பை நன்கு உறுதி செய்யும் ஒரு நோக்கில் தொழில்நுட்பப் பாதுகாப்பு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளன.
- முக்கியக் கனிமங்கள், குறைக்கடத்திகள், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் (துளிமம்) கணினியியல் மற்றும் சுகாதாரம் சார்ந்த தொழில்நுட்பம் போன்ற முக்கிய துறைகளிலும் இது ஒத்துழைப்பினை மேற்கொள்ள வழி செய்கிறது.
- இந்த முன்னெடுப்பானது, 2030 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் குறிப்பிடப் பட்டு உள்ள ஒத்துழைப்புச் செயல்பாட்டு நிரலின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதோடு, இது முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் அதிக கவனம் செலுத்தும் வகையிலான ஒத்துழைப்பைக் கொண்டு வரும்.
- இது தவிர, இந்திய அரசானது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபையுடன் முக்கிய மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பம் (iCET) மீதான முன்னெடுப்பினையும் மேற்கொண்டுள்ளது.

## IAEA - UNOSSC முன்னெடுப்புகள்




- சர்வதேச அணுசக்தி முகமை (IAEA) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பிற்கான அலுவலகம் (UNOSSC) ஆகியவை ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக புதிய தொடர் கூட்டு நடவடிக்கைகளைத் தொடங்க உள்ளது.
- சமீபத்தில் நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு உயர்மட்ட அரசியல் மன்றத்தின் போது அந்த இரு அமைப்புகளுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

- இந்த ஒப்பந்தத்தின் மூலம், IAEA ஆனது, அடுத்த ஆண்டில் அதன் 'தகவல் முதல் கொள்கை வகுத்தல் வரையிலான வலையமைப்பு' மற்றும் 'தீர்வு காணல் மையம்' உள்ளிட்ட புதிய UNOSSC திட்டங்களில் ஒத்துழைப்பினை வழங்கும்.
- இந்த ஒப்பந்தம் சர்வதேச அணுசக்தி முகமையை (IAEA) தெற்கு-தெற்கு நாடுகளின் சர்வதேசச் சமூகத்துடன் இணைக்கும்.

## பருவநிலை மாற்றம் தொடர்பான முதல் சட்டம் – தென்னாப்பிரிக்கா

- தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் இராமபோசா மிகப்பெரியப் பருவநிலை மாற்றச் சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.
- இது பெரிய அளவில் உமிழ்வினை வெளியிடும் அமைப்புகளுக்கு வரம்புகளை நிர்ணயிக்கும் என்பதோடு ஒவ்வொரு சிறுநகரமும் பெருநகரமும் ஒரு மாற்றுத் தொழில் நுட்ப ஏற்புத் திட்டத்தினை வெளியிட வேண்டும் என்றும் நிர்ணயிக்க உள்ளது.
- தென்னாப்பிரிக்கா நாடானது, பாரிசு பருவநிலை ஒப்பந்தத்தின் கீழான அதன் உமிழ்வு குறைப்பு உறுதிப்பாடுகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டு இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தென்னாப்பிரிக்காவானது உலகின் மிக அதிக கார்பன் உமிழ்வு மிகுந்த நாடாகவும், அதிகளவுப் பசுமை இல்ல வாயுக்களை உமிழும் முதல் 15 நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது.

## ஜப்பானின் சாடோ தங்கச் சுரங்கம் - யுனெஸ்கோ அந்தஸ்து

- யுனெஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரியக் குழுவானது ஜப்பானின் சர்ச்சைக்குரிய சாடோ தங்கச் சுரங்கத்தினைக் கலாச்சாரப் பாரம்பரியத் தளமாகப் பதிவு செய்ய முடிவு செய்துள்ளது.
- இதற்காக, இரண்டாம் உலகப் போரின் போது கொரிய நாட்டின் தொழிலாளர்களைத் துஷ்பிரயோகம் செய்த அதன் கொடூரமான வரலாற்றில் ஒன்றாக அதனைச் சேர்க்க ஜப்பான் ஒப்புக் கொண்டுள்ளது.
- ஜப்பானின் வடக்குப் பகுதியில் உள்ள நைகாட்டா கடற்கரையில் உள்ள ஒரு தீவில் அமைந்துள்ள இந்த சுரங்கம் சுமார் 400 ஆண்டுகள் இயங்கியது.
- இது 1989 ஆம் ஆண்டில் மூடப்படுவதற்கு முன்னர் உலகின் மிகப்பெரியதொரு தங்க உற்பத்தியாளராக விளங்கியது.
- 1910-1945 காலக் கட்டத்தில் கொரியத் தீபகற்பத்தில் இருந்த காலனித்துவத்தின் போது ஜப்பானுக்குக் கொண்டு வரப்பட்ட சில கொரியர்கள் இந்தச் சுரங்கத்தில் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தப் பட்டதாக சியோல் கூறியுள்ளது.
- முன்னதாக, மற்றொரு சர்ச்சைக்குரிய ஜப்பானியத் தளத்திற்கு 2015 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்றது.
- நாகசாகி மாகாணத்தில் உள்ள குங்கன்ஜிமா அல்லது பேட்டில்சிப் தீவு ஆனது, ஜப்பானின் மெய்ஜி தொழில் புரட்சிக்கு முக்கியமானதாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு முன்னாள் நிலக்கரிச் சுரங்க தளமாகும்.




## டெல் உம் அமரின் மடாலயம்


- உலகப் பாரம்பரியக் குழுவானது (WHC) UNESCO அமைப்பின் இரண்டு உலகப் பாரம்பரியத் தளப் பட்டியலிலும் டெல் உம் அமர் எனப்படுகின்ற ஒரு பாலஸ்தீனியத் தளத்தினைச் சேர்க்க முடிவு செய்துள்ளது.
- 'புனித ஹிலாரியன் மடாலயம்' என்றும் அழைக்கப்படுகின்ற இது காசா பகுதியில் அமைந்துள்ளது.
- இந்தப் பண்டைய கிறிஸ்தவ மடாலயம் ஆனது, நான்காம் நூற்றாண்டில் ஹிலாரியன் தி கிரேட் (291-371 கி.பி.) என்பவரால் நிறுவப்பட்டது.
- அவர் பாலஸ்தீனியத் துறவறத்தின் தந்தை என்று சிலரால் கருதப்படுகிறார்.
- இந்தத் தலத்தின் இன்றைய தொல்லியல் எச்சங்கள் ஹிலாரியன் காலத்திலிருந்து உமையாத் காலம் வரையில் சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கும் மேலான காலக் கட்டங்களில் பரவியுள்ளது.
- UNICEF அமைப்பானது இதனை "புனித பூமியின் முதல் துறவறச் சமூகம்" மற்றும் "சமய, கலாச்சார மற்றும் பொருளாதாரப் பரிமாற்றத்தின் மையம்" என்று குறிப்பிடுகிறது.
- ஏழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்குப் பிறகு புறக்கணிக்கப்பட்டிருந்த இந்த மடாலயம் 1999 ஆம் ஆண்டில் உள்நாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டது.

## ஜபிலுகா யுரேனியம் தளம் – ஆஸ்திரேலியா

- கக்காடு தேசியப் பூங்காவினால் சூழப்பட்ட ஒரு பழங்குடியினர் வாழ் தளத்தில் சுரங்கப் பணிகளைத் தடை செய்ய ஆஸ்திரேலிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
- இது உலகிலேயே மிகப்பெரிய உயர்தர யுரேனிய இருப்புகளில் ஒன்றாகும்.
- 1970 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் யுரேனியம் படிவு அங்கு கண்டுபிடிக்கப்பட்டது.
- ஜபிலுகா தளம் ஆனது மிரார் மக்களுக்கும் சுரங்க நிறுவனங்களுக்கும் இடையே கடுமையான சட்ட ரீதியான மோதல்களின் மையமாக மாறியது.




## தென் சீனக் கடலில் இரண்டாவது தாமஸ் ஷோல்




- தென் சீனக் கடலில் ஏற்பட்டுள்ள பெரும் பதற்றத்தைத் தணிப்பதற்காக சீனாவும் பிலிப்பைன்ஸும் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.
- இரண்டாம் தாமஸ் ஷோல் எனுமிடத்தில் பிலிப்பைன்ஸ் படைகளை நிலை நிறுத்தச் செய்வதற்கு இது தற்காலிக விதிமுறைகளை வகுத்துள்ளது.
- இந்த ஷோல் பகுதியானது, மேற்கு பிலிப்பைன்ஸ் தீவான பலவனிலிருந்து சுமார் 200 கிலோமீட்டர் (124 மைல்) தொலைவிலும், சீனாவின் தெற்கு ஹைனான் தீவில் இருந்து 1,000 கிலோமீட்டர் (620 மைல்) தொலைவிலும் உள்ளது.

## மஞ்சள் கடல் - போஹாய் வளைகுடா


- மஞ்சள் கடல்-போஹாய் வளைகுடாவை ஒட்டி காணப்படும் சீனாவின் வலசை போதல் பறவைகள் சரணாலயங்கள் (கட்டம் II) ஆனது, யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இது ஹெபே, ஷான்டாங் மற்றும் லியோனிங் மற்றும் பிற மாகாணங்கள் மற்றும் நகரங்களில் உள்ள வளங்காப்பு மண்டலங்களில் பரவி அமைந்துள்ளது.
- போஹாய் வளைகுடா என்பது வடகிழக்கு மற்றும் வட சீனாவின் கடற்கரையில் உள்ள மஞ்சள் கடலின் உள் பகுதியில் உள்ள வளைகுடா ஆகும்.
- போஹாய் வளைகுடா லியாடோங் தீபகற்பம் (வடகிழக்கு) மற்றும் ஷான்டாங் தீப கற்பம் (தெற்கு) ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது.
- முற்காலத்தில் இது மிளகாய் வளைகுடா அல்லது பேச்சிலி வளைகுடா என்று அழைக்கப் பட்டது.
- மஞ்சள் கடல் ஆனது மேற்கு பசிபிக் பெருங்கடலின் விளிம்பில் அமைந்துள்ள ஒரு கடல் ஆகும்.




## mRNA தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி H5N1 தடுப்பூசிகள்

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது அதிநவீன தூது RNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மனிதப் பறவைக் காய்ச்சல் நோய்த்தொற்றுகளுக்கான தடுப்பூசிகளை உருவாக்குவதற்கான புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது.
- அர்ஜென்டினாவின் சினெர்ஜியம் பயோடெக் நிறுவனமானது இந்த முன்னெடுப்பினை மேற்கொள்ள உள்ளது என்பதோடு அது ஏற்கனவே H5N1 தடுப்பூசிகளை உருவாக்கத் தொடங்கி யுள்ளது.
- பறவைக் காய்ச்சல் H5N1 ஆனது முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் தோன்றியது, ஆனால் 2020 ஆம் ஆண்டு முதல் பறவைகள் மத்தியில் பாதிப்புகள் அதிக வேகமாகப் பரவியதுடன் பாலூட்டிகள் மற்றும் சில மனிதர்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

- இந்த வைரஸ் எதிர்காலத்தில் ஒரு பெருந்தொற்றினை ஏற்படுத்தும் என்ற அச்சத்தைத் தூண்டியுள்ளது.




## MERCOSUR அமைப்பில் பொலிவியா





- பொலிவிய நாடானது சமீபத்தில் MERCOSUR அமைப்பில் முழு உறுப்பினராக ஆனது.
- தெற்கத்தியப் பொதுச் சந்தை அமைப்பானது பொதுவாக ஸ்பானிய மொழியில் MERCOSUR என்றும், போர்த்துகீசிய MERCOSUL என்றும் அறியப்படுகிறது.
- இந்த தென் அமெரிக்க வர்த்தக அமைப்பானது 1991 ஆம் ஆண்டு அசுன்சியன் உடன்படிக்கை மற்றும் 1994 ஆம் ஆண்டு அவுரோ பிரிட்டோ நெறிமுறை ஆகியவற்றால் நிறுவப்பட்டது.

- அர்ஜென்டினா, பிரேசில், பராகுவே மற்றும் உருகுவே ஆகியவை இதன் முழு உறுப்பினர்களாகும்.
- இதில் வெனிசுலா முழு உறுப்பினராக உள்ளது ஆனால் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி உறுப்பினர் அந்தஸ்திலிருந்து இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளது.
- சிலி, கொலம்பியா, ஈக்வடார், கயானா, பெரு மற்றும் சுரினாம் ஆகியவை இதன் இணை உறுப்பினர் ஆக உள்ள நாடுகள் ஆகும்.

## குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம்

- சமீபத்தில் குவாட் (நாற்கர) நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ஆனது டோக்கியோ நகரில் நடைபெற்றது.
- குவாட் நாடுகள் என்பது ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஒரு முறைசாரா அரசுமுறை கூட்டாண்மை ஆகும்.
- உள்ளார்ந்த மற்றும் நெகிழ்திறன் கொண்ட ஒரு சுதந்திரமான, நிலையான மற்றும் வளமான இந்திய-பசிபிக் பகுதியை உருவாக்குவதனை ஆதரிப்பதில் இது உறுதி பூண்டுள்ளது.

## ஒரோபூச்சே காய்ச்சல் காரணமாக பதிவான முதல் மரணம்




- உலகின் ஒரோபூச்சே காய்ச்சலால் ஏற்பட்ட முதல் உயிரிழப்பு பிரேசிலில் பதிவாகி உள்ளது.
- பாதிக்கப்பட்ட மிட்ஜ்கள் (சிறு ஈக்கள்) மற்றும் கொசுக்கள் கடித்தால் இந்த வைரஸ் பரவுகிறது.
- ஒரோபூச்சே காய்ச்சலை ஏற்படுத்தும் ஆர்த்தோ புன்யாவைரஸ் ஒரோபூச்சீன்ஸ் எனப் படும் வைரஸ் ஆனது முதன்முதலில் 1960 ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டில் கண்டறியப் பட்டது.

## G20 நாடுகளின் சர்வதேச வரி சார் கூட்டுறவு


- G20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் சந்திப்பானது பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்றது.
- இது சர்வதேச வரி சார் கூட்டுறவிற்கான தனித்துவமான வரிப் பிரகடனத்தை வெளியிட்டது.
- ஏற்றத்தாழ்வுகளைச் சமாளிப்பதற்காகவும், நியாயமான மற்றும் முற்போக்கான வரிவிதிப்பு முறைகளை மேம்படுத்துவதற்காகவும் பல G20 உறுப்பினர் நாடுகளால் மேற்கொள்ளப்படும் உள்நாட்டு வரிச் சீர்திருத்தங்களை இந்தப் பிரகடனம் நன்கு பாராட்டுகிறது.
- சக ஆதரவு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் உள்நாட்டுச் சீர்திருத்தங்களை மிகவும் வலுப்படுத்துவதற்கான உறுதியேற்பும் இதில் அடங்கும்.
- இணைய சங்கேதப் பணம் சார் சொத்துக்கள் குறித்த அறிக்கையிடல் கட்டமைப்பினை (CARF) விரைவாகச் செயல்படுத்துவதற்கும், அதிகார வரம்புகள் விதிப்பின் மூலம் பொதுவான அறிக்கையிடல் தரநிலையில் (CRS) ஒரு திருத்தம் செய்வதற்கும் இந்தப் பிரகடனம் அழைப்பு விடுக்கிறது.

## WBG உத்தரவாத தளம்

- உலக வங்கி குழு உத்தரவாதத் தளம் ஆனது பலதரப்பு முதலீட்டு உத்தரவாத முகமையில் உலக வங்கி குழும நிறுவனங்களில் இருந்து அனைத்து உத்தரவாதக் கருவிகளையும் நிபுணர்களையும் ஒருங்கிணைக்கிறது.
- இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான செயற்கருவியைத் தேர்ந்தெடுக்க உதவும் வகையில் உத்தரவாதம் சார்ந்த தீர்வுகளின் எளிமைப்படுத்தப் பட்ட மற்றும் விரிவான தொகுப்பினை வழங்குகிறது.
- இந்த இயங்குதளமானது செயல்முறைகளை நெறிப்படுத்துவதோடு, நிராகரிப்புகளை நீக்குகிறது, மேலும் வளர்ந்து வரும் நாடுகளில் முதலீடுகளில் உள்ள அபாயங்களை நீக்குவதன் மூலம் அதிக அணுகலையும் வழங்குகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் WBG குழுவின் வருடாந்திர உத்தரவாத வழங்கீட்டினை 20 பில்லியன் டாலராக உயர்த்துவதே இதன் இலக்காகும்.



## இரட்டை கோபுர சூரிய சக்தி அனல்மின் நிலையம் - சீனா





- ❖ உலகின் முதல் இரட்டைக் கோபுர சூரிய சக்தி அனல் மின் நிலையத்தை சீனா தொடங்கியுள்ளது.
- ❖ இது ஆற்றல் செயல்திறனை கணிசமாக மேம்படுத்துவதற்காக வேண்டி புதுமையான வடிவமைப்பைப் பயன்படுத்துகிறது.
- ❖ இந்த ஆலையானது ஒவ்வொன்றிலும் சூரிய ஒளியைக் கோபுரங்களின் மீது ஒருங்கே செலுத்துவதற்காக ஒன்றுடன் ஒன்று இடையீடும் வகையில் அமைந்த சுமார் 30,000 கண்ணாடிகளால் சூழப்பட்டுள்ள சுமார் 200 மீட்டர் உயரம் கொண்ட இரண்டு கோபுரங்களைக் கொண்டுள்ளது.
- ❖ இடையீடு பகுதியில் உள்ள கண்ணாடிகள் இரு கோபுரங்களாலும் மாற்றி மாற்றி பயன்படுத்தப் படும்.
- ❖ ஒருங்கே சேர்ந்த சூரிய ஒளியானது கோபுரங்களுக்குள் உள்ள தண்ணீரைச் சூடாக்கி, மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக விசையாழிகளை இயக்குவதற்கு நீராவியை உருவாக்குகிறது.

## ஆப்பிரிக்கா – குரங்குக்காய்ச்சல் பெருந்தொற்று


- ❖ காங்கோ ஜனநாயகக் குடியரசில் குரங்குக்காய்ச்சல் (mpox) பரவத் தொடங்கியது, ஆனால் தற்போது அது புருண்டி, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, ருவாண்டா மற்றும் தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட ஒன்பது ஆப்பிரிக்க நாடுகளிலும் பரவியுள்ளது.
- ❖ குரங்குக் காய்ச்சல் பெருந்தொற்றானது கடைசியாக 2022-23 ஆம் ஆண்டில் தோன்றி, பின்னர் அதன் பரவல் தீவிரமடைந்துள்ளது.
- ❖ இந்த நோய்த்தொற்று ஆனது 1980 ஆம் ஆண்டு திறம் மிக்க வகையில் ஒழிக்கப்பட்ட பெரியம்மை பாதிப்பினைப் போன்றதாகும்.
- ❖ ஆனால் மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் mpox பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

- வரலாற்று ரீதியாக, 1970 ஆம் ஆண்டில் காங்கோ ஜனநாயகக் குடியரசில் முதல் முறையாக மனிதனுக்கு mpox பாதிப்பு இருப்பதாக பதிவு செய்யப்பட்டது.
- Mpox என்பது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு விலங்குவழி தொற்று நோயாகும்.




## மாபெரும் நிலநடுக்க முன்னெச்சரிக்கை

- தெற்கு ஜப்பானில் 7.1 ரிக்டர் அளவிலான ஒரு நில நடுக்கம் ஏற்பட்டதையடுத்து, அந்த நாட்டின் வானிலை ஆய்வு நிறுவனம் ஆண்டு அதன் முதலாவது "மாபெரும் நிலநடுக்க முன்னெச்சரிக்கையினை" வெளியிட்டுள்ளது.
- நாங்காய் அகழிப் பகுதியில் இயல்பை விட வலுவான நில அதிர்வு மற்றும் பெரிய அளவிலான சுனாமி அலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம் உள்ளதாக எச்சரிக்கை கூறியது.
- நாங்காய் அகழி மண்டலம் ஆனது, ஜப்பானின் தென்மேற்கு பசிபிக் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள 900 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கண்டத் தட்டு மூழ்கு நிலைப் பகுதியாகும்.
- இந்த அகழியானது 100 முதல் 150 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரிய நிலநடுக்கங்களை உருவாக்கியுள்ளது.
- இந்த நிலநடுக்கம் ஆனது பொதுவாக இணையாகவே வரும் என்பதோடு இதில் இரண்டாவதாக வரும் நில நடுக்கம் ஆனது அடுத்தடுத்த இரண்டு ஆண்டுகளில் பிளவுகளை ஏற்படுத்துகின்றன.
- சமீபத்திய அந்த "இரட்டை" நில நடுக்கங்கள் 1944 மற்றும் 1946 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்தன.
- ஜப்பானின் வானிலை ஆய்வு மையத்தின் இந்த அறிக்கையானது வெறும் எச்சரிக்கை தானே அன்றி முன்னறிவிப்பு அல்ல.




## துர்கானா ஏரி குறித்த ஆய்வு




- 50 ஆண்டுகளில் முதல் முறையாக துர்கானா ஏரியின் விரிவான ஆய்வு ஆனது நடத்தப் பட்டுள்ளது.
- இது கென்யாவின் தொலைதூர வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- துர்கானா ஏரி ஆப்பிரிக்காவின் நான்காவது பெரிய ஏரியாகவும், உலகின் மிகப்பெரிய நிரந்தரப் பாலைவன ஏரியாகவும் உள்ளது.

- இந்த யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமானது அதன் தனித்துவமான பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்காகப் புகழ்பெற்றது.
- ஒமோ ஆற்றில் இருந்து வரும் பருவகால வெள்ளம் ஆனது, அதன் நீர் வரத்தினை விட 90 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
- இந்த ஏரியில் 12 உள்நாட்டு வகைகள் உட்பட 79 மீன் இனங்கள் உள்ளன என்பதோடு இங்கு நைல் முதலைகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.
- கடைசியாக 1974 ஆம் ஆண்டில் ஹாப்சன் என்பவரால் ஏரியின் பரவலான நீரியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஐக்கிய நாடுகள் சபையின் இணைய வெளிக் குற்றங்கள் தொடர்பான ஒப்பந்தம்

- கடந்த மூன்று ஆண்டுகளாக பேச்சுவார்த்தையில் இருந்த ஐக்கிய நாடுகள் சபையின் இணைய வெளிக் குற்றங்கள் தொடர்பான உடன்படிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.
- இது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பணமோசடி போன்ற "இணைய வெளிக் குற்றங்களை மிகவும் திறன் மிக்க முறையிலும் மிகவும் தீவிரமாகவும் தடுப்பதையும் அதனை எதிர்த்துப் போராடுவதையும்" நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதன்முறையாக, உலகளவிலான அளவில் இணைய வெளிக் குற்றங்கள் மற்றும் தரவு அணுகலைச் செயல்படுத்தும் சட்டக் கட்டமைப்பை இது முன்மொழிகிறது.
- இணைய வெளிக் குற்றங்களிலிருந்து சமூகத்தைப் பாதுக்காப்பதற்காக வேண்டி இது "உலகளாவிய குற்றவியல் நீதிக் கொள்கையை" நிறுவுகிறது.
- மக்கள் அணுக முடியாத தகவல் மற்றும் தகவல் தொடர்பு அமைப்பை மீறும் செயல் முறையினை சட்டவிரோதமாக்கும் சட்டத்தை அமல்படுத்துமாறு அரசுகளுக்கு இது அழைப்பு விடுக்கிறது.
- எனினும் 40 உறுப்பினர் நாடுகள் இந்த உடன்படிக்கையினை அங்கீகரித்தப் பிறகே இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.



## கூகுள் நிறுவனம் மீதான நம்பிக்கையற்ற தன்மை மீதான தீர்ப்பு





- திறன் பேசி இணைய உலாவிகளில் அதன் தேடுபொறியை இயல்புநிலை விருப்பத் தேர்வாக மாற்றுவதற்கு கூகுள் நிறுவனம் பணம் செலுத்திய செயல் அமெரிக்காவின் நம்பிக்கைக்கு எதிரான தன்மை என்ற சட்டத்தை மீறுகிறது.
- இந்தச் சலுகைக்காக கூகுள் நிறுவனம் பணம் செலுத்துகிறது என்பதோடு மேலும் 2021 ஆம் ஆண்டில் இதற்காக 26 பில்லியன் டாலருக்கும் அதிகமாக அது செலவிட்டுள்ளது.
- பொதுத் தேடல் சேவைகள் மற்றும் பொதுவான தேடல் உரை சார் விளம்பரங்கள் ஆகியவற்றுக்கான சந்தைகளில் கூகுள் ஒரு ஏகபோக அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்று அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சோதனைச் சான்றாகச் செயல்படக்கூடிய அதன் ஊழியர்களின் குறுஞ்செய்திகளைப் பெருமளவு பாதுகாக்கத் தவறியதற்காக கூகுள் நிறுவனத்தையும் அது சாடியுள்ளது.
- இந்தியாவிலும், கூகுள் நிறுவனம் போட்டித்தன்மை எதிர்ப்பு நடைமுறைகளின் மீதான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளது.

## ஐக்கிய நாடுகள் படைப்பிரிவில் ஜெர்மனி



- ஜெர்மனி நாடானது, தென் கொரிய நாட்டில் அமெரிக்கா தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபையின் படைப் பிரிவில் (UNC) இணைந்துள்ளது.
- ஜெர்மனி இக்குழுவில் இணைந்த 18வது நாடாகும்.
- UNC படைப்பிரிவானது, வட கொரியாவுடனான மிகவும் பலப்படுத்தப்பட்ட எல்லையில் காவல்துறைக்கு உதவுவதோடு போர்ச் சூழலின் போது தென் கொரியாவினை பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது.
- தற்போதைய UNC படைப்பிரிவின் உறுப்பினர்களுள், ஆஸ்திரேலியா, பிரிட்டன், துருக்கி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 1950-53 ஆம் ஆண்டு கொரியப் போரின் போது படைப்பிரிவுகளை அனுப்பின அல்லது மருத்துவ உதவியை வழங்கின.
- 1950 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட UNC ஆனது வட கொரியாவுடன் ஒரு தொடர்பாடல் ஊடகமாகப் பணியாற்றும் அதே வேளையில் அமைதியை மீட்டெடுப்பதற்கும், போர் நிறுத்தத்தை அமல்படுத்துவதற்குமான பொறுப்பினையும் கொண்டுள்ளது.
- இந்தப் படைப்பிரிவானது தென் கொரியாவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் படைத் தளபதியால் வழி நடத்தப் படுகிறது.
- இது ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைக்கப்படவில்லை.

## குரங்குக் காய்ச்சல் - சுகாதார அவசரநிலை




- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது குரங்குக்காய்ச்சலை "சர்வதேச அளவில் கவலை கொள்ள வைக்கும் வகையிலான பொது சுகாதார அவசரநிலை" (PHEIC) ஆக அறிவித்துள்ளது.
- குரங்குக்காய்ச்சல் ஆனது ஆர்த்தோபாக்ஸ் வைரஸால் ஏற்படுகிறது.
- 1970 ஆம் ஆண்டில் மனிதர்களில் முதன்முதலில் இந்தப் பாதிப்பு கண்டறியப்பட்டது என்றாலும் அது மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளில் மட்டுமே காணப் பட்டது.

- இந்த ஆண்டு காங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் 11 நாடுகளில் ஆய்வகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட சுமார் 2,100க்கும் மேற்பட்ட நோய்ப் பாதிப்புகள் மற்றும் 13 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- ஆப்பிரிக்காவிற்கு வெளியே வேறு நாடுகளில் குரங்குக்காய்ச்சல் கிளேட் 1 திரிபின் பாதிப்பைப் பதிவு செய்த முதல் நாடு சுவீடன் என்றும் உலக சுகாதார அமைப்பானது தெரிவித்துள்ளது.

## குரோஷியா - கட்டாய இராணுவச் சேவை

- குரோஷியாவானது அடுத்த ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் இரண்டு மாத கட்டாய இராணுவச் சேவையை மீண்டும் அறிமுகப்படுத்த உள்ளது.
- உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஐரோப்பாவில் பதற்ற சூழல் உருவாகியுள்ள நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் நாடு தன்னார்வ அடிப்படையிலான இராணுவச் சேவை முறைக்கு மாறிய போது கட்டாய இராணுவச் சேவை இடைநிறுத்தப்பட்டது.




## ஜெனீவா உடன்படிக்கையின் 75வது ஆண்டு நிறைவு



- 2024 ஆம் ஆண்டானது, 1949 ஆம் ஆண்டின் ஜெனீவா உடன்படிக்கையின் 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.
- ஜெனீவா உடன்படிக்கைகள் என்பது போரின் போது மனிதாபிமானம் சார்ந்த நடவடிக்கைகளுக்கான சட்டத் தரநிலைகளை நிறுவும் சர்வதேச ஒப்பந்தங்களின் ஒரு தொகுப்பாகும்.
- போர்க்களத்தில் காயமடைந்த வீரர்களைப் பாதுகாப்பதற்காக 1864 ஆம் ஆண்டில் முதல் ஜெனீவா ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அதன் நான்கு உடன்படிக்கைகள்:
  - முதல் உடன்படிக்கை: போரின் போது போர்க் களத்தில் காயமடைந்த மற்றும் நோய் வாய்ப்பட்ட வீரர்களைப் பாதுகாக்கிறது.
  - இரண்டாவது உடன்படிக்கை: கடலில் காயமடைந்த, நோய் வாய்ப்பட்ட மற்றும் விபத்துக்குள்ளான கப்பல் படைகளின் இராணுவ வீரர்களுக்குப் பாதுகாப்பை விரிவுபடுத்துகிறது.
  - மூன்றாவது உடன்படிக்கை: போர்க் கைதிகளை முறையாக நடத்துவதில் கவனம் செலுத்துகிறது.
  - 4வது உடன்படிக்கை: ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளவர்கள் உள்ளிட்ட பொதுமக்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தச் செய்வதிலிருந்து நன்கு பாதுகாக்கிறது.
- இந்த நான்கு உடன்படிக்கைகள் ஆனது, 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சர்வதேச மற்றும் சர்வதேசம் சாராத ஆயுத மோதல்களில் பாதுகாப்பை வலுப்படுத்த இரண்டு கூடுதல் நெறிமுறைகள் 1977 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டன.
- செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கத்துடன் சேர்த்து செம்படிகத்தினைக் கூடுதல் சின்னமாக அங்கீகரிப்பதற்கு 2005 ஆம் ஆண்டில் மூன்றாவது நெறிமுறை சேர்க்கப் பட்டது.

## 11 புதிய அணு உலைகள் – சீனா

**Nuclear power generation by country**

| Country | Nuclear generation, 2023 (TWh) | Total generation, 2023 (TWh) | Nuclear % of total generation |
|---|---|---|---|
| United States | 775 | 4,249 | 18.3% |
| China | 435 | 9,462 | 4.6% |
| France | 336 | 514 | 65.3% |
| World total | 2,678 | 29,479 | 9.1% |

- கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கான முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்காக ஐந்து இடங்களில் 11 புதிய அணு உலைகளை நிறுவ சீனா ஒப்புதல் அளித்துள்ளது.

- அனைத்து 11 அலகுகளுக்குமான மொத்த முதலீடு ஆனது குறைந்தது 220 பில்லியன் யுவான் (31 பில்லியன் டாலர்) ஆகும் என்பதோடு இதன் கட்டுமானப் பணிகள் நிறைவடைய சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகும்.
- உலகில் வேறு எந்த நாட்டையும் விட சீனாவில் அதிக அணு உலைகள் கட்டமைக்கப் பட்டு வருகின்றன.
- மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தலா 10 புதிய அணு உலைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மொத்த மின்சாரத் தேவையில் 5 சதவீதத்திற்குச் சமமான மொத்தத் திறனுடன் அந்த நாட்டில் தற்போது 56 அணு உலைகள் இயங்கி வருகின்றன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகின் முன்னணி அணுசக்தி உற்பத்தியாளராக பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவை விஞ்சி சீனா முன்னிலை பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## குர்ஸ்க் பிராந்தியத்தில் நெருக்கடி




- உக்ரேனிய ராணுவமானது ரஷ்யக் கூட்டமைப்பின் குர்ஸ்க் பகுதியில் ஒரு துணிவு மிகு தாக்குதலைத் தொடுத்துள்ளது.
- உக்ரைன் நாடானது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி, தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்காக ஒரு ராணுவ ஆட்சிக் கட்டமைப்பினை நிறுவியது.
- மேற்கு ரஷ்யாவிலும் உக்ரைனின் எல்லையிலும் அமைந்துள்ள இந்த குர்ஸ்க் பகுதியில் சுமார் 1.2 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர்.
- இது குர், டஸ்கர் மற்றும் சேம் நதிகள் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது.
- இது மாஸ்கோவிற்குத் தெற்கே சுமார் 280 மைல் (450 கிலோ மீட்டர்) தொலைவில் உள்ள மேல் மட்ட செம் நதியின் குறுக்கே அமைந்துள்ளது.

## மடெய்ரா காட்டுத்தீ

- போர்த்துகீசியத் தீவான மடெய்ராவின் தெற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயானது 5,000 ஹெக்டேர்களுக்கும் அதிகமான பரப்பளவினைச் சேதப்படுத்தியுள்ளது.
- இது உலகில் எஞ்சியிருக்கும் மிகப்பெரிய லாரல் என்ற மிதவெப்ப மண்டலக் காடுகள் (லாரஸ் நோபிலிஸ்) ஆகும்.
- இது ஐநா யுனெஸ்கோ அமைப்பினால் உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் கருதப் படுகிறது.




## பாதுகாப்பு உபகரண வழங்கீடுகளின் பாதுகாப்பிற்காக இந்தியா அமெரிக்க ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது புதிய பாதுகாப்பு உபகரண வழங்கீடுகளின் பாதுகாப்புச் செயல்முறையில (SOSA) கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது அவசர தேசிய பாதுகாப்பு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கூறுகளை பரஸ்பரம் மாறிக் கொள்வதற்கு ஒரு முன்னுரிமை அளிக்கும்.
- இந்த ஒப்பந்தம், சட்டப் பூர்வமாகப் பிணைக்காவிட்டாலும், இந்திய மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கு இடையேயான முதலீடுகள் மற்றும் கூட்டாண்மைக்கான புதிய வாய்ப்புகளை வழங்கும்.
- இந்தியா மற்றும் அமெரிக்கா பரஸ்பரப் பாதுகாப்பு கொள்முதல் ஒப்பந்தம் (RDP) என்ற மற்றொரு ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ளன.
- இது இந்திய உற்பத்தியாளர்கள் அமெரிக்க பாதுகாப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளைப் பெருமளவில் அதிகரிக்கும்.
- RDP இறுதி செய்யப்பட்டவுடன், பாதுகாப்பு கூட்டு கையகப்படுத்துதல் வழங்கீட்டு ஒழுங்குமுறைக்கு (DFARS) இணங்கும் அந்தஸ்து பெற்ற 26 நாடுகளின் பட்டியலில் இந்தியா இணையும்.
- இந்த நாடுகள் மட்டுமே அமெரிக்க இராணுவ கொள்முதல் உத்தரவுகளுக்கு குறிப்பிடத் தக்க கூறுகள் மற்றும் பாகங்களை வழங்க தகுதி பெற்றுள்ளன.

## உலக மேம்பாட்டு ஒப்பந்தம் 2024





- இந்திய நாடானது மூன்றாவது உலக தெற்கு நாடுகள் உச்சி மாநாட்டினை நடத்தியது.
- 21 நாடுகளின் மாகாண மற்றும் அரசாங்கங்களின் தலைவர்கள் உட்பட 123 நாடுகள் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்றன.
- இந்தியப் பிரதமர் அவர்கள் உலகளாவிய தெற்கு நாடுகளுக்கான மனிதர்களை மையமாகக் கொண்ட "உலகளாவிய மேம்பாட்டு ஒப்பந்தத்தினை" உருவாக்குவதற்கு முன்மொழிந்துள்ளார்.
- இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தின் அடிப்படையில் வர்த்தகம், தொழில் நுட்பங்களைப் பகிர்ந்துகொள்வது மற்றும் சலுகை சார் நிதியுதவி ஆகியவற்றை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு சார்ந்த நெருக்கடிகள் மற்றும் பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் போன்ற சவால்களை எதிர்கொள்வதில் உலகின் தெற்கு நாடுகள் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினாலும், வளர்ந்து வரும் நாடுகளின் முன்னுரிமைகளுக்கு ஏற்ப இந்த 'ஒப்பந்தம்' இருக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## எண்ணிம வழியிலான பணப் பரிமாற்றங்கள் 2024

- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி அன்று நிலவரப் படி, நாடு முழுவதும் எண்ணிம வழியிலான பணப் பரிமாற்றங்கள் ஆண்டிற்கு 12.6 சதவீதம் அதிகரித்துள்ளன.
- 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதியில் இந்திய ரிசர்வ் வங்கியின் எண்ணிம வழியிலான பணப் பரிமாற்றங்கள் குறியீடு (RBI-DPI) 445.5 ஆக இருந்தது.
- இது 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 418.77 ஆகவும், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 395.57 ஆகவும் இருந்தது.




## நாணயம் மற்றும் நிதி அறிக்கை 2023/24 – இந்திய ரிசர்வ் வங்கி





Chart I.4: Digitally Connected Population in India

- எண்ணிமப் பொருளாதாரம் ஆனது தற்போது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தைப் பங்கினை கொண்டுள்ளது என்பதோடு மேலும், இது 2026 ஆம் ஆண்டில் 20 சதவீதமாக இரு மடங்காக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் தரவு கசிவு சார்ந்த சராசரிச் செலவினம் 28 சதவீதம் உயர்ந்துள்ளது.
- இளம் வயதில் கடன் வாங்குபவர்களின் சதவீதம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதோடு மொத்த தனிநபர் கடன்களில் 65 சதவீதம் ஆனது சுமார் 35 வயதிற்கு குறைவானவர்களுக்கே வழங்கப்படுகிறது.
- இந்தியாவின் இணைய ஊடுருவல் ஆனது, 55.3 சதவீதமாக உள்ளது என்ற நிலையில் இது உலகச் சராசரியான 67.1 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.
- 100 பேருக்கு ஓர் இணையச் சந்தா என்ற வீதம் ஆனது, 68.2 என்ற அகில இந்திய சராசரி கொண்ட கிராமப்புற இந்தியாவுடன் ஒப்பிடச் செய்யும் போது நகர்ப்புறங்களில் அது இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது.

- கிராமப்புறக் குடும்பங்களில், 9.9 சதவீதத்தினருக்கு மட்டுமே கணினிகளை அணுகும் வசதி உள்ளது.
- நகர்ப்புறக் குடும்பங்களில் இந்த விகிதம் 32.4 சதவீதமாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் ஒரு பயனருக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் சராசரி தரவு நுகர்வு 24.1 GB ஆகும்.


## LTCG 2024 பணவீக்கத்தினைக் குறைப்பதற்காக அசல் மதிப்பில் ஈடு செய்தல்

- மத்திய நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்ட புதிய LTCG முறையானது சொத்து, தங்கம் மற்றும் பிற பட்டியலிடப்படாதச் சொத்துகளின் மீது LTCG வரியினை கணக்கிடுவதில் கிடைக்கப் பெறும் அசல் மதிப்பில் ஈடு செய்தல் பலனை ரத்து செய்கிறது.
- இது நீண்ட கால மூலதன ஆதாய (LTCG) வரி விகிதத்தை 20 சதவீதத்திலிருந்து 12.5% ஆகக் குறைத்தது.
- இது "வரி செலுத்துவோர் மற்றும் வரி நிர்வாகத்திற்கான மூலதனப் பலன்களின் கணக்கீட்டை எளிதாக்குவதற்கானதாகும்".
- 2001 ஆம் ஆண்டிற்கு முன்னதாக வாங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பிற சொத்துக்களுக்கு, 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியில் உள்ள நியாயமான சந்தை மதிப்பு ஆனது சொத்து வாங்குவதற்கான மதிப்பாகக் கருதப்படும்.
- பணவீக்கத்தின் தாக்கத்தை நடுநிலையாக்குவதற்காக வேண்டி ஒரு சொத்து அல்லது முதலீட்டின் அசல் கொள்முதல் விலையில் ஈடு செய்வதற்கான செயல்முறையே, அசல் மதிப்பில் ஈடு செய்தல் முறை ஆகும்.
- ஒரு சொத்தை வாங்குவதற்கான செலவினை அது வைத்திருக்கும் காலக் கட்டத்தில் நிலவும் பண வீக்கத்தின் அடிப்படையில் அதிகபட்ச அளவில் திருத்தியமைப்பது இதில் அடங்கும்.




## இந்திய ரிசர்வ் வங்கியின் 5வது கூட்டு ஒழுங்குமுறைக் கட்டமைப்பு

- கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் நடுநிலை என்ற கருத்துருவுடன் கூடிய ஐந்தாவது கூட்டணியின் சோதனைக் கட்டத்திற்கு ஐந்து நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் இந்தக் குழுவிற்கு என்று ரிசர்வ் வங்கியானது சுமார் 22 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.
- ஓர் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு என்பது கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை சூழலில் புதியத் தயாரிப்புகள் அல்லது சேவைகளின் நேரடியான சோதனையைக் குறிக்கச் செய்வதால், அதற்காக வேண்டி கட்டுப்பாட்டாளர்கள் சோதனையின் வரையறுக்கப் பட்ட நோக்கத்திற்காக சில குறிப்பிட்ட ஒழுங்குமுறை தளர்வுகளை அனுமதிக்கலாம் அல்லது அனுமதிக்காமல் இருக்கலாம்.




## நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கான PCA கட்டமைப்பு


TRIGGER THRESHOLDS FOR PCA

For NBFCs excluding core investment companies

| Indicator | RBI regulatory minimum | RISK Threshold 1 | RISK Threshold 2 | RISK Threshold 3 |
|---|---|---|---|---|
| CRAR | 15% | 12% to below 15% | Between 9% and 12% | Below 9% |
| Tier 1 capital ratio | 10% | 8% to 10% | Between 6% and 8% | Below 6% |
| Net NPA ratio | NA | 6-9% | 9-12% | Above 12% |

Note: Based on current regulatory minimum
PCA: Prompt corrective action; CRAR: Capital-to-risk weighted assets ratio

| PCA actions | Specifications/ Mandatory action |
|---|---|
| Risk threshold 1 | Restriction on dividend distribution/ remittance of profits; promoters/ shareholders to infuse equity and reduce leverage |
| Risk threshold 2 | In addition to mandatory actions of threshold 1, restriction on branch expansion |
| Risk threshold 3 | Besides mandatory actions of thresholds 1 & 2, appropriate restrictions on capital expenditure, other than for technological upgrade within board-approved limits; restrictions/reduction in variable operating costs |

- இந்திய ரிசர்வ் வங்கியானது, முதன்மை (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகளுக்கு (UCB) விரைவுத் திருத்த நடவடிக்கை (PCA) கட்டமைப்பை வெளியிட்டுள்ளது.
- மேற்பார்வையில் உள்ள வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அதி தீவிரக் கண்காணிப்பு தேவைப்படும் பெரிய நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளில் அதிக கவனம் செலுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பலவீனமான UCB-களில் மேம்பாடுகளைக் கொண்டு வருவதற்கு வேண்டி ஆரம்பகால இடையீட்டுக் கருவியாக நிறுவப்பட்ட மேற்பார்வை நடவடிக்கை கட்டமைப்பிற்கு (SAF) மாற்றாக PCA கட்டமைப்பு கொண்டு வரப்பட உள்ளது.
- அனைத்து உள்ளார்ந்த வழிகாட்டுதல்களின் (AID) கீழ் உள்ள UCB வங்கிகளைத் தவிர, அடுக்கு 2, அடுக்கு 3 மற்றும் அடுக்கு 4 வகைகளில் உள்ள இதர அனைத்து UCB வங்கிகளுக்கும் PCA கட்டமைப்பானது பொருந்தும்.

## வரி செலுத்துவதற்கான UPI வரம்பு




- இந்திய ரிசர்வ் வங்கியானது, UPI வரி செலுத்துவதற்கான வரம்பைத் தற்போதைய வரம்பிலிருந்து ஒரு பரிவர்த்தனைக்கு 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்துள்ளது.
- தற்போது, அதிகப் பரிவர்த்தனை வரம்புகளைக் கொண்ட குறிப்பிட்ட வகை கொடுப்பனவுகளைத் தவிர, UPI பரிவர்த்தனைக்கான வரம்பு 1 லட்சம் ரூபாயாக உள்ளது.
- ஒரு பரிவர்த்தனைக்கு 1 லட்சம் ரூபாயாக இருந்த UPI மூலம் வரி செலுத்துவதற்கான வரம்பை 5 லட்சம் ரூபாயாக உயர்த்த தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கிராமப்புற இளையோர் வேலைவாய்ப்பு அறிக்கை – 2024

- இந்தியாவின் பிரதான வருமான மூலத்தில் கிராமப்புற இளையோர்களில் சுமார் பாதி எண்ணிக்கையிலானோர் வேளாண் பொருட்களின் விற்பனை செய்வதன் மூலமே ஈட்டுகின்றனர்.
- அதைத் தொடர்ந்து தினசரி கூலி பெறும் வேலை மற்றும் சில்லறை அல்லது மொத்த வியாபாரம் ஆகியவற்றின் மூலம் ஈட்டுகின்றனர்.

- தற்போது பணியாளர் வளத்தில் பங்கு பெற்றுள்ளவர்களில் பெரும்பான்மையானோர் (70% - 85%) தங்களது வேலையில் மாற்றத்தை விரும்புவதாகக் கூறியுள்ளனர்.
- இந்தக் கணக்கெடுப்பில் ஈடுப்பட்ட ஆண்களில் பெரும்பான்மையானோர் ஓட்டுநர் அல்லது மின்னியல் வல்லுநர் வேலைகளை செய்ய விரும்புவதாகப் பதிலளித்து உள்ளனர்.
- இந்தக் கணக்கெடுப்பில் ஈடுப்பட்ட பெண்களில் பெரும்பான்மையானோர் தையல் (64.6%) மற்றும் அழகியல் (23%) சார்ந்த வேலைகளை செய்ய விரும்புவதாகப் பதில் அளித்துள்ளனர்.
- தற்போது சொந்தமாக தொழில் செய்து வரும் 55% ஆண்களும், 40% பெண்களும் சம்பளம் பெறும் வேலைக்கு மாற விரும்புகின்றனர்.
- வருமானம் ஆனது 20-30 சதவீதம் குறைவாக இருந்தாலும், 60 சதவீதத்துக்கும் மேலான ஆண்களும், 70 சதவீத பெண்களும் தங்கள் கிராமங்களில் அல்லது அருகில் வேலை வாய்ப்பினைப் பெற விரும்புவதாகத் தெரிவித்தனர்.




## இந்தியாவில் அந்நிய தொகுப்பு முதலீடு 2023-24

- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட மொத்த அந்நியத் தொகுப்புகளின் எண்ணிக்கை 11,219 அளவை எட்டியுள்ளது.
- இது 11,081 ஆக பதிவான முந்தைய ஆண்டின் அளவை விட சற்று அதிகமாகும்.
- 2023-24 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் முதலீடு செய்யும் வெளிநாட்டு தொகுப்பு முதலீட்டாளர்களில் (FPIs) அதிக பங்கை அமெரிக்கா கொண்டுள்ளது.
- மொத்தமாக இங்கு பதிவு செய்யப்பட்ட அந்நிய தொகுப்பு முதலீடுகளில், சுமார் 3,457 முதலீட்டாளர்களுடன் அமெரிக்கா முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து லக்ஸம்பர்க் 1,393 மற்றும் கனடா 804 என்ற எண்ணிக்கையுடன் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவான அந்நிய தொகுப்பு முதலீடு ஆனது 1992-93 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிக அதிக முதலீடு ஆகும்.


| FDI | FPI |
| --- | --- |
| 1. It is long-term investment | 1. It is generally short-term investment |
| 2. Investment in physical assets | 2. Investment in financial assets |
| 3. Aim is to increase enterprise capacity or productivity or change management control | 3. Aim is to increase capital availability |
| 4. Leads to technology transfer, access to markets and management inputs | 4. FPI results in only capital inflows |
| 5. FDI flows into the primary market | 5. FPI flows into the secondary market |
| 6. Entry and exit is relatively difficult | 6. Entry and exist is relatively easy |
| 7. FDI is eligible for profits of the company | 7. FPI is eligible for capital gain |
| 8. Does not tend be speculative | 8. Tends to be speculative |
| 9. Direct impact on employment of labour and wages | 9. No direct impact on employment of labour and wages |
| [illegible] | 10. Fleeting interest in mgt. |

## மைக்கேல் தேபப்ரதா பத்ரா குழு

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது துணை ஆளுநர் மைக்கேல் தேபப்ரதா பத்ரா என்பவர் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவின் நோக்கம் ஆனது,
    - உலகளாவியத் தரநிலைகள்/சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க இந்திய ரிசர்வ் வங்கி தொடர்ந்து வெளியிடும் புள்ளி விவரங்களைத் தரநிலைப்படுத்துதல்;
    - அத்தகைய வரையறைகள் எதுவும் பின்பற்றப்படாத பிற வழக்கமான தரவுகளின் தரத்தை ஆய்வு செய்தல் (எ.கா., தேசிய முன்னுரிமை மிக்க துறைகள்); மற்றும்
    - மேலும் தரவு சீரமைப்பிற்கான ஒரு நோக்கம் குறித்த வழிகாட்டுதலை வழங்குதல் ஆகியனவாகும்.



## வைர முன்பண உரிமம்





- ❖ வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆனது, இரத்தினக் கற்கள் மற்றும் நகைத் துறைக்கான வைர முன்பண உரிமத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது ஒரு குறிப்பிட்ட வரம்பு வரையில் வெட்டப்பட்ட மற்றும் நன்கு மெருகூட்டப்பட்ட வைரங்களுக்கு இறக்குமதி வரி விலக்கினை அளிக்கிறது.
- ❖ இரத்தினக் கற்கள் மற்றும் நகை ஏற்றுமதியாளர்கள் இந்த உரிமத்தை வெகு காலமாக கோரி வந்தனர்.
- ❖ இந்த உரிமம் ஆனது தகுதியான ஏற்றுமதியாளர்கள், பகுதியளவு செயல்முறைக்கு உட்படுத்தப் பட்ட, பகுதியளவு வெட்டப்பட்ட மற்றும் சில உடைந்த வைரங்கள் உட்பட வெட்டப்பட்ட மற்றும் மெருகூட்டப்பட்ட வைரங்களை இறக்குமதி செய்ய அதனை அனுமதிக்கிறது.
- ❖ ஏற்றுமதியாளர்கள் 10 சதவீத மதிப்புக் கூட்ட வேண்டிய நிபந்தனையுடன், கடந்த மூன்று ஆண்டுகளில் தாங்கள் ஈட்டிய சராசரி வருவாயில் 5 சதவீதம் வரையிலான மதிப்பிலான வைரங்களை இறக்குமதி செய்யலாம்.


## அந்நியச் செலாவணி மேலாண்மை (கடன் சாரா) திருத்த விதிகள், 2024

- ❖ நிதி அமைச்சகம் ஆனது, 2019 ஆம் ஆண்டு அந்நிய செலாவணி மேலாண்மை (கடன் சாராத அம்சங்கள்) விதிகள் 16.08.2024 தேதியிட்ட அறிவிப்பின் படி திருத்தியமைத்து உள்ளது.
- ❖ இது பன்னாட்டுப் பங்கு பரிமாற்றங்களை எளிதாக்கச் செய்வதையும், வெளிநாட்டு நிறுவனப் பங்குகளுக்கு ஈடாக இந்திய நிறுவனப் பங்குகளை வெளியிடுவது அல்லது பரிமாற்றம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது இணைப்புகள், கையகப்படுத்துதல்கள் மற்றும் பிற உத்திசார் முயற்சிகள் மூலம் இந்திய நிறுவனங்களை உலகளவில் விரிவுப்படுத்துவதை எளிதாக்குவதோடு, மேலும் அவை புதியச் சந்தைகளை அடையவும் உலகளவில் தங்கள் இருப்பை மேம்படுத்தவும் உதவும்.

❖ இது வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கு (OCI) சொந்தமான நிறுவனங்களால் திருப்பி அனுப்பப் படாத வகையின் ஒரு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு முதலீடுகளை வெளிநாடு வாழ் இந்தியர்களின் (NRI) நிறுவனங்களால் மேற்கொள்ளப் படும் முதலீடுகளுக்கு இணையாக கையாள்வதை தெளிவுபடுத்துகிறது.




## கடற்பாசி மதிப்புச் சங்கிலி மேம்பாடு




❖ சமீபத்தில், நிதி ஆயோக் அமைப்பானது இந்தியாவில் கடற்பாசி சாகுபடியை நன்கு ஊக்குவிப்பதற்காக ஒரு விரிவான செயல்திட்டத்தினை வகுத்துள்ளது.

❖ இது "கடற்பாசி மதிப்புச் சங்கிலி மேம்பாட்டிற்கான உத்தி" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

❖ வேர், தண்டு மற்றும் இலைகள் இல்லாத பிரதானமான, கடல் சார் பூக்காத கடற் பாசிகள் ஆனது கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

❖ பெரிய அளவிலான இந்தக் கடற்பாசிகள் ஆழமான கடல்பகுதியில் கெல்ப் காடுகள் எனப்படும் காடுகளை உருவாக்குகின்றன.


❖ இந்தியாவானது, முதன்மையாக தமிழ்நாட்டில், இயற்கையான படுகைகளில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 33,345 டன் (ஈரமான எடை) கடற்பாசிகளை சாகுபடி செய்கிறது.

❖ இந்தியாவின் வருடாந்திரக் கடற்பாசி வருவாய் சுமார் 200 கோடி ரூபாயுடன் உலக உற்பத்தியில் 1 சதவீதத்திற்கும் குறைவானப் பங்கினையே அளிக்கிறது.

- 2018-19 ஆம் ஆண்டில் 7.28% ஆக இருந்த வேளாண்மையில் சார்பு நிலைத் துறையின் மொத்த மதிப்பின் பங்கை 2024-25 ஆம் ஆண்டில் 9% ஆக உயர்த்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், உலகளாவிய கடற்பாசி சந்தை மதிப்பு 9.9 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- சீனா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தென் கொரியக் குடியரசு மற்றும் மலேசியா ஆகியவை முக்கிய கடற்பாசி வர்த்தக நாடுகளில் அடங்கும்.

## முதல் காலாண்டில் பதிவான நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை 2025

- 2024 ஆம் நிதியாண்டின் ஏப்ரல் - ஜூன் மாதம் வரையிலான (Q1 FY25) காலாண்டில் 6.6 சதவீதமாக இருந்த, 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நகர்ப்புற தனிநபர்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2024 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இருந்து மாறாமல் அதே அளவில் உள்ளது.
- ஜூன் 30 ஆம் தேதியன்று நிறைவடைந்த காலாண்டில் இந்தியாவின் வேலை வாய்ப்பு இன்மை விகிதம் ஆனது 2024 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டிலிருந்து (6.7 சதவீதமாக இருந்தது) குறைந்துள்ளது.
- முந்தைய ஆண்டில் ஆண்கள் மத்தியில் சுமார் 5.9 சதவீதமாக பதிவான வேலை வாய்ப்பின்மை விகிதம் (UR) ஆனது, 5.8 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- பெண்கள் மத்தியில் 9.1 சதவீதமாக இருந்த பதிவாகியிருந்த வேலை வாய்ப்பின்மை விகிதம் ஆனது 9.0 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான காலாண்டு வரை, ஆண்கள் மத்தியில் பதிவான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது சுமார் 5.9 சதவீதமாகவும், பெண்கள் மத்தியில் பதிவான வேலைவாய்ப்பின்மை விகிதமானது 9.1 சதவீதமாகவும், ஒட்டு மொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் 6.6 சதவீதமாகவும் இருந்தது.




## UPI சுற்றம்


- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம் ஆனது (NCPI) சமீபத்தில் "UPI சுற்றம்" என்ற ஒரு புதிய அம்சத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது பயனர்கள் தங்கள் குடும்பத்தினரையும் நண்பர்களையும் தங்கள் கணக்கைப் பயன்படுத்திப் பணம் செலுத்த வழி வகுக்கிறது.

- இந்தப் புதியதொரு செயல்பாடானது, தங்கள் தேவைகளுக்காகப் பிறரைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவுவதோடு, இந்தியா முழுவதும் எண்ணிம முறையில் பணப் பரிமாற்றம் மேற்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.
- இந்த அமைப்பானது, கணக்கு வைத்திருப்பவரை முதன்மைப் பயனராகக் கொண்டு, அவர் இரண்டாம் நிலை பயனரைக் கட்டுப்படுத்தும் வசதியினைக் கொண்டுள்ளது.
- மேலும், இந்தப் பயனாளர் வசதியில் இரண்டு வகைகள் உள்ளன, அவை - முழு மற்றும் பகுதியளவு பயனாளர்.
- முழு அளவிலானப் பயனாளர்களுக்கு, ஒரு பயனாளருக்கான மாதாந்திர வரம்பு 15,000 ரூபாயாகவும், இரண்டாம் நிலைப் பயனர்களுக்கான பரிவர்த்தனை வரம்பு 5,000 ரூபாயாகவும் வரையறுக்கப் பட்டுள்ளது.




## ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தில் கடன் வசதி

- PhonePe நிறுவனமானது அதன் பண வழங்கீட்டு தளத்தில் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் மூலமான கடன் வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது தங்கள் வங்கிகளில் இருந்து கடன் வசதிகளைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு வணிக ரீதியிலானப் பணம் செலுத்துவதற்காக ஃபோன்பே தளத்தில் உள்ள UPI உடன் தடையின்றி இணைக்க உதவுகிறது.
- இது அவர்களின் மாதாந்திர செலவுகளை சிறப்பாக மேலாண்மை செய்ய உதவுகின்ற, குறுகிய கால கடன் இணக்கத் தன்மையினை வழங்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலவில் நீர் வளங்கள் இருப்பதற்கான தடயங்கள்

- சீனாவின் நிலவு ஆய்வுக் கலமானது, நிலவின் மண் மாதிரிகளில் நீர் வளங்கள் இருப்பதற்கானத் தடயங்களைக் கண்டறிந்துள்ளது.
- சங்க்'கே -5 உலாவிக் கலமானது 2020 ஆம் ஆண்டில் தனது ஆய்வுப் பணியை முடித்து, நிலவில் இருந்து பாறை மற்றும் மண் மாதிரிகளுடன் பூமிக்குத் திரும்பியது.
- நிலவின் மண் மாதிரிகள் அங்கு "தண்ணீர் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது".
- 2020 ஆம் ஆண்டில், நிலவில் நீர் இருப்பது ஏற்கனவே நாசாவின் அகச்சிவப்பு உணர்வி மூலம் உறுதிப் படுத்தப்பட்டது.

## வியாழன் கோளின் பெருஞ்சிவப்புப் பகுதி





- மிகப்பெரிய பெருஞ்சிவப்புப் பகுதி, ஒட்டு மொத்த சூரியக் குடும்பத்தில் உள்ள நீண்ட காலமாக நிலவும் ஒரு மாபெரும் புயலாகும்.
- வியாழன் கோளின் பெருஞ்சிவப்புப் பகுதியானது, அண்டத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் சுழலுகிறது.
- 1831 ஆம் ஆண்டில் பெருஞ்சிவப்புப் பகுதி இருப்பது குறித்த முதல் திட்டவட்டமான பதிவுகள் கிடைக்கப் பெற்றதிலிருந்து அது கணிசமாகக் குறைந்துள்ளது.
- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பெருஞ்சிவப்புப் பகுதி 39,000 கிமீ தூரம் வரை பரவியிருந்தது.
- தற்போது, அது 14,000 கிமீ பரப்பில் மூன்றில் ஒரு பங்கு அளவிலேயே உள்ளது.
- பூமியின் 12,742-கிலோமீட்டர் விட்டம் முழுவதும் இதன் உள்ளே பொருந்தும் வகையில் அது உள்ளது.
- தற்போது பூமியை விட சற்று பெரிய அளவில் இருக்கும் இந்த எதிர் சூறாவளியானது, மணிக்கு 680 கி.மீ (425 மைல்) வேகத்தில் இடஞ்சுழி திசையில் வீசுகின்றது.

## GROWTH-India தொலைநோக்கி

- GROWTH-India தொலைநோக்கியானது கட்டிட அளவுள்ள குறுங்கோள் பூமிக்கு மிக அருகில் வந்த போது அதனைப் படம் பிடித்துள்ளது.
- லடாக்கின் ஹான்லேயில் உள்ள இந்திய வானியல் ஆய்வு மையத்தில் இந்த தொலை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த 116 மீ கட்டிட அளவிலான குறுங்கோள் ஆனது நிலவு அமைந்துள்ள தொலைவில் 10 மடங்கு தூரத்தில் பூமிக்கு மிக அருகில் உள்ளது.
- GROWTH-India என்ற தொலைநோக்கியானது இந்தியாவின் முதலாவது முழுமையான எந்திரவியல் சார்ந்த ஒளியிழை ஆராய்ச்சி தொலைநோக்கி ஆகும்.
- இது 4,500 மீட்டர் உயரத்தில் உள்ள உலகின் மிக உயரமான வானியல் ஆய்வகங்களில் ஒன்றாகும்.

## டின்சாபரின்





- நாகப்பாம்பு விஷத்தால் மனித உயிரணுக்களுக்கு ஏற்படும் சேதத்தை டின்சாபரின் மருந்து கணிசமாகக் குறைப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மருந்தானது, விஷம் செலுத்தப்பட்ட எலிகளில் தோல் பாதிப்பைக் குறைப்பதை அக்குழு கண்டறிந்துள்ளது.
- தான்சானியாவில் காணப்படும் நஜா பாலிடா எனப்படும் செந்நிற விஷம் கக்கும் நாகப் பாம்பின் விஷம் ஆனது கடுமையான வலி மற்றும் நிரந்தரக் குறைபாடுகள் அல்லது மரணத்தை ஏற்படுத்தும்.

## எலிகளின் மூளையினைக் கட்டுப்படுத்தும் காந்தவியல்


- உலகிலேயே முதல் முறையாக, காந்தப்புலங்களைப் பயன்படுத்தி எலிகளின் சில குறிப்பிட்ட மூளைப் பகுதிகளைக் கட்டுப்படுத்தும் ஒரு திறனை ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக நிரூபித்துள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்பானது, Nano-MIND (நரம்பிய இயக்கவியலின் காந்தவிய மரபியல் சார் குறுக்கீடு - Magnetogenetic Interface for NeuroDynamics) தொழில்நுட்பம் என அழைக்கப் படுகிறது.

- Nano-MIND தொழில்நுட்பமானது காந்தத் தன்மையினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட உள்ளார்ந்த மூளை நரம்பியல் சுற்றுகளின் கம்பிவட இணைப்பற்ற, தொலைதூர கட்டுப்பாட்டுத் திறன் கொண்ட மற்றும் துல்லியமான பண்பேற்றத்தை மேற்கொள்ள வழி வகுக்கிறது.
- இது அறிவாற்றல், உணர்ச்சி மற்றும் உந்துதல் போன்ற பல்வேறு சிக்கலான மூளை செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் கையாளுவதற்கும் வேண்டி சில புதிய சாத்தியக் கூறுகளை வழங்குகிறது.




## இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மரபணு மாற்ற முறை

- புது டெல்லியில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) மரபணுவியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் கல்வி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் மேம்படுத்தப்பட்ட மரபணு மாற்ற முறையை உருவாக்கியுள்ளனர்.
- இது தற்போதுள்ள CRISPR-அடிப்படையிலான தொழில்நுட்பங்களைக் காட்டிலும் அந்த டிஎன்ஏவை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் மாற்றியமைக்கக் கூடியது.
- ஃபிரான்சிசெல்லா நோவிசிடா பாக்டீரியாவிலிருந்து cas9 (நொதி) என்சைம்களை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.
- FnCas9 என அழைக்கப்படும் இந்த Cas9, மிகவும் துல்லியமானது என்றாலும், இது மிகவும் குறைந்த செயல்திறன் கொண்டது.
- FnCas9 நொதிகளை, அதன் தனித்தன்மையை இழக்கச் செய்யாத வகையில் மிக நன்கு மேம்படுத்துவதற்காக வேண்டி அதன் புதிய வடிவங்கள் மாற்றியமைக்கப்பட்டு, செயற்கையாக வடிவமைக்கப்பட்டுள்ளன.
- தற்போது, CRISPR-Cas9 நுட்பத்தினைப் பயன்படுத்தி, அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் விலங்குகளின் மரபணுவில் குறிப்பிட்ட DNA வரிசைகளைச் சேர்க்கலாம், அகற்றலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.





## சனிக்கோள் மற்றும் வால் நட்சத்திரம் A117uUD

- சனிக்கோள் ஆனது 2022 ஆம் ஆண்டில் சூரியக் குடும்பத்திலிருந்து A117uUD வால் நட்சத்திரத்தினை வெளியேற்றியதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சனிக் கோளுடன் தொடர்பு கொண்ட பிறகு, A117uUD வால் நட்சத்திரம் ஆனது மிகப் பெரிய நீள்வட்ட சுற்றுப்பாதையில் வீசப்பட்டு, மணிக்கு 10,800 கி.மீ வேகத்தில் விண்வெளியில் வெளியேறியது.
- விண்வெளி என்பது நட்சத்திரங்களுக்கு இடையில் உள்ள பகுதியாகும், ஆனால் அது வெற்றிடமாக இல்லை.
- இது நமது சூரியக் குடும்பத்தில் இருந்து வெளியேற்றப்படும் 2வது வால் நட்சத்திரம் ஆகும்.
- வியாழனுடன் தொடர்பு கொண்ட பிறகு சூரியக் குடும்பத்தில் இருந்து வெளியேற்றப் பட்ட முதல் வால் நட்சத்திரம் C/1980 E1 (போவேல்) ஆகும்.




## தோரியம் அடிப்படையிலான திரவ உப்பினைக் குளிர்விப்பானாக கொண்ட அணுமின் நிலையம்

- ❖ கோபி பாலைவனத்தில் உலகிலேயே முதல் முறையாக தோரியம் அடிப்படையிலான திரவ உப்பினைக் குளிர்விப்பானாக கொண்ட அணுமின் நிலையத்தினை அடுத்த ஆண்டில் அமைக்க தொடங்க சீனா திட்டமிட்டுள்ளது.
- ❖ இது திரவ உப்பு மற்றும் கார்பன் டை ஆக்சைடு கொண்ட கலவையினை வெப்பத்தை இடமாற்றவும் மின்சாரம் தயாரிக்கவும் பயன்படுத்துகிறது என்பதால் இந்த அணு உலையினைக் குளிரூட்டுவதற்கு தண்ணீர் தேவையில்லை.
- ❖ சீனா 20,000 ஆண்டுகளுக்கு அதன் ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான தோரியம் இருப்பினைக் கொண்டுள்ளது.
- ❖ உலகிலேயே முதல் முறையாக தோரியம் அடிப்படையிலான திரவ உப்பு அணு உலை ஆனது 1960 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் உள்ள ஓக் ரிட்ஜ் தேசிய ஆய்வகத்தில் கட்டமைக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாக இயக்கப்பட்டது.
- ❖ அமெரிக்காவில் 93 அணுசக்தி உலைகள் உள்ளன என்ற நிலையில் இது சீனாவில் உள்ள 56 உலைகளின் எண்ணிக்கையினை விட கணிசமாக அதிகமாகும்.
- ❖ தற்போது, சீனா உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆண்டுக்கு ஆறு முதல் எட்டு அணு உலைகள் என்ற விகிதத்தில் அணு உலைகளை உருவாக்கி வருகிறது.
- ❖ உண்மையில், 2035 ஆம் ஆண்டில், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் மொத்த அணு உலைகளின் எண்ணிக்கையும் ஒரு சேர்ந்த எண்ணிக்கையினை மிஞ்சும் வகையில் சீனாவில் மேம்பட்ட அணு உலைகளின் எண்ணிக்கை 150 என்ற அளவினை எட்டுவதே சீனாவின் திட்டமாகும்.



## கருமையழுகல் நோய்





Disease Cycle Of Phytophthora infestans

- மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம் (CPRI) ஆனது உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு கருமையழுகல் நோய்த் தாக்குதலின் அபாயம் குறித்து ஓர் முக்கிய ஆலோசனையை வெளியிட்டுள்ளது.
- கருமையழுகல் நோய் என்பது பைட்டோபதோரா இன்ஃபெஸ்டான்ஸால் ஏற்படும் ஒரு பூஞ்சை தொற்றாகும்.
- இந்நோயானது சாதகமான குளிர்ந்த, ஈரப்பதமான வானிலைச் சூழலில் மிக எளிதாக ஏற்படுவதால், தற்போதைய வானிலை அதன் பரவலுக்கு உகந்ததாக உள்ளது.

## 34 புதிய மாபெரும் காஸ்மிக் ரேடியோ மூலங்கள்

- இந்திய ரேடியோ வானியலாளர்கள் தலைமையிலான குழுவானது, 34 புதிய மாபெரும் ரேடியோ கதிர் மூலங்களைக் கண்டுபிடித்ததாக அறிவித்துள்ளது.
- இந்த புவி அறிவியல் மற்றும் தொலை உணர்வி அமைப்புகளில் (GRS) பல நன்கு அறியப் பட்டவையாகும், அவற்றில் இரண்டு அமைப்புகள் அவற்றின் சூழல்கள் தொடர்பாக முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு எதிராக உள்ளன.
- J0843+0513 மற்றும் J1138+4540 ஆகியவை, GRS அமைப்புகள் ஆனது குறைந்த அடர்த்தி கொண்ட சூழலில் மட்டுமே பெரிதடையும் என்ற கருத்திற்கு எதிரான கருத்தினை முன் வைக்கின்றன.
- இவர்கள் 150 மெகா ஹெர்ட்ஸ் அளவில் TIFR GMRT வானியல் மதிப்பீட்டு மாற்றுத் தரவு வெளியீடு-1 என்பதில் இருந்து தரவைப் பயன்படுத்தினர்.
- மாபெரும் ரேடியோ மூலங்கள் ஆனது பல ஒளியாண்டுகள் தொலைவு வரை நீண்டு காணப்படுகின்ற பேரண்டத்தின் மிகப் பெரிய ஒற்றைக் கட்டமைப்புகளாக இருக்க வாய்ப்புள்ளது.


- அவை அதன் அமைவிட அண்டத்தின் மையத்தில் காணப்படும் சூரியனை விட பத்து மில்லியனிலிருந்து ஒரு பில்லியன் மடங்கு வரையிலான நிறை கொண்ட மிகவும் பிரம்மாண்டமான கருந்துளைகளால் இயக்கப்படுகின்றன.



MAKING WAVES

- Indian radio astronomers use the Giant Metrewave Radio Telescope to discover 34 new giant radio sources, among the most distant objects of its type
- The study was recently published in the Astrophysical Journal Supplement Series of the American Astronomical Society
- The team of astronomers comprised two PhD students – Netai Bhukta (SKBU, India) and Souvik Manik (MCC, India), and two astronomers – Sabyasachi Pal (MCC, India) and Sushanta K Mondal (SKBU, India)
- The team's recent discovery was based on the TIFR GMRT Sky Survey Alternative Data Release 1
- They used TGSS for their research due to its low frequencies and sensitivity of the GMRT


## Kindlins – இணைவு புரதங்கள்




- கிண்ட்லின்ஸ் என்பது முதுகெலும்பு உயரினங்களில் உள்ள அனைத்து வகையான உயிரணுக்களின் உயிரணு சவ்வுகளுடன் இணைக்கப்பட்ட செல்களுக்குள் காணப் படும் இணைவுப் புரதங்கள் ஆகும்.
- பல சமிக்ஞை அனுப்பீட்டுப் பாதைகளுக்கான மையமாக இந்தப் புரதத்தினை இலக்காகக் கொண்ட சிகிச்சை முறைகளை கண்டுபிடிப்பதன் மூலம் ஒரு நோயின் பல அம்சங்களை ஒரே நேரத்தில் நிவர்த்தி செய்யும் வகையிலான புதிய புற்றுநோய் சிகிச்சைகளை உருவாக்க வழிவகுக்கும்.

- நிகோடின், புற ஊதா கதிர்கள் மற்றும் மேலும் இதர வகையிலான எண்ணற்ற இரசாயன மற்றும் நேரடி புற்றுநோய் உண்டாக்கும் காரணிகளின் தாக்கத்தின் கீழ் கிண்ட்லின்ஸ் புரதங்கள் பிறழ்வுகளுக்கு உட்படலாம்.
- பிறழ்விற்கு உள்ளான கிண்ட்லின்ஸ் ஆனது, செல்களுக்குள் காணப்படும் பொதுப் பயன்பாட்டு இயக்கவிய சீர் நிலையைப் பேணும் ஒரு செயல்முறையை (ஹோமியோஸ்டாசிஸ்) சீர்குலைக்கும்.
- எனவே, கிண்ட்லின்ஸ் புரதங்களில் ஏற்படும் மரபணு மாற்றங்களின் விளைவுகளைப் புரிந்து கொள்வது என்பது, புற்றுநோய் செல்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் மிகவும் சிக்கலான செயல்முறைகளைத் தொடங்கி விடுவதற்கான காரணிகளைக் கொண்டு உள்ளது.

## MCC0200 வகை பாக்டீரியா




- இந்தியாவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ARI) அறிவியலாளர்கள் MCC0200 என அழைக்கப்படும் லாக்டிக் அமில பாக்டீரியாவின் புதிய வகையை கண்டறிந்து உள்ளனர்.
- MCC0200 பாக்டீரியாவானது, பாக்டீரியங்கள் உட்புகும் (ஓம்புயிரி) செல்களுடன் தொடர்பு கொண்டு குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் அனுமதிக்கின்ற குடல் பரப்புகளுக்கான வலுவான இணைப்பினைக் கொண்டுள்ளது.
- கூடுதலாக, MCC0200 ஆனது ஆக்ஸிஜனேற்ற பற்றாக்குறையினால் ஏற்படும் சேதத்தை குறைக்க உதவுகின்ற ஆக்ஸிஜனேற்றப் பண்புகளைக் கொண்டுள்ளது.
- MCC0200 சீரம் கொழுப்பின் அளவைக் குறைக்கவும், இருதய நோய் ஏற்படும் பெரும் அபாயத்தைக் குறைக்கவும் உதவுகின்ற, கொழுப்பினைத் திரட்டும் செயல்திறனைக் கொண்டுள்ளது.


## இருண்ட பகுதியில் உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன்

- அறியப்படாத ஒரு செயல்முறையானது ஒளிச்சேர்க்கை நிகழ ஏதுவான சூழல் இல்லாத உலகப் பெருங்கடல்களின் ஆழமானப் பகுதிகளில் ஆக்சிஜனை உற்பத்தி செய்கிறது.
- அறிவியலாளர்கள் 4 கிலோ மீட்டர் ஆழத்தில் சில சோதனைகளை மேற்கொண்டனர் என்ற நிலையில் சில இடங்களில் ஆக்ஸிஜன் செறிவு குறைவதற்குப் பதிலாக அங்கு ஆக்சிஜன் அளவு வேகமாக அதிகரித்ததை அவர்கள் கவனித்தனர்.
- அவர்கள் பல் கனிம செறிவு பகுதிகளின் இயற்பியல் பண்புகளை மதிப்பிட்டதன் மூலம், அவற்றின் மேற்பரப்புகள் 0.95 V வரையிலான மின்னழுத்தத்தைக் கொண்டு இருப்பதைக் கண்டறிந்தனர்.
- ஒரு நீர் மூலக்கூறைப் பிரிக்க 1.5 V மின்னழுத்தம் தேவைப்படுகிறது.
- மின்கலத்தினைப் போல பல செறிவு பகுதிகள் நெருக்கமாக இருந்தால் மின்னழுத்தம் உருவாகலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் சந்தேகிக்கின்றனர்.
- பல் கனிம நிறைவுப் பகுதிகள் என்பது இரும்பு, மாங்கனீசு ஹைட்ராக்சைடுகள் ஆகியவற்றின் செறிவுகள் மற்றும் பாறை ஆகியவை கடல் தளத்தின் பல பகுதிகளில் ஓரளவு மூழ்கிக் காணப்படுகின்றன.
- அவற்றின் செறிவு ஒரு சதுர மீட்டருக்கு 10 கிலோ என்ற அளவினைத் தாண்டினால், அவற்றை வெட்டி எடுப்பது பொருளாதார ரீதியாக நன்கு சாத்தியமானதாகக் கருதப் படுகிறது.
- கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலம் ஆனது உலகின் மிக அதிகளவிலான பல் கனிம மிகைப் பகுதிகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது.
- இதில் 6 பில்லியன் டன் மாங்கனீஸ் மற்றும் 200 மில்லியன் டன்களுக்கும் அதிகமான செம்பு மற்றும் நிக்கல் ஆகியவை அடங்கும்.
- கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலத்தின் சுமார் 17% பகுதியில் சீனா மட்டும் பல் கனிம முடிச்சுகளை சேகரிக்க உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.



## லிவர்மோரியம்


- அறிவியலாளர்கள் டைட்டானியம்-50 என்ற கற்றையைப் பயன்படுத்தி மிகை எடை கொண்ட 116வது கூறினை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- லிவர்மோரியம் என்று பெயரிடப்பட்ட 116 கூறு ஆனது, தனிம வரிசையின் "மிகை எடை கொண்ட தனிமங்கள்" வகையின் ஒரு பகுதியாகும்.
- இவை தனிம வரிசை அட்டவணையில் உள்ள அறியப்பட்ட தனிமங்களுக்கு அப்பாற் பட்ட மற்றும் மிகவும் நிலையற்ற தனிமங்கள் ஆகும்.
- டைட்டானியம்-50 என்ற இந்த கற்றையானது அதன் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்கள் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- முன்னதாக கண்டறியப்பட்ட மிகை எடை கொண்ட தனிமங்கள் கால்சியம்-48 இன் வெவ்வேறு ஐசோடோப்பைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன.
- கூறுகளின் இணைவிற்கு மிக சாதகமான பண்புகளைக் கொண்டிருப்பதால் இது ஒரு "மாய" ஐசோடோப்பாகக் கருதப்படுகிறது.
- டைட்டானியம்-50 ஐசோடோப்பின் அதி செறிவுக் கற்றையினை உருவாக்கும் செயல் முறையானது டைட்டானியம் உலோகத்தைச் சுமார் 3000 டிகிரி பாரன்ஹீட் வரையில் வெப்ப நிலையில் சூடாக்கும் ஒரு செயல் முறையினை உள்ளடக்கியதாகும்.





## அபோபிஸ் குறுங்கோள் ஆய்வுத் திட்டம்

- ஐரோப்பிய விண்வெளி முகமையானது (ESA) 2029 ஆம் ஆண்டில் அபோபிஸ் குறுங்கோள் ஆனது பூமியைக் கடந்து செல்லும் போது அதனைப் பற்றி நன்கு ஆய்வு செய்வதற்கான திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இத்திட்டத்திற்கு விண்வெளிப் பாதுகாப்பிற்கான அபோபிஸ் விரைவு ஆய்வுத் திட்டம் (ராம்செஸ்) என பெயரிடப்பட்டுள்ளது.

- தோராயமாக 375 மீ அளவு கொண்ட, அபோபிஸ் என்ற குறுங்கோள் ஆனது 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று பூமியின் மேற்பரப்பில் இருந்து சுமார் 32,000 கிமீ தொலைவில் கடந்து செல்ல உள்ளது.
- இவ்வளவு பெரிய அளவிலான இந்த குறுங்கோள் ஆனது சுமார் 5,000 முதல் 10,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூமிக்கு மிக அருகில் வருகிறது.





## சிறிய அணு உலைகள்




- இந்திய அரசானது, தனியார் துறையுடன் இணைந்து சிறிய அணு உலைகள் (SMRs) குறித்து ஆய்வு செய்து அவற்றினைச் சோதனை செய்ய திட்டமிட்டுள்ளது.

- 10 மெகாவாட் முதல் 300 மெகாவாட் திறன் கொண்ட SMR உலைகள் ஒவ்வொன்றும், அவற்றின் வழக்கமான வடிவ உலைகளை விட சிறிய வடிவங்கள் ஆகும்.
- நேரம் மற்றும் செலவினங்கள் எதுவும் அதிகம் இல்லாமல் அவற்றினை நிறுவ இயலும் என்பதோடு, SMR தளத்தில் கிடைக்கப் பெறும் ஆற்றலைப் பயன்படுத்தலாம்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் ஒருங்கிணைக்கும் அவற்றின் திறன் ஆனது, ஒரு மீள்தன்மை கொண்ட ஒரு கட்டமைப்பினை வழங்குவதோடு இடையீட்டுச் செயல்பாடு மேலாண்மை செய்வதற்கான திறனையும் நன்கு வழங்குகிறது என்ற நிலைமையில் இதற்கானச் செலவினம் சுமார் கிலோ வாட் அலகிற்கு 4 ரூபாய் ஆகும்.


## மாபெரும் அலைகளின் உருவாக்கத்தினைக் கணித்தல்




- முன்னும் பின்னுமாக வரும் கடல் அலைகளுடன் ஒப்பிடுகையில், கப்பல்கள், கடலோர மற்றும் கடல் சார் உள்கட்டமைப்பு மற்றும் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் மாபெரும் அலைகள் வழக்கத்திற்கு மாறாக பெரிய அலைகளாகும்.
- இதுவரையில் இந்த அலைகளைக் கணிக்க என்று எந்த செயல் முறையும் கண்டறியப் படவில்லை.
- 172 கடல் மிதவைகளின் வலையமைப்பினால் சேகரிக்கப்பட்ட பில்லியன் கணக்கான தரவுப் புள்ளிகளைப் பயன்படுத்தி, மாபெரும் அலைகளுக்கு முன்னதாக ஏற்படும் அலை வடிவங்களை வேறுபடுத்தி ஐந்து நிமிடங்களுக்கு முன்னதாகவே அவற்றின் உருவாக்கத்தினை அறிய ஒரு செயற்கை நுண்ணறிவு நுட்பத்திற்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.
- உலக கடல்சார் அமைப்பின் கடல் சூழல் நிலைக் குறியீடு ஆனது 0 (அலைகள் இல்லாத நிலை) முதல் 9 (14 மீட்டருக்கு மேல் எழும்பும் அலைகள்) அளவில் அலை உயரத்தின் அடிப்படையில் கடலில் நிலவும் சூழல் நிலையை வகைப்படுத்துகிறது.

## பைரோகுமுலோனிம்பஸ் மேகம்

- தற்போது அமெரிக்கா மற்றும் கனடாவில் பரவி வரும் காட்டுத் தீயானது, 'பைரோ குமுலோனிம்பஸ்' மேகங்களை உருவாக்கும் அளவுக்கு தீவிரமாகியுள்ளன.
- அவை இடியை உருவாக்கி அதிக தீயை மூட்டக் கூடிய ஆற்றல் கொண்டவை.
- 2023 ஆம் ஆண்டிற்கு முன்னதாக, உலகளவில் சராசரியாக ஓராண்டில் 102 பைரோ குமுலோனிம்பஸ் மேகங்களின் உருவாக்கங்கள் பதிவு செய்யப்பட்டன, அவற்றில் 50 மேகங்கள் கனடாவில் மட்டுமே பதிவாகின.
- அதிக வெப்பமான காட்டுத் தீ ஏற்படும் போது மட்டுமே அவை ஏற்படுகின்றன.
- எரிமலை வெடிப்புகளும் பைரோகுமுலோனிம்பஸ் மேகங்கள் உருவாக வழி வகுக்கும்.
- உதாரணமாக, இந்த மேகங்கள் ஆனது 2019-2020 ஆஸ்திரேலிய காட்டுத்தீயின் போது வெப்பநிலை 800 டிகிரி செல்சியஸைத் தாண்டியபோது உருவானது.
- இந்த மேகங்கள் 50,000 அடி உயரத்தை எட்டி, அவை தானாகவே தனது இடி உருவாக்கும் மேகங்களை உருவாக்குகின்றன.
- இந்த மேகங்கள் ஆனது மின்னலை உருவாக்கக் கூடியதாக இருந்தாலும் அதிக மழைப் பொழிவினை உருவாக்காது.
- இதன் விளைவாக, அவை பிரதானமாக உருவான தீயிலிருந்து பல கிலோமீட்டர் தொலைவில் புதிய காட்டுத்தீயினை உருவாக்கலாம்.




## கேண்டிடா ஆரிஸ்

- கேண்டிடா ஆரிஸ் எனப்படுகின்ற ஒரு வலிமையான பூஞ்சைத் தொற்று அமெரிக்கா முழுவதும் அதிகரித்து வருகிறது.
- அதிகரித்து வரும் இந்தப் பூஞ்சைத் தொற்றானது, முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது என்பதோடு 2016 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் முதன்முதலில் இந்தத் தொற்று கண்டறியப்பட்டது.
- இந்தத் தொற்றினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் அதன் கடுமையான தாக்கம் மற்றும் பல பூஞ்சை எதிர்ப்பு சிகிச்சைகளுக்கு அது கொண்டு உள்ள எதிர்ப்புத் திறன் காரணமாக இது மிக முக்கியத்துவம் வாய்ந்த உலகளாவிய சுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

## WHY IT'S SUCH A BIG WORRY...

### What is Candida auris

- A type of fungus that can cause serious illness in hospitalised patients; infections can be difficult to treat
- First identified in 2009 in a patient in Japan. In recent years, it has emerged around the world. The US has reported over 600 such cases

Mortality rate in patients suffering from the infection was **as high as 33%**

- Another study published in Intensive Care Medicine in 2014 was conducted at 27 Indian ICUs; 6.5% of admitted patients suffered from fungal infection

### WHY IT'S SO DANGEROUS

- Candida auris is resistant to most anti-fungal medications
- Affects immune-compromised patients and causes high mortality
- Found in patient's environment and hands of healthcare workers, which indicates it's hospital-acquired
- The fungus forms non-dispersible cell aggregates and persists for longer time in environment, in addition to its thermos-tolerant and salt-tolerant properties
- Mortality rate in patients infected by Candida auris can range from 33% to 72%
- The fungus is sensitive mostly to echinocandins, a new class of antifungal drug, which is very expensive

## மருந்து எதிர்ப்புத் திறன் கொண்ட காசநோய்க்கான புதிய சிகிச்சை 2024

### BPaL regimen for pre-XDR TB shows promise

- Pre-XDR TB patients on BPaL regimen will consume over 500 tablets over 26 weeks compared with over 4,300 tablets over 18 months with the conventional treatment for drug-resistant TB
- Treatment adherence is high and outcomes are better when fewer drugs are used and for a shorter duration
- BPaL regimen to treat people with pre-XDR TB has been approved by WHO. India is yet to roll out BPaL regimen though it aims to reduce TB incidence by 80% and TB deaths by 90% by 2025
- As of date, nearly 70% of the 400 trial participants have completed the treatment lasting for 26 weeks and the cure rate is well above 85%



**Severely diseased:** Most of the trial participants had advanced TB at the time of enrolment. PHOTO: JANICE HANEY CARR

- In the case of conventional DR-TB treatment, the cure rate is 60-65% even with strict treatment adherence
- The trial in India has found the three-drug BPaL regimen to be safe
- Three cases of TB relapse have been seen, one per each arm. Final outcome will be known only after one year of follow-up

- பல/விரிவான மருந்து-எதிர்ப்பு திறன் கொண்ட காசநோயாளிகளுக்கு BPaL (பெடாகுலைன், ப்ரீடோமானிட் மற்றும் லைன்ஜோலிட்) என்ற மருந்து தொகுப்புகளை வழங்க இந்தியா தயாராகி வருகிறது.
- இந்தப் புதிய மருந்துத் தொகுப்புடன் M/XDR காசநோய்ப் பாதிப்பிற்கு மிகவும் எதிரான இந்தியாவின் போராட்டத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.
- இந்தச் சிகிச்சை முறையானது பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா, உக்ரைன் போன்ற நாடுகளில் நல்ல விளைவுகளை வழங்கியுள்ளது.
- தற்போது, இந்தியாவில் MDR/RR-TB நோயாளிகளுக்கான சிகிச்சைகளின் பலனளிப்பு விகிதம் 56% ஆகவும், XDR-TB நோயாளிகளுக்கான சிகிச்சையின் பலனளிப்பு விகிதம் 48% ஆகவும் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பானது BPaL (பெடாகுலைன், ப்ரீடோமானிட் மற்றும் லைன்ஜோலிட்) மற்றும் BPaLM (பெடாகுலைன், ப்ரீடோமானிட் மற்றும் லைன்ஜோலிட்+ மாக்ஷிஃப்லாக்சின்) ஆகிய ஆறு மாத மருந்து தொகுப்பு சிகிச்சை முறைகளை மருந்து-எதிர்ப்பு திறன் கொண்ட காசநோய்ப் பாதிப்பிற்கான சிகிச்சை விருப்பத் தேர்வுகளாக பரிந்துரைத்தது.
- இந்தியாவில் 2015 ஆம் ஆண்டில் 1.4 லட்சமாக இருந்த மருந்து எதிர்ப்பு திறன் கொண்ட காசநோய் பாதிப்பு ஆனது 2022 ஆம் ஆண்டில் 21% குறைந்து 1.1 லட்சமாக உள்ளது.

## நியூட்ரான் நட்சத்திரங்கள்/விசித்திரமான செயலிழந்த நட்சத்திரங்கள்

- பால் வெளி அண்டத்தின் மையப்பகுதிக்கு அருகில் பத்து மர்மமான நியூட்ரான் நட்சத்திரங்கள் காணப்படுவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- வேகமாக சுழல்கின்ற இவை அனைத்தும் "துடிப்பு அண்டங்கள்" என வகைப்படுத்தப் படுகின்றன.
- இந்த மர்மமான நட்சத்திரங்கள், 18,000 ஒளியாண்டுகளுக்கு அப்பால் அடர்த்தியான கோள வடிவ திரள்களுக்குள் அமைந்துள்ளன.
- அவற்றின் தனித்துவமானச் சூழலின் காரணமாக அவை வினோதமான மற்றும் திருகு வடிவங்களைக் கொண்டிருக்கலாம்.
- இந்தத் துடிப்பண்டங்கள் டெர்சான் 5 எனப்படுகின்ற கோள வடிவத் திரளில் காணப் படுவதாகக் கண்டறியப் பட்டுள்ளன.
- 12 பில்லியன் முதல் 4.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான நூறாயிரக்கணக்கான வெவ்வேறு நட்சத்திரங்கள் இங்கு காணப்படுகின்றன.
- டெர்சான் 5 என்பது பால் வெளி அண்டத்தில் மிகவும் திரள்கள் நிறைந்த பகுதிகளில் ஒன்றாகும் என்பதோடு இங்கு ஏற்கனவே குறைந்தது 39 அறியப்பட்ட துடிப்பண்டங்கள் திரண்டு காணப்படுகின்றன.
- மூன்று புதிய அரிய ஸ்பைடர் துடிப்பண்டங்களும் இந்தப் பகுதியில் கண்டறியப்பட்டு உள்ளன.
- அவை "ரெட்பேக்ஸ்" அல்லது "பிளாக் விடோவ்ஸ்" என வகைப்படுத்தப்படுகின்றன என்பதோடு அவை மிக அருகில் வரும் நட்சத்திரங்களின் மீது உயர் ஆற்றல் கதிர்வீச்சு "தாக்கத்தினை" செலுத்துகின்றன.

- ரெட்பேக் ஸ்பைடர் துடிப்பண்டங்கள் ஆனது, சூரியனின் நிறையில் 10 சதவீதம் முதல் சுமார் 50 சதவீதம் வரையிலான நிறை கொண்ட பல்வேறு துணை நட்சத்திரங்களை உள்ளிழுக்கின்றன.
- பிளாக் விடோவ்ஸ் ஸ்பைடர் துடிப்பண்டங்கள் சூரியனின் நிறையில் சுமார் ஐந்து சதவீதத்திற்கும் குறைவான நிறை கொண்ட பல்வேறு சிறிய நட்சத்திரங்களை உள் இழுக்கின்றன.

## TENG தொழில்நுட்பம்

- இந்தூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பிற்கு வேண்டி பத்து இணை உராய்வு மின்னியல் சார் சிறிய மின்னியற்றி (TENG) அடிப்படையிலான காலணிகளின் அடித்தோல் பகுதியில் அமைந்த ஆற்றல் உருவாக்க அலகுகளை வழங்கியுள்ளது.
- இந்த காலணிகள், மனித இயக்கத்திலிருந்து உருவாகும் ஆற்றலைப் பயன்படுத்தச் செய்வதற்காக வேண்டி வடிவமைக்கப் பட்டுள்ளன என்ற நிலையில் இது மின்னணுச் சாதனங்களுக்கான நிலையான ஆற்றல் மூலத்தை வழங்குகிறது.
- இந்த காலணிகள் மனிதர்களின் ஒவ்வொரு அடியிலும் ஆற்றலை உருவாக்குவதற்காக மேம்பட்ட உராய்வு மின்னியல் இணைகளைப் பயன்படுத்துகின்றன.
- இந்தக் காலணிகளில் RFID மற்றும் நேரடி இருப்பிட கண்காணிப்புக்கான செயற்கைக் கோள் அடிப்படையிலான புவியிடங்காட்டி தொகுதி போன்றவை உள்ளிட்ட அதிநவீன கண்காணிப்பு தொழில்நுட்பமும் பொருத்தப் பட்டுள்ளது.




## சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புவியின் டெர்மினேட்டர் எல்லை

- நியூசிலாந்துக்கு அருகில் பசிபிக் பெருங்கடலில் இருந்து 267 மைல் தொலைவில் உள்ள பூமியின் டெர்மினேட்டர் (எல்லை முடிவு நிலை) எல்லையின் படத்தை சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து நாசா படம் பிடித்துள்ளது.
- டெர்மினேட்டர் எல்லை என்பது, பூமியின் சுழற்சி மற்றும் மாறும் பருவங்களை எடுத்துக் காட்டுகின்ற, பகல் மற்றும் இரவு இடையேயான எல்லையைக் குறிக்கும்.
- ISS தினமும் 16 சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனங்களை எதிர்கொள்கிறது.

- ❖ இந்த டெர்மினேட்டர் எல்லையின் வடிவம் என்பது சம இரவு பகல் தினம் மற்றும் சங்கிராந்திகளுடன் மாறுபடுவதோடு இது புவி அச்சின் சாய்வையும் குறிக்கிறது.
- ❖ ட்விலைட் என்றும் அழைக்கப்படுகின்ற டெர்மினேட்டர், பூமியை அல்லது வேறு ஏதேனும் கிரகம் அல்லது வான் பொருளைப் பகல் மற்றும் இரவு நேரத்திற்கு இடையில் பிரிக்கும் ஒரு நகரும் கோடாகும்.
- ❖ இந்தக் கோடு ஒவ்வொரு நாளும் சூரிய உதயத்தில் ஒரு முறையும் மற்றும் சூரியன் மறையும் போது ஒரு முறையும் என இரண்டு முறை பூமியைக் கடந்து செல்கிறது.



## JUICE ஆய்வுக் கலம்




- ❖ ஐரோப்பிய விண்வெளி முகமையின் JUICE ஆய்வுக் கலம் ஆனது புதிய முயற்சியினை நிறைவு செய்து இரண்டு சாதனைகளை முறியடிக்க உள்ளது.
- ❖ விண்கலம் புவியீர்ப்பு உதவிக்கான முயற்சியினை மேற்கொள்வதற்காக இரண்டு பொருட்களைப் பயன்படுத்துவது இதுவே முதல் முறையாகும் என்பதோடு மேலும் இது முதல் முறையாக நிலவு-பூமி சார்ந்த சுற்றுப்பாதை வேக மாற்று முயற்சியினையும் மேற்கொள்ள உள்ளது.
- ❖ இந்த விண்கலமானது முதலில் நிலவினைச் சுற்றி வந்து அதன் வேகத்தை குறைக்கும்.

- அடுத்து 25 மணி நேரத்திற்குப் பிறகு, அது பூமியை நெருங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- பூமியின் புவி ஈர்ப்பு விசை காரணமாக அது மேலும் வேகத்தைக் குறைத்து வெள்ளிக் கோளினை நோக்கிப் பயணிக்கும்.

## நெகிழிகளை உண்ணும் பூஞ்சை

- ஜெர்மனியில் உள்ள அறிவியலாளர்கள் நெகிழிகளை உண்ணும் பூஞ்சைகளை கண்டறிந்து ள்ளனர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பூஞ்சை திரிபுகளில், நான்கு திரிபுகள் நெகிழிகளை குறிப்பாக கட்டுமான பயன்பாட்டுப் பஞ்சுகளை உருவாக்கப் பயன்படுகின்ற பாலியூரிதீன்களை திறம்பட பயன்படுத்துகின்றன.
- நெகிழி பைகள் மற்றும் பொட்டலங்களில் பயன்படுத்தப்படும் பாலி எத்திலீன், மிகவும் மெதுவாக சிதையக் கூடியது.
- புதைபடிவ கார்பனிலிருந்து நெகிழிகள் தயாரிக்கப் படுகிறது என்பதோடு மேலும் காளான்கள்களால் அவற்றைச் சிதைக்க முடிவது என்பது எண்ணெயினை அல்லது வாயுவை எரித்து, வளிமண்டலத்தில் $CO_2$ வாயுவினை வெளியிடுவதில் இருந்து இது எவ்விதத்திலும் வேறுபட்டதல்ல.
- 1950 ஆம் ஆண்டில் 1.7 மில்லியன் டன்களாக இருந்த உலகளாவிய நெகிழி உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 390 மில்லியன் டன்கள் ஆக பதிவானது.
- ஆனால், உலகளவில் 10 சதவீதத்திற்கும் குறைவான நெகிழிக் கழிவுகள் மட்டுமே மறு சுழற்சி செய்யப்படுகின்றன.




## SSLV-D3 - EOS-08

- இஸ்ரோ நிறுவனமானது EOS-08 எனப்படும் புவிக் கண்காணிப்புச் செயற்கைக் கோளை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனத்தின் (SSLV)-D3 மூலம் விண்ணில் ஏவியுள்ளது.
- SSLV-D3 ஆனது அதன் மூன்றாவது மற்றும் இறுதி மேம்பாட்டு விமானமாகும்.


- SSLV ஆனது சிறிய, குறுகிய அல்லது நுண் செயற்கைக்கோள்களை (10 முதல் 500 கிலோ எடை) 500 கிலோ மீட்டர் தொலைவிலான புவி தாழ் மட்ட சுற்றுப்பாதையில் செலுத்தும் திறன் கொண்டது.
- புவிக் கண்காணிப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ள EOS-08 செயற்கைக்கோள் ஆனது, பேரிடர் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் ஆய்வு போன்ற பல்வேறு பணிகளுக்கான மேம்பட்ட தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ளது.
- அகச்சிவப்புக் கதிர் சூழல்களில் படங்களைப் பிடிக்கவும், புற ஊதா கதிர்வீச்சைக் கண்காணிக்கவும், மண்ணின் ஈரப்பதம் மற்றும் பெருங்கடல் காற்றையும் அளவிடக் கூடிய பல கருவிகள் இதில் அடங்கும்.




## செவ்வாய்க் கிரகத்தில் நீர்த் தேக்கப் பகுதிகள்


- செவ்வாய்க் கிரகத்தின் பாறைப் பாங்கான வெளிப்புறக் கண்ட மேலோட்டின் உள் பகுதியில் திரவ நீர்த் தேக்கப் பகுதிகள் இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- இந்தக் கிரகத்தில் திரவ நீர் கண்டுபிடிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- நாசாவின் மார்ஸ் Insight தரையிறங்கு கலமானது நான்கு ஆண்டுகாலமாக செந்நிறக் கிரகத்தின் உள் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் - அதிர்வுகளைப் பதிவு செய்துள்ளது.
- செவ்வாய்க் கிரகத்தின் கண்ட மேலோட்டில் சுமார் ஆறு முதல் 12 மைல்கள் (10 முதல் 20 கிமீ) ஆழத்தில் இந்த நீர்த் தேக்கங்கள் இருப்பதைப் பகுப்பாய்வு வெளிப்படுத்தி உள்ளது.

- பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாய்க் கிரகம் அதன் காந்தப்புலத்தையும் வளிமண்டலத்தையும் இழந்த போது அங்கு பரவியிருந்த நீர் மூலக்கூறுகள் அழிந்து போனதாக கருதப் படுகிறது.
- செவ்வாய்க் கிரகத்தின் துருவப் பகுதிகளில் உறைந்த நீர் இருப்பதும், அதன் வளி மண்டலத்தில் நீராவி காணப் படுவதற்குமான சான்றுகள் உள்ளன.




## சூரிய சுழற்சியின் நீள்நிலையினைக் கணிப்பதற்கான புதிய முறை

- இந்திய வானியற்பியல் கழகத்தின் (IIA) வானியலாளர்கள் அடுத்து வரவிருக்கும் சூரிய சுழற்சியின் நீள்நிலையினைக் கணிப்பதற்காக ஒரு புதிய முறையைக் கண்டறிந்து உள்ளனர்.
- IIA கழகத்தின் கொடைக்கானல் சூரியக் கண்காணிப்பு ஆய்வகத்தில் இருந்து பெறப் பட்ட 100 ஆண்டுகால சூரிய தரவுகளைப் பயன்படுத்தி வானியலாளர்கள் ஒரு புதிய தொடர்பைக் கண்டறிந்துள்ளனர்.
- விண்வெளியின் வானிலை ஆனது சூரிய குடும்பத்தில் உள்ள மாறுபட்ட நிலைமைகள் மற்றும் சூரியன் மற்றும் சூரியக் காற்றால் பாதிக்கப்படும் அதன் ஹீலியோஸ்பியர் (சூரியன் சூழ் வளிமண்டலம்) ஆகியவற்றுடன் தொடர்புடையது.
- விண்வெளி வானிலையின் முக்கிய கூறுகள் சூரியப் புயல், சூரிய வெப்ப உமிழ்வுகள் மற்றும் சூரியச் சுடர்கள் ஆகியனவாகும்.
- சூரிய சுழற்சியின் குறைந்தபட்ச ஆண்டில், சூரிய மேற்பரப்பில் உள்ள மீவெப்பச்சலன மண்டலங்களின் அகலம் அடுத்தடுத்த சூரியச் சுழற்சியின் அதிகபட்ச அளவில் சூரிய கரும்புள்ளிகளின் எண்ணிக்கையுடன் ஒரு தொடர்புடையது என்பதை அவர்கள் நன்கு கண்டறிந்தனர்.
- இந்த எளிய முறையை விண்வெளி வானிலை முன்னறிவிப்பில் பயன்படுத்தலாம்.




## பெர்சீட் விண்கல் பொழிவு


❖ பெர்சீட் எனும் டஜன் கணக்கான "எரி நட்சத்திரங்களை" பொழியும் ஆண்டின் மிகப் பெரிய அளவிலான விண்கல் பொழிவுகளில் ஒன்றாகும்.

❖ பெர்சீட் விண்கல் பொழிவானது ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 24 ஆம் தேதி வரை நிகழும் என்ற நிலையில் ஆகஸ்ட் 13 ஆம் தேதி விடியலுக்கு முன்பாக ஆகஸ்ட் 12 ஆம் தேதி அன்று இரவு இந்த நிகழ்வு உச்ச நிலையில் இருந்தது.


❖ உகந்த சூழ்நிலையில், ஒரு மணி நேரத்திற்கு 50 முதல் 100 விண்கற்கள் வரை காண இயலும்.

❖ எரி நட்சத்திரங்கள் என்று அழைக்கப் படுபவை உண்மையில் நட்சத்திரங்கள் அல்ல, ஆனால் அவை பூமியின் வளிமண்டலத்தில் 130,000 mph (210,000 km/h) வேகத்தில் பாய்ந்து செல்லும் சிறிய பாறைகள் ஆகும்.

❖ 1993 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெர்சீட் நிகழ்வின் போது அழிக்கப் பட்ட ஒரே செயற்கைக் கோள் ஒலிம்பஸ் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் மட்டுமே ஆகும்.



## நுண்ணியக் கூட்டு வறள் களி



- சிலிக்கா நுண் துகள்கள் (SiNPs) மற்றும் கால்சியம் ஆகியவற்றை உள்ளடக்கிய நுண்ணியக் கூட்டு வறள் களி (ஜெரோஜெல்) காயக்கட்டுத் துணியை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது இரத்தம் விரைவாக உறைவதற்கும், கட்டுப்பாடற்ற இரத்தக் கசிவிற்கு நிவாரணம் வழங்குவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- வறள் களி என்பது குறைந்தபட்சச் சுருக்கத்துடன் உலர்த்துவதன் மூலம் உருவாக்கப் படும் திட வடிவ களிமம் ஆகும்.
- வறள் களி நச்சுத் தன்மையற்றவை, விலை குறைந்தவை, உயிரி இணக்கத் தன்மை கொண்டவை, மிகவும் அதிக பரப்பளவைக் கொண்டவை மற்றும் மிக அதிக நுண் துளைகள் கொண்டவையாகும்.

## செயற்கை நுண்ணறிவு அடையாளக் குறியீடு - OpenAI

- ChatGPT நுட்பத்தினை உருவாக்கிய OpenAI, செயற்கை நுண்ணறிவு என்ற சட்டத்திற்கு நன்கு இணங்க உதவும் வகையில் உரை அடையாளக் குறியீட்டு (watermark) வசதியை உருவாக்கி யுள்ளது.
- இதற்கான செயற்கை நுண்ணறிவு கண்டறிதல் முறைகள் 99.9% பயனுள்ளவையாக உள்ளன, மேலும் பெயர்ப்புரை போன்ற திருத்திப் படியெடுத்தல் செயல்பாடுகளின் தடுப்பு/கண்டறிதல் முறையினையும் அவை கொண்டுள்ளன.
- OpenAI நிறுவனத்தின் ஏமாற்றுத் தடுப்புக் கருவியானது ChatGPT ஆனது உரையை உருவாக்க வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றியமைக்கிறது.
- இது மனிதக் கண்ணால் கண்டறிய முடியாத அடையாளக் குறியீடுகளின் குறிப்பிட்ட வடிவத்தினை உருவாக்குகிறது.
- ஆனால் இந்த வசதியை வெளியிடுவது குறித்து நிறுவனம் மிக உறுதியாக தெரியப் படுத்தவில்லை.



## மீப்பெரு நீல நிலவு 2024




- இது ஒரு மீப்பெரு மற்றும் நீல நிலவு ஆகியவற்றின் ஒரு தனித்துவமான கலவையாக நிகழ்ந்த ஓர் அசாதாரண வான நிகழ்வாகும்.
- 1979 ஆம் ஆண்டு ரிச்சர்ட் நோல்லே என்பவரால் மீப்பெரு நிலவு (சூப்பர் மூன்) என்ற சொல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிலவு பூமிக்கு மிக நெருக்கமாக வரும் அண்மை நிலை எனப்படும் பகுதியினை ஒரு முழு நிலவு அடையும் போது மீப்பெரு நிலவு ஏற்படுகிறது.
- இந்த அண்மை நிலையானது நிலவினை வழக்கத்தை விட மிகவும் பெரிதாகவும் மிகப் பிரகாசமாகவும் காட்டுகிறது.
- "நீல நிலவு" என்ற சொல் வரலாற்று ரீதியாக நான்கு முழு நிலவுகளைக் கொண்ட ஒரு பருவத்தில் மூன்றாவதாக ஏற்படும் முழு நிலவைக் குறிக்கிறது என்ற நிலையில் இந்த நிகழ்வு ஒப்பீட்டளவில் அரிதாகாகவே நிகழ்கிறது.
- இந்த சொல்லின் பயன்பாட்டிற்கான ஒரு ஆரம்ப காலப் பதிவு 1528 ஆம் ஆண்டிற்கு முந்தையதாகும்.

- முழு நிலவுகளில் சுமார் 25% மட்டுமே மீப்பெரு நிலவுகள் ஆகும் என்ற ஒரு நிலையில் தோராயமாக 3% நீல நிலவுகள் ஆகும்.
- அடுத்த மீப்பெரு நீல நிலவு நிகழ்வுகள் ஆனது 2037 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் நிகழும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## அதிக வீரியம் மிக்க மீயுயிரி


- அமெரிக்கா உட்பட 16 நாடுகளில் "அதிக வீரியம் மிக்க" மீயுயிரியின் (சூப்பர்பக்) ஆபத்தான புதிய மாற்றுருக்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- ஒரு வகை மருந்து-எதிர்ப்புப் பாக்டீரியா என்ற இந்த மீயுயிரியானது, அதிக வீரியம் மிக்க க்ளெப்சில்லா நிமோனியா (hvKp) என்று அறியப் படுகிறது.
- இது ஆரோக்கியமான நோயெதிர்ப்பு மண்டல அமைப்புகள் உள்ளவர்களிலும் கூட வேகமாக பரவக் கூடிய, கொடிய நோய்த் தொற்றுகளை ஏற்படுத்தக் கூடியது.
- சுற்றுச்சூழலிலும், மனிதர்கள் உட்பட சுமார் பல்வேறு விலங்குகளின் மேல் தொண்டை மற்றும் இரைப்பைக் குழாயிலும் இது காணப் படும்.





## ஏரியல் துணைக்கோளில் நிலத்தடிப் பெருங்கடல்

- யுரேனஸின் துணைக் கோள்களில் ஒன்றான ஏரியலில் கார்பன் டை ஆக்சைடு பனிக் கட்டி (உலர்பனி) இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது துணைக்கோளின் பனி நிறைந்த கண்ட மேலோட்டிற்கு அடியில் திரவ கடல் இருப்பதைக் குறிக்கிறது.
- நிலத்தடி கடல் ஆனது, இரசாயன எதிர்வினைகளுக்கு உட்பட்டு, கார்பன் டை ஆக்சைடை வெளியிடும் நிலைமையில் அது பனிப் பிளவுகள் மூலம் மேற்பரப்பில் வெளியேறுகிறது.
- அதற்கு மாற்றாக, யுரேனஸின் காந்தப்புலம் ஆண்டு கார்பன் டை ஆக்சைடு பனியை உருவாக்குதற்காக என்று மூலக்கூறுகளை உடைக்கக் கூடும் என்று பரிந்துரைக்கப் படுகிறது.

- ❖ கார்பன் டை ஆக்சைடு தவிர, ஏரியலில் கார்பன் மோனாக்சைடு மற்றும் கார்பனேட்டுகள் காணப்படுவதற்கான பல்வேறு தடயங்களையும் அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இந்த தாதுக்கள் பொதுவாக, நீர் ஆனது பாறைகளுடன் தொடர்பு கொள்ளும்போது உருவாகின்றன.
- ❖ நமது சூரிய குடும்பத்தில் மூன்றாவது பெரிய கோளான யுரேனஸைச் சுற்றி வரும் 27 துணைக் கோள்களில் ஏரியலும் ஒன்றாகும்.




## புதிய சயனைடு உணர்வி




- ❖ கேரளாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அதிக உணர்திறன் மற்றும் தெரிவு நிலை சயனைடு உணர்வி ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஒரு புதிய இரசாயன உணர்வு நுட்பத்தினை உருவாக்கியுள்ளனர்.
- ❖ இந்தக் குழுவானது குறைந்தச் செறிவில் உள்ள நச்சுத் தன்மை வாய்ந்த சயனைடைக் கண்டறியும் திறன் கொண்ட ஒரு பொருளை உருவாக்கியுள்ளது.
- ❖ இது குடிநீர் மற்றும் உணவுப் பொருட்களின் பாதுகாப்பை மேம்படுத்தும்.
- ❖ ஒரு சக்தி வாய்ந்த நச்சுப் பொருளான சயனைடு பல்வேறு தாவரங்கள், பழங்கள் மற்றும் நுண்ணுயிரிகளில் காணப்படுகிறது.

- மனிதர்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் மீது கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் லிட்டருக்கு 0.19 மில்லி கிராமிற்கும் குறைவான செறிவு வரம்பினை உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்துள்ளது.
- மரவள்ளிக்கிழங்கு போன்ற சில உணவுகள் மற்றும் ஆப்பிள் மற்றும் பாதாமி விதைகள், முளைத்த உருளைக்கிழங்கு மற்றும் பாதாம் போன்ற பல்வேறு பொதுவான பொருட்களை உட்கொள்வதன் மூலம் சயனைடு நச்சு உடலில் புகும்.

## எளிய CRISPR முறை




- அறிவியலாளர்கள் தற்போது CRISPR எனப்படும் மரபணு மாற்ற முறையினைப் பயன்படுத்தி, விரும்பத்தக்க மரபணு பண்புகளை அறிமுகப்படுத்துவதற்கும் அல்லது விரும்பத்தகாத பண்புகளை அகற்றுவதற்காக மரபணுக்களைத் துல்லியமாக திருத்தி அமைக்க முடியும்.
- இருப்பினும், பொதுவாகப் பயன்படுத்தப் படும் CRISPR முறையின் வடிவமானது தாவர மரபணுக்களுக்கு பொருந்தாதது எனபது இதில் ஒரு முக்கியமான தடையாக உள்ளது.
- இந்த அமைப்பானது டிஎன்ஏவின் மிகவும் சில குறிப்பிட்டப் பகுதிகளை இலக்காக நிர்ணயிப்பதற்காக Cas9 அல்லது Cas12 என்ற இரண்டு புரதங்களில் ஒன்றைப் பயன்படுத்துகிறது.
- ஆனால் அவை தாவர செல்களுக்கு இடமளிக்க முடியாத அளவிற்குப் பெரிதானவை.
- தாவர மரபணு மாற்றச் செயல்முறையில் உள்ள இந்தப் பெரிய சிக்கலைத் தீர்க்கக் கூடிய ஒரு மாற்றீட்டை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் முன் வைத்தனர்.
- அவர்கள் டெய்னோகாக்கஸ் ரேடியோடுரன்ஸ் என்ற பாக்டீரியாவிலிருந்து பெறப்பட்ட ISDra2TnpB என்ற ஒரு புரதத்தைக் கொண்ட தாவர மரபணு மாற்றக் கருவியினை உருவாக்கினர்.
- ISDra2TnpB ஆனது Cas9 மற்றும் Cas12 ஆகிய புரதங்களின் அளவின் பாதி அளவை விட குறைவாக உள்ளது.

## போலரிஸ் டான் ஆய்வுத் திட்டம்

- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் ஆனது, தனது போலரிஸ் டான் விண்வெளிப் பயணத் திட்டத்தில் அமெரிக்க கோடீஸ்வரர் ஜாரெட் ஐசக்மேன் மற்றும் மூன்று பேரை விண்வெளிக்கு அனுப்பவுள்ளது.
- பூமியின் மேற்பரப்பிலிருந்து 1,400 கிலோமீட்டர்கள் மேலே வணிக ரீதியானப் பயணத்திற்காக முன்னெப்போதும் நிர்ணயிக்கப்படாத சுற்றுப்பாதை உயரத்தை அடைவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஜெமினி 11 விண்வெளிப் பயணத் திட்டத்தின் சாதனையை முறியடிக்கும் மற்றும் அப்பல்லோ திட்டத்திற்குப் பிறகு மிக உயர்ந்த புவி சுற்றுப்பாதையில் மனிதர்கள் பயணம் மேற்கொண்ட சாதனையும் இது குறிக்கிறது.
- இந்த விண்வெளிப் பயணத் திட்டத்தில், டிராகன் விண்வெளிக் கலப் பெட்டகத்தில் காற்றடைப்பு நிலை இல்லாதது போன்ற தனித்துவமான சவால்கள் உள்ளன.
- இது உலகில் முதல் முறையாக தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் விண்வெளி நடை பயணத்தினை மேற்கொள்வதற்கான இந்த நிறுவனத்தின் முயற்சி ஆகும்.
- இந்த 20 நிமிட விண்வெளி நடை பயணமானது, அப்பயணத்தின் மூன்றாவது நாளில் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- இது பூமியில் இருந்து 434 மைல் (700 கிமீ) உயரத்தில் நடைபெறும்.



## mRNA நுரையீரல் புற்றுநோய் தடுப்பூசி




- ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட ஏழு நாடுகளில் 34 தளங்களில் BNT116 தடுப்பூசிக்கான முதல் கட்ட சோதனை நடைபெற்று வருகிறது.
- இது உலகின் முதல் mRNA அடிப்படையிலான நுரையீரல் புற்றுநோய் தடுப்பூசி ஆகும். இது பயோன்டெக் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- BNT116 தடுப்பூசி, நோயெதிர்ப்பு மண்டலமானது ஒருவகை நுரையீரல் புற்றுநோய் கட்டிகளை அடையாளம் காட்டும் குறிப்பான்களை குறி வைத்து ஆரோக்கியமான செல்களை விட்டு புற்றுநோய் செல்களைத் தாக்கச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆண்டுதோறும் சுமார் 1.8 மில்லியன் உயிரிழப்புகள் பதிவாகின்றதால், நுரையீரல் புற்றுநோயானது உலகளவில் புற்றுநோய் சார்ந்த உயிரிழிப்புகளுக்கு முதன்மையான காரணமாக உள்ளது.
- mRNA (தூது RNA) என்பது செல்களை அதன் இயற்கையான கட்டமைப்புகளைப் பயன்படுத்தி ஒரு புரதத்தை உருவாக்க வழிகாட்டும் சில வழிமுறைகள் அல்லது ஒரு செய்முறையைக் கொண்டுள்ள ஒரு மூலக்கூறு ஆகும்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் புலிகளின் உயிரிழப்பு 2024

- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் ஜூலை 29 ஆம் தேதி வரை 81 உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், இந்தியாவில் புலிகளின் உயிரிழப்பு எண்ணிக்கை மிகவும் கணிசமாகக் குறைந்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் 114 புலிகளின் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இது புலிகளின் உயிரிழப்புகளில் பதிவான 29 சதவீத சரிவைக் குறிக்கிறது.
- கடந்த பத்தாண்டுகளில் இல்லாத வகையில் 178 புலிகள் உயிரிழந்ததால் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் பதிவான ஆண்டாக 2023 ஆம் ஆண்டு உள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் இயற்கை காரணங்கள் மற்றும் வேட்டையாடுதல் உள்ளிட்ட காரணங்களால் இந்தியாவில் மொத்தம் 628 புலிகள் இறந்துள்ளன.
- இதற்கிடையில், இந்த காலக் கட்டத்தில் மட்டும் 349 பேர் புலிகளின் தாக்குதலில் கொல்லப் பட்டனர் என்ற நிலையில் இதில் மகாராஷ்டிராவில் மட்டும் 200 பேர் உயிர் இழந்துள்ளனர்.
- 2019 ஆம் ஆண்டில் 96 புலிகள், 2020 ஆம் ஆண்டில் 106, 2021 ஆம் ஆண்டில் 127, 2022 ஆம் ஆண்டில் 121 மற்றும் 2023 ஆம் ஆண்டில் 178 புலிகள் இறந்துள்ளன.




## உலகின் சதுப்புநிலங்களின் நிலை குறித்த அறிக்கை 2024




- இது உலகளாவியச் சதுப்புநிலக் கூட்டணி (GMA) என்ற அமைப்பினால் தயாரிக்கப் படுகிறது.
- இது 2020 ஆம் ஆண்டில் பதிவான 147,256 கிமீ$^2$ சதுப்புநிலங்களில் கணக்கெடுப்பினை மேற் கொண்டுள்ளதோடு மேலும் ஆறு புதியப் பிரதேசங்களுக்கான ஒரு தரவினையும் சேர்த்துள்ளது.
- பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், உலகில் எஞ்சியிருக்கும் சதுப்புநிலக் காடுகளில் 40% மட்டுமே பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ளன.
- மலேசியா மற்றும் மியான்மர் போன்ற சில நாடுகளில் 5 சதவீதத்திற்கும் குறைவான பாதுகாப்பு வசதிகளே உள்ளன.
- இந்தோனேசியாவில் மட்டும் உள்ள 21% சதுப்பு நிலங்களுடன், தென்கிழக்கு ஆசியா உலகின் மூன்றில் ஒரு பங்கு சதுப்புநிலங்களைக் கொண்டுள்ளது.
- இந்திய சதுப்புநிலங்களில் மட்டும் 21 குழுவினைச் சேர்ந்த 5,700 க்கும் மேற்பட்ட தாவர மற்றும் விலங்கு இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

- இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் மிகப்பெரிய சதுப்புநிலப் பகுதி அமைந்துள்ளது, அதனைத் தொடர்ந்து குஜராத் மாநிலத்தில், முக்கியமாக கட்ச் வளைகுடா மற்றும் காம்பத் வளைகுடாவில் மிகப்பெரிய சதுப்பு நிலம் அமைந்துள்ளது.
- மொத்தம் 5,746 இனங்களைக் கொண்டு, எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு பல்லுயிர்ப் பெருக்கத்தில் இந்தியா முதலிடத்தில் உள்ள நிலையில், இவற்றில் 4,822 இனங்கள் (84%) விலங்குகள் ஆகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பினை சுமார் 80% என்ற அளவாக இரட்டிப்பாக்குவதை உலகளாவிய சதுப்புநிலக் கூட்டணி நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## ஜெர்டனின் கல்குருவியின் வளங்காப்பு அந்தஸ்து

- ஜெர்டனின் கல்குருவியானது குறிப்பாக கடப்பாவில் உள்ள ஸ்ரீலங்காமல்லேஸ்வரா வனவிலங்குச் சரணாலயத்தில் உள்ள அதுவும் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் மட்டுமே காணப் படுகின்ற மிகவும் அருகி வரும் உயிரினமாகும்.
- இது உள்நாட்டில் கலிவி கோடி என்று அழைக்கப்படுகிறது.
- எனினும், இந்த அரிதான பறவையானது சில பத்தாண்டுகளுக்கும் மேலாக தென்பட வில்லை.
- இது உலகின் 50 அரிய பறவைகளில் கலிவி கோடியும் ஒன்றாக பட்டியலிடப் பட்டு உள்ளது.
- 1900 ஆம் ஆண்டிற்குப் பிறகு எங்கும் தென்படாமல் இருந்த நிலையில், அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட இந்த இனமானது, கடப்பாவில் உள்ள ரெட்டிப் பள்ளி என்ற கிராமத்திற்கு அருகே 1986 ஆம் ஆண்டில் அதிசயமாக மீண்டும் தென்பட்டது.




## மரங்களின் பரவல் அதிகரிப்பின் தாக்கம்

- வெப்ப மண்டலப் புல்வெளிகள் மற்றும் புல்வெளிகள் போன்ற திறந்தவெளி சுற்றுச் சூழல் அமைப்புகளில் அதிகமான மரங்கள் காணப்படுவது உள்நாட்டு புல்வெளி வாழ் பறவைகளின் எண்ணிக்கையை மிக கணிசமாகக் குறைத்துள்ளன என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- குறிப்பாக ஆப்பிரிக்க வெப்ப மண்டலப் புல்வெளி வாழ் பறவைகளின் எண்ணிக்கை 20 சதவீதத்திற்கும் மேல் குறைந்துள்ளது.
- புல்வெளிகள் மற்றும் வெப்ப மண்டலப் புல்வெளிகள் ஆனது பூமியின் மொத்த நிலப் பரப்பில் சுமார் 40% பகுதியினை ஆக்கிரமித்துள்ளன, மேலும் அவை பல உள்நாட்டு மற்றும் ஆபத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தாயகமாக உள்ளன.
- புல்வெளி வாழ்விடங்களின் பரப்பு ஆனது 34% குறைந்துள்ளதோடு, இந்த இடங்களில் மரங்களின் பரவல் 8.7% அதிகரித்துள்ளது.
- தற்போதையப் பருவநிலை மாற்றத்தின் காரணமாக காற்றில் காணப்படும் அதிக அளவு கார்பன் டை ஆக்சைடு ஆனது, புல்வெளிகளில் ஆழமாக வேரூன்றிய மரச்செடி கள் அதிகரிக்க வழிவகுக்கிறது.
- வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்ஸைடு அதிகரிப்பானது, புற்களுக்குப் பதிலாக மரங்களின் வளர்ச்சியினை மேம்படுத்தும், ஏனெனில் மரங்கள் பயன்படுத்தும் C3 ஒளிச்சேர்க்கைப் பாதையானது அதிக $CO_2$ உள்ள சூழ்நிலைகளில் மேற்கொள்ளப் படுகிறது.
- ஒரு சூழலமைப்பில் மரங்கள் அதிகப் பரவலில் அமைந்தால், அவை நிழல் மற்றும் தீயைக் கட்டுப்படுத்துவதன் மூலம் புற்களின் வளர்ச்சியினை மேலும் கட்டுப்படுத்தும்.




## நான்கு வட்டன் வண்ணத்துப் பூச்சி

- சீனாவில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு வட்டன் வண்ணத்துப் பூச்சியானது 61 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் மீண்டும் தென்பட்டுள்ளது.
- பெரிய நான்கு வட்டன் (யிப்திமா காண்ட்டிலெய்) சட்யிரினே வண்ணத்துப் பூச்சி இனமாகும்.
- இது கடைசியாக 1957 ஆம் ஆண்டில் (கிழக்கு) அசாமின் மார்கெரிட்டா எனுமிடத்தில் தென்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
- நிம்ஃபாலிடே குடும்பத்தில் சுமார் 6,000 வகையான வண்ணத்துப் பூச்சிகள் உள்ளன.

- இந்தியாவில் பதிவாகியுள்ள இந்த 35 யிப்திமா இனங்களில் 23 இனங்கள் வடகிழக்குப் பகுதிகளில் காணப்படுவதாக பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள 1,327 வகையான வண்ணத்துப் பூச்சிகளில் 600க்கும் மேற்பட்டவை அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ளன.



## இந்தியாவில் மீத்தேன் தணிப்பான்




- மிகப் பிரதானமாக மேற்கு இந்தியாவில் உள்ள நெல் வயல்களிலும் ஈரநிலங்களிலும் உள்நாட்டு மீத்தேன்-தணிப்பு காரணிகளின் முதல் மாதிரிகள் கண்டறியப்பட்டுள்ளன.
- மீத்தேன் ஒரு சக்திவாய்ந்த பசுமை இல்ல வாயு ஆகும் என்பதோடு இது கார்பன் டை ஆக்சைடை விட 26 மடங்கு புவியை வெப்பமாக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- இது மீத்தனோட்ரோப்ஸ் எனப்படுகின்ற மீத்தேன் உண்ணும் பாக்டீரியாக்களால் இயற்கையாகவே குறைக்கப்படுகின்றன.
- மெத்திலோகுகுமிஸ் ஒரைசே பாக்டீரியம் ஒரு புதியப் பேரினம் மற்றும் பாக்டீரிய இனமாகும்.
- இந்த பாக்டீரியாக்கள் மீத்தேன் வாயுக்களை ஆக்சிஜனேற்றம் செய்து, $CO_2$ மற்றும் $H_2O$ ஆகியவற்றினை உருவாக்கி, அதன் மூலம் மீத்தேன் உயர்வினைத் தடுக்கிறது.

- மெத்திலோகுகுமிஸ் ஒரைசே என்பது நெற்பயிர் வளர்ச்சியை ஊக்குவிப்பத்தோடு, முன் கூட்டியே பூக்கள் பூப்பதையும் தூண்டி, தானிய விளைச்சலை அதிகரிக்கிறது.

## மியோம்போ வனப் பாதுகாப்பு

- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் இத்தாலிய மேம்பாட்டுக் கழகம் (AICS) ஆகியவை மியோம்போ வனப் பாதுகாப்பிற்கான இரண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- மொசாம்பிக் மற்றும் ஜிம்பாப்வே எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மியோம்போ காடுகளைப் பாதுகாப்பதற்கும் அங்கு மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தை எளிதாக்குவதற்குமான திட்டங்களை அவை செயல்படுத்த உள்ளன.
- முதல் திட்டம் ஆனது, மியோம்போ காடுகளின் நிலையான ஒருங்கிணைந்த எல்லை சார் மேலாண்மை திட்டமாகும்.
- இரண்டாவது திட்டம் ஆனது, "சிம்-மோசா வேளாண் மதிப்பு சங்கிலி மற்றும் வர்த்தக மேம்பாட்டு திட்டம்" (Zim-Moza ATDP) ஆகும்.
- மியோம்போ என்பது வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டலப் புல்வெளிகள், புதர் நிலங்கள் மற்றும் சவானாக்கள் ஆகியவற்றைப் பெருமளவில் உள்ளடக்கிய ஒரு உயிரியல் அமைப்பாகும்.
- இது நான்கு உயிரியல் சூழல் பகுதிகளை உள்ளடக்கியது என்பதோடு மேலும் இது மிக முக்கியமான எல்லை கடந்த ஆற்றுப் படுகைகளில் ஒன்றான கிரேட்டர் ஜாம்பேசி பகுதிகளின் வளத்தினைக் காக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது.




## எதிர்பாராத பனிப்பாறை பின்னடைவு நிகழ்வு


- மனித நாகரிக வரலாற்றில் இதுவரையில் எதிர்பாராத வகையில் ஆண்டிஸ் மலைத் தொடர் முழுவதிலும் உள்ள பனிப்பாறைகள் உருகத் தொடங்கியுள்ளன.

- பெரிலியம்-10 மற்றும் கார்பன்-14 நியூக்ளைடு அளவினை அளவிட செய்வதன் மூலம், உருகிய பனிப்பாறைகளால் சமீபத்தில் வெளிப்பட்ட பாறைகளை கதிரியக்க கார்பன் கணிப்பு முறையில் மதிப்பிட்ட அறிவியலாளர்கள் அவற்றின் செறிவுகள் கிட்டத்தட்ட சுழியாக இருப்பதைக் கண்டறிந்தனர்.
- இந்த பனிப்பாறைகள் சுமார் 115,000 ஆண்டுகளுக்கு முன்பு நிறைவடைந்த கடைசிப் பனி ஊழி இடைக்காலத்திலிருந்து இருந்ததை விட சிறிய அளவிலேயே உள்ளன.
- 11,700 ஆண்டுகளுக்கு முந்தைய ஹோலோசீன் சகாப்தத்தில் இந்தப் பாறைகள் தென்படவில்லை.




## புதிய மயில்கள் சரணாலயங்கள் 2024


- கர்நாடகாவில் உள்ள ஆதிசுஞ்சனகிரி மற்றும் கேரளாவில் சூலன்னூர் ஆகிய இடங்களை மயில்கள் சரணாலயமாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தச் சரணாலயங்கள் ஆனது மயில்கள் மனித இடையூறு இல்லாமல் வாழவும் எண்ணிக்கையில் செழித்து வளரவும் ஒரு பாதுகாப்பான இடத்தை வழங்குகின்றன.
- மயில் வளங்காப்பு என்பது இந்திய நீல மயில் மற்றும் பச்சை மயில் ஆகிய இரண்டையும் பாதுகாப்பதை உள்ளடக்கியது.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் படி பச்சை மயில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.





## நீலக்குறிஞ்சி – அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்கள்

- நீலக்குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா) மலரானது, IUCN அமைப்பின் (சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம்) அச்சுறுதல் நிலையில் உள்ள உயிரினங்கள் அடங்கிய அதிகாரப்பூர்வ செந்நிறப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ஊதா நிற மலர்களைக் கொண்ட இந்தப் புதர்ச் செடியினம் ஆனது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.
- உலகளாவிய செந்நிறப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்காக, தென்மேற்கு இந்தியாவின் மலை சார் புல்வெளிகளில் காணப்படும் இந்த முதன்மை இனம் மதிப்பீடு செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இவற்றினுடைய சுமார் 40% வாழ்விடங்கள் அழிந்து விட்டன என்ற நிலையில் மீதமுள்ள வாழிடங்கள் ஆனது யூகலிப்டஸ் (தைல மரம்) மற்றும் கரு வேலம் போன்ற அயல்நாட்டு இனங்களின் ஆக்கிரமிப்பின் காரணமாக நெருக்கடியான நிலையில் உள்ளன.




## புதிய இராம்சர் தளங்கள் – இந்தியா



- திருப்பூரில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் மற்றும் விழுப்புரத்தில் உள்ள கழுவேலி பறவைகள் சரணாலயம் ஆகியவை சமீபத்தில் சர்வதேச அங்கீகாரத்தினை பெற்றுள்ளன.
- இந்தப் புதிய சேர்க்கைகளின் மூலம், தமிழகத்தில் உள்ள இராம்சர் தளங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது இந்திய மாநிலங்களிலேயே அதிகபட்ச எண்ணிக்கையாகும்.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள தவா நீர்த்தேக்கம் ஆனது தற்போது இராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள இராம்சர் தளங்களின் (மொத்த இராம்சர் தளங்களின் பரப்பு 13,58,068 ஹெக்டேர் பரப்பளவு) எண்ணிக்கையை 85 ஆக உயர்த்தியுள்ளது.
- 1982 முதல் 2013 ஆம் ஆண்டு வரை, நாட்டில் உள்ள இராம்சர் தளங்களின் பட்டியலில் மொத்தம் 26 தளங்கள் சேர்க்கப்பட்டன.
- 2014 முதல் 2024 ஆம் ஆண்டு வரை, இந்தியா 59 புதிய ஈரநிலங்களை இராம்சர் தளங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.
- தற்போது, தமிழ்நாடு அதிகபட்ச இராம்சர் தளங்களை (18 தளங்கள்) கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (10 தளங்கள்) இடம் பெற்றுள்ளது.
- ஐக்கியப் பேரரசு (175) மற்றும் மெக்சிகோ (142) ஆகியவை மிகவும் அதிகபட்ச இராம்சர் தளங்களைக் கொண்டுள்ளன.
- பொலிவியா நாடானது அதிக பரப்பளவை (148,000 சதுர கிமீ) இந்த உடன்படிக்கையின் பாதுகாப்பை பெறுவதற்கான இப்பட்டியலில் சேர்த்துள்ளது.


## 400 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கான வெப்பமான நீர்



- ஆஸ்திரேலியாவின் பெருந்தடுப்பு பவளத் திட்டுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள கடல் நீரின் வெப்பநிலை கடந்தப் பத்தாண்டுகளில், 400 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.
- அதன் வடக்கு மாநிலமான குயின்ஸ்லாந்தின் கடற்கரையிலிருந்து சுமார் 2,400 கிமீ தொலைவு வரை இந்தப் பவளத் திட்டுகள் நீண்டு காணப்படுகின்றன.
- 1960 முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை சராசரியாக 0.12 டிகிரி செல்சியஸ் (0.22 டிகிரி பாரன்ஹீட்) வெப்பநிலை அதிகரித்தது.
- 600 வகையான பவளப்பாறைகள் மற்றும் 1,625 மீன் இனங்கள் மட்டும் உள்ள இந்தப் பவளத் திட்டுகள் பல்வேறு வகையான இயற்கை இனங்களின் தாயகமாகும்.
- 2016 ஆம் ஆண்டிலிருந்து, உலகப் புகழ்பெற்ற இந்தப் பவளத் திட்டுகள் அதிக வெப்ப உயர்வினை உண்டாக்கும் உயர் வெப்பநிலை காரணமாக ஐந்து முறை மாபெரும் பவளப் பாறை வெளுப்பு நிலையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

## மத்திய இந்திய காடுகளில் உள்ள அபாயம்

- மத்திய இந்தியாவின் கந்த்வா மற்றும் வடக்கு பெதுல் பிரிவுகளில் உள்ள காடுகள் காட்டுத் தீயால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளன.
- கந்த்வாவில் வருடத்திற்கு மேலும் மூன்று தீ விபத்துகளும், வடக்கு பெதுல் பகுதியில் மேலும் ஒரு தீ விபத்தும் பதிவாகியுள்ளதால் அங்கு ஏற்படும் பல்வேறு தீ விபத்துகளின் எண்ணிக்கையில் சிறிது அதிகரிப்புப் பதிவாகியுள்ளதை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- கந்த்வாவின் 45 சதவீதக் காடுகளும், வடக்கு பெதுலின் காடுகளில் 50 சதவீதமும் அதிக அல்லது மிக அதிக அளவில் தீ விபத்திற்கு உள்ளாக கூடிய அபாய மண்டலங்களுக்குள் உள்ளன.
- கந்த்வாவில், இந்த அதிக அளவில் தீ விபத்திற்கு உள்ளாக கூடிய பகுதிகள் முக்கியமாக கல்வா, கிழக்கு கலிபித், மேற்கு கலிபித், சந்த்கர் மற்றும் ஆன்லியா மலைத்தொடர்கள் உள்ளிட்ட வடக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் உள்ளன.
- வடக்கு பெதுலில், இந்தப் பகுதிகள் வடமேற்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளான ஷாபூர், பெதுல், சர்னி மற்றும் பௌரா போன்ற பகுதிகளில் அமைந்துள்ளன.



## காஸ்ட்ரோடியா இண்டிகா

- காஸ்ட்ரோடியா இண்டிகா எனப்படும் ஒரு தனித்துவமான ஆர்க்கிட் (வண்ணமலர்ச் செடி) இனம் ஆனது, சமீபத்தில் சிக்கிமின் ஃபாம்போங்லோ என்ற வனவிலங்குச் சரணாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த ஆர்க்கிட் இனத்தின் மலர் விரியும் தன்மையற்றது.
- இது இந்தியாவில் அறியப்பட்ட முதல் தற்கருவுறுதல் (கிளிஸ்டோகாமஸ்) ஆர்க்கிட் இனமாகும்.
- இந்த கண்டுபிடிப்பு ஆனது இந்தியாவில் காணப்படும் காஸ்ட்ரோடியா இனங்களின் எண்ணிக்கையைப் பத்தாக உயர்த்தியுள்ளது.




## சிறு குறிஞ்சான் (குர்மர்)

- பீகாரில் உள்ள கயாவில் அமைந்த பிரம்மயோனி என்ற மலையில் காணப்படும் பல மருத்துவ குணம் கொண்ட தாவரங்களில் பொதுவாக குர்மர் எனப்படும் ஜிம்னிமா சில்வெஸ்ட்ரை (சிறு குறிஞ்சான்) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- குர்மர் நீரிழிவு நோய்க்கான எதிர்ப்புத் திறன் கொண்ட ஒரு மூலிகை என்று அறியப் படுகிறது.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மையமானது (CSIR) ஏற்கனவே BGR-34 எனப்படும் நீரிழிவு நோய் எதிர்ப்பு மருந்தை உருவாக்க இந்த மருத்துவம் குணம் கொண்ட மூலிகையைப் பயன்படுத்தியுள்ளது.
- இந்த மூலிகையில் ஜிம்னெமிக் அமிலம் இருப்பதால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்கும் அதன் தனித்துவமான திறனுக்காக குர்மர் அறியப்படுகிறது.



## பூமியின் சுழற்சி இயக்கவியல்




- துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகும் நிகழ்வானது புவியை மெதுவாகச் சுழலச் செய்துள்ளதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது ஒரு நாளின் உண்மையான கால அளவில் சிறிய மாற்றங்களுக்கு வழிவகுக்கும்.
- ஏனெனில் ஒரு ஸ்கேட்டர் எந்த வகையில் சுழன்றாலும் நிலைமத் திருப்புத் திறன் மற்றும் கோணத் திசைவேகத்தின் பெருக்கற்பலனான கோண உந்தம் ஆனது கடை பிடிக்கப் படுகிறது.
- அதே போல பனிக்கட்டிகள் உருகும் போதும், பூமியின் வளைவு அதிகரித்து, பூமத்திய ரேகையை (நிலநடுக்கோடு) சுற்றியுள்ள பகுதி சிறிது நீளமாகிறது.
- நிலைமத் திருப்புத் திறன் அதிகரிப்பதால், சுழற்சி விகிதம் குறைகிறது.
- பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள கடல் மட்டங்களில் மாறி வருகின்ற பருவநிலை ஏற்படுத்தும் விளைவுகள் பூமியின் சுழற்சி வீதத்தை ஒரு நூற்றாண்டுக்கு சுமார் 1.3 மில்லி விநாடிகள் (ms) குறைத்துள்ளன.
- நிலவு ஓத உராய்வு அல்லது பூமியின் பெருங்கடல்களின் நீரில் நிலவின் இழு விசையால் ஏற்படும் ஓத மாற்றங்கள் எனப்படும் ஒரு செயல்முறையானது, ஏற்கனவே கிரகத்தின் சுழற்சியை ஒரு நூற்றாண்டுக்கு 2 ms என்ற வேகத்தில் குறைத்து வருகிறது.
- எனவே, அணுக் கடிகாரங்களால் கணிக்கப்பட்டுள்ள நேரத்தை விட, பூமி ஒரு நாளை நிறைவு செய்ய சுமார் 2 ms என்ற அதிக நேரம் எடுத்துக் கொண்டால், ஒரு 100 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாளில் சுமார் 4 மில்லி விநாடிகள் அதிகரிக்கும்.
- மில்லி விநாடிகள் அதனுடன் கூட்டப்படும் போது, புவி சுழற்சியின் வேகத்திற்கு ஈடு செய்வதற்காக லீப் விநாடிகள் கூடும்.

## அதி இரசாயனத் தன்மை கொண்ட இரசாயனங்களின் தோற்றுரு

- அதி இரசாயனத் தன்மை கொண்ட (அழிக்க முடியாத) இரசாயனங்களின் தோற்றம் மற்றும் அவை காணப்படும் இடங்களைக் கண்டறிவதற்காக அமெரிக்க அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் ஒரு முறையைக் கண்டறிந்துள்ளனர்.

- இந்த இரசாயனங்கள் அறிவியல் ரீதியாக பெர் மற்றும் பாலிஃப்ளூரோ அல்கைல் பொருட்கள் (PFAS) என அழைக்கப் படுகின்றன.
- நீர் எதிர்ப்புத் திறன் கொண்ட, வெப்ப எதிர்ப்புத் திறன் கொண்ட சலவைப் பொருட்கள், உணவுப் பொட்டலங்கள் மற்றும் ஒட்டாதத் தன்மை தொழில்நுட்பங்கள் போன்ற பயன்பாடுகளில் அவை பொதுவாகப் பயனுள்ளதாக இருக்கும்.
- அவை சுற்றுச்சூழலில் தங்கி மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களின் உடல் ஆரோக்கியத்தையும் மிகவும் மோசமாகப் பாதிக்கும் சுற்றுச்சூழல் சீரழிவிற்கு வழி வகுக்கின்றன.





## குதிரைலாட நண்டுகளுக்கு அடையாளமிடல்




- இந்திய விலங்கியல் ஆய்வு (ZSI) நிறுவனம் மற்றும் ஒடிசா மாநில வனத்துறை ஆகியவை ஒடிஸா மாநிலத்தின் கடற்கரையோரங்களில் காணப்படும் குதிரைலாட நண்டுகளுக்கு அடையாளமிடும் செயல்முறையினைத் தொடங்குவதற்காக வேண்டி கைகோர்த்துள்ளன.
- அதன் வளங்காப்பு மற்றும் மேலாண்மைக்காக அவற்றின் எண்ணிக்கை மற்றும் வாழ்விடப் பயன்பாட்டைப் புரிந்து கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- குதிரைலாட நண்டுகள் பூமியில் வாழும் பழமையான உயிரினங்களில் ஒன்றாகும், என்பதோடு அவை மருத்துவ ரீதியாகவும் மிக மதிப்புமிக்க இனமாகும்.
- இந்தியாவில் இரண்டு வகையான குதிரைலாட நண்டு இனங்கள் உள்ளன; அவை - டச்சிப்ளஸ் கிகாஸ் மற்றும் கார்சினோஸ்கார்பியஸ் ரோட்டுண்டிகாடா (சதுப்புநிலம்) ஆகியனவாகும்.
- குதிரை லாட நண்டுகள், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான 2வது பட்டியலில் இடம் பெற்றுள்ள இனமாகும்.

## அண்டார்டிகாவில் காணப்படும் அயல்நாட்டு இனங்கள்




- அண்டார்டிக் தீபகற்பம் அயல்நாட்டு உயிரினங்களின் அறிமுகத்தினால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய பகுதியாகும்.
- அண்டார்டிகாவில் கரை ஒதுங்கும் பொருள்கள் அயல் இனம் சார்ந்த மலர் மற்றும் விலங்கினங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றன.
- அவை அந்தக் குளிர்ந்த சூழ்நிலையில் உயிர் வாழக் கூடியதாக இருந்தால், அவை உள்நாட்டு இனங்களை அழிக்கும்.
- மெக்குவாரி தீவு ஆனது அண்டார்டிகாவுடன் மிக அதிகத் தொடர்பை கொண்டுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து கெர்குலென் தீவுகள் மற்றும் தெற்கு ஜார்ஜியா ஆகியவை கொண்டுள்ளன.
- ஆஸ்திரேலியா (டாஸ்மேனியா) அண்டார்டிகாவுடன் மிகவும் குறைந்த தொடர்பைக் கொண்டுள்ளது என்ற ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்கா மற்றும் கோஃப் தீவு ஆகியவை உள்ளன.

## அசாமில் மிதுன்

- அசாம் மாநிலத்தில் முதன்முறையாக மிதுன் (Bos frontalis) எனப்படும் காயல் மாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- மிதுன் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் நாகாலாந்து ஆகியவற்றின் மாநில விலங்கு ஆகும்.

- இது மிசோரம் மற்றும் மணிப்பூர் மலைப்பகுதிகளிலும் காணப்படுகிறது.
- இது முதன்மையாக அதன் இறைச்சிக்காக வளர்க்கப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில், இந்தியாவில் காணப்பட்ட மிதுன்களின் எண்ணிக்கை 3,86,311 ஆகும்.



## பனிப்பாறை ஏரிகள் பற்றிய ஆய்வு

- மத்திய அரசானது தேசிய பனிப்பாறை ஏரி உடைப்பு சார்ந்த வெள்ள அபாயக் குறைப்புத் திட்டத்திற்கு (NGRMP) அங்கீகாரம் அளித்துள்ளது.
- இந்தியாவில் அமைந்துள்ள இமயமலைத் தொடர்களில் ஏறக்குறைய 7,500 பனிப் பாறை ஏரிகள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் சில தொலை உணர்வு கருவிகள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.
- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) ஆனது, இடரைக் குறைப்பதற்கான தணிப்பு நடவடிக்கைகளுக்காக 189 "அதிக ஆபத்து நிலையில் உள்ள" பனிப்பாறை ஏரிகளின் பட்டியலை இறுதி செய்துள்ளது.
- மத்திய நீர் வள ஆணையம் (CWC) ஆனது 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாததத்தின் அறிக்கையில் 902 பனிப்பாறை ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்கப்படுவதாகக் கூறியது.



## பெரிய தேவாங்கு - அசாம்

- சிராங்-பூடான் எல்லைக்கு அருகில் உள்ள சாந்திப்பூரில் இருந்து பெரிய தேவாங்கு (ஸ்லோ லோரிஸ்) தென்பட்டுள்ளது.
- இந்தப் பகுதியில் இந்தக் காண்பதற்கு அரிய (முதனி உயிரினத்தொகுதி) இனமானது கண்டறியப்பட்ட முதல் பதிவினை இது குறிக்கிறது.
- மொத்தம் ஒன்பது பெரிய தேவாங்கு இனங்கள் உள்ளன.
- அவை தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் மட்டுமே காணப்படுகின்றன.
- பெரிய தேவாங்கு இனங்கள் உலகின் ஒரே விஷமுள்ள முதனி தொகுதி விலங்குகள் ஆகும்.
- வங்காள பெரிய தேவாங்கு (நைக்டிசெபஸ் பெங்காலென்சிஸ்) ஆனது IUCN பாதுகாப்பு அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் நிலையில் உள்ள ஒரு இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## கல்வியில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம்

- பெரும்பாலான குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் ஒவ்வோர் ஆண்டும் பருவநிலை தொடர்பான பள்ளிச் செயல்பாட்டு முடக்கங்களை எதிர் கொண்டு வருகின்றன என்ற நிலையில்  இதனால் கற்றலில் இழப்பு மற்றும் பள்ளிக் கல்வி இடை நிறுத்தம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.
- பருவநிலை மாற்றம் ஆனது மக்களைப் புலம் பெயரச் செய்வதன் மூலமும், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் மூலமும் கல்வியில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- கடந்த 20 ஆண்டுகளில், குறைந்தபட்சம் 75% தீவிர வானிலை நிகழ்வுகளில் பள்ளிகள் மூடப் பட்டன என்ற நிலையில் இது சுமார் ஐந்து மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மக்களைப் பாதித்தது.
- அமெரிக்காவில், குளிரூட்டல் வசதி இல்லாமல், ஒரு பள்ளி ஆண்டு 1 டிகிரி செல்சியஸ்

அதிக வெப்பமாக இருந்தது என்ற நிலையில் தேர்வு மதிப்பெண்களில் 1% குறைப்பிற்கு இது வழி வகுத்தது.

- 2022 ஆம் ஆண்டில், பல பேரிடர்கள் காரணமாக 32.6 மில்லியன் பேர் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தனர்.
- இந்தியாவில் மழைப் பொழிவானது, ஒரு குழந்தையின் முதல் 15 ஆண்டுகளில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.
- இது ஐந்து வயதில் மொழிசார் மற்றும் 15 வயதில் கணிதம் மற்றும் அறிவாற்றல் சாராத திறன் கற்றலில் எதிர்மறையானத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.




## மாறி வரும் உலகில் இளம் பருவத்தினர்

- 77வது உலக சுகாதார சபையில் வெளியிடப்பட்ட அறிக்கையானது, PMNCH-தாய், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான கூட்டாண்மை மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இளம் பருவத்தினரின் நல்வாழ்வை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட திட்டங்களில் முதலீட்டைக் கணிசமாக அதிகரிக்க அனைத்துப் பங்குதாரர்களும் தவறினால், அதிர்ச்சிகரமான பொருளாதாரச் செலவினம் ஏற்படும் என இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.
- இது 2024 முதல் 2050 ஆம் ஆண்டு வரையில் 110 டிரில்லியன் டாலர் (நன்மைகள்) உலகளாவிய இழப்புகளுக்கு வழிவகுத்தது.
- இது ஆண்டிற்கு 4.1 டிரில்லியன் டாலர் அல்லது இதில் உள்ளடக்கப்பட்ட நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.7 சதவிகிதம் ஆகும்.
- இந்த அறிக்கையானது உலக மக்கள் தொகையில் சுமார் 80 சதவீதத்தினை உள்ளடக்கியது.
- இளம் பருவத்தினருக்கான சுகாதாரச் சேவைகளுக்கான திட்டங்கள் ஆனது, முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு டாலருக்கும் 9.6 வருமானத்தை அளிக்கும் என்று மதிப்பிடப் பட்டு ள்ளது.

- இளம் பருவத்தினருக்கான கல்வி மற்றும் பயிற்சியில் முதலீடு செய்யும் போது முதலீடு செய்யப் படும் ஒவ்வொரு டாலருக்கும் 28.6 டாலர் வருமானம் கிடைக்கும்.

*Table 1.1* ***The five domains and sub-domains of adolescent well-being***

| Good health and optimum nutrition | Connectedness, positive values and contribution to society | Safety and a supportive environment | Learning, competence, education, skills and employability | Agency and resilience |
|---|---|---|---|---|
| > Physical health and capacities<br>> Mental health and capacities<br>> Optimal nutritional status and diet | > Connectedness<br>> Values<br>> Attitudes<br>> Interpersonal skills<br>> Activity<br>> Change and development | > Safety<br>> Material conditions<br>> Equity<br>> Equality<br>> Non-discrimination<br>> Privacy<br>> Responsive | > Learning<br>> Education<br>> Resources, life skills and competencies<br>> Skills<br>> Employability<br>> Confidence | > Agency<br>> Identity<br>> Purpose<br>> Resilience<br>> Fulfilment |

## டைம்ஸ் இதழின் 2024 ஆம் ஆண்டின் உலகின் மிகச்சிறந்த இடங்கள்

- டைம் இதழ் ஆனது சமீபத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான 'உலகின் மிகச்சிறந்த இடங்களின்' பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இது "தங்கள் துறையிலும் உலகளவிலும் தனித்து நிற்கும்" சுமார் 100 அசாதாரண நிறுவனங்களை உள்ளடக்கியது.
- இந்தப் பட்டியலில் இரண்டு இந்திய இடங்கள் இடம் பெற்றுள்ளன:
  - ஹைதராபாத்தில் உள்ள மனம் சாக்லேட் உற்பத்தி நிறுவனம்
  - இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள நார் பகுதி
  - மும்பையில் உள்ள Museum of Solutions அருங்காட்சியகம் (MuSo).

## உலக சுங்க வரி விவரங்கள் 2024

**All products**

| Country/Territory | Year of MFN applied tariff | Binding coverage | Simple average | | Duty free | | Non ad valorem duties | | Duties > 15 % | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Bound | MFN applied | Bound | MFN applied | Bound | MFN applied | Bound | MFN applied |
| | | in % | | | Share of HS 6 digit subheadings in per cent | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| Guyana | 2023 | 100 | 57.0 | 11.7 | 0 | 9.6 | 0 | 0.0 | 100.0 | 26.7 |
| Haiti | 2023 | 87.7 | 18.7 | 4.8 | 5.2 | 45.4 | 8.4 | 0.0 | 52.3 | 5.6 |
| Honduras | 2023 | 100 | 31.8 | 5.7 | 1.9 | 51.2 | 0 | 0 | 89.5 | 0.7 |
| Hong Kong, China | 2023 | 49.7 | 0 | 0 | 49.7 | 100.0 | 0 | 0 | 0 | 0 |
| Iceland | 2023 | 95.0 | 24.0 | 3.3 | 43.6 | 94.5 | 3.2 | 2.9 | 32.2 | 4.5 |
| India | 2023 | 74.3 | 50.8 | 17.0 | 2.2 | 1.8 | 5.0 | 4.1 | 71.5 | 30.9 |
| Indonesia | 2023 | 96.3 | 37.1 | 8.0 | 2.4 | 13.3 | 0 | 0.2 | 90.6 | 9.3 |
| Israel | 2023 | 75.6 | 22.3 | 1.3 | 10.7 | 83.5 | 6.8 | 3.0 | 20.9 | 2.4 |

- உலக வர்த்தக அமைப்பு (WTO), சர்வதேச வர்த்தக மையம் (ITC) மற்றும் UN வர்த்தகம் மற்றும் மேம்பாடு (UNCTAD) அமைப்பு ஆகியவற்றால் 2024 ஆம் ஆண்டு உலக சுங்க வரி விவரங்கள் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- உலக வர்த்தக அமைப்பு (WTO) நாடுகளில் இறக்குமதி குவிப்பு தடுப்பு வரிகளைத் அறிமுகப் படுத்தி, அதனை விதிப்பதில் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது நாடாக உள்ளது.

- 2023 ஆம் ஆண்டில் சுங்க வரிகள் அல்லாத நடவடிக்கைகளின் பயன்பாடு அதிகரித்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் 18.1 சதவீதமாக இருந்த இந்தியாவின் சராசரி சுங்க வரிகள் 17 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், இந்தியா 45 இறக்குமதி குவிப்புத் தடுப்பு விசாரணைகளைத் தொடங்கி, 14 வழக்குகளில் வரிகளை விதித்தது.
- ஆனால் அமெரிக்கா சுமார் 64 விசாரணைகளைத் தொடங்கி 14 வழக்குகளில் கூடுதல் வரிகளை விதித்தது.
- இந்தியாவில் மொத்தம் 133 என்ற அளவில் இறக்குமதி குவிப்பு தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு, 418 தயாரிப்புகள் மீது வரி விதிக்கின்றது.
- 2022 ஆம் ஆண்டில், இந்தியா 29 இறக்குமதி குவிப்பு தடுப்பு விசாரணைகளுடன் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர் நாடுகளுள் முன்னிலையில் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 14.7 சதவீதமாக இருந்த வேளாண்மை சாராத இறக்குமதிக்கான சராசரி சுங்க வரியானது 2023 ஆம் ஆண்டில் 13.5 சதவீதமாக குறைந்துள்ளது.
- வேளாண் சார் சுங்க வரிகளும் 39.6 சதவீதத்திலிருந்து 39 சதவீதமாகக் குறைந்துள்ளது.

## 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய வேளாண் ஏற்றுமதி

- உலகிலேயே வேளாண் பொருட்களை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் எட்டாவது நாடாக இந்தியா தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் சுமார்55 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் வேளாண் ஏற்றுமதியானது 2023 ஆம் ஆண்டில் 51 பில்லியன் டாலராகக் குறைந்தது.
- ஒட்டு மொத்தமாக, ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள பத்து நாடுகள் 2023 ஆம் ஆண்டில் உலக ஏற்றுமதியில் 71.9 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.
- இந்திய நாடானது 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவான கோதுமையின் ஏற்றுமதி மீதும், 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாஸ்மதி ரகம் சாராத அரிசியின் ஏற்றுமதிக்கும் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சர்க்கரையின் ஏற்றுமதிக்கும் தடை விதித்தது.
- 2022 ஆம் ஆண்டில் 799 பில்லியனாக இருந்த அளவினை விட 2023 ஆம் ஆண்டில் 836 பில்லியன் டாலர் மதிப்பிலான வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் தனது முன்னணி நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவானது 198 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான வேளாண் பொருட்கள் ஏற்றுமதியுடன் 2023 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்தில் தொடர்ந்து இடம் பெற்று உள்ளது.
- பிரேசில் 2023 ஆம் ஆண்டில் 157 பில்லியன் டாலர்களுடன் மூன்றாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் நான்காவது பெரிய வேளாண் பொருட்கள் ஏற்றுமதியாளராக சீனா திகழ்ந்தது.
- வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் உலகளவில் முன்னணியில் உள்ள பத்து நாடுகளில் கனடா, மெக்சிகோ, இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும்.

## இளம்பெண்கள் குறித்த உலக சுகாதார அமைப்பின் ஆய்வறிக்கை 2024


| | Lifetime intimate partner violence prevalence (95% UI) | Past-year intimate partner violence prevalence (95% UI) |
|---|---|---|
| South Asia | 29% (21–38) | 21% (14–29) |
| Southeast Asia, east Asia, and Oceania | | |
| East Asia | 17% (9–29) | 11% (5–23) |
| Southeast Asia | 21% (14–31) | 13% (8–21) |
| Oceania | 47% (35–59) | 33% (23–46) |

- காதல் சார் உறவில் இருக்கும் இளம் பருவ வயதுப் பெண்களில் நான்கில் ஒரு பங்கினர் உடல் ரீதியான அல்லது பாலியல் ரீதியான வன்முறையை எதிர்கொண்டுள்ளனர்.
- உலக சுகாதார அமைப்பின் அறிக்கையானது, அவர்களில் 24% பேர் குறைந்தபட்சம் ஒருமுறையாவது தனது நெருங்கிய துணைவரால் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர் என்றும், 16% பேர் கடந்த ஆண்டில் அது குறித்துப் புகாரளித்துள்ளனர் என்றும் இது குறிப்பிடுகிறது.
- இந்த விகிதங்கள் ஓஷனியாவைத் தொடர்ந்து ஆப்பிரிக்காவில் அதிகமாக உள்ளன என்பதோடு பப்புவா நியூ கினியா என்ற நாட்டில் 49% பெண்களும், காங்கோ ஜனநாயகக் குடியரசில் 42% பெண்களும் தனது நெருங்கியத் துணைவரால் இந்த வன்முறையை எதிர்கொண்டதாகப் புகாரளித்துள்ளனர்.
- 10% புகார் பதிவுகளுடன் ஐரோப்பாவில் மிகக் குறைந்த விகிதம் பதிவாகியுள்ளன.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 5 இளம் பெண்களில் ஒருவருக்கு (19%) குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

## நடுத்தர வருமான நாடு சிக்கல் குறித்த உலக வங்கியின் மதிப்பீடு


- உலக வங்கியானது, ‘உலக மேம்பாட்டு அறிக்கை 2024: நடுத்தர வருமான நாடுகளின் சிக்கல் குறித்த மதிப்பீடுகள்’ என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 'நடுத்தர வருமான நாட்டுச் சிக்கல்’ என்பது, ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்க தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தினை அல்லது நடுத்தர வரம்பில், இன்றைய நிலவரப்படி 8,000 டாலருக்கு சமமான நிலையை எட்டும் போது ஏற்படும் ஒரு "சிக்கல் நிலையை" எதிர்கொள்ளும் நாடுகள் என விவரிக்கப் படுகிறது.
- அடுத்த சில தசாப்தங்களில் அதிக வருமானம் கொண்ட நாடுகளாக மாறுவதில் "கடுமையான தடைகளை" எதிர்கொள்ளும் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் உள்ளது.
- அமெரிக்காவின் தனிநபர் வருமானத்தில் கால் பங்கினை அடைய இந்தியா சுமார் 75 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளலாம்.

- சீனா இந்த சாதனை நிலையினை அடைய 10 ஆண்டுகள் ஆகலாம் என்ற நிலையில் இந்தோனேசியா இந்நிலையினை அடைய 70 ஆண்டுகள் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்தம் ஆறு பில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட 108 நாடுகள் (உலகில் 75 சதவீதம்) 'நடுத்தர வருமானம்' கொண்ட நாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- அவை ஒவ்வொன்றும் 1,136-13,845 டாலர் என்ற வரம்பிற்கு இடைப்பட்ட மூல தனத்திற்கான வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தியை கொண்டிருந்தன என்பதோடு மேலும் மூன்றில் இரு நபர்கள் இன்னும் வறுமை நிலையில் வாழ்கின்றனர்.
- 1990 ஆம் ஆண்டு முதல், 34 நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளால் மட்டுமே உயர் வருமான நிலைக்கு மாற முடிந்தது.




## WTO அமைப்பின் உலக வர்த்தகப் புள்ளிவிவரங்கள் 2023

- 2023 ஆம் ஆண்டில், சரக்குகள் மற்றும் வணிகச் சேவைகளில் மேற்கொள்ளப்பட்ட உலக வர்த்தகம் ஆனது சராசரியாக 2% சரிந்து 30.5 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- பொருட்களில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகம் ஆனது 5% குறைந்துள்ள அதே சமயம் சேவை சார்ந்த வர்த்தகம் ஆனது 9% அதிகரித்துள்ளது.
- இதன் விளைவாக, உலகளாவிய வர்த்தகத்தில் 2022 ஆம் ஆண்டில் 77.8% ஆக இருந்த பொருட்களின் வர்த்தகப் பங்கு ஆனது 2023 ஆம் ஆண்டில் 75.3% ஆக குறைந்தது.
- 22.2% ஆக இருந்த சேவை வர்த்தகத்தின் பங்கு ஆனது 24.7 சதவீதத்தினை எட்டியது.
- 2023 ஆம் ஆண்டில் மிகப்பெரிய சரக்கு ஏற்றுமதி நாடாக இந்தியா 17வது இடத்திற்கு முன்னேறியது.
- எரிபொருள்கள் மற்றும் சுரங்கப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது.
- இரும்பு மற்றும் எஃகு ஏற்றுமதியில் இந்தியா 10வது இடத்திலும், இரசாயனங்கள் ஏற்றுமதியில் 8வது இடத்திலும் உள்ளது.
- ஜவுளி ஏற்றுமதியில் இந்தியா 3வது இடத்திலும், துணிகள் ஏற்றுமதியில் 5வது இடத்திலும் உள்ளது.




## பார்ச்சூன் 2024 - உலகின் 500 முன்னணி நிறுவனங்கள்




- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் பார்ச்சூன் இதழின் 2024 ஆம் ஆண்டிற்கான உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலில் அதன் தரவரிசையை 88வது இடத்தில் இருந்து 86வது இடத்திற்கு மேம்படுத்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 155வது இடத்தில் இருந்த இந்த நிறுவனம் ஆனது கடந்த மூன்று ஆண்டுகளில் 69 இடங்கள் முன்னேறியுள்ளது.

- இந்த ஆண்டு ஃபார்ச்சூன் உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலில் ஒன்பது இந்திய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளது.
- அவற்றுள் பின்வரும் ஐந்து நிறுவனங்கள் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகும் - IOCL, LIC, ONGC, BPCL மற்றும் SBI மற்றும் நான்கு நிறுவனங்கள் தனியார் துறை நிறுவனங்கள் ஆகும்.
- வால்மார்ட் நிறுவனம் ஆனது தொடர்ந்து 11வது ஆண்டாக இப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.

## உலகின் 10 முன்னணி செல்வ மதிப்பு மிக்க மத்திய வங்கிகள் - 2024


- சாவரைன் வெல்த் ஃபண்ட் இன்ஸ்டிடியுட் (SWFI) என்ற ஒரு நிறுவனமானது, மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் உலகின் 10 முன்னணி செல்வ மதிப்பு மிக்க மத்திய வங்கிகளைப் பட்டியலிட்டுள்ளது.
- வட அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கியானது இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து சீனாவின் மக்கள் வங்கி மற்றும் ஜப்பான் வங்கி ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்தியாவின் இந்திய ரிசர்வ் வங்கி உலகளவில் 12வது இடத்தில் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்பு நிலை மதிப்பானது ஆண்டிற்கு 11.08% அதிகரித்து 70.47 டிரில்லியன் ரூபாயாக உள்ளது.

| Rank | Name of the Bank | Country | Region |
|---|---|---|---|
| 1 | Federal Reserve System | USA | North America |
| 2 | People's Bank of China | China | Asia |
| 3 | Bank of Japan | Japan | Asia |
| 4 | Deutsche Bundesbank | Germany | Europe |
| 5 | Bank of France | France | Europe |
| 6 | Norges Bank | Norway | Europe |
| 7 | Bank of Italy | Italy | Europe |
| 8 | Bank of England | UK | Europe |
| 9 | Bank of Spain | Spain | Europe |
| 10 | Swiss National Bank | Switzerland | Europe |

## பல்பரிமாண பாதிப்புக் குறியீடு

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒரு புதிய தரவு சார்ந்த "பாதிப்பு" குறியீட்டை அதிகாரப் பூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஒரு அரசின் கட்டமைப்பு பாதிப்புகள் மற்றும் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக நெகிழ் திறன் இல்லாமை ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டக் குறிகாட்டிகளை உள்ளடக்கியது.
- இது சிறிய தீவு நாடுகள் மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் குறைந்த வட்டி சார்ந்த நிதி உதவியினைப் பெற உதவும்.

- "பல்பரிமாண பாதிப்புக் குறியீடு" (MVI) ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் இதர மேம்பாட்டு அளவீடுகளுக்கு ஒரு இணை நிரப்பியாகச் செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து, சிறிய வளர்ந்து வரும் தீவு நாடுகள் (SIDS) ஆனது தனி நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் குறைந்த வட்டி சார் மேம்பாட்டு நிதியுதவியை அணுகுவதற்கு என்று போதுமான வறுமை நிலையைக் கொண்டிருக்க வில்லை.




## இளையோர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் 2024

- உலகளாவிய இளையோர்களின் வேலைவாய்ப்பின்மை ஆனது, 15 ஆண்டுகளாக மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது என்பதோடு அது தொடர்ந்து வீழ்ச்சியடையும் வாய்ப்பும் உள்ளது.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் இந்த அறிக்கையானது, "இளையோருக்கான உலகளாவிய வேலை வாய்ப்புப் போக்குகள் 2024 (இளையோருக்கான GET) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு உலகளவில் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட 64.9 மில்லியன் மக்கள் வேலை வாய்ப்பில்லாமல் இருந்தனர்.
- 2023 ஆம் ஆண்டில் கிழக்கு ஆசியாவில் இருந்த இளையோர்களின் வேலை வாய்ப்பின்மை விகிதமான 14.5 சதவிகிதம் என்பது வரலாறு காணாத வகையிலான அதிகளவாகும்.
- தெற்காசியாவில் 2023 ஆம் ஆண்டில், இப்பகுதியில் உள்ள ஐந்தில் ஒரு இளைஞர் (20.4%) 'வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியில் இல்லாத' நிலையில் இருந்தனர்.
- 2025 ஆம் ஆண்டில், இப்பகுதியில் இளையோர்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 13.7% ஆக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இளையோர்களின் வேலை வாய்ப்பின்மை விகிதம் ஆனது 2019 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 2023 ஆம் ஆண்டில் அதிகமாக இருந்தது.

- 2023 ஆம் ஆண்டில் இளம் பெண்கள் மற்றும் இளைஞர்களின் மத்தியிலான வேலை வாய்ப்பின்மை விகிதம் கிட்டத்தட்ட சமமாக இருந்தது (இளம் பெண்கள் மத்தியில் 12.9 சதவீதம் மற்றும் இளைஞர்கள் மத்தியில் 13 சதவீதம்).
- அதிக வருமானம் கொண்ட சில நாடுகளில் பாதுகாப்பான ஊதியம் பெறும் வேலை வாய்ப்பில் பணி புரியும் இளைஞர்களின் பங்கு கணிசமாக அதிகமாக உள்ளது (2023 ஆம் ஆண்டில் 76%).

## ஷாங்காய் ARWU தரவரிசை 2024

- வேலூர் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது இந்தியாவின் இரண்டாவது சிறந்த கல்வி நிறுவனமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழகங்களின் ஷாங்காய் கல்வித் தரவரிசையில் (ARWU) இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனங்களில் இது முதலிடத்தைப் பெற்று உள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டில் உலகப் பல்கலைக்கழகங்களில் 501 முதல் 600வது இடத்தில் உள்ளது.
- உலகின் மிகவும் தலைசிறந்த 1,000 பல்கலைக்கழகங்களின் பட்டியலில், இந்தியாவின் 15 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்விக் கழகம் ஆனது, உலகளவில் 401 முதல் 500 வரையிலான தரவரிசையில் பட்டியலிடப் பட்டுள்ளன என்ற நிலையில் இந்தியப் பல்கலைக் கழகங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

**Academic Ranking of World Universities** 15 Institutions

| World Rank | Institution | India | National/Regional Rank | Total Score | Award |
|---|---|---|---|---|---|
| 401-500 | Indian Institute of Science | | 1 | | 0.0 |
| 501-600 | Vellore Institute of Technology | | 2 | | 0.0 |
| 601-700 | Indian Institute of Technology Delhi | | 3-4 | | 0.0 |
| 601-700 | University of Delhi | | 3-4 | | 0.0 |
| 701-800 | Homi Bhabha National Institute | | 5-7 | | 0.0 |
| 701-800 | Indian Institute of Technology Roorkee | | 5-7 | | 0.0 |
| 701-800 | SRM INSTITUTE OF SCIENCE AND TECHNOLOGY | | 5-7 | | 0.0 |

## வருமானப் பாதுகாப்பு மற்றும் முன் எச்சரிக்கை

- உலகப் பொருளாதார மன்றமானது "வருமானப் பாதுகாப்பு மற்றும் முன் எச்சரிக்கை அமைப்புகள்: இந்தியா பருவநிலை நெகிழ்திறனை எவ்வாறு உருவாக்குகிறது" என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- 2015 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அதிக மழைப் பொழிவு காரணமாக இந்தியாவில் 33.9 மில்லியன் ஹெக்டேர் பயிர்களும், வறட்சி காரணமாக கூடுதலாக 35 மில்லியன் ஹெக்டேர் பயிர்களும் சேதமுற்றுள்ளன.
- தீவிர பருவநிலைத் தாக்கங்களால் ஏற்பட்ட பணி நேர இழப்பினால் 2021 ஆம் ஆண்டில் வேளாண்மை உட்பட பல்வேறு இந்தியத் துறைகள் 159 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதார இழப்பைச் சந்தித்தன.
- 2030 ஆம் ஆண்டில், மிகவும் அதிக வெப்பத்தின் தாக்கம் காரணமாகப் பணி நேரத்தில் கணிசமாக 5.8 சதவீத (34 மில்லியன் முழு நேரப் பணி நேரத்திற்குச் சமமானது) சரிவை இந்தியா எதிர்கொள்ளும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டு அகமதாபாத் நகரில் ஏற்பட்ட கடுமையான வெப்ப அலைக்குப் பிறகு தெற்காசியாவில் வெப்பத் தாக்கத் தணிப்பு நடவடிக்கைக்கான செயல் திட்டத்தினை உருவாக்கிய முதல் நாடு இந்தியாவாகும்.

| Year | Natural Disaster | Economic Loss | Insured Loss | Insurance Gap |
|---|---|---|---|---|
| 2020 | Cyclone Amphan | $13 billion | $1.5 billion | $11.5 billion |
| 2021 | Cyclone Yaas | $2.5 billion | $200 million | $2.3 billion |
| 2021 | Tamil Nadu Floods | $1 billion | $100 million | $900 million |
| 2022 | Assam Floods | $3 billion | $300 million | $2.7 billion |
| 2023 | Himachal Pradesh Floods and Landslides | $1.5 billion | $150 million | $1.35 billion |

## உலகளாவியக் கல்வி கண்காணிப்பு அறிக்கை 2024

- கடந்த 20 ஆண்டுகளில், குறைந்தபட்சம் 75% தீவிர வானிலை நிகழ்வுகளால் பள்ளிகள் மூடப் பட்டன என்பதோடு இது சுமார் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மக்களை பாதித்தது.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில், கல்வியின் எந்த நிலையிலும் பாலினச் சமத்துவம் அடையப்படவில்லை என்ற நிலையில் ஆண்களை விட பெண்களே அதிகம் பள்ளிக்கு செல்லவில்லை.
- வாசிப்புத் திறனில், உலக அளவில், கீழ் இடைநிலைக் கல்வியின் முடிவில் ஒவ்வொரு 100 ஆண் குழந்தைகளுக்கும் 115 பெண் குழந்தைகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில் 81% ஆண்களும் 75% பெண்களும் கைபேசி வைத்திருந்தனர்.
- 2018-23 ஆம் ஆண்டுகளில், அறிவியல், தொழிநுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறை சார் (STEM) பட்டதாரிகளில் பெண்களின் பங்கு 35% ஆகும்.

- இந்தியாவில், மழைப்பொழிவு ஆனது ஒரு குழந்தையின் முதல் 15 ஆண்டுகளில் ஐந்து வயதில் வார்த்தைப் பிரயோகத் திறனையும், 15 வயதில் கணிதம் மற்றும் அறிவாற்றல் சாராத திறன்களையும் எதிர்மறையாகப் பாதித்தது.

UNESCO
United Nations Educational, Scientific and Cultural Organization

Global Education Monitoring Report

## ஹுருன் இந்தியா - மிகவும் மதிப்புமிக்க குடும்ப வணிகங்கள் 2024

| # | FAMILY NAME | VALUE |
|---|---|---|
| 1. | Ambani Family (Reliance Industries) | ₹25.75 lakh crore |
| 2. | Bajaj Family (Bajaj Group) | ₹7.13 lakh crore |
| 3. | Kumar Mangalam Birla Family (Aditya Birla Group) | ₹5.39 lakh crore |
| 4. | Jindal Family (JSW Steel) | ₹4.71 lakh crore |
| 5. | Nadar Family (HCL Technologies) | ₹4.30 lakh crore |
| 6. | Mahindra Family (Mahindra & Mahindra) | ₹3.45 lakh crore |
| 7. | Dani Family, Choksi Family, and Vakil Family (Asian Paints) | ₹2.71 lakh crore |
| 8. | Premji Family (Wipro) | ₹2.57 lakh crore |
| 9. | Rajiv Singh Family (DLF) | ₹2.04 lakh crore |
| 10. | Murugappa Family (Tube Investments of India) | ₹2.02 lakh crore |

- முகேஷ் அம்பானி தலைமையிலான அம்பானி குழுமம் (குடும்பம்) ஆனது, 25,75,100 கோடி ரூபாய் மதிப்புடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து நிராஜ் பஜாஜ் தலைமையிலான பஜாஜ் குழுமம் (ரூ. 7,12,700 கோடி) மற்றும் குமார மங்கலம் பிர்லா குழுமம் (ரூ. 5,38,500 கோடி) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இருப்பினும், 15,44,500 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட அதானி தலைமையிலான எரிசக்தி சார்ந்த குழுமம் ஆனது, முதல் தலைமுறை சார்ந்த குடும்ப வணிகம் என்பதால் முதல் 10 இடங்களில் இடம்பெறவில்லை.

- மற்ற முதல் தலைமுறை சார்ந்த குடும்பங்களின் பட்டியலில், சைரஸ் பூனாவாலா தலைமையிலான பூனாவாலா குழுமம் 2,37,100 கோடி ரூபாய் மதிப்புடன் இரண்டாவது இடத்தைப் பெற்றது.
- அதைத் தொடர்ந்து, திவி குடும்பம் மற்றும் ரெட்டி குடும்பம் ஆகியவை தலா 91,200 கோடி மற்றும் 88,800 கோடி ரூபாய் மதிப்புடன் இடம் பெற்றுள்ளன.

## உலகளாவிய சொத்து விலைக் குறியீடு 2024

- நைட் பிராங் நிறுவனத்தின் உலகின் பிரதான நகரங்கள் குறியீட்டில் மும்பை நகரம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- மும்பை நகரின் வீட்டு மனை விற்பனை விலைகளில் ஆண்டுதோறும் 13% அதிகரிப்புப் பதிவாகியுள்ளது.
- வீட்டு மனை விற்பனை விலைகளில் மும்பை மற்றும் புது டெல்லி (3வது) ஆகிய நகரங்களில் முறையே ஆண்டுதோறும் முறையே 13% மற்றும் 10.6% உயர்வு பதிவாகி உள்ளது.
- பெங்களூரு 3.7% வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- உலக அளவில் 26% உயர்வுடன் இக்குறியீட்டில் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரமான மணிலா முதலிடம் பிடித்துள்ளது.

| Rank/City | | 12-month % change | 3-month % change |
|---|---|---|---|
| 1 | PH Manila | 26.0 | 16.4 |
| 2 | IN Mumbai | 13.0 | 2.5 |
| 3 | IN Delhi | 10.6 | 0.1 |
| 4 | US Los Angeles | 8.9 | 3.5 |
| 5 | US Miami | 7.1 | 1.8 |
| 6 | KE Nairobi | 6.6 | 2.0 |
| 7 | ES Madrid | 6.4 | 1.3 |
| 8 | PT Lisbon | 4.7 | 3.1 |
| 9 | KR Seoul | 4.6 | 5.0 |
| 10 | US San Francisco | 4.5 | 4.7 |

# மாநிலச் செய்திகள்

## அசாமின் மொய்தாம்


- இந்தியாவின் 43வது உலகப் பாரம்பரிய தளமாக அசாமின் மொய்தாம் பகுதி சேர்க்கப் பட்டுள்ளது.
- இவை கி.பி 1228 முதல் 1826 ஆம் ஆண்டு வரை அசாம் மற்றும் வடகிழக்கின் பெரும் பகுதியை ஆண்ட அஹோம் வம்சத்தின் அரச கல்லறைகள் ஆகும்.
- மொய்தாம் என்பது அஹோம் அரசக் குடும்பம் மற்றும் பிரபுத்துவத்தின் கல்லறையின் மேல் எழுப்பப்பட்ட ஒரு மண் மேடு ஆகும்.
- அஹோம் மன்னர்கள் அவர்களின் 600 ஆண்டுகால வரலாற்றில் பலமுறை தங்களது தலைநகரங்களை மாற்றியுள்ளனர்.
- சரைடியோ நகரானது மன்னர் சுகபாவால் கி.பி 1253 ஆம் ஆண்டில் அவர்களின் முதல் தலைநகரமாக நிறுவப்பட்டது.
- 1856 ஆம் ஆண்டில் சுகபா சரைடியோவில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு, அதைத் தொடர்ந்து வந்த அரச குடும்பத்தாரும் தங்களை அடக்கம் செய்வதற்கான இடமாகத் தேர்ந்தெடுத்தனர்.
- இந்தப் பகுதியில் 150க்கும் மேற்பட்ட மொய்தாம்கள் இருந்தாலும் 30 மட்டுமே இந்தியத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப் படுகின்றன.
- மொய்தாம்கள் தற்போது இந்தப் பட்டியலில் சேர்க்கப் பட்டதைத் தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலான உலகப் பாரம்பரியச் சொத்துக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 6வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.





## லடாக்கில் உள்ள காந்த மேல் பூச்சுகள் கொண்ட பாறை அடுக்குகள்

- இந்தியாவின் லடாக்கில் மேல் பூச்சுகள் கொண்ட பாறை அடுக்குகளில் காந்தப் புதை படிவங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது காந்தவியல் சார்ந்த இயக்கம் கொண்ட பாக்டீரியாவினால் உற்பத்தி செய்யப் படும் காந்தத் துகள்களின் புதைபடிவ எச்சங்கள் ஆகும்.

- மேல் பூச்சுகள் கொண்ட பாறை அடுக்குகள் கொண்டு உருவான இந்த உயிரியல் செயல் முறைகளானது, அதி தீவிர சூழ்நிலைகள் கொண்ட சூழலில் உயிர்கள் எவ்வாறு வாழ முடியும் என்பதைக் குறிக்கிறது.




## வயநாடு நிலச்சரிவு




- கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள மேப்பாடியில் கனமழை காரணமாக ஒரு மாபெரும் நிலச்சரிவு ஏற்பட்டது.
- உலகளவில் நிலச்சரிவுகளால் ஏற்படும் உயிரிழப்புகளில் சுமார் 8% இந்தியாவிலேயே பதிவாகியுள்ளது.
- 2001-21 ஆம் காலகட்டத்தில், நிலச்சரிவுகளால் 847 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.
- இந்தியாவில், சிக்கிம் மாநிலம் நிலச்சரிவிற்கு உட்படக்கூடிய அளவில் மிகப்பெரிய நிலப்பரப்பைக் (57.6%) கொண்டுள்ளது.
- "மிக அதிகளவில் நிலச்சரிவிற்கு உட்படக்கூடிய பகுதி" என்ற ஒரு பிரிவில் 14% நிலப் பரப்பைக் கொண்ட கேரளா மிக அதிகமாகப் பாதிக்கப்படக் கூடிய ஒரு மாநிலமாகும்.

## 'வெளியுறவு ஒத்துழைப்பு' அதிகாரி

- கேரள மாநில அரசு ஆனது சமீபத்தில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி K.வாசுகியை 'வெளியுறவு ஒத்துழைப்பு தொடர்பான விவகாரங்களின் மீது கட்டுப்பாடு கொண்ட மாநிலச் செயலாளராக' நியமிக்க முடிவு செய்தது.
- ஏழாவது அட்டவணையில் உள்ள, (முதல் பட்டியல்) மத்தியப் பட்டியலில், பிரிவு 10 ஆனது, வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுடனும் அரசினை தொடர்புபடுத்தும் அனைத்து விவகாரங்களும் மத்திய அரசாங்கத்தின் தனியுரிமை என்று குறிப்பிடுகிறது.
- சரத்து 253 ஆனது, வேறு எந்த நாட்டுடனும் எந்தவொரு ஒப்பந்தத்தினையும் அல்லது எந்தவொரு சர்வதேச மாநாட்டிலும் எடுக்கப்பட்ட எந்தவொரு முடிவையும் செயல் படுத்துவதற்காக எந்தவொருச் சட்டத்தையும் உருவாக்க என்று பாராளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்று கூறுகிறது.
- சரத்து 293 ஆனது, மாநிலங்களின் கடன் வாங்கும் அதிகாரத்தின் மீது பிராந்தியம் சார்ந்த வரம்புகளை வழங்குகிறது.

## GRIT ஆலோசனை வழங்கீட்டு அமைப்பு

- குஜராத் மாநிலப் பரிமாற்ற நிறுவனத்தினை (GRIT) உருவாக்குவதாக குஜராத் முதல்வர் அறிவித்துள்ளார்.
- இது மாநில அரசிற்கான பொதுக் கொள்கை ஆலோசனை வழங்கீட்டுக் குழுவாக செயல்படுவதற்காக நிதி ஆயோக் அமைப்பின் மாதிரியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அந்த மாநிலத்தின் மேம்பாட்டு இலக்குகளை முறைசார் வகையில் அடைவதற்கு GRIT உதவும்.

## வயநாட்டில் பெய்லி பாலம்

- இந்திய இராணுவத்தின் சென்னைப் பொறியாளர்கள் குழுவானது, முண்டகை கிராமத்தை அடைவதற்காக, சூரல் மலை பகுதியில் முன்னதாகவே கட்டமைக்கப் பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு "பெய்லி பாலத்தை" அமைத்துள்ளது.
- அக்குழுவானது, சுமார் 190 மீ நீளமுள்ள இந்தப் பாலத்தை சுமார் 31 மணி நேரம் என்ற சாதனை நேரத்தில் கட்டி முடித்துள்ளனர்.
- மேஜர் சீதா அசோக் செல்கே என்பவர் மட்டுமே அந்த தரைப் படைப் பிரிவில் இருந்த ஒரே பெண் ரராணுவ அதிகாரி ஆவார்
- பெய்லி பாலம் என்பது முன்னதாகவே தயாரிக்கப்பட்ட கூறுகளைக் கொண்டுள்ள விரைவில் நிறுவப் படக்கூடிய முன்கூட்டியே ஒருங்கிணைக்கப்பட்ட பாலமாகும்.
- இது தளத்தில் விரைவாகவும் திறன் மிக்க முறையில் நிறுவவும் வழிவகுக்கிறது.
- பெய்லி பாலம் ஆனது இரண்டாம் உலகப் போரின் போது, கட்டிடப் பொறியாளர் டொனால்ட் கோல்மன் பெய்லி என்பவரால் உருவாக்கப்பட்டது.



## அனைத்து வகைப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை


- ஹரியானா மாநிலத்தில் 24 பயிர்கள் குறைந்தபட்ச ஆதரவு விலை வரம்பின் (MSP) கீழ் கொள்முதல் செய்யப்படும் என்று ஹரியானா அரசு அறிவித்துள்ளது.
- 24 பயிர் வகைகளில், சுமார் 10 பயிர்கள் இந்த மாநிலத்தில் அதிகம் பயிரிடப்படாதவை ஆகும்.
- இந்தியாவிலேயே இவ்வளவு பரந்த அளவில் இத்தகைய நடவடிக்கையினை மேற் கொண்ட முதல் மாநிலமாக ஹரியானா திகழ்கிறது.
- இவற்றின் கொள்முதலுக்கு சுமார் 123.65 கோடி ரூபாய் அரசிற்குச் செலவாகும்.
- கோதுமை, நெல் மற்றும் மக்காச்சோளம் ஆகியவை அரசாங்கத்தினால் MSP வரம்பின் கீழ் பெருமளவில் கொள்முதல் செய்யப்படும் முக்கியப் பயிர்களாகும்.



## இரு குழந்தைக் கொள்கை

- இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுள்ள தனிநபர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற விதியை ரத்து செய்ய ஆந்திரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் கருவுறுதல் விகிதம் 1.5 ஆக உள்ளது.
- 1994 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தில் முதன்முதலில் இரண்டு குழந்தைகள் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுள்ள தனிநபர்கள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கிறது.

## காற்றாலை ஆற்றல் உற்பத்தி திறன் 2023-24





- 2023 - 24 ஆம் ஆண்டில் அகில இந்தியச் செயல்பாட்டில் உள்ள காற்றாலை ஆற்றல் உற்பத்தி திறனில் குஜராத் முதலிடத்தில் உள்ளது.
- கர்நாடகா இரண்டாம் இடத்தையும், தமிழ்நாடு மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.
- 2023- 24 ஆம் நிதியாண்டில் குஜராத்தின் காற்றாலை மின் உற்பத்தி 1743.8 மெகாவாட் ஆகும்.
- கர்நாடகாவின் செயல்பாட்டில் உள்ள உற்பத்தித் திறன் 724.66 மெகாவாட் என்ற ஒரு நிலையில் தமிழ்நாட்டின் செயல்பாட்டில் உள்ள உற்பத்தித் திறன் 586.37 மெகாவாட் ஆகும்.

## மாநிலங்களில் கல்வி உரிமைச் சட்டத்தினை அமல்படுத்துதல்

- கல்வி உரிமைச் சட்டத்தினை அமல்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.


- தனியார் நிறுவனங்கள் சார்ந்த அரசு உதவி பெறாத பள்ளிகளில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 25 சதவீத இடங்களை ஒதுக்குவதை கல்வி உரிமைச் சட்டம் கட்டாயமாக்குகிறது.
- பஞ்சாப், கேரளா, தெலுங்கானா மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநில அரசுகள் கல்வி உரிமைச் சட்ட விதிகளை அமல்படுத்தவில்லை.
- 2022 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 86வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமானது 6 முதல் 14 வயதுடைய குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியை உறுதி செய்யும் 21 A என்ற பிரிவினை அறிமுகப்படுத்தியது.
- கல்விக்கான நிதி ஒதுக்கீடானது 2014 ஆம் ஆண்டில் 68,000 கோடி ரூபாயாக இருந்தது என்ற நிலைமையில் 2024-25 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடானது சுமார் 1.20 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவிற்கு ஒதுக்கப்பட்ட 72,473 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு 73,008 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடான சுமார் 57,244 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு உயர்கல்விக்கு 47,619 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப் படுகிறது.




## டெல்லியின் மாநகராட்சிக் கழகத்தின் ஆல்டர்மேன் நியமனம்

- டெல்லியின் துணை நிலை ஆளுநருக்கு (L-G), டெல்லி அரசின் அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனை எதுவுமின்றி டெல்லி மாநகராட்சிக் கழகத்திற்கான (MCD) 'இரண்டாம் நிலை நகராட்சித் தலைவர் - ஆல்டர்மேன்களை' நியமிக்க அதிகாரம் உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- டெல்லி மாநகராட்சிக் கழக சட்டத்தின் (DMC) கீழ், டெல்லி 12 மண்டலங்களாக பிரிக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சட்டமானது ஒவ்வொரு மண்டலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் மற்றும் அந்த எல்லைக்குள் உள்ள இரண்டாம் நிலை நகராட்சித் தலைவர்களை உள் அடக்கிய 'ஆட்சிப் பிரிவு குழுவினை' உருவாக்குகிறது.
- டெல்லியின் துணை நிலை ஆளுநருக்கு, இந்தச் சட்டத்தின் 3வது பிரிவின் கீழ், 25 வயதிற்கு மேற்பட்ட மற்றும் "மாநகராட்சி நிர்வாகத்தில் நல்லறிவு அல்லது அனுபவம் உள்ள" 10 இரண்டாம் நிலை நகராட்சித் தலைவர்களைப் பரிந்துரைக்க அதிகாரம் உள்ளது.
- இரண்டாம் நிலை நகராட்சித் தலைவர்களுக்கு MCDயின் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை இல்லை.
- 12 ஆட்சிப் பிரிவு குழுக்கள் ஒவ்வொன்றும் தங்கள் முதல் கூட்டத்தில் MCD நிலைக் குழுவின் ஓர் அங்கமாக விளங்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- இரண்டாம் நிலை நகராட்சித் தலைவர்கள் இந்தத் தேர்தல்களில் வாக்களிக்கலாம் மற்றும் நிலைக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளர்களாக நிற்கலாம்.
- மேயர் MCD கழகத்தின் பெயரளவிலான தலைவராக உள்ள நிலையில், அதன் நிலைக் குழு ஆனது மாநகராட்சியின் செயல்பாடுகளை திறம்பட நிர்வகிக்கிறது.
- இரண்டாம் நிலை நகராட்சித் தலைவர்கள் யாவரும் வாக்களிக்கும் செயல்முறையில் பங்கேற்காமல் இக்குழுவை அமைக்க முடியாது.





### வைங்கங்கா-நல்கங்கா நதிநீர் இணைப்புத் திட்டம்

- மகாராஷ்டிர மாநில அமைச்சரவை ஆனது சமீபத்தில் நல்கங்கா-வைங்கங்கா நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- இது நாட்டிலேயே மிகப் பெரிய நதிநீர் இணைப்புத் திட்டமாக குறிக்கப்படுகிறது.
- இது பண்டாராவில் வைங்கங்கா ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள கோசிகுர்த் அணையில் இருந்து தண்ணீரை ஏற்றும் திட்டம் ஆகும்.
- பின்னர், 427 கிலோமீட்டர் நீளமுள்ள சில கால்வாய்கள், குழாய்கள் மற்றும் நீரேற்றுப் பாசனத் திட்டம் ஆகியவை மூலம் புல்தானாவில் உள்ள நல்கங்கா நதியில் அதைச் சேர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.




## ஜுவாங்கா பழங்குடியினர் - வன உரிமைச் சட்டம்


**Rights for the dwellers**

What the Forest Rights Act, 2006, entails


- Tenurial security over the forestland under occupation prior to December 13, 2005
- Recognition of community right over forest and forest products
- Protection and conservation of community forest resources
- Conversion of all forest villages and habitation located inside the forestland into revenue villages
- In situ rehabilitation of displaced persons evicted without compensation prior to December 13, 2005
- Recognition of ancestral domain (habitat) right to Particularly Vulnerable Tribal Groups
- Seasonal access to nomadic, pastoral and semi-nomadic communities over forestland
- Conversion of all leases granted by erstwhile governments, zamindars and king into permanent land records

Residents of Gunduribadi village in Odisha's Nayagarh district get ready for mapping their land boundaries for the Forest Rights Act implementation. ▪ SPECIAL ARRANGEMENT

- ஒடிசாவில் ஜெஜ்பூரின் ஜுவாங் பழங்குடியினர் நாட்டின் ஐந்தாவது மற்றும் அந்த மாநிலத்தில் 2006 ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டத்தின் (FRA) கீழ் வாழிட உரிமைகளைப் பெற்ற இரண்டாவது PVTG குழுவினராக மாறியுள்ளனர்.

- இந்த உரிமைகளானது ஜுவாங்ஸ் அவர்களின் மூதாதையர் நிலம் மற்றும் வளங்களை தடையின்றி அணுகல் மற்றும் சட்ட அங்கீகாரத்தினை வழங்கும்.
- பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற மரபு சார் வனவாசிகள் 2006 ஆம் ஆண்டு (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டத்தின் 3(1) (e) பிரிவின் கீழ் PVTG பிரிவினர்களுக்கு வாழ்விட உரிமைகள் வழங்கப் படுகின்றன.
- ஜெஜ்பூரின் சுகிந்தா தொகுதிக்கு உட்பட்ட 13 கிராமங்களில் ஜுவாங் பழங்குடியினர் வசிக்கின்றனர்.

## இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு




- இந்தியாவின் இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டில் சுமார் 21.4% பங்குடன் உத்தரப் பிரதேசம் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (15.7%) மற்றும் பஞ்சாப் (9.5%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில் உயிரி-பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு 3.4 மெட்ரிக் டன் (52.8 முதல் 56.2 மெட்ரிக் டன் வரை) குறைந்துள்ளது.
- இமாச்சலப் பிரதேசம் ஆனது அதன் இரசாயனப் பூச்சிக் கொல்லி நுகர்வினை 193 மெட்ரிக் டன் வரை (470 மெட்ரிக் டன்னிலிருந்து 277 மெட்ரிக் டன் ஆக) குறைந்துள்ளது.
- இம்மாநிலம் உயிரி-பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டினை 0.23 மெட்ரிக் டன் (0.37 முதல் 0.60 மெட்ரிக் டன் வரை) என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- மேற்கு வங்காளமானது கடந்த ஒரு நிதியாண்டில் உயிரி-பூச்சிக் கொல்லியை மிகவும் அதிக அளவில் (1,574 மெட்ரிக் டன்) பயன்படுத்தியுள்ளது.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (957 மெட்ரிக் டன்) மற்றும் சத்தீஸ்கர் (787 மெட்ரிக் டன்) இடம் பெற்றுள்ளன.

## இரத்னகிரி - 'பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்'

- மகாராஷ்டிரா மாநில அரசு ரத்னகிரியில் உள்ள கோட்டோவிய வரைபடங்கள் (ஜியோகிளிஃப்ஸ்) மற்றும் பாறை செதுக்குத் தோற்றங்கள் (பெட்ரோகிளிஃப்ஸ்) ஆகியவற்றினை 'பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள்' ஆக அறிவித்துள்ளது.
- இது '1960 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் மற்றும் எச்சங்கள்' சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- இரத்னகிரியின் டியூட் எனுமிடத்தில் உள்ள பாறை செதுக்குத் தோற்றங்களின் குழுமம் ஆனது, பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது ஆகும் (சுமார் 20,000-10,000 ஆண்டுகளுக்கு முந்தையது).
- புவியியல் வரைபடத் தோற்றங்கள் மற்றும் பாறை செதுக்குத் தோற்றங்கள் பல்வேறு வகையான பண்டைய கலை வடிவங்கள் ஆகும் என்பதோடு இவை இரண்டுமே பூமியின் மேற்பரப்பில் அல்லது பாறை மேற்பரப்பில் உருவங்கள் அல்லது வடிவ அமைப்புகளை உருவாக்குவதை உள்ளடக்கியது.



CONSERVATIONISTS CONCERNED OVER REFINERY

➤ Conservationists have expressed concerns over a proposed oil refinery in Barsu, Ratnagiri, warning that it could damage the geoglyphs in the area

➤ Officials noted that in June 2021, the state govt issued a two-month notice of its intention to declare the geoglyphs as protected monuments, and no objections were raised against the declaration.

"Rock art in India is one of the oldest material evidence of the country's early human creativity. Typically found in the form of rock paintings, etchings, cup marks, and ring marks across India, (their) dense concentration on the laterite plateaus of the Konkan stands as the most remarkable open-air ensemble of prehistoric human expression in the region — **Unesco's description**

## நீதிபதி ஹேமா குழுவின் அறிக்கை

- நீதிபதி ஹேமா குழுவானது 2017 ஆம் ஆண்டில் கேரள அரசினால் உருவாக்கப்பட்டது.
- திரைத் துறையில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆய்வு செய்வதற்காக திரைத் துறையில் பெண்கள் குழுமம் - வுமன் இன் சினிமா கலெக்டிவ் (WCC) வழங்கிய மனுவை அடிப்படையாகக் கொண்டு இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- 233 பக்க ஆவணம் ஆனது மலையாளத் திரையுலகில் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு மற்றும் சுரண்டல் பற்றிய குற்றச்சாட்டை உறுதிபடுத்தியுள்ளது.

## தங்கர் சமூகத்தினரின் மேய்ச்சல் இடங்களுக்கான கோரிக்கை

- தங்கர் சமூகத்தினர் மகாராஷ்டிராவில் உள்ள ஆயர் மற்றும் நாடோடி பழங்குடியினக் குழுவாகும்.
- செம்மறி ஆடுகளை மேய்ப்பதற்கான இடங்கள் குறைந்து வருவதால் வழக்கமான மேய்ச்சல் நிலங்களை மீட்பதற்கான முயற்சிகளை அவர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர்.
- இவர்கள் புலம்பெயரும் வகையிலான மேய்ச்சல் நடைமுறைகளுக்குப் பெரும் புகழ் பெற்றவர்கள் என்பதோடு, அவர்கள் தங்களின் கால்நடைகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக வேண்டி வழக்கமாக பரந்த தொலைவுகளை நோக்கிப் பயணிக்கின்றனர்.
- 1996 ஆம் ஆண்டில், அந்த மாநில அரசானது தியானங்கங்கா என்ற வனவிலங்குச் சரணாலயத்தினை அறிவித்த பிறகு அவர்கள் தங்களின் மேய்ச்சல் நிலத்தின் பெரும் பகுதியினை இழந்தனர்.
- இந்தச் சமூகத்தினர் 2006 ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப் பட்ட மேய்ச்சல் பகுதிகளை கோருகின்றனர்.


WHO ARE THE DHANGARS?


*The ST population in Maharashtra was estimated at around 9.35 per cent in the 2011 census, comprising 48 tribes like Bhils, Gonds, Mahadeo Kolis, Pawras, Thakars and Warlis. The Katkaris, Kolams and Madia Gonds are classified as 'primitive tribal groups'*

- The Dhangars claim to be the descendants of the original pastoral inhabitants of Maharashtra
- According to British administrator R.E. Enthoven whose The Tribes and Castes of Bombay formed a part of the Ethnographic Survey of India, the Dhangars in the Deccan and Konkan lost their original tribal signification and came to denote a heterogeneous group of distinct races who were sheep-rearers
- King Chhatrapati Shahu of Kolhapur, a Maratha, married his cousin to Yashwantrao Holkar, the crown prince of Indore. The Holkars were Dhangars by caste
- Shahu's religious advisor Gundopant Pishwikar (Dharmadhikari), however, wrote to him that he had examined a genealogy of the Holkars, which claimed that they were Rathod Kshatriyas. The marriage took place in 1924
- The Maharashtra government in May approved a demand to rename Ahmednagar district as Ahilyanagar after warrior-queen Ahilyadevi Holkar of Indore

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகப் பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வு

- 46வது உலகப் பாரம்பரியக் குழுவின் அமர்வு ஆனது, புது டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்றது.
- இந்த ஆண்டு நிகழ்வின் போது யுனெஸ்கோ அமைப்பானது உலகப் பாரம்பரியப் பட்டியலில் 25 புதிய முக்கிய தளங்களைச் சேர்த்துள்ளது.
- இரண்டு முக்கிய எல்லை மாற்றங்களும் இக்குழுவால் முறைப்படுத்தப் பட்டுள்ளன.
- இவற்றில், ஜப்பானின் சாடோ தீவு தங்கச் சுரங்கங்கள், தாய்லாந்தின் ஃபு பிரபாத் வரலாற்றுப் பூங்கா, மனித உரிமைகள், விடுதலை மற்றும் நல்லிணக்கத்திற்கான தென்னாப்பிரிக்காவின் நெல்சன் மண்டேலா மரபுசார் தளங்கள், இத்தாலியின் வயா அப்பியா மற்றும் சீனாவின் பெய்ஜிங் சென்ட்ரல் ஆக்சிஸ் எனப்படும் சாலை உள்ளிட்ட 13 புதிய தளங்கள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இவற்றில் 19 இடங்கள் கலாச்சாரப் பாரம்பரியத் தளங்களாக சேர்க்கப்பட்டுள்ளன.
- 4 இடங்கள் இயற்கைப் பிரிவின் கீழும், மேலும் இரண்டு இடங்கள் "கலப்பு" பிரிவின் கீழும் சேர்க்கப் பட்டுள்ளன.




## ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே

- ஹமாஸ் அமைப்பின் உயர்மட்ட தலைவர் இஸ்மாயில் ஹனியே ஈரானில் தங்கி இருந்த இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- நாடு கடத்தப்பட்ட ஹனியே, கத்தாரில் இருந்தபடி ஹமாஸின் பல்வேறு அரசியல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினார்.

- 1980 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில், ஹனியே இஸ்ரேலிய நாட்டின் சிறைகளில் பல தண்டனைகளை அனுபவித்தார்.
- 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஹமாஸ் வெற்றி பெற்ற பிறகு, அவர் பாலஸ்தீனிய அதிகார அரசாங்கத்தின் பிரதமரானார்.
- எனினும், 2007 ஆம் ஆண்டில் அதிபர் மஹ்மூத் அப்பாஸ் அவர்களால் அடுத்த ஆண்டு அவர் பதவி நீக்கம் செய்யப் பட்டதால் அவர் பதவிக் காலம் குறுகிய காலமே நீடித்தது.
- பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2017 ஆம் ஆண்டில், அவர் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அதே ஆண்டு, ஹனியே அமெரிக்காவினால் "பிரத்தியேகமாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு உலகளாவிய தீவிரவாதி" என்று அறிவிக்கப்பட்டார்.




## உறுப்பு தான விருதுகள் 2023




- தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (NOTTO) ஆனது, 14வது இந்திய உறுப்பு தான தின விருது விழாவினை ஏற்பாடு செய்தது.
- ஆந்திரப் பிரதேசத்தின் ஜீவந்தன் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் டாக்டர் K.இராம்பாபு என்பவர் ஜீவந்தன் விருதைப் பெற்றார்.
- சண்டிகரில் உள்ள பிராந்திய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (ROTTO) வடக்குப் பிரிவு PGIMER நிறுவனமானது சிறந்த ROTTO விருதை வென்றது.

- தெலுங்கானா சிறந்த மாநில உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (SOTTO)/சிறப்பாக செயல்படும் மாநிலத்திற்கான விருதைப் பெற்ற அதே சமயம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இரண்டாவது சிறந்த SOTTO/சிறப்பாகச் செயல்படும் மாநிலத்திற்கான விருதைப் பெற்றன.
- மணிப்பூர் மாநிலமானது, வடகிழக்கு மாநிலங்களில் சிறந்த முன்னணித்துவம் பெறும் மாநிலம் என்ற விருதினைப் பெற்றது.
- உறுப்பு தானத்தில் முன்னணித்துவம் பெறும் மாநிலங்கள் பிரிவில் விருது பெற்ற மாநிலங்கள்: 1) ஆந்திரப் பிரதேசம் 2) மத்தியப் பிரதேசம் மற்றும் 3) ஜம்மு & காஷ்மீர்.
- சிறந்த மாற்று அறுவை சிகிச்சை சாராத உறுப்பு மீட்பு மையங்களுக்கான விருது (NTORC) அகமதாபாத்தில் உள்ள பொது மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.
- செகந்திராபாத்தில் உள்ள யசோதா மருத்துவமனையானது, உயிரிழந்தவர்களால் அதிக எண்ணிக்கையில் உறுப்பு தானம் பதிவு செய்த சிறந்த தனியார் துறை மருத்துவமனை விருதினைப் பெற்றது.

## ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயண குழுவினர்

- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப் பட உள்ள ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயணத்திற்காக இந்தியா இரண்டு விண்வெளி வீரர்களைத் தேர்வு செய்துள்ளது.
- குழுத்தலைவர் சுபான்ஷு சுக்லா மற்றும் குழுத் தலைவர் கேப்டன் பிரசாந்த் பால கிருஷ்ணன் நாயர் ஆகிய இந்திய விண்வெளி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயணத் திட்டமானது, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்படும் நான்காவது தனியார் விண்வெளிப் பயணமாகும்.
- இரு இந்தியர்களில் சுபான்ஷு சுக்லா ஆக்ஸ்-4 மூலம் இறுதி செய்யப் பட்டுள்ளார்.
- மற்ற 3 உறுப்பினர்கள்:
    - நாசா விண்வெளி வீரர் பெக்கி விட்சன்
    - போலந்து நாட்டின் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி (ESA), மற்றும்
    - ஹங்கேரியின் திபோர் கபு.



## யாமினி கிருஷ்ணமூர்த்தி

- ஆந்திராவில் பிறந்த இந்திய செவ்வியல் நடனக்கலை வல்லுனரான யாமினி கிருஷ்ண மூர்த்தி சமீபத்தில் காலமானார்.
- அவர் 1968 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ, 2001 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் மற்றும் 2016 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் ஆகிய விருதுகளைப் பெற்றவர் ஆவார்.
- 1977 ஆம் ஆண்டில் சங்கீத நாடக அகாடமி விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

## இராஷ்ட்ரிய இந்தி விக்யான் சம்மேளன் 2024

- CSIR-AMPRI நிறுவனம் ஆனது, போபால் நகரில் "இராஷ்ட்ரிய இந்தி விக்யான் சம்மேளன் 2024" நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தது.
- இது இத்தகைய நான்காவது மாநாடாகும்.
- இந்தி மொழியின் மூலம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், ஆராய்ச்சியாளர்கள் தங்கள் படைப்புகளை இந்தி மொழியில் முன்வைத்து விவாதிப்பதற்கான ஒரு தளத்தை வழங்குவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இரவீந்திரநாத் தாகூர் பல்கலைக் கழகத்தின் வேந்தர் சந்தோஷ் சௌபே, அவரது இந்தி மொழி இலக்கியப் படைப்பு மற்றும் எழுத்துக்கள் மூலம் அறிவியலுக்கு ஆற்றிய மிகச் சிறப்பானப் பங்களிப்பிற்காக ஆச்சார்யா பிரஃப்புல்ல சந்திர ரே விக்யான் சம்வர்தன் சம்மான் விருதினைப் பெற்றார்.

## AIFF விருதுகள் 2024

- அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு (AIFF) ஆனது ஏழு ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு அதன் வருடாந்திர விருதுகளை வழங்கியுள்ளது.
- மும்பை சிட்டி FC அணியினைச் சேர்ந்த லல்லியன்சுவாலா சாங்டே, தொடர்ந்து இரண்டாவது முறையாக AIFF ஆண்டின் சிறந்த ஆட்டக்காரர் விருதைப் பெற்றுள்ளார்.
- இந்துமதி கதிரேசன் என்பவர் AIFF ஆண்டின் சிறந்த வீராங்கனை விருதை வென்ற தமிழகத்தைச் சேர்ந்த முதல் வீராங்கனை ஆனார்.
- இதன் மற்ற வெற்றியாளர்கள் பின்வருமாறு :

| Category | Winner |
|---|---|
| **Promising Men's Player of the Year** | David Lalhlansanga |
| **Promising Women's Player of the Year** | Neha |
| **Men's Coach of the Year** | Khalid Jamil |
| **Women's Coach of the Year** | Sukla Dutta |
| **Referee of the Year** | Ramachandran Venkatesh |
| **Assistant Referee of the Year** | Ujjal Halder |

## இராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான இராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் (RVP) விருது (முதலாவது) பெற்றவர்களின் பட்டியல் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.
- இந்த விருதுகள், இந்தியச் சமூகங்கள் அல்லது சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் ஆராய்ச்சி, புத்தாக்கம் அல்லது கண்டுபிடிப்பு மூலம் சிறப்பான பங்களிப்பை ஆற்றிய நபர்களை கௌரவிக்கும் விதமாக வழங்கப்படுகின்றன.
- இது சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு உள்ளிட்ட தற்போது வழங்கப்பட்டு வரும் அறிவியல் விருதுகளுக்குப் பதிலாக வழங்கப்பட உள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் எந்தவொரு துறையிலும் ஆற்றப்படும் வாழ்நாள் சாதனைகள் மற்றும் கணிசமானப் பங்களிப்புகளை விக்யான் ரத்னா விருது கௌரவிக்கிறது.
- விக்யான் ஸ்ரீ விருதானது எந்தவொரு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிலும் ஆற்றப்படும் சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கிறது.
- விக்யான் யுவா-சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதானது 45 வயதிற்குட்பட்ட இளம் அறிவியலாளர்களை அங்கீகரித்து ஊக்குவிக்கிறது.
- மலேரியா ஒட்டுண்ணிகள் குறித்த ஆய்விற்காக G.பத்மநாபன் என்பவருக்கு இந்த ஆண்டிற்கான விஞ்ஞான் ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது.
- சந்திரயான்-3 திட்டக்குழுவிற்கு 2023 ஆம் ஆண்டில் வெற்றிகரமான அத்திட்டத்தினை செயல்படுத்தியதற்காக விக்யான் குழு விருதினைப் பெற்றது.
- விக்யான் விருதானது ஸ்ரீ அன்னபூர்ணி சுப்ரமணியம், ஜெயந்த் பால்சந்திர உட்கோன்கர், நபா குமார் மோண்டல் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- விவேக் போல்ஷெட்டிவார், உர்பசி சின்ஹா, ராக்ஸி மேத்யூ கோல் ஆகியோருக்கு விக்யான் யுவா விருது வழங்கப்பட்டது.

## புத்ததேவ் பட்டாச்சார்ஜி




- இந்தியப் பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவரும் மேற்கு வங்காளத்தின் முன்னாள் முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்ஜி சமீபத்தில் காலமானார்.
- அவர் 2000 முதல் 2011 ஆம் ஆண்டு வரை மேற்கு வங்காள மாநிலத்தின் முதல்வராகப் பணியாற்றினார்.

- பட்டாச்சார்ஜி தனியாளாக கொல்கத்தா புத்தகக் கண்காட்சியை ஒரு உலகத் தரம் வாய்ந்த நிகழ்வாக மாற்றினார்.
- அதே சமயம் அவர் கொல்கத்தா திரைப்பட விழாவினையும் நிறுவினார்.
- 2018 ஆம் ஆண்டில் கட்சியின் மாநிலச் செயலக உறுப்பினர் பதவியை அவர் துறந்தார்.
- அவரது இறந்த உடல் ஆராய்ச்சிப் பணிக்காக என்று மாநில அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையிடம் ஒப்படைக்கப் பட்டது.

## நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் சுங்-டாவ் லீ



- சீன-அமெரிக்க இயற்பியலாளர் சுங்-டாவ் லீ சமீபத்தில் காலமானார்.
- அவர் "லீ மாதிரி" எனப்படும் பல்வேறு குவாண்டம் நிகழ்வுகளை பெருமளவில் ஆய்வு செய்வதற்கான மாதிரியை உருவாக்கினார்.
- 1957 ஆம் ஆண்டில், பேராசிரியர் லீ, சென்-நிங் யாங்குடன் இணைந்து அவர் இயற்பியலுக்கான நோபல் பரிசினைப் பெற்றார்.
- நோபல் பரிசு பெற்ற இரண்டாவது இளம் அறிவியலாளர் இவரே ஆவார்.
- அறிவியலுக்கான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் விருது, கலிலியோ கலிலி பதக்கம் மற்றும் G.புடே பதக்கம் உள்ளிட்ட பல விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

## ரேகா ஷர்மா - தேசிய மகளிர் ஆணையம்

- தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.
- சர்மா தொடர்ந்து இரண்டு முறை தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவராக பதவி வகித்து, மொத்தமாக 9 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.
- அவர் 2015 ஆம் ஆண்டு முதல் ஆணையத்தில் பணியாற்றியுள்ளார் என்பதோடு அதன் தலைவராக ஆவதற்கு முன்பு அதில் ஓர் உறுப்பினராகவும் அதன் தற்காலிகத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

## காந்தியவாதி ஷோபனா ரானடே



- 18 வயதில் காந்தியைச் சந்தித்த பிரபல சமூக சேவகர் ஷோபனா ரனடே சமீபத்தில் காலமானார்.
- தாழ்த்தப்பட்டவர்களை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை மேம்படுத்தச் செய்வதற்காக அவர் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார்.
- இவருக்கு 2011 ஆம் ஆண்டு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.
- 1979 ஆம் ஆண்டு புனேவில் உள்ள ஆகா கான் அரண்மனையில் காந்தி தேசிய நினைவு சங்கம் (GNMS) மற்றும் பெண்களுக்கான தேசிய பயிற்சி நிறுவனம் ஆகியவற்றினை அமைப்பதில் இவர் முக்கியப் பங்கு வகித்தார்.


## T.V. சோமநாதன்

- மத்திய அரசானது, நிதித் துறை செயலாளர் T.V.சோமநாதனை புதிய அமைச்சரவைச் செயலாளராக இரண்டு ஆண்டு காலத்திற்கு நியமித்துள்ளது.
- தற்போது, இந்தியாவின் அதிக காலம் பதவி வகித்த அமைச்சரவை செயலாளர் என்ற பெருமையினைத் தக்க வைத்திருக்கும் இராஜீவ் கௌபாவினை அடுத்து அவர் பதவி ஏற்க உள்ளார்.
- இதுவரையில், 1972 ஆம் ஆண்டு நவம்பர் 02 முதல் 1977 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை B.D. பாண்டே அதிக காலம் அமைச்சரவை பதவியினை வகித்தவர் ஆவார்.
- அமைச்சரவை செயலாளராக பதவியேற்கும் இரண்டாவது நிதித் துறை செயலாளர் சோமநாதன் ஆவார்.
- இந்தப் பதவிக்கு உயர்த்தப்பட்ட (1985 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில்) முதல் நிதித் துறை செயலாளர் P.K. கௌல் ஆவார்.

## சுதந்திர தின வீர தீர விருதுகள் 2024

- 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மொத்தம் 1,037 காவலர்களுக்கு காவல்துறை பதக்கங்கள் வழங்கப்பட்டன.

- இந்தப் பட்டியலில்
  - வீர தீர செயலுக்கான ஒரு குடியரசுத் தலைவர் பதக்கம்,
  - வீர தீர செயலுக்கான 213 காவல் துறை பதக்கங்கள்,
  - சிறப்பான சேவைக்கான குடியரசுத் தலைவரின் 94 காவல் துறை பதக்கங்கள், மற்றும்
  - போற்றத்தக்க சேவைக்கான 729 காவல் துறை பதக்கங்கள் ஆகியவை அடங்கும்.
- 2022 ஆம் ஆண்டு கத்தியால் குத்தப்பட்ட போதிலும் இரண்டு நகைச்சங்கிலி திருடர்களைப் பிடித்த தெலுங்கானா காவல்துறையின் தலைமைக் காவலர் சதுவு யாதய்யாவுக்கு வீர தீர செயலுக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம் வழங்கப் பட்டு உள்ளது.
- வீர தீர செயலுக்கான 213 பதக்கங்களில் (GM), 208 பதக்கங்களில் காவலர்களுக்கும், ஜம்மு & காஷ்மீர் காவல்துறையினைச் சேர்ந்த 31 பேரும், உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவினைச் சேர்ந்த தலா 17 பேரும், சத்தீஸ்கர் மாநிலத்தினைச் சேர்ந்த 15 பேரும், மத்தியப் பிரதேசத்தினைச் சேர்ந்த 12 பேரும், ஜார்கண்ட், பஞ்சாப் மற்றும் தெலுங்கானா ஆகியவற்றினைச் சேர்ந்த தலா 7 பேரும் பதக்கங்களைப் பெற்று உள்ளனர்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த K.வன்னிய பெருமாள் மற்றும் அபின் தினேஷ் மோடக் ஆகியோர் சிறப்பான சேவைக்கான குடியரசுத் தலைவரின் பதக்கங்களைப் பெற்று உள்ளனர்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த N.கண்ணன், A.G.பாபு, பிரவீன் குமார் அபினாபு மற்றும் K.பெரோஸ் கான் அப்துல்லா ஆகியோர் சிறந்த சேவைக்கான பதக்கத்தினைப் பெற்று உள்ளனர்.




## வீர தீர விருதுகள் 2024

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், ஆயுதப் படைகளுக்கு 103 வீர தீர விருதுகளையும், மத்திய ஆயுதக் காவல் படைகள் மற்றும் மாநிலக் காவல் படைகளின் பணியாளர்களுக்கு 213 வீர தீர விருதுகளையும் வழங்கியுள்ளார்.

- இந்த வீர தீர விருதுகள் தவிர, சிறப்பான மற்றும் போற்றத்தக்க சேவைக்கான பல விருதுகள் உட்பட மொத்தம் 1,037 விருதுகள் வழங்கப்பட்டன.
- பாதுகாப்பு அமைச்சகம் பின்வரும் விருதுகளை அறிவித்தது:
    - நான்கு கீர்த்தி சக்ரா விருதுகள் (மூன்று மறைவிற்குப் பின்),
    - 18 சௌர்ய சக்ரா விருதுகள் (4 மறைவிற்குப் பின்),
    - சேனா பதக்கத்திற்கு இணையான ஒரு விருது (வீர தீர செயல்),
    - 63 சேனா பதக்கங்கள் (வீர தீர செயல், மறைவிற்குப் பின்னதாக வழங்கப்பட்ட இரண்டு பதக்கங்கள் உட்பட),
    - 11 நவோ சேனா பதக்கங்கள் (வீர தீர செயல்), மற்றும்
    - ஆறு வாயு சேனா பதக்கங்கள் (வீர தீர செயல்).
- சேனா பதக்கங்கள் ஆனது இந்திய தரைப் படை ராணுவத்திற்கும், நவோ சேனா மற்றும் வாயு சேனா பதக்கங்கள் முறையே கடற்படை மற்றும் விமானப் படை ஆகியவற்றுக்கு வழங்கப் படுகின்றன.
- இராணுவ நடவடிக்கைகளில் பெரும் பங்களித்ததற்காக கென்ட் எனப்படும் இராணுவ நாய்க்கு மரணத்திற்குப் பிந்தையதான சிறப்பு விருது உட்பட இராணுவத்திற்கான விருதிற்குப் பரிந்துரைக்கப்படும் 39 வீரர்களின் பட்டியலுக்கும் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.
- கூடுதலாக, இந்தியக் கடலோரக் காவல்படை வீரர்களுக்கு ஒரு குடியரசுத் தலைவரின் தத்ரக்சக் பதக்கம் (சிறப்பான சேவை), ஒரு தத்ரக்சக் பதக்கம் (வீர தீர செயல்), மற்றும் இரண்டு தத்ரக்சக் பதக்கங்கள் (போற்றத்தக்க சேவை) ஆகியவற்றையும் அவர் அங்கீகரித்தார்.
- இந்த விருதுகள் மகத்தான துணிச்சலையும் சேவையையும் அங்கீகரிக்கின்றன.
- மத்திய சேமக் காவல் படைக்கு (CRPF) மொத்தம் 52 வீர தீர பதக்கங்கள் மற்றும் ஐந்து சௌரியா பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இது அனைத்து மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPFs) மற்றும் மாநில காவல்துறைப் படைகள் பெற்ற பதக்கங்களில் அதிகமாகும்.



## முன்னாள் வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங்

- முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் சமீபத்தில் காலமானார்.
- நட்வர் சிங் 1953 ஆம் ஆண்டில் இந்திய வெளியுறவுப் பணியில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1984 ஆம் ஆண்டில், அவர் தன் பதவியினை ராஜினாமா செய்து மக்களவை தேர்தலில் போட்டியிட்டார்.
- அத்தேர்தலில் வெற்றி பெற்று 1989 ஆம் ஆண்டு வரை மத்திய இணை அமைச்சராகப் பணியாற்றினார்.
- 2004 ஆம் ஆண்டில் மீண்டும் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்ற நட்வர் சிங், 18 மாதங்களுக்குப் பிறகு இராஜினாமா செய்தார்.
- 1966 மற்றும் 1971 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அவர் பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றினார்.
- அவர் 'The Legacy of Nehru: A Memorial Tribute' மற்றும் 'My China Diary 1956-88' உள்ளிட்ட பல புத்தகங்களையும் எழுதியுள்ளார்.
- 'One Life is Not Enough' என்ற தலைப்பில் அவரது சுயசரிதை வெளியிடப் பட்டுள்ளது.
- இவருக்கு 1984 ஆம் ஆண்டு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.



## 70வது தேசிய திரைப்பட விருதுகள்

- 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 மற்றும் டிசம்பர் 31 ஆம் தேதிக்கு இடையில் மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியத்தினால் (CBFC) சான்றளிக்கப்பட்ட முழு நீளத் திரைப் படங்கள் மற்றும் குறும்படங்கள் இந்த விருதிற்குத் தகுதி பெற்றன.
- மலையாள மொழித் திரைப்படமான ஆட்டம் சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்றது.
- ரிஷப் ஷெட்டி, காந்தாரா என்ற திரைப்படத்திற்காக சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றார்.
- சிறந்த நடிகைக்கான விருதை நித்யா மேனன் (திருச்சிற்றம்பலம்) மற்றும் மானசி பரேக் ஆகியோர் பகிர்ந்து கொண்டனர்.
- பொன்னியின் செல்வன் - பகுதி 1 திரைப்படம் ஆனது அதிக (4) விருதுகளை வென்றது; - சிறந்த தமிழ் திரைப்படம், சிறந்த ஒலி வடிவமைப்பு, சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த இசையமைப்பாளர் (பின்னணி இசை).

- ❖ சிறந்த இசை அமைப்பாளர் விருது ப்ரீதம் (பாடல்கள்), ஏ.ஆர். ரஹ்மான் (பின்னணி இசை) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- ❖ இது ஏ.ஆர்.ரஹ்மான் பெற்ற 7வது தேசிய திரைப்பட விருதாகும்.

**Complete List of Winners 70th National Film Awards 2024**

Best Feature Film: Aattam
Best Actor: Rishab Shetty
Best Actress: Nithya Menen and Manasi Parekh
Best Director: Sooraj Barjatya
Best Supporting Actress: Neena Gupta
Best Supporting Actor: Pawan Malhotra
Best Feature Film Providing Wholesome Entertainment: Kantara
Best Debut: Fouja, Pramod Kumar

**Regional Film Awards**
Best Telugu Film: Kartikeya 2
Best Tamil Film: Ponniyin Selvan – Part 1
Best Punjabi Film: Baaghi Di Dhee
Best Odia Film: Daman
Best Malayalam Film: Saudi Velakka CC.225/2009
Best Marathi Film: Vaalvi
Best Kannada Film: KGF: Chapter 2
Best Hindi Film: Gulmohar

**Special Mentions**
Manoj Bajpayee: Gulmohar
Sanjoy Salil Chowdhury: Kalikhan

**Technical Awards:**
Best Action Direction: KGF: Chapter 2
Best Choreography: Tiruchitrabalam
Best Lyrics: Fouja
Best Music Director: Pritam (Songs), AR Rahman (Background Score)
Best Makeup: Aparajito
Best Costumes: Kutchh Express
Best Production Design: Aparajito
Best Editing: Aattam
Best Sound Design: Ponniyin Selvan – Part 1
Best Screenplay: Aattam
Best Dialogues: Gulmohar
Best Cinematography: Ponniyin Selvan – Part 1
Best Female Playback: Saudi Velakka
Best Female Playback: Brahmastra

## அக்னி ஏவுகணைகளின் தந்தை

- ❖ இந்தியாவில் 'அக்னி ஏவுகணைகளின் தந்தை' என்று அழைக்கப்படும் இராம் நரேன் அகர்வால் சமீபத்தில் ஹைதராபாத்தில் காலமானார்.
- ❖ அவர் அக்னி ஏவுகணை திட்ட இயக்குநராகவும், ஐதராபாத்தில் உள்ள ASL (மேம்பட்ட தொழில்நுட்ப அமைப்புகள் ஆய்வகம்) இயக்குநராகவும் பணியாற்றினார்.
- ❖ 1983 ஆம் ஆண்டில் இந்தியாவின் அக்னி ஏவுகணைத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2005 ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெறும் வரை அந்தத் திட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார்.
- ❖ மத்திய அரசானது அவருக்கு 1990 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ மற்றும் 2000 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதுகளை வழங்கியது.
- ❖ 1983 ஆம் ஆண்டில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டப்பட்ட ஏவுகணை உருவாக்கத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஐந்து ஏவுகணைகளில் அக்னி ஏவுகணை மிகவும் இலட்சிய நோக்கமிக்கது ஆகும்.
- ❖ மற்ற 4 ஏவுகணைகள் - பிருத்வி, ஆகாஷ், நாக் மற்றும் திரிசூல் ஆகியனவாகும்.




## உலக விமானச் சேவை விருதுகள் 2024

- கத்தார் ஏர்வேஸ் நிறுவனமானது, 2024 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த விமான நிறுவனம் என்ற பெருமைக்குரிய பட்டத்தைப் பெற்று மீண்டும் இதில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இது சிங்கப்பூர் ஏர்லைன்ஸை நிறுவனத்தினை இரண்டாவது இடத்திற்கு தள்ளிய நிலையில் இதில் எமிரேட்ஸ் நிறுவனம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- உலகளவில் 16வது இடத்தில் உள்ள இந்தியாவின் விஸ்தாரா நிறுவனம் இந்தியா மற்றும் தெற்காசியாவில் 2024 ஆம் ஆண்டிற்கான ஒரு சிறந்த விமான நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 7.9 மில்லியனாக இருந்த அதன் சேவை திறன் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 15.5 மில்லியனாக இரட்டிப்பாகி, உலகளவில் மூன்றாவது பெரிய உள் நாட்டு விமானச் சந்தையாக இந்தியா மாறியுள்ளது.

| Rank 2024 | Airline Name | Global Hub | Rank 2023 |
|---|---|---|---|
| 1 | Qatar Airways | Qatar | 2 |
| 2 | Singapore Airlines | Singapore | 1 |
| 3 | Emirates | UAE (Dubai) | 4 |
| 4 | ANA All Nippon Airways | Japan | 3 |
| 5 | Cathay Pacific Airways | Hong Kong | 8 |
| 6 | Japan Airlines | Japan | 5 |
| 7 | Turkish Airlines | Turkey | 6 |
| 8 | EVA Air | Taiwan | 9 |
| 9 | Air France | France | 7 |
| 10 | Swiss International Air Lines | Switzerland | 12 |

## லியோனார்ட் ஹேஃப்லிக்

- உயிரியல் மருத்துவ ஆராய்ச்சியாளர் லியோனார்ட் ஹேஃப்லிக் சமீபத்தில் காலம் ஆனார்.
- சாதாரண சோமாடிக் (உடலப்புறை) உயிரணுக்களைக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே பிரிக்க முடியும் (பெருக்கம் அடைய முடியும்) என்று அவர் கண்டுபிடித்தார்.
- உடலப்புறை (இனப்பெருக்கம் சாராத) உயிரணுக்களில் உயிரணுப் பிரிவு ஆனது சுமார் 40-60 முறைகளுக்கு பிறகு நிறுத்தப்பட்டதை அவர் கண்டறிந்தார்.
- மனித உடலில் (மற்றும் பிற உயிரினங்களின்) உள்ளமைக்கப்பட்ட செல்லியல் சுழற்சி அமைப்பு உள்ளது என்பதோடு இது ஒருவர் எவ்வளவு காலம் வாழ முடியும் என்பதை தீர்மானிக்கிறது.
- இந்த "இறுதியான ஹேஃப்லிக் வரம்பு" ஆனது மனிதர்களுக்கு சுமார் 125 ஆண்டுகள் ஆகும் என்ற நிலையில் இதற்கு அப்பால் எந்த அளவிலான உணவு முறை, உடற்பயிற்சி அல்லது நோய்களுக்கு எதிரான மரபணு மாற்றங்களும் கூட மனித ஆயுளை நீட்டிக்க முடியாது.




## 24வது கைவினைப் பொருட்களின் ஏற்றுமதி விருதுகள்

- ❖ கைவினைப் பொருட்களுக்கான ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபை (EPCH) ஆனது, அதன் 24வது கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருதுகள் நிகழ்வை ஏற்பாடு செய்தது.
- ❖ 2019-20 ஆம் ஆண்டில் சுமார் 62 வெற்றியாளர்களுக்கும், 2020-21 ஆம் ஆண்டில் சுமார் 61 வெற்றியாளர்களுக்கும் மொத்தம் 123 விருதுகள் வழங்கப்பட்டன.
- ❖ மேலும், ஒரு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.
- ❖ 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த விருதுகள் ஆனது நான்கு பெரும் பிரிவுகளில் வழங்கப் படுகின்றன:
    - ஏற்றுமதியில் முன்னணி விருது,
    - பிளாட்டினம் தரச் செயல்திறன் சான்றிதழ்,
    - தயாரிப்பு குழு வாரியான விருதுகள்,
    - பெண் தொழில்முனைவோர் விருது,
    - பிராந்திய விருதுகள்.
- ❖ ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த முசாபர் உசேன் வாழ்நாள் சாதனையாளர் விருதை வென்றுள்ளார்.

## தேசியப் புவி அறிவியல் விருதுகள் – 2023

- ❖ தேசியப் புவி அறிவியல் விருதுகள் (NGA) என்பது சுரங்க அமைச்சகத்தினால் நிறுவப் பட்ட மதிப்புமிக்க விருதுகள் ஆகும்.
- ❖ இது புவி அறிவியல் துறையில் ஆற்றப்படும் அசாதாரணமான சாதனைகள் மற்றும் பங்களிப்புகளை அங்கீகரித்து கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டிற்கான விருதுகள் ஆனது 21 புவி அறிவியலாளர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

- இது 9 தனிப்பட்ட விருதுகள் மற்றும் 3 குழு விருதுகளை உள்ளடக்கிய 12 விருதுகளைக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு வாழ்நாள் சாதனைக்கான தேசியப் புவி அறிவியல் விருது ஆனது பேராசிரியர் தீரஜ் மோகன் பானர்ஜிக்கு வழங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு தேசிய இளம் புவி அறிவியாலாளர் விருது ஆனது டாக்டர் அசுதோஷ் பாண்டேக்கு வழங்கப்பட்டது.




## கொள்கை வகுப்பாளர்கள் மன்றத்தின் உச்சி மாநாடு

- முதல் கொள்கை வகுப்பாளர்கள் மன்றம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்நிகழ்வின் போது, இந்திய மருந்தியல் இயங்கலை தளம் மற்றும் பாதகமான மருந்து எதிர்வினை கண்காணிப்பு அமைப்பு (ADRMS) மென்பொருள் ஆகியவை வெளியிடப் பட்டன.
- அவை சுகாதாரத் தரங்களை எண்ணிம மயமாக்குவதையும் மருந்துகளின் மீதான பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- மருந்தியல் இயங்கலை தளம் என்பது இந்தியாவிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைவரும் மருந்து தரநிலைகளை அணுகுவதை மிக எளிதாக்குகின்ற ஒரு புதிய எண்ணிம மூலமாகும்.
- மருந்துகள் மற்றும் மருத்துவச் சாதனங்களில் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் பிரச்சனைகளைக் கண்காணிக்க ADRMS உதவும்.
- இது நாட்டிலேயே இதுபோன்ற முதல் வகையிலான வசதிகள் ஆகும் என்பதோடமேலும் பொது மக்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆகிய அனைவரும் நேரடியாகப் பிரச்சினைகள் குறித்து புகாரளிக்க வழி வகை செய்கிறது.




# விளையாட்டுச் செய்திகள்

## ஒலிம்பிக் போட்டிகள் 2024 : பசுமை நடவடிக்கை சார் விளையாட்டுப் போட்டிகள்

- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகள், இதுவரை இல்லாத அளவிற்கு சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது பதிவாகும் கார்பன் உமிழ்வினை சுமார் 50 சதவீதம் குறைக்க உள்ளதாக ஒழுங்கமைப்புக் குழு உறுதியளித்துள்ளது.
- இது டோக்கியோ 2020, ரியோ 2016 மற்றும் இலண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகளில் பதிவான சுமார் 3.5 மில்லியன் டன்கள் என்ற கார்பன் உமிழ்வினை வரவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் 1.75 மில்லியன் டன்களாக குறைக்க உள்ளது.
- இந்த ஆண்டு போட்டிகள் முழுமையாக புவி வெப்ப மற்றும் சூரிய சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மூலங்களைச் சார்ந்து நடத்தப்பட உள்ளன.
- அனைத்து ஒலிம்பிக் மைதானங்களுக்கும் பொதுப் போக்குவரத்து மூலம் சென்று அடையும் வகையில் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- இந்த நகரத்தில் 1,000 கி.மீ தொலைவு வரையிலான பிரத்தியேக மிதிவண்டி ஓட்டப் பாதைகளை உருவாக்கியுள்ளதோடு, விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்கள் வரை 3,000 வாடகை மிதிவண்டிகள் வழங்கப் பட உள்ளன.
- இது தாவர மூலம் சார்ந்த, உள்நாட்டிலேயே கிடைக்கப் பெறும் மற்றும் நிலையான உணவு விருப்பத் தேர்வுகளை வழங்குகிறது.
- பாரீஸ் நடத்தும் 95 சதவீத ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஏற்கனவே உள்ள கட்டமைப்புகள் அல்லது தற்காலிக அமைப்புகளையே பயன்படுத்துகிறது.




## வினேஷ் போகட் தகுதி நீக்கம்

- பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் மகளிருக்கான 50 கிலோ எடைப் பிரிவில் நிபந்தனைகள் எதுவுமற்ற இறுதிப் போட்டியில் இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகட், உடல் எடையை குறைக்கத் தவறியதால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.
- தகுதி நீக்கம் என்றால் போகட் பதக்கத்தினை வெல்ல முடியாது என்று பொருளாகும்.
- இறுதிப் போட்டியாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டால், வெள்ளிப் பதக்கம் அவருக்கு வழங்கப்படாது என்பதோடு, தங்கப் பதக்கமானது அவருடன் போட்டியிட்ட இறுதிப் போட்டியாளருக்கு வழங்கப்படும்.




- வினேஷ் தங்கப் பதக்கத்திற்கான போட்டியை எட்டிய முதல் இந்தியப் பெண் மல்யுத்த வீராங்கனை என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.


- வினேஷ் காலை நேரத்தில் மேற்கொள்ளப்படும் எடை மதிப்பீட்டின் போது போட்டிக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட ஒரு எடை வரம்பிற்கு மேல் 100 கிராம் அதிகமாக இருப்பது கண்டறியப் பட்டது.
- ஒருங்கிணைந்த உலக மல்யுத்த விதிகள் புத்தகத்தின் 11வது பிரிவின் படி, "ஒரு தடகள வீரர் எடை மதிப்பீட்டில் கலந்து கொள்ளா விட்டாலோ அல்லது அந்த வரம்பைப் பூர்த்தி செய்யாவிட்டாலோ, அவர் அந்தப் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டு, அதன் தர வரிசையில் இடம் பெறாமல் கடைசி இடத்தினைப் பெறுவார்."

## நீரஜ் சோப்ரா - ஒலிம்பிக் போட்டிகள் 2024

- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஆடவருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் அரியானாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
- இதன் மூலம் தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் தடகள தடகள வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் ஒலிம்பிக் போட்டிகளில் சாதனை பதிவாக 92.97 மீ தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

## 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்க எண்ணிக்கை

- 2024 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஆனது தலா 40 தங்கப் பதக்கங்களுடன் அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்ற ஒரு நாடு என்ற பட்டத்தினைப் பகிர்ந்து கொள்கின்றன.
- அமெரிக்கா 126 (40 தங்கம், 44 வெள்ளி, 42 வெண்கலம்) பதக்கங்களை வென்றுள்ளது.
- சீனா 91 (40 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலம்) மொத்தப் பதக்க எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவானது, ஒரு வெள்ளி, ஐந்து வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 6 பதக்கங்களுடன், ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் 71வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் ஒரு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலப் பதக்கங்கள் உட்பட 7 பதக்கங்களுடன் ஒட்டு மொத்தமாக 48வது இடத்தைப் பிடித்த இந்தியாவின் பதக்க எண்ணிக்கையினை விடக் குறைவாகும்.
- இந்த ஆண்டு பதக்கம் வென்ற வீரர்கள்:
  - மனு பாக்கர் - வெண்கலம்
  - மனு பாக்கர் மற்றும் சரப்ஜோத் சிங் - வெண்கலம்
  - ஸ்வப்னில் குசலே - வெண்கலம்
  - இந்திய ஹாக்கி அணி - வெண்கலம்
  - நீரஜ் சோப்ரா - வெள்ளி
  - அமன் செஹ்ராவத் - வெண்கலம்




## லோசான் டயமண்ட் லீக் போட்டி

- நீரஜ் சோப்ரா சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற லோசான் டயமண்ட் லீக் போட்டியில் தனது இறுதி வாய்ப்பின் மூலம் போட்டித் தொடரில் 89.49 மீட்டருக்கும் மேலாக நீண்ட தூரம் ஈட்டி எறிந்துள்ளார்.
- அவர் 90.61 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்த கிரெனடா நாட்டின் ஆண்டர்சன் பீட்டர்சிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- இதில் ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 87.08 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.



# முக்கிய தினங்கள்

## வையக விரிவு வலை தினம் - ஆகஸ்ட் 01

- இங்கிலாந்து நாட்டு அறிவியலாளர் டிம் பெர்னர்ஸ்-லீ என்பவரால் வையக விரிவு வலை (WWW) உருவாக்கப் பட்டதை இத்தினம் கொண்டாடுகிறது.
- அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பில் (CERN) பணி புரிந்து கொண்டிருந்த போது, 1989 ஆம் ஆண்டில் அவர் இந்த அமைப்பினை உருவாக்கினார்.
- 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று, info.cern.ch எனப்படும் முதல் இணைய தளம் இதில் பயன்பாட்டிற்கு வந்தது.




## தேசிய மலை ஏறுதல் தினம் - ஆகஸ்ட் 01

- நியூயார்க் நகரின் அடிரோண்டாக் மலைகளில் உள்ள 46 உயரமான சிகரங்களிலும் வெற்றிகரமாக ஏறி சாதனைப் படைத்த பாபி மேத்யூஸ் மற்றும் அவரது சக தோழர் ஜோஷ் மடிகன் ஆகியோரைக் கௌரவிப்பதற்காக இத்தினம் தொடங்கப்பட்டது.
- 1965 ஆம் ஆண்டில் லெப்டினன்ட் கர்னல் அவதார் S. சீமா எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1984 ஆம் ஆண்டில் பச்சேந்திரி பால் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி என்றப் பெருமையினைப் பெற்றார்.

## உலக தாய்ப்பால் வாரம் - ஆகஸ்ட் 01 முதல் 07 வரை

- சிறந்த ஊட்டச்சத்து மற்றும் ஒட்டு மொத்த ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக ஒரு குழந்தைக்குப் பாலூட்டலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டி இத்தினம் கொண்டாடப் படுகிறது.
- தாய்மார்களுக்கு அதிகாரம் அளித்தல், குடும்பங்களுக்கு இது குறித்து முக்கிய தகவல் அளித்தல், விழிப்புணர்வை அதிகரித்தல் சார்பான சில கொள்கைகளை இந்த நாள் ஊக்குவிக்கிறது.
- இது 1990 ஆம் ஆண்டு இன்னசென்டி என்ற பிரகடனத்தின் நினைவாக அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Closing the gap: Breastfeeding support for all" என்பதாகும்.


## உலக நுரையீரல் புற்றுநோய் தினம் - ஆகஸ்ட் 01

- நுரையீரல் புற்றுநோய் பற்றியும் மற்றும் உலகெங்கிலும் உள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களில் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நுரையீரல் புற்றுநோயின் அபாயங்கள், அறிகுறிகள் மற்றும் சிகிச்சைகள் மற்றும் அந்த நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வேண்டிய ஆதரவளிப்பது குறித்து பொது மக்களுக்குக் கற்பிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Close the Care Gap: Everyone Deserves Access to Cancer Care" என்பதாகும்.





## முஸ்லிம் பெண்களின் உரிமை தினம் - ஆகஸ்ட் 01

- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி அமலுக்கு வந்த முத்தலாக் தடைச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவு கூரும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது 2021 ஆம் ஆண்டில் முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- ஷயாரா பானோ மற்றும் மத்திய அரசிற்கு இடையிலான வழக்கு தான் இந்தச் சட்டத்தினைக் கொண்டு வருவதற்கான அடிக்கல்லினை நாட்டியது.
- முத்தலாக் என்றும் குறிப்பிடப்படுகின்ற தலாக்-இ-பித்தாத், ஒரு முஸ்லீம் ஆண் "தலாக்" என்ற வார்த்தையை எந்த விதத்திலாகினும் மூன்று முறை உச்சரிப்பதன் மூலம் தனது திருமணத்தை முறிக்க அனுமதிக்கின்ற உடனடி விவாகரத்து முறையாகும்.




## புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் தீரும் நாள் 2024 - ஆகஸ்ட் 01


- இந்த தினமானது Global Footprint Network அமைப்பினால் கணக்கிடப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட ஆண்டில் சுற்றுச்சூழல் வளங்கள் மற்றும் சேவைகளுக்கான மனித குலத்தின் தேவையானது, அந்த ஆண்டில் பூமியின் சுற்றுச்சூழல் அமைப்புகளால் மீண்டும் உருவாக்கக்கூடிய அளவினை விஞ்சும் தேதியை இந்த நாள் குறிக்கிறது.
- மனிதகுலம் ஆனது, தற்போது நமது புவிக் கிரகத்தின் சுற்றுச்சூழல் அமைப்புகள் மீளுருவாக்கும் வளங்களை விட சுமார் 1.7 மடங்கு வேகமாக இயற்கை வளங்களைப் பயன்படுத்துகிறது.




## 14வது இந்திய உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 03

- மக்களிடையே உடல் உறுப்பு தானம் குறித்த ஒரு விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில் உறுப்பு தான தினம் ஆனது 2010 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப் படுகிறது.

- முன்னதாக, இந்த நாள் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 27 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 03 ஆம் தேதியன்று இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- 1994 ஆம் ஆண்டு இதே நாளில் தான், இந்தியாவில் முதன்முதலில் வெற்றிகரமாக உயிரிழந்த நபரிடமிருந்து இதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
- 1994 ஆம் ஆண்டு ஜூலை 08 ஆம் தேதியன்று, இந்தியாவில் மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை சட்டம், 1994 ஆனது இயற்றப்பட்டது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஆனது ஜூலை மாதத்தினை இந்தியாவில் உறுப்பு தான மாதமாக அறிவித்துள்ளது.




## 10வது தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்ட் 03

- இந்தத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூகத்தின் முயற்சிகள் மற்றும் திறன்களை அங்கீகரிப்பது இதன் நோக்கமாகும்.
- 1905 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், உள்நாட்டுத் தொழில்களையும் குறிப்பாக கைத்தறி நெசவாளர்களையும் ஊக்குவிப்பதற்காக சுதேசி இயக்கம் தொடங்கப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில், ஒவ்வோர் ஆண்டும் இந்த நாளை அனுசரிப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்தது.
- இந்த ஆண்டு 10வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு 'VIRAASAT' எனப்படும் 15 நாட்கள் அளவிலான கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய எலும்பு மற்றும் மூட்டு தினம் - ஆகஸ்ட் 04

- இது எலும்பு மற்றும் மூட்டு ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய எலும்பியல் சங்கத்தினால் (IOA) 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த நாள் இயக்கம் (நடமாட்டம்) மற்றும் எலும்பு வலிமையை வலியுறுத்துவதோடு, சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நன்கு பராமரிப்பதில் எலும்புகள் மற்றும் மூட்டுகள் மிகவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதனையும் வலியுறுத்துகிறது.




## ஹிரோஷிமா தினம் - ஆகஸ்ட் 06

- இந்த ஆண்டானது உலக நாடுகள் ஹிரோஷிமா மீதான தாக்குதலின் 79வது ஆண்டு நிறைவை அனுசரிக்கிறது.
- 1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்க நாடு ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் மீது அணுகுண்டு வீசிய துயர நிகழ்வின் ஆண்டு நிறைவை இது அனுசரிக்கிறது.
- "லிட்டில் பாய்" என்ற புனைவுப் பெயர் கொண்ட B-29 என்ற அணுகுண்டு ஆனது ஹிரோஷிமாவில் இருந்து சுமார் 600 மீட்டர் உயரத்தில் வெடிக்கச் செய்யப் பட்டது.
- இதன் விளைவாக 140,000 பேர் கொல்லப்பட்டனர்.




## தேசிய ஈட்டி எறிதல் தினம் - ஆகஸ்ட் 07




- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவின் வரலாற்றுச் சாதனையினைக் கௌரவிக்கும் வகையில் இந்திய தடகள கூட்டமைப்பு இந்த தேதியை நியமித்தது.
- இந்தத் தினமானது அவரது சாதனையை அங்கீகரித்து, நாடு முழுவதும் ஈட்டி எறிதல் விளையாட்டை ஊக்குவிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் நீரஜ் சோப்ரா 87.58 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து வரலாறு படைத்தார்.
- இந்த வெற்றியானது, ஒலிம்பிக் போட்டிகளின் தடகளப் போட்டிகளில் இந்தியாவிற்குக் கிடைத்த முதல் தங்கப் பதக்கத்தினைக் குறிக்கிறது.

## நாகசாகி தினம் - ஆகஸ்ட் 09

- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று, நாகசாகி மீது அமெரிக்கா "ஃபேட் மேன்" என்ற இரண்டாவது அணுகுண்டினை வீசியது.
- இந்த நிகழ்வு ஆனது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று ஜப்பான் நாடு சரணடைய வழி வகுத்தது, இதனால் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.
- இந்த நாள் ஆனது இந்த குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்வது மற்றும் அமைதி மற்றும் அணு ஆயுதக் குறைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அணு ஆயுதப் போரின் பேரழிவு விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இது ஒரு முக்கியமான வாய்ப்பாக விளங்குகிறது.




## ஆகஸ்ட் கிராந்தி தினம் - ஆகஸ்ட் 08




- ஆகஸ்ட் கிராந்தி தினம் அல்லது வெள்ளையனே வெளியேறு இயக்கத் தினம் ஆனது, 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று வரலாற்றுப் புகழ்பெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் தொடக்கத்தை நினைவு கூருகிறது.
- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் குழு அமர்வின் போது வெள்ளையனே வெளியேறு இயக்கம் குறித்த ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் விளைவாக 1943 ஆம் ஆண்டின் இறுதியில் குறைந்தது 1,000 இந்தியர்கள் உயிரிழந்தனர் என்ற நிலையில் மேலும் சுமார் 60,000 பேர் கைது செய்யப் பட்டனர்.

- 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் முடிவுக்கு வந்தது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியா வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 82வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.

## சர்வதேச உலகளாவியப் பழங்குடியின மக்கள் தினம் - ஆகஸ்ட் 09

- பழங்குடியின மக்களின் தேவைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது பழங்குடியின மக்கள் தங்களின் எண்ணங்களையும் பிரச்சினைகளையும் உலகளாவிய அளவில் வெளிப்படுத்தும் வாய்ப்பையும் வழங்குகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) ஆனது, 1994 ஆம் ஆண்டில் இந்த சிறப்பு தினத்தை அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Protecting the Rights of Indigenous Peoples in Voluntary Isolation and Initial Contact" என்பதாகும்.

## உலக சிங்க தினம் - ஆகஸ்ட் 10




- இது காட்டுச் சிங்கங்களின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்புப் பற்றிய ஒரு பொது அறிவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சிங்க தினம் ஆண்டு முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் பிக் கேட் ரெஸ்க்யூ என்ற அமைப்பு மூலம் நிறுவப்பட்டது.
- ஆப்பிரிக்காவில் உள்ள காட்டுச் சிங்கங்களின் மொத்த எண்ணிக்கையானது 2023 ஆம் ஆண்டில் சுமார் 20,000 மற்றும் 25,000 இடைப்பட்டதாக இருக்கும்.
- 2015 ஆம் ஆண்டில், கிர் வனப் பகுதியில் 523 சிங்கங்கள் இருப்பதாக மதிப்பிடப் பட்டு உள்ளது, ஆனால் 2020 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 674 ஆக அதிகரித்துள்ளது.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் ஆசிய சிங்கம் அருகி வரும் ஒரு இனமாகவும், ஆப்பிரிக்கச் சிங்கம் எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகவும் பட்டியலிடப்பட்டன.

## உலக எஃகு பறை தினம் - ஆகஸ்ட் 11

- இந்த தினமானது அதன் கரீபியப் பாரம்பரியத்தைக் கௌரவிக்கும் அதே வேளையில் உலகளவில் எஃகு பறைப் பாரம்பரியத்தினை விரிவுபடுத்துவதற்கான இலட்சிய இலக்குகளை அமைக்கும் வாய்ப்பை வழங்குகிறது.
- எஃகு பறை என்பது டிரினிடாட் மற்றும் டொபாகோ ஆகிய பகுதிகளிலிருந்து தோன்றிய ஒரு மகத்தான இசைக் கருவியாகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "From Roots to Recognition: Steelpan's Journey to Global Acclaim" என்பதாகும்.

## ICoAS பணி உருவாக்க தினம் - ஆகஸ்ட் 09

- இந்தியச் செலவினக் கணக்குப் பணி (ICoAS) ஸ்தாபன தினமானது 'ICoAS @ Viksit Bharat' என்ற கருத்துருவுடன் கொண்டாடப்பட்டது.
- T.V.சோமநாதன் அவர்கள் Indian Cost Accounts Service: An Overview, detailing ICoAS achievements என்ற தலைப்பிலான இணைய வழிப் புத்தகத்தினையும் வெளியிட்டார்.

## உலக உயிரி எரிபொருள் தினம் - ஆகஸ்ட் 10

- 1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று ஜெர்மன் பொறியாளர் சர் ருடால்ஃப் டீசல் என்பவர் கடலை எண்ணெயைக் கொண்டு இயந்திரத்தை வெற்றிகரமாக இயக்கியதை நினைவு கூரும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- பசுமை இல்லை வாயு உமிழ்வைக் குறைப்பதிலும், எரிசக்திப் பாதுகாப்பை வெகுவாக ஊக்குவிப்பதிலும், மற்றும் கிராமப்புற மேம்பாட்டினை நன்கு ஆதரிப்பதிலும் உயிரி எரிபொருளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- உயிரி எரிபொருள் என்பது தாவரங்கள் அல்லது விலங்குகளின் கழிவுகளிலிருந்து பெறப் படும் எரிபொருள் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Sustainable Biofuels: Fueling a Greener Future" என்பதாகும்.


## உலக யானைகள் தினம் - ஆகஸ்ட் 12

- இந்த வருடாந்திர நிகழ்வானது யானைகளின் அவல நிலையைப் பற்றிய பெரு விழிப்பு உணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காகவும் அவற்றைப் பாதுகாக்க செய்வதற்காகவும் வேண்டி அர்ப்பணிக்கப் பட்ட தினமாகும்.
- கனடாவின் பாட்ரிசியா சிம்ஸ் நிறுவனம் மற்றும் தாய்லாந்தின் யானை மறு அறிமுக அறக்கட்டளை ஆகியவை இணைந்து 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று இத்தினத்தினை நிறுவின.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Personifying Prehistoric Beauty, Theological Relevance, and Environmental Importance" என்பதாகும்.

## சர்வதேச இளையோர் தினம் - ஆகஸ்ட் 12

- ஐக்கிய நாடுகள் பொது சபையானது, 1999 ஆம் ஆண்டில், ஆகஸ்ட் 12 ஆம் தேதியானது ஆண்டுதோறும் சர்வதேச இளையோர் தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- இது 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதியன்று லிஸ்பனில் நடைபெற்ற இளையோர் நல அமைச்சர்களின் உலகளாவிய மாநாட்டினால் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் இத்தினம் நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது முதன் முதலில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'From Clicks to Progress: Youth Digital Pathways for Sustainable Development' என்பதாகும்.

## இந்தியாவில் பிரிவினை சார்ந்த பயங்கரங்கள் நினைவு தினம் - ஆகஸ்ட் 14





- 1947 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த பிரிவினையின் போது தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு ஜூன் 03 ஆம் தேதியன்று செய்தியாளர் கூட்டத்தில், மௌண்ட் பேட்டன் பிரபு சுதந்திரத்திற்கான தேதியை - 14 ஆகஸ்ட் 1947 ஆக அறிவித்தார்.
- 1947 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று, பிரித்தானியப் பாராளுமன்றம் ஆனது பிரிவினைக்கான ஏற்பாடுகளை இறுதி செய்து, சுதேச அரசுகளின் மீதான பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை கைவிடுவதற்கான விதிமுறைகளைக் கொண்ட இந்திய சுதந்திரச் சட்டத்தை நிறைவேற்றியது.
- குடியேற்றத்தின் போது சீக்கியர்கள் - முஸ்லிம்கள் - இந்துக்கள் இடையே கலவரம் வெடித்தது.
- பிரிவினையின் போது பஞ்சாப் முழுவதும் 12 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்ததாக மதிப்பிடப் பட்டுள்ளது.

- பிரிவினையின் போது வங்காளத்தில் பதிவான மொத்த இடம்பெயர்வு 3.3 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 1951 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள் தொகையில் 2% பேர் அகதிகள் (மேற்கு பாகிஸ்தானிலிருந்து 1.3% மற்றும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 0.7%) ஆவர்.
- மேற்கு இந்தியாவை விட்டு வெளியேறிய சுமார் 1.3 மில்லியன் முஸ்லிம் மக்கள் பாகிஸ்தானைச் சென்று அடையவில்லை.
- மேற்கு எல்லையில் காணாமல் போன இந்துக்கள்/சீக்கியர்களின் எண்ணிக்கை தோராயமாக 0.8 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## உலக உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 13

- உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், தனிநபர்கள் உறுப்பு தானம் செய்வதை கருத்தில் கொள்ள ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.
- ஒருங்கிணைந்த உறுப்பு தான வலையமைப்பின் கூற்றுப் படி, சுமார் 1,03,993 பேருக்கு உயிர்காக்கும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது.
- ரொனால்ட் லீ ஹெரிக் தனது உறுப்புகளைத் தானம் செய்த முதல் நபர் ஆவார்.
- 1954 ஆம் ஆண்டில், அவர் தனது சிறுநீரகத்தை தனது இரட்டை சகோதரருக்கு தானம் செய்தார் என்பதோடு இந்த வெற்றிகரமான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர் டாக்டர் ஜோசப் முர்ரே ஆவார்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Be the Reason for Someone's Smile Today!" என்பதாகும்.





## உலக மனிதாபிமான தினம் - ஆகஸ்ட் 19

- தேவைகள் உள்ள மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக தங்கள் உயிரைப் பணயம் வைக்கும் மனிதாபிமான நடவடிக்கைப் பணியாளர்களை கௌரவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2003 ஆம் ஆண்டு ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகம் மீது குண்டு வீசி 22 பேர் கொல்லப் பட்டதை நினைவு கூரும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளாவிய மனிதாபிமான முன்னெடுப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாள் ஒரு வாய்ப்பாகக் கருதப்படுகிறது.
- இயற்கைப் பேரழிவுகள், மோதல்கள் மற்றும் பிற அவசரநிலைகள் போன்ற பல்வேறு நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு உலகளாவிய நடவடிக்கையை இந்த நாள் ஊக்குவிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Act for Humanity” என்பதாகும்.

## உலக சமஸ்கிருத தினம் - ஆகஸ்ட் 19


- 1969 ஆம் ஆண்டில், சமஸ்கிருத இலக்கண அறிஞர் பாணினியின் 2500வது ஆண்டு பிறந்த நாளின் நினைவாக இந்திய அரசானது இந்த நாளை அறிவித்தது.
- 2019 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது இந்த நாளைச் சர்வதேசத் தினமாக அறிவித்தது.
- பாணினி சமஸ்கிருத இலக்கணத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.
- அவரது படைப்பான அஷ்டத்யாயி என்பது இன்றும் பயன்படுத்தப் படும் சமஸ்கிருத இலக்கணத்தின் ஒரு விரிவான ஆய்வறிக்கை ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, ‘Vedic Heritage and Tradition’ என்பது ஆகும்.





## நல்லிணக்க தினம் அல்லது சத்பவனா திவாஸ் - ஆகஸ்ட் 20

- இந்தியாவின் அனைத்து குடிமக்கள் மத்தியில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் பெரும் நல்லெண்ணத்தினை மேம்படுத்துவதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் இளம் பிரதமரான இராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.

- அவர் தனது முன்னோக்குச் சிந்தனை மற்றும் நவீன அணுகுமுறைக்காகப் பிரபலமாக அறியப்பட்டார்.
- 1984 முதல் 1991 ஆம் ஆண்டு வரையில் அவர் இந்தியாவின் ஆறாவது பிரதமராக பணி ஆற்றினார்.




## உலக கொசு தினம் - ஆகஸ்ட் 20




- மலேரியா, மஞ்சள் காய்ச்சல், டெங்கு, சிக்குன்குனியா போன்ற கொசுக்களால் பரவக் கூடிய பல்வேறு நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 1897 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் தேதியன்று, சர் ரொனால்ட் ராஸ் என்பவர் ஒரு பெண் அனாபிலிஸ் கொசுவின் வயிற்றில் மலேரியா ஒட்டுண்ணி ஒன்று இருப்பதைக் கண்டு அறிந்தார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Accelerating the fight against malaria for a more equitable world" என்பதாகும்.

## உலக முதியோர் தினம் - ஆகஸ்ட் 21

- முதியோர்களின் பங்களிப்புகளை நன்கு அங்கீகரிப்பதும், உலகளவில் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கம் ஆகும்.
- 1991 ஆம் ஆண்டு முதன்முறையாக இத்தினம் கொண்டாடப் பட்டது.
- இது அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ரொனால்ட் ரீகனால் அதிகாரப்பூர்வமாக நிறுவப் பட்டது.
- இந்தியாவின் முதியோர் எண்ணிக்கையானது 2031 ஆம் ஆண்டிற்குள் சுமார் 193.4 மில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## தேசிய விண்வெளி தினம் - ஆகஸ்ட் 23





- இந்தியா 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று தனது முதல் தேசிய விண்வெளி தினத்தினைக் கொண்டாடியது.
- சந்திரயான்-3 விண்கலம் ஆனது நிலவின் மேற்பரப்பில் மிகவும் வெற்றிகரமாக தரை இறங்கியதன் ஓராண்டு நிறைவை இது நினைவுகூருகிறது.
- இந்த நாளில் தான் இஸ்ரோ நிறுவனம் ஆனது விக்ரம் தரையிறங்கு விண்கலத்தினை நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கியது.
- இந்தத் திட்டமானது, நிலவில் தரையிறங்கிய நான்காவது நாடாகவும், தென் துருவப் பகுதிக்கு அருகில் தரையிறங்கிய முதல் நாடாகவும் இந்தியாவை திகழச் செய்தது.
- இந்த ஆண்டின் கருத்துருவானது "Touching Lives while Touching the Moon: India's Space Saga" என்பதாகும்.

## அடிமை வர்த்தகம் மற்றும் அதை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 23


- இந்த நாள் அடிமை வர்த்தகத்தின் அவல நிலையினை அனைத்து மக்களின் நினைவில் பதிய வைக்கும் நோக்கத்தில் அனுசரிக்கப்படுகிறது.
- இது முதன்முதலில் பல நாடுகளில் குறிப்பாக ஹைத்தி (1998) மற்றும் செனகலில் உள்ள கோரே தீவு (1999) ஆகிய இடங்களில் கொண்டாடப்பட்டது.
- ஆனால் இந்த நாளுக்கான சர்வதேச அங்கீகாரம் ஆனது 2016 ஆம் ஆண்டில் தான் யுனெஸ்கோ அமைப்பினால் வழங்கப்பட்டது.
- 1833 ஆம் ஆண்டு அடிமை முறை ஒழிப்புச் சட்டம் ஆனது பிரித்தானிய பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு, 1834 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று அரச ஒப்புதலைப் பெற்றது.
- 1500-1800 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 12 மில்லியன் அடிமைகள் வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1804 ஆம் ஆண்டில், உலகின் முதல் அடிமை முறை இல்லாத நாடாக ஹைதி மாறியது.

## தேசிய குடற்புழு நீக்க தினம் - ஆகஸ்ட் 23

- இந்தத் தினமானது 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவப்பட்டது.
- 1 முதல் 19 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் (பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத) குடற்புழு நீக்கம் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1 முதல் 14 வயதிற்குட்பட்ட சுமார் 22 கோடி குழந்தைகள் புழு தொற்று அபாயத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Eliminate STH: Invest in a healthier future for children' என்பதாகும்.
- இந்தத் தினமானது பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆண்டிற்கு இரண்டு முறை ஏற்பாடு செய்யப்பட்டது.




## தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்ட் 23




- இது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- மேஜர் தயான் சந்த் அவர்களின் பிறந்தநாளில் இந்திய ஹாக்கி விளையாட்டிற்கு அவர் ஆற்றியப் பங்களிப்புகளை இத்தினம் கௌரவிக்கிறது.
- இவர் 1928, 1932, 1936 ஆகிய ஆண்டுகளில் இந்திய அணி தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை வெல்ல வழி வகுத்த பெருமைக்குரியவர் ஆவார்.
- அவர் 185 போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி 400 கோல்களுக்கு மேல் அடித்துள்ளார்.
- அவரது பங்களிப்பை நன்கு போற்றும் வகையில் இந்தியாவின் உயரிய விளையாட்டு விருதான இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதானது 2021 ஆம் ஆண்டில் மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## தெலுங்கு மொழி தினம் - ஆகஸ்ட் 29




- இது தெலுங்கு மொழியின் அழகு, பன்முகத் தன்மை மற்றும் முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


- இந்த தேதியானது புகழ்பெற்ற தெலுங்கு கவிஞர் கிடுகு வெங்கட இராமமூர்த்தியின் பிறந்தநாளுடன் ஒன்றி வருகிறது.
- இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 6.7%, அதாவது 8.11 கோடி பேருடன் இந்தியாவில் அதிகம் பேசப்படும் நான்காவது மொழி தெலுங்காகும்.
- இந்தியாவில் உள்ள ஆறு செம்மொழிகளில் தெலுங்கும் ஒன்றாகும்.
- இந்த மொழியானது "கிழக்கின் இத்தாலிய மொழி" என்று அழைக்கப் படுகிறது.

## சர்வதேச அணுசக்தி சோதனை எதிர்ப்பு தினம் - ஆகஸ்ட் 29

- அணு ஆயுதச் சோதனைகள் மற்றும் அணு குண்டு வெடிப்புகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதே இந்நாளைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கமாகும்.
- அணு ஆயுதம் இல்லாத உலகம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதையும் இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது வரை அணு ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ள ஒரே நாடு அமெரிக்கா ஆகும்.
- இத்தினமானது 1991 ஆம் ஆண்டில் செமிபாலடின்ஸ்க் அணுசக்தி சோதனைத் தளம் மூடப்பட்டதை நினைவு கூருகிறது.


## சர்வதேச திமிங்கலச் சுறா தினம் - ஆகஸ்ட் 30

- இத்தினமானது உலகின் மிகப்பெரிய மீனாக விளங்கும் திமிங்கலச் சுறாக்களின் அவல நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- திமிங்கலச் சுறா என்பது (ரின்கோடான் டைபஸ்) பூமியில் உள்ள மிகப்பெரிய மீன் இனம் மற்றும் கடல் சார் சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒரு முக்கிய இனமாகும்.
- இது தோராயமாக 18 மீட்டர் நீளம் மற்றும் 21 டன் எடை வரை வளரக் கூடியது.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.



## வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 30

- இது அவர்களின் உறவினர்கள் மற்றும்/அல்லது சட்டப் பூர்வப் பிரதிநிதிகளுக்குத் தெரியாத இடங்களில் மற்றும் மோசமான சூழ்நிலையில் சிறையில் அடைக்கப்பட்ட நபர்களின் அவல நிலை குறித்து கவனத்தை ஈர்க்கிறது.
- வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படும் நிலையிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையானது 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில், குடும்ப இணைப்புகள் வலையமைப்பு அமைப்பு சுமார் 239,700க்கும் மேற்பட்ட நபர்கள் காணாமல் போனதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.





## உலக நீர் வாரம் - ஆகஸ்ட் 25/29




- உலகை மாற்றுவதற்கும், பயனுள்ள நீர் ஒத்துழைப்பிற்கான பல்வேறு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் தண்ணீரை ஒரு செயற்கருவியாகப் பயன்படுத்த விரும்பும் மக்களுக்கு ஓர் உள்ளார்ந்த ஒத்துழைப்பை மேற்கொள்வதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1991 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஸ்டாக்ஹோம் சர்வதேச நீர் நிறுவனத்தினால் (SIWI) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Bridging Borders: Water for a Peaceful and Sustainable Future' என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## முழுமையான அளவிலான கடைசி பொது மூதாதை இனம்




- சுமார் 4.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஒரு மூதாதை இனத்திடம் இருந்து பூமியில் உயிர்கள் தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இன்றைய உயிரினங்களின் மரபணுக்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அறிவியல் ஆய்வாளர்கள் ஒரு முழுமையான பொது மூதாதை (LUCA) இனம் தோன்றியதை சுட்டிக் காட்டியுள்ளனர்.
- பூமி தோராயமாக 4.5 பில்லியன் ஆண்டுகள் பழமையானது என்ற தகவலானது, பூமி அதன் ஆரம்ப நிலையில் இருந்த போதே உயிர்கள் தோன்றியதைக் குறிக்கிறது.
- ஆக்சிஜனின் தோற்றமானது புவிக்கோளின் பரிணாம காலவரிசையில் ஒப்பீட்டளவில் தாமதமாக நிகழ்ந்தது என்ற ஒரு நிலைமையில் இது 3 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம்.
- நுண்ணுயிர்ப் படிமங்கள் வடிவில் உள்ள சான்றுகளானது, சுமார் 3.48 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையவையாகும்.
- LUCA எனப்படுகின்ற இந்த சிக்கலான ஒரு உயிரினமானது மிகவும் நவீன காலமான புரோகாரியோட்டுகளிலிருந்து (நிலைக் கருவற்ற உயிரி) மிகவும் வேறுபட்டதல்ல.
- ஆனால் இது 4.2 பில்லியன் ஆண்டுகளுக்கும் முந்தைய ஆரம்ப கால நோயெதிர்ப்புச் சக்தியைக் கொண்டிருந்தது.

## மிகவும் விரும்பத்தகு நிறுவனம் - காந்தார்

- காந்தார் எனப்படும் சந்தை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு சமீபத்தியப் பகுப்பாய்வில் பார்லே நிறுவனமானது மிகவும் விரும்பப்படும் FMCG நிறுவனமாக விளங்குகிறது.
- இது 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து அதிக அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்நாட்டு வர்த்தக நிறுவனமாக விளங்குகிறது.

- அதைத் தொடர்ந்து பிரிட்டானியா, அமுல், கிளினிக் பிளஸ் மற்றும் டாடா நுகர்வோர் தயாரிப்புப் பொருட்கள் நிறுவனம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.





## இந்திய வாகை மரம்





- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள நூற்றாண்டு பழமையான இந்திய வாகை மரம் ஆனது சமீபத்தில் ஏற்பட்ட கோதாவரி வெள்ளத்தின் போது முறிந்து விழுந்தது.
- 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில், ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரி நதிக்கரையில் அமைந்த இந்த மரமானது அதிகப் புகைப்படம் எடுக்கப்பட்ட மரம் என்று குறிப்பிடப் பட்டது.
- அல்பிசியா லெபெக் என்றும் அழைக்கப்படும் இந்திய வாகை மரம் ஆனது, இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட வெப்ப மண்டல மரமாகும்.
- இது ஃபாபாசியே குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் இலையுதிர் மரமாகும்.

## இயந்திர கற்றல் கட்டமைப்பு – 'LEAP'

- கௌஹாத்தியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் (IIT-G) அறிவியல ஆராய்ச்சியாளர்கள் 'LEAP' என்ற புதுமையானதொரு இயந்திர கற்றல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- இது குறைகடத்திகள் உற்பத்தி துறையில் பயன்படுத்தப்படும் மின்னணு வடிவமைப்பு தானியக்க (EDA) துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- 600 பில்லியன் டாலர் மதிப்பிலான குறைகடத்தி உற்பத்தி துறையில் இது ஒரு முக்கிய அங்கமாகும்.





## செயற்கை இனிப்பூட்டி சுக்ரலோஸ்




- சிறிய அளவிலான சுக்ரலோஸ் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைப் பாதிக்காது என்று சமீபத்திய ஆய்வு குறிப்பிடுகிறது.
- உடல் எடை (BW), இடுப்பு சுற்றளவு (WC) மற்றும் உடல் நிறை குறியீட்டெண் (BMI) ஆகியவற்றில் சிறிது அதிகரிப்பினையும் இது கொண்டுள்ளது.
- சுக்ரலோஸ் மிகவும் பிரபலமான எந்த ஊட்டச்சத்தும் இல்லாத அல்லது செயற்கை இனிப்பூட்டி மற்றும் சர்க்கரைக்கான மாற்றுப் பொருளாகும்.

- ஊட்டம் நிறைந்த மற்றும் ஊட்டமில்லாத இனிப்பூட்டிகள் என இரண்டு வகையான இனிப்பூட்டிகள் உள்ளன.
- பிரக்டோஸ் போன்ற ஊட்டச் சத்து நிறைந்த இனிப்பூட்டிகள் கலோரிகளை மிகவும் அதிகரிக்கக் கூடியது மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது அல்ல.
- சுக்ரலோஸ் நமது உடலின் வளர்சிதைமாற்ற செயலால் செயல்முறையாக்கப் படுவது இல்லை என்பதால் அது கலோரிகளை அதிகரிக்காது.

## ஹோமோ ஃப்ளோரெசியென்சிஸ்




- இந்தோனேசியாவில் மத்திய புளோரஸின் சோவா படுகையின் மாட்டா மெங்கே என்ற இடத்தில் 700,000 ஆண்டுகள் மிக பழமையான மூன்று ஹோமினின் புதைபடிவங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இதனுடன், அறிவியல் ஆய்வாளர்கள் அவற்றின் தோற்றத்தை விவரிக்க என்று இரண்டு கோட்பாடுகளை முன் வைத்துள்ளனர்.
- ஹோமோ ஃப்ளோரெசியென்சிஸ் முற்கால ஆசிய ஹோமோ எரெக்டஸ் இனத்தின் உயரம் குன்றிய வழித் தோன்றல்கள் என்று முதலாவது கோட்பாடு குறிப்பிடுகிறது.
- அழிந்து போன மனித இனமான ஹோமோ எரெக்டஸ் 100,000 முதல் 1.6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம்.
- ஹோமோ ஃப்ளோரெசியென்சிஸ், ஹோமோ ஹாபிலிஸ் அல்லது புகழ்பெற்ற 'லூசி' (ஆஸ்ட்ராலோபிதேகஸ் அஃபாரென்சிஸ்) போன்ற ஆப்பிரிக்காவின் பழமையான ஹோமினின் வழித்தோன்றல் என்று இரண்டாவது கோட்பாடு தெரிவிக்கிறது.
- அந்த இனத்தவர்கள் உயரத்திலும் மிகக் குறைந்தவர்கள் மற்றும் ஹோமோ எரெக்டஸ் இனத்திற்கு முன்பே வாழ்ந்தவர்கள் ஆவர்.
- இந்தப் புதிய ஆய்வானது மூன்று படிமங்கள் ஹோமோ ஃப்ளோரெசியென்சிஸை விட சற்று சிறிய தாடைகள் மற்றும் பற்களைக் கொண்டிருந்ததாக தெரிவிக்கின்றன.
- புளோரஸ் ஹோமினின்களின் வரலாற்றின் முற்காலத்திலேயே அந்த இனத்தின் சிறிய உடல் அளவு உருவானது என்று இது அறிவுறுத்துகிறது.

- இந்த ஹோமினின்கள் 1 முதல் 0.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பெரிய உடல் கொண்ட ஆசிய ஹோமோ எரெக்டஸ் இனத்திலிருந்து மிக அதிக அளவிலான உடல் வளர்ச்சிக் குன்றல் நிலையினை எதிர் கொண்டிருக்கலாம்.

## பண்டைய கால சூரிய நாட்காட்டி – துருக்கி



- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகவும் பழமையான, அதாவது 12,000 ஆண்டுகள் பழமையான நாட்காட்டியினைக் கண்டறிந்துள்ளனர்.
- தெற்கு துருக்கியில் உள்ள கோபெக்லி டெபேவில் ஒரு தூணில் சூரியன், சந்திரன் மற்றும் பல்வேறு விண்மீன் திரள்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- பண்டைய மக்கள் சந்திர-சூரிய நாட்காட்டி என்றும் அழைக்கப்படுகின்ற இந்த நாட் காட்டியினை பருவகால மாற்றத்தை அறிந்திடப் பயன்படுத்தினர் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.
- இது ஒரு வால் நட்சத்திரம் விழும் நிகழ்வினை கூட பதிவு செய்துள்ளது.
- கோபெக்லி டெபே தளத்தில் உலகின் மிகப் பழமையான மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் உள்ளன.
- அவை இங்கிலாந்தின் கல் வட்டங்களை (Stonehenge) விட சுமார் 6,000 ஆண்டுகளுக்கு முந்தையவையாகும்.

## இரயில்வே கட்டமைப்பிற்கான துல்லிய நேர ஒருங்கிணைப்பு அமைப்பு

- முதன்முறையாக, இந்திய இரயில்வே நிர்வாகமானது தனது வலையமைப்பு முழுவதும் உள்ள செயல்பாடுகள் மற்றும் அமைப்புகளுடன் நேர ஒத்திசைவு மேற்கொள்ளச் செய்வதற்காக ஒரு துல்லிய நேர ஒருங்கிணைப்பு அமைப்பை உருவாக்க உள்ளது.
- விபத்தின் போது ஏற்படும் சிரமங்களைத் தொடர்ந்து, இரயில்களின் இயக்கங்களில் ஈடுபட்டுள்ள அனைத்து அமைப்புகளிலும் பயன்பாடுகளிலும் ஒரே சீரான நேரத்தைக் கையாள இது உதவும்.
- தற்போதுள்ள அமைப்பின் கீழ், நாடு முழுவதும் உள்ள மண்டல இரயில்வேக்கள் பல்வேறு அமைப்புகளைப் பயன்படுத்துவதோடு, வெவ்வேறு மூலங்களிலிருந்து தனது நேரத்தைப் பெறுகின்றன.
- துல்லிய நேர ஒருங்கிணைப்பு அமைப்பிற்கான நேரம் ஆனது இந்தியப் பகுதிக்கான இடஞ்சுட்டி அமைப்பு (NAVIC) அல்லது தேசிய இயற்பியல் ஆய்வகங்கள் (NPL) மூலம் பெறப் படும்.




## இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய வைரம்

- ஒரு நூற்றாண்டுக்கும் மேலான காலங்களில் கண்டறியப்படாத அளவில் மிகப்பெரிய வைரம் ஆனது போட்ஸ்வானாவில் உள்ள ஒரு சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்த 2,492 காரட் வைரம் ஆனது அச்சுரங்கத்தில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெரிய வைரமாகும்.
- 1905 ஆம் ஆண்டிற்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரம் இதுவாகும்.
- போட்ஸ்வானா நாடானது, ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக இயற்கை வைரங்களை மிக அதிகளவில் உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★